# மண்ணின் மதகு

லதா முகுந்தன்



# மண்ணின் மதகு

1

மணி, மாலை ஐந்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. இன்னும் கருணாவைக் காணோம். சாதாரணமாக நான்கு அல்லது நான்கு ஐந்துக்கு வீட்டிலிருக்கும் பெண். என்னவாயிற்று? இட்லியை அவித்து, சட்னியை அரைத்து, இரவு வெங்காய சாம்பார், உருளைக்கறி என்று எல்லாமே செய்தாகி விட்டது. இன்னும் பெண்ணை மட்டும் காணோம். சாதாரணமாக மாலை டிபன் முடியும் போதே உள்ளே நுழையும் பெண்.

''அம்மா...! சாம்பார் வாசனை தூக்குதே'' என்றபடியே சப்புக் கொட்டிக் கொண்டே வரும் பெண்ணைக் காணோம். இட்லி, தோசை போன்ற டிபன் வகையறாக்களுக்கு சட்னி சாம்பார் இருந்து விட்டால் போதும் ஒரு ஏழு, எட்டு கூட உள்ளே தள்ளுவாள். உள்ளே நுழையும் போதே 'பசிக்குது...' என்றவாறே நுழையும் பெண். இன்று ஐந்து மணிக்கு மேல் ஆகிவிட்டதே? ஆளையே காணோமே? பூந்தொட்டிகளில்

உள்ள செடிகளுக்கெல்லாம் தண்ணீர் ஊற்றி, துணிமணிகளை மடித்து வீடு கூட்டி, தெரு வாசலையும் கூட்டி தண்ணீர் தெளித்து, கோலம் போட்டு இன்னும் இருந்த சின்னச் சின்ன வேலைகள் எல்லாவற்றையும் முடித்தாயிற்று. இன்னும் பெண்ணைக் காணோம்.

கைகள் இயந்திர கதியில் வேலை செய்தாலும் மனம் என்னவோ பெண்ணின் மேலேயே இருந்தது. பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பி விட்டு வரும் வரை வயிற்றில் நெருப்பை அல்லவா கட்டிக் கொண்டு இருக்க வேண்டி இருக்கிறது? ஒவ்வொரு நாளும் நான்கு மணி அடித்தாலே மனம் இருப்புக் கொள்ளாமல் அலைய ஆரம்பித்து விடும். ஊரில் இருக்கும் கெட்டது எல்லாம் ஞாபகத்துக்கு வரும். மனம் ஒவ்வொரு கடவுளாகப் பிரார்த்தனை செய்யத் தொடங்கிவிடும். 'இன்றும் பெண்ணைக் காணோம்' என்று பரிதவித்து கடவுளுக்கு பிரார்த்தனை செய்து, கண்களும் மனமும் வாயிலையே பார்த்துக் கொண்டு மனம் அலைபாய்ந்தது. பின் பெண் வரவில்லையே என்ற ஏக்கமும் பரிதவிப்பும் மட்டுமே மிஞ்சியது. நேரம் ஆக, ஆக வாசலுக்கே வந்து விட்டாள் கமலம்.

''பெண் வருவாளா? இல்லையா? ஏதேனும் ஆக்ஸிடண்ட் ஆகியிருக்குமா? முந்தா நாள் கூட கோடி வீட்டுப் பெண் சீரா வரவே இல்லை. அவள் போன டூ-வீலர் ஆக்ஸிடண்டாம். இராத்திரி ஒன்பது மணி வரை தேடியவர்கள் விஷயம் அறியாமல் தவித்தனர். இரவு ஒன்பது மணிக்கு மேல் தான் செய்தி தெரிந்தது. பின் பதட்டப்பட்டு அடித்துப் பிடித்து ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். அப்படி ஏதாவது தன் பெண் விஷயத்திலும் நடந்திருக்குமா? இல்லையென்றால் மூன்றாவது வீட்டு மங்களத்தம்மாள் பெண் தற்கொலை செய்து கொண்டது. அதுபோல் தன் பெண் விஷயத்திலும் ஏதேனும்



ஆகியிருக்குமோ? அப்பா என்பவர் கூடவே இருந்திருந்தால் இந்தச் சங்கடம் வந்திருக்குமா? கணவனைப் பற்றி மனம் நினைக்க நினைக்க எரிந்தது. எல்லோருக்கும் நேரான வாழ்க்கையைத் தந்திருக்கும் கடவுள் தன் வாழ்க்கையை மட்டும் கோணலாக ஏன் படைத்து விட்டார்? எத்தனையோ நாட்கள் மனதைக் குடைந்து கொண்டிருக்கும் கேள்விதான். மனதை உறுத்திக் கொண்டிருக்கிற விஷயம்தான். கண்களை மெல்ல மூடிக் கொண்டாள். இதயத்தில் இருந்த வேதனைகள் எல்லாம் கண்கள் மூலமாகக் கண்ணீராக வெளி வந்தது.

எனக்கு மட்டும் ஏன் இத்தனை கஷ்டங்கள்? என் கஷ்டங்களுக்கு விடிவு என்பது உண்டா? மனது ஊமை அழுகை அழுதாலும் மறுபடியும் பெண் வரவில்லையே என்ற தவிப்பு தவித்தது. ''கடவுளே பெண்ணுக்கு ஒன்றும் ஆகி இருக்கக்கூடாது.' சம்சாரக் கடலைக் கடக்க தனக்குக் கடவுள் கொடுத்தது ஓட்டைப் படகு தானே. அதுகூடவா அந்தக் கடவுளுக்குப் பொறுக்கவில்லை. அதனை இன்னும் சின்னா, பின்னமாக்க கடவுள் ஏன் துடித்துக் கொண்டிருக்கிறார். கருணாவிற்கு ஏதேனும் ஆகிவிட்டால்.... பின் தன்னால் உயிரோடு இருக்க முடியுமா?

ஐந்து வயதும், மூன்று வயதுமாக இரண்டு குழந்தைகளை எடுத்துக் கொண்டு, நிர்க்கதியாக வந்து, இரண்டு பெண்களையும் நல்லபடியாக ஒப்பேற்றும் வரையில் அந்தக் கடவுள் ஏன் காத்திருக்க வேண்டும். அன்றே தனக்கும் குழந்தைகளுக்கும் ஒரு முடிவு வந்திருந்தால் இத்தனை துன்பங்களும் இல்லை.

கேட் லேசாக அசைய ''யாரு கருணாவா? இல்லை...'' அவள் வருவதே புயல் வருவது போலத்தான். உள்ளே

நுழையும்போதே 'தடால்' என்று கேட் தாழ்ப்பாள் நீக்கி கேட்டைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்து ஐந்து நிமிடங்கள் வரை கேட் ஆடிக்கொண்டே இருக்கும்.

''ஏண்டி கேட்டை மூடிட்டு வரக்கூடாதா?'' கேட்டால் போதும்.

''ஆமா பெரிய ஆஸ்தி இருக்கு. அள்ளி கிட்டு போகப் போறான். போயேன்'' என்று பதிலடி கொடுத்துவிட்டு செருப்பை ஒரு விசிற விசிறுவாள். புத்தகங்களை அப்படியே தொப் என்று போடுவாள். துணியைக் கூட மாற்ற மாட்டாள். கண்ணை மூடிக் கொண்டு ரேடியோவைத் திருகிவிட்டு அப்படியே கேட்டுக் கொண்டே இருப்பாள். இல்லையென்றால் டி.வியில் புதுப்பாடல்களை போட்டுவிட்டு கதாநாயகனும், நாயகியும் ஆடுவதை ரசித்துக் கொண்டு இருப்பாள்.

''முகத்தை கழுவிட்டு வா. கை, கால்களை கழுவு. துணியை மாற்று.'' அவள் வந்தபின் அவளோடு கத்தி, கத்தி வாயோடு மனமும் சோர்ந்து விடும். அதனால் இப்படி மெதுவாக திறந்ததால் அவள் தன் மூத்த பெண் கருணா அல்ல. பின் யார் அது? ஒருவேளை இளையவள் காவ்யாவா?

பெரியவளுக்கு நேர் எதிரிடை சின்னவள். வருவது போவது கூட இன்னொருத்தருக்கு தெரியாது. ஏதோ காற்று வருவது போல் மூணாம் பேருக்குத் தெரியாமல் வந்து நிற்கும் குணம். பெரியவள் போல் எந்தக் காரியமும் தடாம் புடாம் என்றெல்லாம் கிடையாது. எதையுமே ஆழ்ந்து சிந்தித்து ஒரு தடவைக்கு பத்து தடவை யோசித்துச் செய்யும் ரகம். பளிச்சென்று விழும் வார்த்தைகள். வெளி ஆடம்பரங்கள் எதுவுமே பிடிக்காது. எம்.ஸி.ஏ படிக்கும் அவள் அந்த



வகுப்பை முடித்துவிட்டு, பின் தனியாகப் படிக்கும் கம்ப்யூட்டர் கிளாஸ் முடிந்து வருவதற்கே ஏழரை ஆகிவிடும்.

''யம்மா... பால் வாங்கிக்கறயா?'' பால்காரி பொன்னம்மாதான். பால் பாக்கெட்டை வாங்கியவளின் முகத்தை கவனிக்கிறாள்.

''என்ன...யம்மா. கண்ணெல்லாம் கலங்கி என்னாச் சும்மா...''

''கருணா இன்னும் வீட்டுக்கு வரலைம்மா.''

''என்னம்மா நீ. மணி அஞ்சு தானே ஆவுது. பஸ்ஸை...கிஸ்ஸை விட்டிருக்கும். இதுக்கெல்லாமா மனசு கலங்குவாங்க. வந்துடும். பொட்டை பிள்ளைங்க வெளியே போயிட்டு வீடு திரும்பறதுக்குள்ளே ஆயிரம் கஷ்டம் பாவம். கொஞ்சமாவா லோல் படுதுங்க. போய் அந்த போராமையைப் பாரு. பஸ்ஸிலே நின்னுகினு தொங்கிகினு தம்மாத்துண்டு டப்பாவிலே சோத்தை அடைச்சிகினு. இதுலே இன்னா ஸ்டெரெங்க்த் இருக்கும். பாவம் புள்ளைங்க. அது ஆயிரம் லோல் பட்டு செத்து சுண்ணாம்பாகி வந்தா ஊட்டுலே சந்தேகம்.''

''அதுக்கில்லே தாயி....''

''வந்திடும்மா, புள்ளை வந்திடும். எல்லாம் பச்சை பிள்ளைங்க. சந்தேகப்படாதீங்க தாயீ.'' மனது பெருமூச்சு விட்டது. தினமும் நடக்கும் சம்பவங்கள். கொஞ்சம் திசை மாறினாலும் மனது கலவரப்படுகிறது. என்ன ஆகுமோ என்று பயப்பட்டு விடுகிறது. இந்தக் கவலைப்படும் அவஸ்தை யாருக்குமே இருக்கக் கூடாது.

''என்னாச்சோ... என்னாச்சோ' என்று தான் துடிக்க, துடிக்க வயிறு வேற இழுத்துப் பிசைகிறது. பிறகு சரியாகி விட்டாலும், உடம்பு சரியாவதற்கு ஒரு இரண்டு நாட்களாவது ஆகிவிடுகிறது. எத்தனையோ பட்டாகி விட்டது. வருவது வரட்டும். வருவதை எதிர்கொள்வோம் என்ற துணிவு மட்டும் தன்னிடம் ஏன் இல்லை. சதா பாழாய்ப் போகிற பயம். தன்னையே விமர்சனம் செய்தாலும், மறுபடியும் கருணா வரவில்லையே என்ற பயம் தாக்க, கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன. இதற்கு மேலும் பொறுக்க முடியாது. ஒரு வேளை அம்மா வீட்டிற்குச் சென்றிருப்பாள்.

கருணாவின் தாய் கமலம் தன் தாயைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

''அம்மா கமலம் பேசறேன். கருணா அங்கே வந்தாளா?''

''கருணாவா? வரவேயில்லையே. ஏன் என்னாச்சு? ஏதேனும் அவளை திட்டினாயா?''

''இல்லைம்மா. காலைல காலேஜுக்குப் போன பொண்ணு வரலை.''

''பஸ் கிடைச்சிருக்காதோ என்னவோ?''

''இல்லைம்மா மூன்றரை மணிக்கு ஒரு பஸ் அதுல வந்துடுவா. அதை விட்டா ஐந்து மணிக்கு. அதுவும் போயிடுச்சே. இத்தோட ஆறு மணிக்குதான். வரலியே.''

''சரி வந்தா நானே பண்ணறேன். வச்சிரும்மா.''

போனை வைத்தாள் கமலம். 'அம்மா வீட்டிற்குப் போகலே. எங்கதான் போயிருப்பா அவ. பெரிய பெண் கருணா சற்று அதிகமான ஆசை கொண்டவள்தான். இப்படி



வாழணும். அப்படி வாழணும்னு ஆசைப்பட்டுக் கொண்டு இருப்பவள்தான்' தொலைக்காட்சிகளில் வரும் காதலர்கள் காரில் போவதும், வெளிநாடு சென்று டூயட் பாடுவது எல்லாமே அவளுக்கு ரொம்ப ரொம்ப பிடித்தமான காட்சிதான். ''பொறந்தா அப்படி பொறக்கணும்'' என்பாள். தன்னை மற்றவர்களினின்றும் உயர்ந்தவளாகக் காட்டிக் கொள்ளக் கூட மிக மிக ஆசை. தீபாவளிக்கு துணி எடுக்கப் போகையில் கமலம் கேட்டாள்.

''தீண்டி இத்தனை விலை கொடுத்து குடிதார் வாங்கணுமா?'' கேட்டாலும் ஒத்துக் கொள்ள மாட்டாள்.

''இத பாருடீ நம்ப பட்ஜட்டே ஒவ்வொருத்தருக்கும் முன்னூறு ரூபாய்தான்.'' என்று கமலம் பேச ஆரம்பித்தாலே...

''ஆமாம் முன்னூறு ரூபாய்க்கு என்ன வரும்'' என்பாள். அப்படி, இப்படி என்று ஒரு அறு நூறு ரூபாய்க்கு பில்லைக் கொண்டு வந்து விடுவாள். அப்படி அதை வாங்கித் தந்தாலும் திருப்தி இருக்காது. முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு வருவாள். ''பெரிய பணக்காரனா பொறக்கணும்''. ஏஸிகள், பங்களா, ப்ளேன் அப்படீன்னு வாழணும். அவளுடைய கனவுகள் அவை. எப்போதுமே தன்னை அதிக வசதி படைத்தவளாக எண்ணிப் பார்க்கும் சுகம். கனவுகள் காணப்பட வேண்டும். 'திரும்பத் திரும்ப வரும் கனவுகள் பலிக்கும்' சாத்தியக் கூறு உண்டு என்றோ எதிலோ படித்த ஞாபகம். ஆனால் எல்லாக் கனவுகளுமா பலிக்கிறது? தனக்கென்று ஒரு கௌரவம். தன் குடும்பத்துக்கென்ற பெருமை இது எல்லாமே இன்னும் எட்டாக் கனியாக அல்லவா இருக்கிறது. இன்னும்தான் செல்லாக் காசாக அல்லவா மதிக்கப்படுகிறோம்.

''கருணா, போதும்மா. உங்க அப்பாவால போன மானம் திரும்பக் கிடைக்குமான்னு இருக்கும். எனக்கு மிச்சம் மீதியையும் நீ கப்பலேற்றி விடாதே. 'என்னதான் பணம், பணம் என்று அலைந்தாலும் தன் பெண் தவறான வழிக்கு அடிகோலுவாள் என்று தோன்றவில்லை. தன் பிள்ளைகளை தான் அப்படியா வளர்த்திருக்கிறோம். இதுவரைக்கும் வாழ்க்கையின் கஷ்ட நிலைகளை அல்லவா அனுபவித்திருக் கிறோம். துன்பம், கஷ்டம், வேதனை எல்லாமே அவர்களுக் கும் அத்துப்படி. அதனால் கருணாவாக இருந்தாலும் எதையுமே கண்ணை மூடிக் கொண்டு செய்வாள் என்று தோன்ற வில்லை. மறுபடியும் தொலைபேசி ஒலிக்க, ஒடிச் சென்று எடுக்கிறாள்.

''பெண்ணா பேசுகிறது. எங்கிருந்தாவது போன் பண்ணுகிறதா?

''கருணா வந்திருச்சா?'' சே! போன் செய்பவள் தன் தாய்.

''இன்னும் இல்லைம்மா.''

''இப்பதான் முருங்கக்கீரையை துவட்டி வச்சேன். கருணாவுக்கு எத்தனை பிடிக்கும். பாவம் பிள்ளைங்க. படிக்கப் போவதுங்க. வத்தலும், தொத்தலுமா இருக்குது பாரு. அதுக்கு புடிச்சதெல்லாம் செய்து போட்டாலே கும்முன்னு ஆயிடும். ஒரு பத்து நா அனுப்புன்னா... அனுப்பினா தானே. அதுக்கு புடிச்ச உருளைக்கிழங்கு கறி, வாழைப்பூ வடை, சப்பாத்தி - குருமா இதெல்லாம் செய்து தள தளன்னு ஆக்கிட மாட்டேனா?

கமலத்திற்கு இத்தனை துக்கத்திலும் லேசான சிரிப்பு வந்தது. அம்மா எப்பவுமே இப்படித்தான். 'சமையல், சாப்பாடு இதைத் தவிர எதைப் பற்றியாவது யோசித்திருக்கிறாளா?'



என்று கூடத் தெரியாது. பேச்சு எங்கு ஆரம்பித்தாலும் சமையல், சாப்பிடுவதில்தான் வந்து முடியும்.

''என்னம்மா இது? எப்பப் பாத்தாலும் சாப்பாட்டையேவா நெனச்சுகிட்டு இருப்பே.''

''வயிறுதானடி பிரதானம். வயித்துக்காகத்தானே இத்தனை ஆர்பாட்டமும்'' என்பாள்.

எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் உயிர் போகிற சமாசாரம் ஆக இருந்தாலும் சாப்பாட்டை ஒட்டித்தான் அவளின் விவாதம் முடியும். ஒருநாள் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் தலை போகிற சண்டை. ஆப்பமும், குருமாவும், சப்பாத்தியும் வகை, வகையாய் ஆக்கிப் போட்டா ஏன் பேச மாட்டே'' என்று ஆரம்பித்து, தான் அப்பாவுக்காகச் செய்ததை எல்லாம் ஒரு பட்டியல் போட்டாள். அம்மாவின் இந்தச் சமையல் ஆசையே கூட அவளுக்கு நிறைய எதிரிகளை சம்பாதித்து கொடுத்திருக்கிறது. அம்மா மிக மிக அருமையாக சமைப்பாள். மிகவும் அக்கறை எடுத்து செய்வாள். ஆனால் அடுத்தவர்களின் சமையல் என்னதான் நன்றாக இருந்தாலும் ஒத்துக் கொள்ள மாட்டாள். ஏதாவது ஒரு குற்றம் குறை கண்டு பிடிப்பாள். குறிப்பாக, அவளின் ஒரே மருமகள் கமலத்தின் தம்பி மனைவிக்கும் கமலத்தின் அன்னைக்கும் தப்பித் தவறிக் கூட ஒத்துப் போகவில்லை.

''அந்த கிழத்துக்கு தான் பெரிய ஒலி மகாராசன் என்று நினைப்பு. உள்ளே விட்டாதானே.'' முணுமுணுத்துக் கொள்வாள். கணவனிடம் போட்டுக் கொடுப்பாள். அம்மாவின் நடத்தைகள் சில சமயம் எரிச்சலை மூட்டினாலும் தன்னையே சிலாகித்துக் கொண்டுதான் செய்யும் செயல்

மட்டுமே உயர்வு என்று சொல்லிக் கொண்டு... ஒருவேளை தன் மனதில் இருக்கும் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடோ, இல்லை இது கூட யதார்த்தத்திலிருந்து தப்பித்துக் கொள்ளல் தானோ? மறுபடியும் தொலைபேசி ஒலிக்க தன் நினைவுகளினின்று விடுபட்டு ஓடினாள் கமலம்.

'இந்த முறை நிச்சயம் கருணாவாகத்தான் இருக்கும். பேசட்டும். நல்லா வாங்கணும். இவ வராம நான் எத்தனை தவிச்சு போயிருப்பேன்.' இந்த முறை தொலைபேசியில் அழைத்தது கமலத்தின் மாமியார்.

''என்னடி கமலம். கருணா இன்னும் காலேஜ்லேந்து வரலியாமே.''

''யாரு சொன்னாங்க?''

''ஒங்க அம்மாதான். பொட்டை பிள்ளைகளை வளக்கறபடி வளக்கணும். அளவுக்கு மீறியா செல்லம் கொடுப்பாங்க.'' கமலத்தின் மனம் விழுந்தது. தானே துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். இந்த அம்மா சும்மா இருக்கக் கூடாதா? இதை ஒரு பெரிய விஷயமாக மாமியார்கிட்டே சொல்லணுமா?

மாமியாரின் சுபாவமே ஒரு சிறு துரும்பு அளவு குறை இருப்பதைப் போல் தோன்றினாலும் ஆட்டு ஆட்டு என்று ஆட்டிவிடுவாள். இப்போது அவள் நேரம் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

''நாங்க எல்லாம் எப்படி வளர்த்தோம் தெரியுமா? பிள்ளைங்க அவங்க அப்பா நில்லுன்னு சொன்னா நிக்கும். ஒக்காருன்னாலும் ஒக்காரும். பொட்டைப் பிள்ளைகளை கட்டுப்பாட்டுக்குள் வளர்க்கணும். இப்படியா?''



கமலத்திற்கு நான்கு நாத்தனார்கள். மூன்று பேரை ஐ.ஏ.எஸ், ஐ.ஆர்.எஸ்., என்று பார்த்து பார்த்துக் கொடுத்தார் மாமனார். கடைசிப் பெண் ஒரு கிருத்துவப் பையனை காதலித்து வீட்டை எதிர்த்து ஓடிப் போய் திருமணமும் செய்து கொண்டது. இதை - தான் சொல்லி காண்பிக்க முடியுமா? தவறாக அல்லவா ஆகிவிடும். உறவுகளால் எந்தவித உபயோகம் இல்லையென்றாலும் 'நீ நல்லா இருக்கியா? நான் நல்லா இருக்கிறேனா என்று கேட்பதற்காகவாவது ஆள் வேண்டும். பகைத்துக் கொள்ள முடியாது. மறுபடியும் மனது குமைந்தது. 'துன்பம் வரும்போது தனியே விலகிப் போய்விடும்.' சின்ன வயதில் ஆங்கிலத்தில் படித்த ஞாபகம். தன் துன்பத்தை வாய் விட்டு கூறி ஆற்ற நினைத்தது முட்டாள்தனம். இந்த அம்மாவிடம் சொல்லாமலிருந்தால் இத்தனை தூரம் விஷயம் பரவியிருக்காது. மறுபடியும் மனது கருணாவிற்குத் தாவியது. ''என்ன பெண் அது? எங்கே போனாலும் ஒரு போன் செய்துவிட்டு போயிருக்கக் கூடாதா? இப்படிக் கூட விட்டேத் தியாக இருக்குமா? அம்மா துடிப்பாள் என்று தெரியாதா? மனம் ஊமை அழுகை அழுதது.

கடவுளே என் பெண்ணுக்கு ஒன்றும் நேரக்கூடாது. முள்ளின் மேல் நிற்பது போல் ஒரு வேதனை. தீக்குள் நுழைந்தது போல் ஒரு தவிப்பு எரிச்சல், ஆத்திரம், கோபம் எல்லாம் சேர்ந்தது. எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்பது போல் மனது கலங்கியது. 'கடவுளே என் குழந்தைக்கு ஒன்றும் நேரக்கூடாது. பார்த்து பார்த்து ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்தது. கடைசியில் அதள பாதாளத்தில் விழுவதற்காகவா? மனது புலம்பிக் கொண்டிருந்தது. செய்வதறியாது திகைத்தாள் கமலம். 'மணி ஏழைத் தொட்டுக் கொண்டிருந்தது. இன்னும்

பெரியவள் வீடு வந்து சேரவில்லை. சிறியவள் வரும் நேரம் கூட ஆகிவிட்டது. மனது ரணப்பட்டு காயங்கள் வலிக்க ஓசையில்லாமல் அழுகிறாள் கமலம்.

"கடவுளே எனக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை? தண்டித்ததெல்லாம் போதாதா? மறுபடியும் போன் - அம்மாதான் செய்கிறாள்.

"என்னடி கொழந்தை வந்திடுச்சா."

"இல்லே..."

"இல்லையா?... ஐயையோ காலைல இத்துணூண்டு டப்பாவிலே சோத்த போட்டு அனுப்பறே. பாவம் அதுக்கு எப்படிப் போதும்னு தெரியலையே. மதியம் ஒரு மணிக்கு சாப்பிட்டது. எப்படி போதும்னு நினைக்கறே."

கமலத்திற்கு எரிச்சல் தாள முடியவில்லை. ரோம் நகரம் பற்றி எரிந்தபோது நீரோமன்னன் பிடில் வாசித்த கதையாக அல்லவா இருக்கிறது. பெண்ணைக் காணோம்னு பதறிக் கொண்டு இருக்கிறேன். இப்போது சாப்பாடு தான் ரொம்ப முக்கியம்.

"ஆமா நீங்க ஏன் என் மாமியாருக்கு போன் செய்தீங்க?"

"ஏன்? அவர்களுக்கு சொல்ல வேண்டாமா? சாதாரணமாகவே உன் மாமியாருக்கு சம்மந்திங்கற மரியாதை கெடையாது. பிடிச்சு விலாசித் தள்ளும். இந்த விஷயத்தை வேற சொல்லாமப் போனா அவ்வளவுதான். பாக்கிற போதெல்லாம் சொல்லி, சொல்லி உயிரெடுத்துடும்."

கமலத்திற்கு மனம் சோர்ந்தது. அம்மாவிடம் பேசவே முடியாது. தான் பிடிக்கும் முயலுக்கு மூணேகால் என்று



சாதிப்பவள். போனை வைத்து விட்டு மறுபடியும் கண்களை மூடி யோசனையில் ஆழ்கிறாள். இம்முறை மாமியாரின் போன் வர துவண்டு போகிறாள். போதும்... வேதனையாக இருக்கும்போது மறுபடியும் பேசி உணர்வுகளைக் கீறிவிடும் இவளின் பேச்சுக்களைத் தவிர்க்க முடிந்தால் எத்தனை நன்றாக இருக்கும். துக்கம் சூழ்ந்த மனதையும், சோர்ந்து போன இதயத்தையும் கட்டுப்படுத்திக் கொண்டு ஈனஸ்வரத்தில் முனகுகிறாள்.

"சொல்லுங்க அத்தை."

"ஒம் பொண்ணு விஷயம் என்ன ஆச்சு?"

"தெரியலைங்க அத்தை."

"தெரியலையா? என்னடி இப்படி மசமசன்னு ஒக்காந்துகிட்டு இருக்கியே. இப்படியா இருப்பாங்க? ஆமா வேற ஏதாவது இருக்குமா?"

"என்ன சொல்றீங்க?"

"அதாண்டி. ஒம்பொண்ணு காரைப் பாத்தா பல்லை இளிக்கும். எவனாவது காரை காட்டி ஓட்டிகிட்டு போயிட்டானா?" இதற்கு என்ன பதில் சொல்வது?

"அப்படி எல்லாம் இருக்காதுங்க அத்தை."

"ஏன் இருக்காது? ஒம் பொண்ணு கண்ணுல சதா ஒரு அலைச்சல். ஒன்னால கண்டுபிடிக்க முடியலையா என்ன? நல்ல டிரஸ்ஸைப் பாத்தா ஏக்கம்; புது சாமான் எது பாத்தாலும் ஒரு ஏக்க பெருமூச்சு. என்னைக்கோ சொல்லி வச்சேன் இல்லே. பத்திரம்னு. கேட்டாதானே. மாடு கட்டை அவிழ்த்துகிட்டு போகாம இருக்க, காபந்து பண்ணி வச்சு ஒரு கட்டுக்குள்ள

வச்சிருக்க வேண்டாமா? அதைச் செய்திருந்தா இத்தனை லோல் ஆட்டம் வருமா?'' கமலம் மௌனம் சாதிக்க மறுபடியும் மாமியார் ஆரம்பிக்கிறாள்.

''என்ன பதிலையே காணோமே.''

''எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலீங்க அத்தை நான் அப்புறம் பேசட்டுமா?'' டொக்கென்று மாமியார் போனை வைக்கும் சப்தம். எதிராளியை நாக்கில் நரம்பில்லாமல் பேசலாம். ஆனால் தன்னால் ஒரு பேச்சு வாங்கிக் கொள்ள முடியாது. ஒரு சின்ன எதிர்ப்பைக் கூட தாங்காதவள் தன் மாமியார். மறுபடியும் கமலாவிற்கு பெருமூச்சு. 'என்னடி கருணா இப்படி செய்துட்டே?' மனது மறுபடியும் அலறியது. தெரிந்தவர்களுக்கெல்லாம் போன் போட்டு கேட்கலாம். ஆனால் மனிதனின் மனது இருக்கிறதே. துருப்பிடித்த மனது தன்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பயனற்றவர்கள், குற்றவாளிகள் என்று நினைக்கும் நினைப்பு. ஒரு சிறு துரும்பு கிடைத்தாலும் ஊதி பெருமாளாக்கி விடுவார்கள். அதுவும் தங்கள் குடும்பத்தில் இந்த வம்பு மிக மிக அதிகம். இதே யோசனையில் தலை நிமிர்ந்த போது காவ்யா எதிரே வந்து நிற்கிறாள்.

''என்னம்மா ஏதோ கப்பல் கவிழ்ந்த மாதிரி மொகத்தை வச்சுகிட்டு இருக்கே? என்ன ஆச்சு?''

பெண்ணைப் பார்த்ததும் இதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம் எல்லாம் பீறிட, சிறு குழந்தையாக விம்முகிறாள் கமலம்.

''அம்மா என்னம்மா ஆச்சு?'' ஒரு வழியாக திக்கித் திணறி விஷயத்தைச் சொன்ன போது,



''என்னம்மா நீ காரியத்தையே கெடுக்கறியே. இந்த ரெண்டு பாட்டிகள்ட்டே எதுக்காக சொன்னே.''

''இல்லேடி..'' அம்மா ஈனஸ்வரத்தில் கமறியபோது, ''அம்மா! உனக்கு எத்தனை தடவை சொல்றது? ஏன் புரிஞ்சிக்கவே மாட்டேங்கறே. நம்ம நெருங்கிய சொந்தத்துக்கு ஒரு கஷ்டம்னா மனது ஆனந்தக் கூத்தாடும். மூணாவது மனுஷன் யாருக்காவது கஷ்டம் வந்ததுன்னா, ''ஐயோ பாவம் அப்படீன்னுவோம். இது மனுஷனோட சுபாவம். புத்திசாலியா இருந்தா நம்ம கஷ்டத்தை வெளியே சொல்லக் கூடாது.''

''சில கஷ்டத்தை சொல்லித்தாம்மா ஆகணும். இல்லேன்னா எப்படி நமக்கு உதவி கிடைக்கும். யார் நமக்கு உதவி செய்வாங்க.''

''அம்மா எந்த ஆரம்பத்துக்கும் ஒரு முடிவு உண்டு. கஷ்டம் வராம பாத்துக்கணும். அப்படி வந்துச்சுன்னா அதுலேந்து வெளியே வரது எப்படீன்னு யோசிக்கணும். சும்மா அழுது, புலம்பி அடுத்தவன் அனுதாபம் வாணும்னு நெனச்சே. அனுதாபம் கிடைக்காதது மட்டுமல்ல. ரொம்ப சீப்பா ஆயிடுவோம். நீ அழுதுகிட்டு இருக்காதே. நான் பாத்துட்டு வரேன்.''

ஒரு நிமிடம் வண்டியை எடுத்துக் கொண்டு மறுபடியும் அவள் கிளம்பவும் கருணா உள்ளே காலடி வைக்கவும் சரியாக இருந்தது.

''எங்கே போயிருந்தே?'' தங்கையின் கேள்விக்கு அலட்சியமான ஒரு பதில்தான்.

''பெரியம்மா வீட்டுக்கு.''

"என்னது?"

"ஏன் போகக் கூடாதா?"

"சொல்லிட்டு போறது."

"ஆமா தொட்டதுக்கெல்லாம் சொல்லிகிட்டு இருப்பாங்க." கமலத்திற்கு பெண்ணின் பதிலைக் கேட்க, கேட்க ஆத்திரம், கோபம் "ஏண்டி அவ கேக்கறதுலே என்ன தப்பு? நீ வரலேயேன்னு துடிச்சுகிட்டு கிடக்கறேன். எப்படி தெனாவெட்டா பதில் சொல்றே பாத்தியா?"

"ஆமா... அப்படியே பொண்ணு வரான்னு விதவிதமா ஆக்கி, வகை வகையாய் துணி எடுத்து வச்சு காத்திருந்தாயாக்கும்."

மனது ஒரு நிமிடம் சுருண்டு கொண்டது. இந்தப் பெண்ணிற்காகவா இத்தனை தூரம் காத்து மறுகி, துடித்து துவண்டு சே!

"ஏய் கருணா! என்ன பேசறோம்னு தெரிஞ்சுகிட்டு பேசு. வீட்டிலே உள்ளவங்க வரலேன்னா வீட்டிலிருக்கறவங்க துடிக்க மாட்டாங்களா?"

"துடிச்சு ஊர் மொத்தமும் சொல்லி அனுப்பிச்சாச்சா?"

"சொல்லாம. "காவ்யாவின் முகத்தில் கோபம் ஏற.

"ஏம்மா இங்க என்ன இருக்குன்னு பொண்ணு வரணும்னு எதிர்பார்க்கறே. பெரியம்மா வீட்டிற்கு போயிருந்தேன்."

"யாரு"

"அப்பாவோட அண்ணன் தண்டபாணி அவங்க வீட்டுக்கு. என்ன மாதிரி பங்களா? பளபளன்னு இருக்குது.



பெரியப்பா பொண்ணு பிரியாதான் அவங்க வீட்டுக்கு கூப்பிட்டுச்சு. சரின்னு போனேன். அப்பா!... ப்ரிஜ்ஜே எத்தனை உயரம் தெரியுமா? ஸ்டீரியோ வச்சிருக்காங்க. கார் இருக்குது. ஸ்கூட்டர் இருக்குது. ஏன் கம்ப்யூட்டர் கூட வச்சிருக்காங்க. இன்னிக்கு ப்ரண்ட்ஸ் எல்லாம் அழைச்சுக்கிட்டு வருவேன்னு போன் போட்டு சொல்லிட்டாளாம். ஹோட்டல்லேருந்து எல்லாம் வரவழைச்சு இருந்தாங்க. புலாவ், பச்சடி, சப்பாத்தி, சப்ஜி, ரஸகுல்லா, கட்லட்டுனு ஒரே அமர்க்களம். நான் போய் ஒரு புடி புடிச்சேன். பாவம் பெரியம்மா ரொம்ப நல்லவங்க. உங்கம்மா எல்லாம் வரதே இல்லையேன்னு கேட்டாங்க. ப்ரியாவோட டிரஸ்ஸை எடுத்து போட்டுக்கோ. பழசை போட்டுகிட்டு இருக்கியேன்னு கொடுத்தாங்க தெரியுமா?"

காவ்யா அம்மாவைப் பார்க்க, அம்மா ஒரு பெருமூச்சோடு காவ்யாவைப் பார்க்கிறாள்.

"ஏண்டி கருணா இப்படி நடந்துக்கறே. ஒனக்கே அசிங்கமா இல்லையா. இப்படியா பிச்சை கேக்கறது?"

"யார் கேட்டாங்க? அவங்களா கொடுத்தாங்க. இத பாருடீ நமக்கு வசதி கிடையாது. வசதியானவங்க கொடுத்தா ஏன் வேண்டாம்னு ஜபர்தஸ்து செய்யணும். சந்தர்ப்பம் வரும்போது பயன்படுத்திக்கணும்" சொல்லிவிட்டு முகத்தைக் கழுவ என்று அவள் நகர.

"நமக்கு அசிங்கத்தை தேடித் தர இவள் ஒருத்தி போதும்" சொல்லிவிட்டு அழும் அம்மாவையே வேதனையோடு பார்க்கிறாள் காவ்யா.

கருணா சிறுவயதில் இத்தனை மோசமில்லை. இப்போது வயதாக ஆகத்தான் இப்படி? என்னமோ இவள் ராணி

போலவும் இவளுக்கு வரவேண்டிய அதிர்ஷ்டத்தை அம்மா கெடுத்ததைப் போலவும் ஒரு நினைப்பு. எல்லாம் இல்லாத கொடுமை. தனக்கும் வகையாக அப்பா என்பவர் இருந்திருந்தால் இப்படி எல்லாம் ஆகியிருக்குமா? ''மூடிய கண்களில் இருந்து கண்ணீர் பெருகப், பெருக அப்படியே சாய்கிறாள் காவ்யா. இதற்குள் முகத்தை கழுவிக் கொண்டு வந்த கருணா பையைத் திறந்து விதவிதமான நைட்டிகள், குடிதார்கள் என்று எடுக்கலானாள். கையில் கிழிந்தது. கழுத்தில் கிழிந்தது. வீட்டு விலக்கான கறையோடு இன்னும் சில துணிகள் கால் பக்கம் கிழிந்து, அழுக்கு உறைந்து போய்... சே. பார்க்கும் போதே காவ்யாவிற்கு எரிச்சல் வந்தது.

''அக்கா இதை பிச்சைக்காரிக்கு கொடுக்கற மாதிரி கொடுத்திருக்காங்க. இதப் போய் வாங்கிட்டு வந்தயே.''

''இருக்கட்டுமே. நாம பிச்சைக்காரங்க தானே'' என்று சொல்லிவிட்டு, ஒன்று விடாமல் அத்தனையும் அள்ளிச் செல்லும் மகளையே வேதனையோடு பார்க்கிறாள் கமலம்.

''ஏம்மா கருணா அம்மா இல்லீங்களா? அவங்ககிட்டே இந்தத் துணியை கொடுத்திடுங்க. அர்விந்த் ஐயா கொடுத்து அனுப்பிச்சார்னு சொல்லுங்க. நாளைக்கு வரும்போது போட்டுகிட்டு வரச் சொன்னார். ''பதிலை எதிர்பார்க்காமல், புதிய குடிதாரை அவர்களிடம் கொடுத்து விட்டு செல்ல கமலமும், காவ்யாவும் சிலையாக நின்றார்கள்.



## 2

குளித்து விட்டு பெரியம்மா கொடுத்த அந்த அழுக்கு மேக்ஸியை போட்டுக் கொண்டு மெல்லியதாக பாடலை முணுமுணுத்தவாறு வரும் மகளையே பார்க்கிறாள் கமலம்.

''அம்மா ஒரே பசி. சமையல் ஆயிடுச்சா. சோறு போடறியா? ''மகள் குதூகலமாக கேட்க, கேட்க

''யாருடி அவன்?'' என்கிறாள் கமலம்.

''என்னது?''

''யார் அந்த அர்விந்த் உனக்கு குடிதார் கொடுக்கிற அளவிற்கு போனவன். ''அம்மா கேட்கிறாளே என்ற பயம் இல்லை. அசிங்கப்படவில்லை. அதிர்ச்சி இல்லை.

''எங்கே அந்த குடிதார்?'' என்றவள் ''பியூட்டிபுல்' என்றாள். ''எத்தனை அழகான கலர் செலக்ஷன் பாத்தியா?'' குதூகலத்தோடு அவள் கூற-

''யாருடி அவன்'' மறுபடியும் கமலம் மிரட்டுகிறாள்.

''அதுவா என் காலேஜ்லே என் கிளாஸ்லே படிக்கறவன் எப்ப பாத்தாலும் சாயம் போன பழைய டிரஸ் போட்டுக்கறேனா. அவன் அதைப் பாத்து பரிதாபப்பட்டு அனுப்பி இருக்கிறான்.

''என்ன சொன்னே?'' சற்று உரக்க கத்துகிறாள் கமலம்.

''அம்மா... பேசாம இரும்மா'' காவ்யா அம்மாவை அடக்க முயல,

கர்ஜிக்கிறான் கமலம்.

''காவ்யா நீ உள்ளே போ கர்ஜிக்கிறான் கமலம். ''காவ்யா நீ உள்ளே போ'' ஒரே ஒரு தடவை அம்மாவின் இந்த ரூபத்தை ஏற்கனவே ஒரே ஒரு தடவை அம்மாவின் இந்த ரூபத்தை ஏற்கனவே ஒரே ஒரு தடவை

குலத்தின் கொழுந்தாக ஒரே ஒரு ஆண் மகன். இது போதாதென்று அவர்கள் வீட்டோடு இருந்த அவளின் தந்தையின் அம்மா. அப்பாவிற்கு அத்தை பாட்டியின் தம்பி என்று பத்து, பதினோறு பேர் கொண்டது அந்தக் குடும்பம். அப்பா ஒருவர் சம்பாத்தியத்தில்தான் அந்தக் குடும்பமே பிழைத்தது. அதனால் அப்பாவிற்கு ஒரு அரசனுக்கு உரிய மரியாதைதான்.

அவர் வரும்போது எதிரில் யாரும் வரக்கூடாது. அவர் சாப்பிட்டுத்தான் - தான்சாப்பிட வேண்டும். அதிர்ந்து பேசக் கூடாது. உரக்கச் சிரிக்கக் கூடாது. அதுவும் பெண் பிள்ளைகள் உள் அறைகள் விட்டு வெளியே வரக்கூடாது. நான்கு பெண்களுக்குப் பின் பிறந்த பிள்ளைக்கு சற்று சலுகைகள் அதிகம்தான். இவர்களுக்குத்தான் ஒன்றுமே கிடையாது. சற்று கிண்டலாகப் பேசி சிரித்துக் கொண்டிருந்தாலோ, அல்லது மற்ற சிநேகிதிகளை அழைத்துக் கொண்டு வந்து வீட்டில் விளையாடினாலோ போதும் உடனே அப்பாவின் காதுக்கு எட்டி. கேட்கும் அந்தக் கேள்விக்கு உயிர் போய் விடாதா என்று தோன்றும். அப்பா தூங்கினால் மற்றவர்கள் மூச்சு கூட விடக்கூடாது. அப்பாவிற்கு முன் சாப்பிட, மறந்து போய் கூட தட்டை போட்டு விடக் கூடாது. பாலோ, நெய்யோ, தயிரோ எல்லாமே அவருக்கு மட்டும் சற்று கூடுதலாக வைக்கப்படும். 'பொம்பளை' என்று கேவலமாகப் பேசும் அப்பாவிற்கு போதும் போதும் என்று சொல்லும் அளவிற்கு பெண்ணைக் கொடுத்தது கூட கிண்டல் தானோ என்னவோ. பெண்கள் சிரிக்க கூடாது. தனியாக எங்கும் செல்லக் கூடாது. வீட்டைப் பெருக்கி, துணி துவைத்து கொஞ்சம் சமையல் செய்து 'பொட்டச்சிங்களுக்கு அது தவிர என்ன வேலை என்பார்.



அவரைப் பார்த்தாலே நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ளும்.

போதாத குறைக்கு அம்மா வேறு. 'அப்பா... அப்பா' என்று கிளப்பி விடுவாள். நான்கு பெண்களுக்கு அப்புறம் ஒரே ஒரு கருவேப்பிலை கொழுந்து போல் ஒரே ஒரு பிள்ளை. அம்மாவிற்கு ரொம்ப ரொம்ப பிரியமானவன். ஆனால் அப்பா எல்லோரையுமே சாடு, சாடு என்று சாடுவார். தம்பியிடம் சற்று அன்பு அதிகம்தான். சாடினாலும் அவனுக்கு சலுகைகள் அதிகம். இவர்களிடம் வெறும் சாடுதலும் வெறுப்பும்தான் - வெறுப்பும் அதிகமாகத் தான் காண்பித்தார் ''பொட்டைக் கழுதைகளுக்கு என்ன?'' என்பார்.

தன் தோழி ஒருத்தி தன் தந்தை எப்படி எல்லாம் அன்பைப் பொழிகிறார் என்று கூறக் கூற ஆச்சரியமாக இருக்கும். தந்தை என்பவருக்கு நேசிக்க தெரியுமா? ரொம்ப நான் ஆச்சரியப்பட்ட விஷயம் அது. அக்காவை அம்மாவின் தம்பியே திருமணம் செய்து கொண்டு விட, அடுத்து இவளுக்குத்தான் மாப்பிள்ளை தேட ஆரம்பித்தார்கள்.

இருக்கும் நான்கு பெண்களிலேயே கமலம்தான் மிக மிக அழகாக இருப்பாள். பளிச்சென்ற வெண்மை சிவந்த உதடுகள். துருதுருவென்ற கண்கள், தொடையைத் தொடுகின்ற கூந்தல். அதுமட்டுமல்ல. கமலத்திற்கு காரியத்திலும் நேர்த்தி அதிகம். எதைச் செய்தாலும் எதிராளிக்கும் திருப்தி வரும்படி செய்யும் ரகம். இந்தத் தகுதிகளால் சல்லிக்காக கூட செலவு செய்யாமல் மாப்பிள்ளை பிடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டார் அப்பா. அவர் விருப்பப்படியே சல்லிக்காக கூட கேட்காமல் மணந்து கொண்டவன் அவளின் கணவன். பரம்பரை பரம்பரையான திவான் குடும்பம். நான்கு

பெண்கள். மூன்று பிள்ளைகள். பெண்களில் ஒருத்திதான் யாரோ கிறுத்துவப் பையனை மணந்து கொண்டாளாம். மீதி பேரெல்லாம் ஐ.ஏ.எஸ். ஐ.எப்ஃ. எஸ். ஐ.ஆர்எஸ்.ஸி என்று மாப்பிள்ளைகள். பிள்ளைகளும் படித்து விட்டு ஒருவன் கம்பனியில் நல்ல வேலை. இன்னுமொருவனுக்கு கவர்மென்ட்டில் வேலை. இவளுடைய கணவனுக்கு வங்கியில் வேலை. ஒரு பைசா செலவில்லாமல் உயர்ந்த இடத்தில் மாப்பிள்ளை பிடித்ததற்காக ஊரே கொண்டாடியது. மூக்கின் மேல் விரல் வைத்தது. ஆயிரம் இருந்தாலும் அவளின் சாமர்த்தியம் யாருக்கு வராது. புகழ்ந்தது. திருமணம் ஆகி பெரிய குடும்பத்தின் மருமகளாக வந்து காலை முதல் இரவு படுக்கும் வரை ஓடாக உழைத்து - முதல் குழந்தை பிறக்கும் வரை கணவனுக்கு வேலை இல்லை, வேலையிலிருந்து தூக்கப்பட்டவன் என்ற விஷயமே அவளுக்குத் தெரியாது. கணவனுக்கு இல்லாத கெட்ட பழக்கங்களே இல்லை என்ற உண்மையும், முதல் குழந்தை பிறந்த போதுதான் தெரிந்தது. சூதாடுவது, ரேஸுக்குப் போவது, குடிப்பது, பணத் தேவைக்கு பேங்கில் கை வைத்து வேலையும் போனது, திருமணம் ஆகி ஒரு வருடம் சென்ற பிறகே தெரிந்தது. உண்மை தெரிந்ததும் துடித்துப் போனாள். மாமியாரிடம் நியாயம் கேட்ட போது.

''எல்லாம் நீ வந்த நேரம்'' என்றாள். இதற்கிடையில் கணவன் நோய் என்று படுத்து விட வைத்திய செலவுக்கு, ஆஸ்பத்திரி செலவுக்கு என்று அவள் வீட்டில் போட்ட ஒன்றிரண்டு நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் போய் விட கையில் இரண்டு கண்ணாடி வளையல்களும், கழுத்தில் மஞ்சள் சரடுமாக நின்றாள் கமலம். இதற்கிடையில் இன்னுமொரு குழந்தையும் பிறந்து விட பாழும் வயிற்றுக்காக



கமலம் சம்பளம் இல்லாத வேலைக் காரியாகவே ஆகிப் போனாள். மூத்தார் பிள்ளைகள் எல்லாம் உயர்ந்த ரக கான்வென்டில் படித்தபோது தன் முதல் பெண்ணை கார்ப்பரேஷன் பள்ளிக்குத்தான் அனுப்ப முடிந்தது.

''பொட்டச்சிக்கு என்னத்துக்கு பள்ளிக்கூடம். கூட மாட ஒத்தாசைக்கு வச்சுகிட்டு வேலையைக் கத்து கொடு'' இது மாமியார்.

தனக்கு அடுத்த தங்கையின் திருமணத்திற்குச் சென்றபோது தன் நிலைமையைச் சொல்லி அழ, அப்பா எதையும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

''இப்ப சம்பாத்தியம் இல்லாம என்ன முழுகிப் போகுது. இதோ கல்யாணமான இந்த நாலு வருஷமா மாமியார் சோறு போடுது இல்லே. மத்தது, நூல் புடவை, வேட்டியை ஒரு நாள் கிழமைன்னா வாங்கி கொடுக்குது இல்லே.''

''நான் தானே எனக்கும், புள்ளைகளுக்கும் சோறு போடறேன். ஒம் புருஷனா சம்பாதிக்கறான்னு'' வக்கணை பேசறாங்க.''

''அது பேசினா நீ ஏன் வாய் மூடிகிட்டு இருக்கே. ஒதவாக்கரை பிள்ளையை பெத்தா அப்படித்தான் போடணும்னு வாய் மேலே போடணும். அப்புறம் பேசுவாளா?''

ஒட்டிக் கொள்வாளோ என்ற பயம். ''நல்லதோ பொல்லாதோ இனிமே அவள் வீடு அவங்க வீடுதான்.'' அம்மாவும், அப்பாவும் சேர்ந்து சொன்னபோது நிழல் என்று அண்டி இருக்க முடியாது என்று தெரிந்தது. வேர் என்று

நினைத்து பிடித்துக் கொள்ள முடியாது. பெண் என்பவளை சுமையாக நினைக்கும் போக்கு மௌனமாக தன் வீடு நோக்கித் திரும்பியபோதே மாமியார் தங்கை கல்யாணத்திற்கு மருமகப் பிள்ளைக்கு பட்டு வேட்டி பட்டுப்புடவை, எடுக்கவில்லை என்று சண்டை போட்டாள்.

பதினேழு வருடங்களுக்கு முன்பு இதே நாள். அந்த நாள் நல்ல நாளா? இல்லை கெட்ட நாளா? தெரியவில்லை. ஒரு வழியாக அறுத்துக் கொண்டு ஓடிய நாள். அன்று பெரியவளை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, சின்னவளைச் சமையல் அறையில் எடுத்துப் போய் படுக்க வைத்து விட்டு, வேலையை முடித்து விட்டு சாப்பிட்டு எழுந்த போது அது நடந்தது. தன் கணவர் சற்று வயதான பெண்ணைத் தள்ளிக் கொண்டு வந்து -

''இத பாருடீ, ரெண்டு பேருக்கும் காபியைக் கொண்டு வந்து கொடு. ஸ்வீட், காரம் எல்லாம் ரெடி பண்ணு. ''எட்டணா சம்பாத்தியம் இல்லை. அவ்வப்போது அம்மாவிடம் ஐந்து, பத்து என்று வாங்கிப் போய் செலவு செய்யும் ஜாதி. இதற்கு இன்னொரு உடல் சுகம் கேட்கிறது.

அதுவரை பூனை போல் பயந்து மாங்கு, மாங்கு என்று வேலை செய்து கொண்டிருந்தவள்.

''யார் அது?'' சற்று அதட்டலாகக் கேட்கிறாள்.

''உனக்கு தங்கையாக நினைச்சுக்கோ.'' ''ஓ... சக்களத்தியா?'' இவளின் ஓரகத்திகள், மாமியார், மாமனார் ஞாயிற்றுக்கிழமை லீவில் வீட்டிலிருந்த மச்சினர்கள் கூட இவளின் அதட்டலைக் கேட்டு மலைத்துத் தான் போகிறார்கள்.

''எய்யா? பத்து காசு சம்பாரிக்க துப்பில்லே. ஒனக்கு ஒரு பொம்பளை பத்தாதா?''



''கேள்வியில் ஆத்திரம், கோபம் எல்லாம் கொழுந்து விட்டு எறிய ''என்னடி சொன்னே?'' ஆவேசத்தோடு அவன் கன்னத்தில் நச்சென்று அறைய ''அடப்பாவி. அடி நல்லா அடி. எப்படி, எப்படியோ இருக்கப் போறோம்னு உன்னைக் கட்டிகிட்டேனே. சாதாரணமாகக் கூட என்னை நடத்தலையே. பொடவையும், நகையுமா உன்னைக் கேட்டேன். பசித்த வேளைக்கு இத்தனை சோறு. அதைக் கூட கொடுக்க முடியாத வக்கில்லாத ஆளான்னா நீ இருக்கே. இந்த லட்சணத்துலே இன்னொண்ணா. அடி சொல்லு - யம்மா... தாயீ பாத்தியில்லே. இவனை கட்டிகிட்டா இதுதான் - எப்படி கெடக்கறேன் பாத்தியில்லே. இத்தவிட கேவலமா நீ ஆகிப் போடுவே.''

கமலம் கோபத்தில் கத்தி ஆர்ப்பாட்டம் செய்து பேசப் பேச, ''ஏய் வாயை மூட மாட்டே'' சட்டென்று அவனின் குரல் வளையை நெறிக்கிறான். இதற்குள் விழித்துக் கொண்ட காவ்யா ''அம்மாவை விடு, அம்மா... அம்மா'' என்று அழ சுற்றி இருப்பவர்கள் வேடிக்கை பார்க்க, ஒரு மனித இதயம் கூட அற்ற இடத்தில், தான் இருப்பதைப் புரிந்து கொண்டாள். பலம் கொண்ட மட்டும் புருஷனை எட்டி உதைக்க புருஷன் ஒரு பக்கம் போய் விழ, மறு நிமிடம் வீட்டைக் கூட்டும் துடைப்பத்தை எடுத்து கணவனுக்கு சரமாரியான பூசைகள்தான்.

''ஏய் விடுடீ!'' அதுவரை மௌனமாக நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த மாமியார் கத்த, முதல் முறையாக மாமியாரை பார்த்துக் கத்துகிறாள்.

''எதை விடச் சொல்றீங்க? புருஷனையா?''

''என்னடி வாய் நீளுது?''

"ஏன் அத்தை நீங்களும் ஒரு பொண்ணுதானே. எட்டணா சம்பாத்தியம் இல்லாத ஆணுக்கு குடும்பம், குழந்தை, பொண்டாட்டி தேவையா? சொல்லுங்க?" ஒரு பெண்ணோட வாழ்க்கையை கெடுக்கலாமா? கூழோ, கஞ்சியோ ஊத்தறவரோட போயிருந்தா கூட நல்லா இருந்திருப்பேன் போல இருக்கே."

இதற்குள் விளக்குமாற்றால் அடிபட்டவன் மறுபடியும் சீறி எழுந்து 'போடி... வெளியே!' அவனை உதறிவிட்டு தீர்க்கமாகப் பார்க்கிறாள்.

"இத பாருய்யா. நீயா திருந்தி வந்து, ஆம்பளையா லட்சணமா, எட்டணா சம்பாறிச்சாதான் நான் ஒன் பொண்டாட்டியா உன் வீட்டுக்குள்ளே இருப்பேன். இல்லே, ஒம் பெண்டாட்டி செத்து போயிடுச்சுன்னு நினைச்சுக்க."

விடு விடுவென்று உள்ளே போனவள் தன்னிடம் இருந்த நாலு புடவைகளையும், குழந்தைகளின் நான்கு துணிகளையும் வாரிப் போட்டபடி வீட்டை விட்டுக் கிளம்புகிறாள்.

"போடி போ... பொட்டைக் கழுதை. இனிமே நீயே வந்தாலும் கால்ல விழுந்தாலும் என் வீட்டுப் படியேத்த மாட்டேன். போ சனியனே" குடும்பத்தில் இருந்த அத்தனை பெரியவர்களும் வேடிக்கை பார்க்க, ஓரகத்திகள் இருவரும் நமுட்டு சிரிப்பு சிரித்தனர்.

'சே! இத்தனை ராட்சசியா இருப்பான்னு நினைக்கவே இல்லையே." இது அன்று எதேச்சையாக வந்த நாத்தனாரின் வாய்மொழிகள். கையில் பெட்டியோடும், தோளில் காவ்யாவை சார்த்திக் கொண்டும் நேரே பக்கத்தில் உள்ள கார்ப்பரேஷன் பள்ளிக்குச் சென்றாள். தன் முதல் குழந்தை



கருணாவையும் அழைத்தவாறே, தன் பெற்றோர் வீட்டுக்கு வந்தபோது, அப்பாவிற்கு சகல செய்திகளும் தெரிந்து போயிற்று. "ஏண்டி ஒம் பொண்ணுகிட்டே படிச்சு, படிச்சு சொன்னேனே. இப்படி பண்ணிகிட்டு வந்து நிக்குதே. தொடப்பை கட்டைலே அடிச்சிருக்காளாம் புருஷனை. பெரிய வீரப் பொண்ணுன்னு ஞாபகமா? புருஷன்ங்கற மட்டு மரியாதை எல்லாம் பொட்டச்சிக்கு கெடையாதா? இப்படியாடி வளப்பே."

"நானும் நெய் சோறும், பால் சோறும், தொட்டுக் கொள்ள கீரை, பொரியல்னு போட்டு தானே வளர்த்தேன். ஏண்டி கமலம் புருஷனையா அடிப்பாங்க. மகாபாவமாச்சே. எந்தக் கோயிலுக்குப் போய் இதை எல்லாம் சரி செய்யப் போறே. சொல்லு. ஆம்பளைங்க அப்படி இப்படிதான் இருப்பாங்க. கண்டும் காணாம இருக்கிறதுதான் புத்திசாலித்தனம் புரிஞ்சுதா? அம்மாவின் வியாக்யானங்கள் கேட்டு, கேட்டு புளித்து விட்ட வாசகங்கள்.

'பெண் தன்னிடம் வந்து ஒட்டிக் கொண்டு விடுவாளோ என்ற சுயநலத்தின் வேகம் பேச வைக்கிறது. அன்று குழந்தைகளுக்கு சாப்பாடு போட்டு விட்டு படுத்தபோது அம்மா பேச ஆரம்பித்தாள்.

"இத பாரு கல்யாணம் கட்டினப்புறம், அம்மா வீட்டிலே வந்து இருந்தா நல்லா இருக்காது. ஒனக்கும் மரியாதை இல்லே. மருமகப் பிள்ளைக்கும் மரியாதை இல்லே. நாளைக்கு காலைல வண்டியிலே கிளம்பு. கொஞ்சம் அப்படி இப்படி பேசினாலும் ஒங்க வீட்டு மனுசங்க தங்கம்தான். கல்யாணம் ஆகி நாலு வருஷமா ஒன்னையும் ஒம் புருஷனையும் வச்சு சோறு போடறாங்க இல்லே."

"ஒனக்கு அதுக்கு கூட மனதில்லையாம்மா!" வாய் வரை வந்துவிட்ட கேள்வியை மனதிற்குள் மென்று முழுங்குகிறாள்.

"இப்பவே கிளம்பட்டுமா? இல்லை காலைல போகலாமா?"

"இருட்டிடுச்சு காலைல கிளம்பு" மறுநாள் காலை கமலம் தன் துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டு கிளம்புகையில் "என்ன கிளம்பினாளா?" அப்பா கேட்க "விட்டு விடுவேனா?" அம்மா சிரிக்கிறாள்.

வெளியே இரண்டு குழந்தைகளையும் கையில் ஒன்று, இடுப்பில் ஒன்றாக வைத்துக் கொண்டு மறுகையில் பெட்டியையும் சுமந்து கொண்டு வெளியே வந்தவளுக்கு அம்மாவின் சிரிப்பு கூட காதில் விழுகிறது.

"புருஷன் தான் எல்லாம்னு சொல்லி அனுப்பிட்டேன்." அம்மாவின் குரல் மனதில் வந்து சுருக்கென்றது. மனதை தைக்கிறது. எந்த பெற்ற தாயாவது பிள்ளைகள் கஷ்டப்படும் போது பாதிப்பு இல்லாமல் சிரிப்பாளா? அதோ இதற்கும் தன் தாய் ஒரு உதாரணம். புருஷனிடம் இன்னும் என்ன படணும்? சதா சமையல் அறையிலும், வீட்டினுள்ளும் வேலை செய்யும் மனைவிக்கு என்றாவது ஒரே ஒரு நிமிடம் ஓய்வு என்பது உண்டா என்றாவது ஒரு நிமிடம் அவளுக்காக பரிதாபப்பட்டது உண்டா? தன் வயிற்றை முதலில் ரொப்பிக் கொள்வான். பின் மல்லாந்து படுக்கை - அடிக்கடி தாயைப் பணம் கேட்டு நச்சரித்துப் பிடுங்கி அது கிடைக்காத பட்சத்தில் எத்தனை முறை இவளை சொல்லம்புகளால் இதயம் புண்ணாக, புண்ணாகத் தாக்கி விட்டு போயிருக்கிறான்.

எத்தனையோ முறை குடித்து விட்டு வந்து கலாட்டா செய்து அவள் மேலேயே வாந்தி எடுத்த நாட்கள் ஏராளம்.



எத்தனையோ முறை குடிவெறியில் அவளை அடித்து துவைத்து ருத்ர தாண்டவம் ஆடியிருக்கிறான். இந்த நான்கு வருட வாழ்க்கையில் ஒரே ஒரு நிமிடம் கூட அவன் அவளுக்காக உருகியதில்லை. இந்தக் குழந்தைகள் கூட அவனின் க்ஷண நேர விருப்பத்திற்காக பிறந்த சுமைகள்தான். மொத்தத்தில் தன் திருமணமே ஒரு சாபக்கேடுதான். திருமணத்திற்கு முன்பும் பெரியதாக பணம் என்று அவளிடம் கிடையாது. அப்பா என்றாவது ஒரு ரூபா இப்படி கொடுப்பார். ஆனால் திருமணத்திற்கு பின் அந்த பைசா கூட கிடையாது. இத்தனை அசிங்கப்பட்டு இருக்கணுமா? என்ன? இந்த பாழாய்ப் போன வயத்துக்காகத்தானே இத்தனை அசிங்கம். ஒரு பக்கம் மாமியார் நான்தான் சோத்துக்கு கொடுக்கறேன் என்று பிலாக்கணம் பாட, ஒரு பக்கம் அம்மா, கணவன் என்ன தப்பு பண்ணினாலும், அங்கேதான் இருக்கணும்னு சொல்லி, ஒரு வேளைக்கு மேல் சோறு போடக் கூட யோசிக்கிறாள். இந்நிலையில் எதற்காக உயிரோடு இருக்க வேண்டும்? இரண்டையும் கிணற்றில் போட்டு விட்டு நானும் விழுந்து இறந்தால், பிரச்சனை அதோடு தீர்ந்து விடுமே' சட்டென்று பிள்ளைகளின் முகத்தை பார்த்தாள். கொல்ல மனம் வரவில்லை. கடவுளே எனக்கு இன்னும் என்ன பாக்கி வச்சிருக்கே. வீட்டில் துன்பத்தை தவிர வேறு வாழ்க்கை இல்லை என்கிறபோது மனது துக்கப்பட்டது. இலக்கு இல்லாமல், எங்கே போவது என்று தெரியாமல் பஸ் ஸ்டாண்டில் குழந்தைகளோடு கலங்கிய கண்களோடு நிற்க,

"தாயி எதனாச்சும் போடுமா. இரண்டு கையில்லை. காலும் இல்லை. ஒரு மரக் கட்டையில், நாலு சக்கரங்களை வைத்து கைகால் சூம்பிப் போன அவனை வைத்து தள்ளி வருகின்றனர். கமலம் பரிதாபமாய் விழிக்க, சிறிது நேரம்

அங்கும் இங்கும் அவனை தள்ளியவாறே இரண்டு பிள்ளைகளும் இப்படியும் அப்படியும் நடந்து கொண்டே இருந்தனர். இரண்டு பிள்ளைகளும் சிறிது நேரம் பொறுத்து டீக்கடைக்குப் போய் பன்னும், டீயும் வாங்கி அம்மாவிடம் தர அவள் பிள்ளைகளுக்குக் கொடுத்து தானும் குடித்துவிட்டு நகருகிறாள். கை கால் இல்லாத நிலையிலேயே இந்தப் பெண்ணுக்கு எத்தனை துணிவு - வாழ வழியில்லை - பிறரிடம் கையேந்தினாலும், தன் குழந்தைகளுக்கு ஒரு பாதுகாவலாக எத்தனை தைரியத்தோடு வாழுகிறாள். பிச்சை எடுத்து வாங்கிய காசுக்கு பிள்ளைகளோடு பங்கு போட்டு சாப்பிட்டு விட்டுப் போகிறாள். பிள்ளை ஏதோ சொல்லி விட்டான் போல் கடகடவென்று பெருங்குரல் எடுத்து சிரிக்கிறாள். இவள் வாழ்க்கை எல்லாம் ஒரு வாழ்க்கையா? இந்த அவல நிலையிலும் எப்படிச் சிரிக்கத் தோன்றுகிறது. கமலத்திற்கு புரிந்தது. எத்தனை துன்பங்கள் வந்தாலும் வாழ்ந்து காட்டுவேன் என்ற வெறி. வாழ்க்கை அலுக்காமல் இருக்க, சின்னச் சின்ன சுவையான சம்பவங்கள் ரசிக்கத் தக்க நிகழ்ச்சிகள். இதை சோற்றுக்கில்லாதவளாயிருந்தாலும் செய்கிறாள்.

அப்போதுதான் வாழ்க்கை சுவைபடப் போகும். இத்தனை கோடி ஜனங்களில் எத்தனை பேருக்கு பிரமிக்கும்படியான வாழ்க்கை இருக்கிறது. அவரவர்கள் இருக்கிறதில் அல்லவா தன்னை அர்பணித்து வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். தவறுகள் எல்லாவற்றையும் மொத்தமாக பிறந்த வீட்டினரும், புகுந்த வீட்டினரும் செய்து விட்டு, தண்டனையை தான் மட்டும் எப்படி ஏற்றுக் கொள்வது? தான் மட்டும் ஏன் சாக வேண்டும். தன்



குழந்தைகள் பாவம். இவைகளைக் கொல்ல தனக்கு எப்படி மனது வந்தது? காவ்யா அம்மாவைப் பார்த்து சிரித்தது. கன்னத்தில் அழுத்தமாக முத்தத்தைப் பதித்தது. காவ்யாவை இழுத்து அணைத்துக் கொள்கிறாள். கருணாவை பக்கத்தில் நிற்க வைத்தவாறே அணைக்கிறாள். வாழுவேன். என் குழந்தைகளுக்காக வாழணும். குடிகாரப் புருஷன். வேலை இல்லாத புருஷன், கெட்ட குணங்களை மொத்தமாக குத்தகை எடுத்தவன். அவன் எடுக்கும் ஒவ்வொரு அடிக்கும், நான் அல்லவா கெட்ட பெயர் வாங்குகிறோம்.

மாசு மருவில்லாத இந்தக் குழந்தைகள் என்ன தவறு செய்தது? கணவன் செய்த தவறுகளுக்கு தான்பட்டதெல்லாம் போதும். தன் பிள்ளைகள் அனுபவித்தது எல்லாம் போதும். என் குழந்தைகளை நல்லவர்களாக, மற்றவர்கள் மதிப்பவர்களாக எந்த வாய் சீ, சீ, என்றதோ அதே வாய் இவர்கள்தான் என் சொந்தக்காரர்கள் என்று சொல்லும்படியாக வாழ்ந்து காட்டணும். நிச்சயமாக வாழ்ந்து காட்டுவேன். மனதில் பொங்கிப் பொங்கி எழுந்த எண்ணங்களுக்கு ஒரு வடிவம் கொடுத்த போது "என்னம்மா இது? ஆயிரம் தான் இருந்தாலும் புருஷன். இப்படி கோபித்துக் கொண்டு சின்ன குழந்தைகளை அழைச்சுகிட்டு வரலாமா? வாங்கடா அப்பாகிட்டே வாங்க, "யாரோ ஒரு புதியவன் இவளை கண்களால் நோட்டமிட்டவாறே, கைகளை நீட்டி குழந்தைகளைக் கூப்பிட ஒரு நிமிடம் அதிர்ந்து நின்றாள் கமலம்.

## 3

''யாரவன்?'' குழந்தைகளை கையில் பிடிக்க எத்தனித்த போது இரண்டுமே தாயின் புடவையில் ஒண்டியது.

''ஏம்மா ஏதோ ஒரு நிமிஷம் கோபம். அடிச்சுட்டேன். அதுக்காகவா இப்படி. வா.'' அவனின் கண்கள் அவள் முகத்தையும் மேனியையும் எடை போட, அவளுக்கு எல்லாமே புரிந்தது.

''ஏம்மா புருஷன் கூட என்னம்மா சண்டை. போம்மா, கூப்பிடறார் இல்லே.'' சுற்றியிருப்பவர் கூற,

''வா'' சட்டென்று அவன் தன் கையைத் தொட முற்பட, காலில் உள்ளதைக் கழற்றி அடிக்கிறாள் கமலம்.

''என்னடா யாருடா நீ? எத்தனை பேருடா கிளம்பியிருக்கீங்க இப்படி. கொழந்தைகளை கூப்பிட்டுகிட்டு புருஷன் வீட்டுக்கு போயிட்டு இருக்கேன். பட்ட பகலிலேயே இப்படியா? மனதில் இருந்த வெறி, எரிச்சல், கோபம், ஆத்திரம் தீர அடிக்கிறாள். இத்தனைக்கும் காரணமான புருஷனை நினைத்தவுடன் இன்னும் ஆத்திரம் வருகிறது. நான்கு பேர் மெதுவாக வந்து, 'அவனோடு என்னம்மா சண்டை?' என்றவர்கள் காணாமல் போய்விட, கூப்பிட்டவன் தனியே மாட்டிக் கொண்டு பொது மக்களால் அடிபட சட்டென்று குழந்தைகளை அழைத்துக் கொண்டு ஏதோ ஒரு பஸ்ஸில் ஏறுகிறாள் கமலம்.

'எங்கே போகிறோம்? வாழ்க்கை எப்படி இருக்கும்? அடுத்த வேளைக்கு எங்கே போவது? வயிறு என்று ஒன்று இருக்கிறதே, அதற்கு என்ன செய்வது? பார்ப்போம் எது வந்தாலும் எதிர் கொண்டுதான் ஆக வேண்டும். கணவனின்



இத்தனை கெட்ட வழக்கங்களையும் தான் பொறுத்துக் கொள்ளவில்லையா? ஆனால் வாழ்க்கையை வேறு ஒரு பெண்ணோடு எப்படிப் பகிர்ந்து கொள்வது? புருஷன் எல்லோருக்கும் தெரிந்தே தவறு செய்கிறான். அதைப் பார்த்துக் கொண்டு எப்படி வாயை மூடிக்கொண்டு இருப்பது? மடியில் ஒன்றும், பக்கத்தில் ஒன்றுமாக குழந்தைகளை வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தவளின் மனதில் சூறாவளி. தான் பார்ப்பதற்கு நன்றாக இல்லையா என்ன? பார்ப்பவர்கள் எத்தனையோ பேர் அவளின் அழகைப் பற்றி விமர்சித்திருக்கிறார்கள். கைவேலையோ, சமையலோ, துணி துவைப்பதிலிருந்து பாத்திரம் விளக்குவது வரை எத்தனை நேர்த்தியாகச் செய்திருக்கிறாள். இது ஒன்று கூடவா கணவனைத் தன்னிடம் ஈர்க்கவில்லை. வீட்டில் ஒரு மனுஷி இருக்கிறாளே என்று கூட நினைத்ததில்லை.

சதா ஊர் சுற்றுவது. வீட்டில் சில நிமிடங்கள் இருந்தாலும் ஊற்றிக் கொள்வது? மனைவியின் அன்பு தெரியவில்லை. அழகு கண்ணுக்குத் தெரியவில்லை. மணி, மணியான குழந்தைகள் கூடவா அவன் மனதை மாற்ற முடியவில்லை. கருணா, காவ்யா இரண்டு பேருமே அப்படியே அச்சு அசல் அம்மாவைக் கொண்டிருந்தார்கள். இதில் கருணா தன்னுடைய இன்னொரு ரூபம். காவ்யா கருணாவைப் போல அத்தனை நிறமல்ல. அவளும் வெளுப்புதான் என்றாலும் கருணாவைப் போல் தகதகக்கும் நிறம் அவளுக்கு கிடையாது. இரு பெண் குழந்தைகளும் குட்டியாக மூக்கும், முழியுமாக இருப்பது ஒரு தந்தைக்கு பெருமை இல்லையா?

''பொட்டச்சியை பெத்துட்டு பெருமை என்ன வேண்டிக் கெடக்கு.'' தன் தந்தையும் பொட்டச்சி, பொட்டை நாய் என்று

சொன்னாலும் தன் அம்மாவை மட்டும் அப்பா வெறுத்ததே இல்லை. ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும். அடுத்த நிமிடம் அது நிறைவேற்றப்பட்டு விடும். ஆனால் குழந்தைகளோடு தன்னையும் அல்லவா கணவன் வெறுக்கிறான். தனக்கு என்ன பிடிக்கும். தன் விருப்பம் என்ன என்று என்றாவது நினைந்திருக்கிறானா? தன் விருப்பம் இருக்கட்டும். தன்னை என்றாவது ஒரு மனுஷி என்று நினைத்துப் பார்த்திருக்கிறானா? நினைக்க, நினைக்க மனது ஊமை அழுகை அழுதது.

அன்று பஸ்ஸில் ஏறி அமர்ந்தபோது. இப்படி எல்லாம் நினைந்து நினைந்து எத்தனை அழுதிருப்பாள். எத்தனை வேதனைப்பட்டிருப்பாள்.

''ஏம்மா எங்கே போகணும்?'' கண்டக்டர் கேட்டார்.

நல்ல வேளை தன்னைப் பார்த்து பரிதாபப்பட்டு தம்பி கொடுத்த இருபது ரூபாய், அம்மா பெண் வீட்டிற்கு வந்து போனாளே என்று கொடுத்த ஐம்பது ரூபாய், தன் தங்கைகள் இரண்டு பேரும் தன் நிலையைப் பார்த்து ரகசியமாகக் கண்ணீர் விட்டுக் கொடுத்து விட்டுப் போன இரண்டு ஐந்து ரூபாய்கள். இதுதான் அவளின் சொத்து.

''என்னம்மா எங்கே போகணும்னு கேட்டுகிட்டே இருக்கேன்.''

''கடைசி ஸ்டாப்'' இலக்கு இல்லாமல் சொல்கிறாள்.

பஸ் நின்ற பின்தான் தன் மடத்தனம் புரிந்தது. முன் பின் தெரியாத ஊர். தெரியாத மனிதர்கள். இருபத்தாறு வயதில் கையில் ஒன்றும், இடுப்பில் ஒன்றுமாகப் போய் யாரிடம் என்ன



உதவி கேட்பது? பஸ் கடைசியாக நின்றபோது அது சற்று பெரிய கிராமமாகத்தான் தெரிந்தது. பஸ் ஸ்டாண்டில் வழக்கப்படி எல்லா இடங்களிலும் இருக்கும் சின்ன, சின்ன பொட்டிக் கடைகள். சற்று பெரியதான கண்ணாடிகள் பதிக்கப்பட்ட பளபளப்பான மொஸைக் போடப்பட்ட இனிப்பகங்கள். சின்ன உணவு விடுதிகள், கோலா, கலரிலிருந்து, பெப்ஸி, கோக் வரை விற்கும் கடைகள் ஒரு பக்கம் குச்சி ஐஸ் விற்கும் தள்ளுவண்டி - இன்னொரு பக்கம் அருண் ஐஸ்கிரீம் கடைகள். கருள் முறுக்கு. பட்டாணி, பொரிகடலை, பலூன் சின்ன, சின்ன பிளாஸ்டிக் பொம்மைகள் கர்ச்சீப். டவல், துணிகள் என்று விரிக்கப்பட்டிருக்கும் நடைபாதை துணிக்கடை, சோளம் விற்கும் கடை. துணிப்பை, கோணிப்பை, பிளாஸ்டிக் பை என்று பைவிற்கும் கடை. எல்லாவற்றையும் நோட்டம் விட்டவாறே இறங்குகிறாள்.

'கடவுளே படியை மட்டுமல்ல. எல்லாவற்றையுமே தாண்டி வந்து விட்டேன். வெற்றியைக் கொடு. இத்தனை நாட்கள் வாழ்ந்த சிறுமைகள் போகட்டும். உதவி செய் கடவுளே' ''மனமார தான் வணங்கும் திருப்பதி ஏழுமலையானை நினைத்து கசித்து உருகினாள். கருணாவும், காவ்யாவும் பலூன், பஞ்சுமிட்டாய், பொம்மைகள் எல்லாவற்றையும் பார்த்து மலைத்துப் போய் நின்றன' சற்று சங்கோஜப் பட்டுக் கொண்டு அம்மாவின் புடவைத் தலைப்பை இழுத்துப் பிடித்தவாறே நின்றன. இந்த ஊரில் ஏதாவது சேவா நிலயம் என்று இருக்குமா? இல்லை ஊர்ப் பெரியவர் என்று யாராவது இருப்பாங்களா? யாரைப் போய் பார்ப்பது. இது முனிசிபாலிடி இல்லை போலிருக்கு. பஞ்சாயத்து என்றுதான் போட்டிருக்கு.''

கூர்ந்து கவனித்தவள், மனதில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு 'பஞ்சாயத்து போர்டு பிரசிடன்டை பாக்கணும். எத்தனை ஆகும்பா? கேட்க, ''பிரஸிடண்ட் ஐயா வீட்டுக்கா... வாங்கம்மா. துட்டை பத்தி என்னம்மா? வாங்க. ''மனதின் ஒரு மூலையில் அச்சம் விரவிக் கிடந்தது. பஞ்சாயத்து போர்ட் பிரஸிடெண்ட் எப்படிப்பட்டவன் நல்லவனா? தான் சரியாகத்தான் நடந்து கொள்கிறோமா? இல்லை தவறான பாதையா? ஏதாவது ஆகி விட்டால் இந்தக் குழந்தைகளின் கதி. 'இவைகளையாவது வைத்துக்காப்பாற்று' என்று அம்மாவிடம் கொடுத்து விட்டு வந்திருக்கலாம். அப்பாவின் காலில் விழுந்தாவது கெஞ்சியிருக்கலாம். அவரின் கல் மனது கரைந்திருக்காதா? மறுபடியும் மனதை சோர்வு தாக்க, கண்கள் ரொம்பிப் போயி. கடவுளே தைரியத்தைக் கொடு. வாழ வழியைக் காண்பி. 'வண்டி செல்ல, செல்ல, என்ன ஆகுமோ என்று மனம் தடக் தடக் என்று அலைபாய இரு குழந்தைகளையும் அணைத்தவாறே, தெரியாத அந்த விடியலை நோக்கி சற்று நம்பிக்கையுடன் போகிறாள்.

''அவருக்கு வேண்டியவங்களா?''

''சொந்தக் கார பொண்ணுங்க. போங்க.'' விஸ்தீரணமாக கட்டப்பட்ட ரெண்டு கட்டு வீடு. முன்பக்கம் தென்னை, கொய்யா என்று மரங்கள். கேட்டின் பக்கம் மனோரஞ்சிதம், பாரிஜாத மலரின் மரங்கள், மல்லி, முல்லை, ஜாதி என்ற கொடி வகைகள் வேறு பக்கவாட்டில் சின்னதான காய்கறித் தோட்டம் எல்லாவற்றையும் மெதுவாகப் பார்த்த வண்ணம் தயங்கித் தயங்கி பெட்டியையும், குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு உள்ளே நுழைய.



''அம்மா பசிக்குது'' என்றாள் கருணை 'சேவா நிலையம்' என்று ஏதேனும் இயங்குகிறதா என்று கேட்கலாமா? மனம் தடக் தடக் என்று அடித்துக் கொள்ள மெதுவாக உள்ளே நுழைந்தவள் 'சார்' என்று குரல் கொடுக்க, எங்கிருந்தோ புற்றீசல் போல் வந்தது ஜனங்கள்.

''யாரும்மா நீங்க? ஐயாவைப் பாக்க வந்தீங்களா?

''ஏம்மா திறந்த வீட்டிலே எதுவோ நுழையுமுனு சொல்கிற மாதிரி என்னம்மா இது? இப்படித்தான் உள்ளார வருவாங்களா?''

''ஏம்மா யாரு நீங்க? ஐயாவைப் பாக்கணுமா? இல்லை அம்மாவையா?''

''ஏம்மா சமையல் வேலைக்கு வந்திருக்கயா?'' சரமாரியான கேள்விகள். உங்க ஐயாவைக் கூப்பிடுங்க பாக்கணும். ''சிறிது நேரத்தில் சாதாரண கருப்பு கரை வேஷ்டியும் மெல்லிய பருத்தி ஷர்ட்டுமாக பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்ட் வந்து நிற்க, ஆச்சரியமாய்ப் பார்க்கிறாள். எத்தனையோ சினிமாக்களில் ஜரிகைக் கரை போட்ட வேஷ்டியும், சில்க் ஜிப்பாவும், கழுத்தில் தடி செயினும் இப்படித்தானே பிரசிடெண்ட்டை அவள் கற்பனை செய்து வைத்திருந்தாள்.

''யாருங்க நீங்க? என்ன வேணும்?'' அந்தக் குரலில் இருந்த தொனியில் ஏனோ பொய் பேச மனம் வரவில்லை. கமலம் தன் சொந்தக் கதையை புட்டு புட்டு வைக்க ஒரு நிமிடம் மௌனம் நிலவியது.

''இங்க ஒரு வேலையும் காலி இல்லையே.''

"ஐயா நான் சமையல் நல்லா செய்வேனுங்க. ஒரு நாலு நாள் சந்தர்ப்பம் கொடுத்து பாருங்க. உங்களுக்கு திருப்தி இல்லேன்னா நான் கிளம்பி போயிடறேனுங்க. அவள் பதிலில் இருந்த உண்மை, வேதனை, துக்கம் அவரது மனதை ஈர்த்ததோ என்னவோ. அந்தப் பண்ணை வீட்டில் வேலை செய்யும் ஆட்களுக்கு சமைக்கும் பொறுப்பை ஏற்றாள்.

காலையில் ஆறு மணிக்குள் எழுந்து இருபத்து ஐந்து, முப்பது பேருக்கு சோறு வடித்து, நிறைய காய்களைப் போட்டு குழம்பு செய்து, காலை பதினோரு மணிக்கு பண்ணையாரின் கட்டிடங்களில் கட்டட வேலை செய்பவருக்கு டீ கொடுத்து, மாலை மறுபடியும் எல்லோருக்கும் டீ கொடுத்து, அதிலேயே அவள் பங்கும் கிடைக்க குழந்தைகளுக்கும், அவளுக்கும் வயிற்றுப் பிரச்சனை ஒழிந்தது.

நான்கு நாட்கள் என்பது அவளுக்கு வாழ்க்கையின் அஸ்தி வார நாட்களானது. கமலத்தின் உழைப்பு, வேலை மீது இருந்த துடிப்பு அவளின் நாணயம் எல்லாம் சேர்ந்து அவளை பண்ணை வீட்டின் நிரந்தர சமையல்காரியாக்கியது. ஒரு ஆத்திரம், அவசரம் என்றால் பண்ணை வீட்டிற்கும் போய் சமைத்துக் கொடுத்தாள். வேலை இல்லாத நாட்களில் பண்ணையார் நடத்தும் சேவா நிலையத்தின் சமையல் வேலை. முதல் மாதம் இருநூறு ரூபாய் சம்பளமாக தந்தவர் சேவா நிலையத்தின் சமையல் வேலை என்று எல்லாவற்றையும் இவள் கையில் தர இருநூறு ரூபாய் நானூறு ரூபாயாக உயர்ந்தது. பண்ணை வீட்டிற்கும் போய் சமைத்துக் கொடுத்தாள். வேலை இல்லாத நாட்களில் பண்ணையார் நடத்தும் சேவா நிலையத்தின் சமையல் வேலை. பண்ணை வீட்டின் ஒரு மூலையில் வேலை செய்யும் ஆட்களுக்குக் கொடுக்கப்படும் ஒரு சிறிய குடியிருப்பு அவளுக்குத் தரப்பட்டது. வந்த ஒரு வாரத்திலேயே பண்ணையார் நடத்தும் பள்ளிக்கு தன் பெண்ணை படிக்க அனுப்பி வைத்தாள்.



மூன்று வருடங்கள் ஓடியதே தெரியவில்லை. முதல் பெண் மூன்றாவதும் இரண்டாவது ஒன்றாவதும் படிக்கும் போதுதான் அவள் வாழ்க்கையில் அடுத்த திருப்பம் என்று ஒன்று ஏற்பட்டது.

திடீரென்று நெஞ்சு வலிவந்து பண்ணையார் மண்டையைப் போட்டு விட, அடுத்த தேடல் ஆரம்பித்தது. பண்ணையாரின் மனைவி எலலாவற்றையும் குத்தகைக்கு விட்டு விட்டு பட்டணத்தில் இருக்கும் தன் மகனோடு தங்கப் போய்விட்டாள். கமலம் துடித்துப் போனாள். வாழ்க்கை மிகவும் சுலபம் என்று கணக்கு போட்டது தவறா? கணவனை விட்டு வாழ்ந்ததில் இருந்து செய்யும் வேலைக்கு மரியாதையும், கூலியும் கிடைக்க, இப்படியே வாழ்க்கை ஒரு தங்கு தடை இன்றி போய்விடும் என்று கணக்கிட்டாளே. இப்போது மறுபடியும் கவலை, துன்பம் அழுகை. எப்போதும் முன்பு போல் எல்லாமே நன்றாக நடந்தால் எத்தனை நன்றாக இருக்கும். தனக்கு யாரு சளையாக நானூறு ரூபாய் தருவார்கள். மாதம் பிறந்தால் கையில் வரும் பணம். சாப்பாட்டுச் செலவு இல்லை என்றாலும் சோப்பு, தேங்கா யெண்ணெய், பலப்பம், ஸ்லேட், நோட்டு எல்லாமே வாங்கித் தானே ஆக வேண்டும். பண்ணையாரின் பள்ளிக் கூடத்தில் செலவு இல்லாமல் படித்தவர்கள் இனி என்ன செய்வார்கள். தன்னால் ரூபாய் செலவு செய்து படிக்க வைக்க முடியுமா? கடவுளே முழுதாக மூன்று வருடங்கள் - மறுபடியும் ஆரம்பித்த இடத்தில் கொண்டுவந்து நிறுத்தி விட்டாயே. கண்கள் நனைந்து போயிற்று.

பண்ணையாரம்மாவைப் பார்த்த போதே.

"என்னம்மா செய்யச் சொல்றே? வீட்டுக்காரு இருந்தாரு. ஐயோ பாவம்னு காப்பாத்தினாரு. இனி அப்படி யாரும்மா செய்வாங்க. நானே புள்ளைங்க தயவுலே போய் வாழப் போறேன். உனக்கு என்ன செய்ய முடியும் சொல்லு?"

கூட இருந்த ஏழைப் பெண்கள் பரிதாபப்பட்டு களை எடுக்க அழைத்துச் சென்றனர். விவசாய கிராமம் வேறு ஏதாவது ஒரு வேலை கிடைத்துக் கொண்டே இருந்தது. மல்லாக் கொட்டை உடைக்க, அரிசி புடைக்க, நெல் தூற்ற, காய்கறிச் செடி நட, நாத்து நட, களை பிடுங்க என்ற வேலைகள். கடினமான வேலைகள்தான். கொஞ்ச நாட்களிலே வேலையின் நெளிவு, சுளிவு தெரிந்து போக நிரந்தர வேலை கிடைத்தது.

"கருணாம்மா...வ்" கருணவோட அம்மா என்று எல்லோருமே கூப்பிடுவார்கள். பேசாம கொளத்து வேலைக்குப் போனால் இன்னும் செம துட்டு. இந்த காலத்துலே விவசாய வேலைக்கு ஆளே கிடைக்காது. அறுவடைக்கு கூட யாரும் வரதில்லீங்க. இரண்டு மரக்கா நெல் கொடுத்தா கூட லட்சியம் இல்லே.

இரண்டு பெண்களும் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்ததில் சீருடைகள், நோட்டுப் புத்தகங்கள் என்று செலவு ஆனது.

"அம்மா வாத்தியார் நோட்டு இல்லாம உள்ளார வராதேன்னு சொல்லிட்டாரும்மா."

"அம்மா எனக்கு எப்போ யூனிபார்ம் வாங்கித் தருவே. வாத்தியார் அடிச்சிப்பிட்டாரு."

களைக்கு செல்வதும், கழனியிலேயும் வெறும் வயிற்றுப் பாட்டு தேவையை மட்டும் கவனிக்க, சிந்திக்கலானாள்



கமலம். வெறும் சாப்பாடு மட்டுமா வாழ்க்கை தன்னைப் போல் தன் இரண்டு பெண்களும் சீரழியக் கூடாது' நன்றாகப் படித்து ஒரு நல்ல வேலைக்குப் போய் மற்றவர்கள் புகழும் வண்ணம் சம்பாதித்து தலை நிமிர்ந்து நின்று, மனிதர்களுக்குரிய மரியாதையைப் பெற வேண்டும்' கருணா, காவ்யா இருவரில் கருணா ஓரளவே நன்றாகப் படித்தாள். காவ்யா, மிக மிக நன்றாகவே படித்தாள். எல்லாப் பாடங்களிலும் அவள் தான் முதல். சித்திரமோ, பாட்டோ, டேன்ஸோ எல்லா போட்டிகளிலும் அவள்தான் முதல். இத்தனை கஷ்டங்களுக் கிடையேயும் தேறி விடுவேன் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தது. கடவுள் எப்படியோ ஒரு நல்ல ஆரம்பத்தைக் கொடுத்து விட்டான். இதே மாதிரி கடைசி வரை கொண்டு போய் சேர்த்து விட்டால் சரி. வீட்டை விட்டு வந்த புதிதில் பல மணி நேரங்கள் தன் வீட்டவர்களையும், தன் கணவன் வீட்டவர்களையும் நினைப்பது உண்டு. தன் பெற்றோர் தன்னைத் தேடுவார்களா? கணவன் வீட்டிலும் போய் தொலையட்டுமே என்று விட்டு விடுவார்களா? இல்லை தேடுவார்களா? வந்த ஆரம்பத்தில் சில நாட்கள் யோசித்ததோடு சரி. பிறகு வேலைப்பளு எதைப் பற்றியும் நினைக்கக் கூட நேரமில்லை. முதலில் தான் செய்வது சரியா என்று கூடத் தெரியவில்லை. தான் செய்ததை நினைக்கையில் திடீரென்று அடிவயிற்றில் ஒரு பயம் வந்து தாக்கும்.

மறுபடியும் தன் மனிதர்களைப் பார்க்க முடியுமா? மறுபடியும் தன்னை சேர்த்துக் கொள்வார்களா? அதைப் பற்றி நினைக்கையிலேயே பயம் வந்து தொண்டையை வேறு அடைத்துக் கொள்ளும். ஆனால், நாளாக, நாளாக எதற்கும் நேரமில்லாமல், காலத்தின் போக்கில் ஓடி, ஓடி நான்கு

வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. தன் கணவருக்கு கூட வேறு திருமணம் நடந்திருக்கலாம். முடிந்துவிட்ட உறவுகள், தூக்கிப் போட வேண்டிய ஞாபகங்கள், காலப்போக்கில்ஓடி ஓடி நான்கு வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அந்த நினைவுகள் கூட தேய்ந்து விட்டது.

குழந்தைகள் படிப்பதற்காகவாவது கவனம் வேண்டும். அவர்களை நல்ல நிலமைக்கு கொண்டு வர, கட்டாயமாக உழைத்து தான் ஆக வேண்டும். மறுநாள் தன் கூட வேலை செய்யும் பெண்களோடு கட்டிடம் கட்டும் வேலைக்குப் போனாள். தலையில் செங்கல் அடுக்கி கொண்டு போய் கொடுக்க வேண்டும். கலந்த கலவையை வேக, வேகமாக எடுத்துத் தர வேண்டும். முதல் நாள் திணறித்தான் போய்விட்டாள். தலையில் செங்கல்லைச் சுமக்க முடியவில்லை. சிமெண்ட் கலவையையும் தூக்கி தருவதற்குள் வியர்த்து, விறுவிறுத்து - ஆனால் மாலை கூலி வாங்கும் போது அத்தனை நேரம் கஷ்டப்பட்டது எல்லாம் போய்விட, ஆனந்தமாக இருக்கத் தோன்றியது. குழந்தைகள் எப்போது வந்து குடிசைக்குள் சுருண்டு படுத்திருக்கிறது. அவசரம், அவசரமாக வந்து குழந்தைகளுக்கு போட்டு கொடுத்து, சோற்றை வடித்துப் போட்டு அவைகளின் பசியைப் போக்கினாள். கள்ளி பொறுக்கி, வெந்நீர் வைத்து தான் குளித்தபோது காவ்யா ஓடிவந்து கள்ளி பொறுக்கி கொடுத்தது. ஒரு பேங்கில் வேலை செய்தவரின் மனைவி கூலி வேலைக்குப் போய்க் கொண்டு, குடிசையில் இருந்து கொண்டு, குழந்தைகளை காப்பாற்றி எப்பேற்பட்ட நிலமைக்குதான் தள்ளப்பட்டு விட்டோம்.

அன்று சற்று வேதனையோடு குளித்து மறு சமையலுக்கு வேண்டியதெல்லாம் ரெடி செய்து படுத்தபோது யோசிக்கக் கூட



முடியாமல் அப்படியே உறங்கிப் போனாள். பத்து நாட்கள் வேலை செய்ததில் இருவருக்கும் புது யூனிபார்ம் வாங்க முடிந்தது. இன்னும் சிறிது நோட்டுப் புத்தகங்களும், புத்தகங்களும் வாங்கித் தந்து உபதேசிக்கிறாள்.

தினசரி சொல்லும் விஷயம்தான். "ரெண்டு பேரும் நல்லா படிக்கணும். நல்ல வேலைக்குப் போகணும் நிறைய சம்பாதிக்கணும். அம்மா மாதிரி யாரும் கஷ்டப்படக் கூடாது." எப்போது இந்த வார்த்தைகளை சொன்னாலும் குழந்தைகள் புரிந்த மாதிரி தலையை வேறு ஆட்டும்.

"படிக்கணும், நல்லா படிக்கணும். நல்லா இருக்கணும்ங்கற நினைவை மனதுலே வச்சுக்கணும். படி..படி..படி" குழந்தைகளிடம் அதிகமாக பேசும் வார்த்தைகளே இதுதான். ஆனால் பெரியவனை விட சின்னவன் அமோகமாக படிக்கிறான். சிறியவன் பரிசு, பரிசாக வாங்கிக் கொண்டு வர மனது குதூகலிக்கும். அவருடைய சான்றிதழ்கள் பரிசுப் பொருட்கள் எல்லாவற்றையும் ஒரு பிளாஸ்டிக் உறையில் போட்டு கட்டி வைத்திருக்கிறார்கள். குழந்தைகளும் தாத்தா பாட்டியைப் பற்றியோ அப்பாவைப் பற்றியோ கேட்டதே இல்லை. படிப்படியாக படித்து பெரியவன் ஆறாவதும், சிறியவன் ஐந்தாவதும் செல்ல, கமலத்தின் வாழ்க்கையில் இன்னுமொரு கேள்விக் குறி எழுந்தது.

தான் போகும் கட்டிட வேலை எல்லாம் ஏறக்குறைய முடிந்தே போயிற்று. மறுபடியும் வேலை இல்லாமல் கொஞ்ச நாட்கள்இருக்க நேரிட்டபோது "அக்கா டௌன்பக்கம் வேலை இருக்காம். நம்ப மேஸ்திரி சொல்லி அனுப்பிச்சார். புது காண்ட்ராக்டாம். ஒரு வருஷம் போல வேலை இருக்குமாம். தெனம் பஸ்ஸில எல்லாம் போக முடியாது. அங்கயே தங்க

குடிசை போட்டு குடுப்பாங்க. அப்படியே இருந்துகிட்டே வேலை செய்ய வேண்டியதுதான்.''

''பிள்ளைங்க இருக்கே.''

''அட சின்ன பிள்ளைங்கதானே அங்கயே அளைச்சுகிட்டு வந்திடு'' அடுத்த ஒரு வாரத்தில் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு பட்டணத்திற்கு புறப்பட்டார்கள். போஸ்ட் ஆபிசில் சிறுக சிறுக சேர்த்த ரூபாய் வேறு பத்தாயிரம் இருக்கிறது. ஆத்திர அவசரத்துக்கு உதவும். குழந்தைகளைக் கூப்பிட்டுக் கொண்டு பக்கத்து வீடு, எதிர்த்த வீடு பெண்டுகள், பிள்ளைகளோடு டௌனுக்கு வந்த போதே தெரிந்தது. இது தன் கணவன், மாமியார் எல்லாம் இருக்கும் ஊர் அல்லவா நல்லவேளை தன் கணவனின் வீடு - கட்டும் இடத்திலிருந்து சற்று தொலைவுதான். நான்கு தெருக்கள் தள்ளி இருக்கிறது. 'அடுக்கு மாடி குடியிருப்பாம். எப்படியும் ஒரு வருடம் இல்லை இரண்டு வருடத்திற்கு கட்டாயம் வேலை இருக்கும். இந்த ஊரில் கணவன் தன்னைப் பார்த்து விட்டால் ம்... அப்போது பார்த்துக் கொள்ளலாம்.

ஊருக்குச் சென்றதுமே தன் பெண் ஏற்கனவே படித்த கார்ப்பரேஷன் பள்ளியில் இரண்டு பெண்களையும் போட்டாள். விடியற்காலை எழுந்து குழந்தைகளுக்கு தயிர் அல்லது சாம்பார் சோறு கட்டிக் கொடுத்து பழைய சோற்றை போட்டு அனுப்பி விடுவாள். தானும் ஒரு வாய் தின்றுவிட்டு தூக்கில் எடுத்துக் கொண்டு எட்டு மணிக்குள் குடியிருப்புக்கு வந்து விடுவாள். திரும்பும்போது மாலை மணி ஐந்தாகி விடும். திரும்பும் போதே பெண்கள் இரண்டு பேரும் சுருண்டு போய் அந்தக் குடிசையின் வாயிலில் முடங்கிக் கிடக்கும்.


130324 MAR 2003

கான்ட்ராக்ட்காரர் தங்க — மாணவர்கள் என்று சொன்னார்கள். இவர்கள் எல்லோரும் தங்குவதற்கு குடிசையும் போட்டுக் கொடுத்து இருந்தார். மாலையில் குழந்தைகளைப் பார்த்ததுமே அவசரம், அவசரமாக டீத்தூளைப் போட்டு டீ கொடுத்து பன்னோ, பொறையோ வாங்கிப் போய் கொடுத்து இரவுக்கென்று சமைக்க ஆரம்பிப்பாள். ஆனால் இந்த வாழ்க்கைக்கும் ஒருநாள் தடங்கல் வரும் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை. நான்கு நாட்கள் சென்றபின் கண்ட்ராக்டர் ஒருநாள் வந்தவன். வேலையை சரி பார்த்துக் கொண்டே, வேலை செய்யும் இவளை பார்வையால் அளந்தான். கூலி கொடுக்கும் போது அவளுக்கு மட்டும் தரப்படவில்லை.

''தனக்கு கூலி தரலீங்களே.'' ''எல்லாம் சேத்து தரேன் ரூமுக்கு வா என்கிறான். கமலம் விக்கித்துப் போய் நின்றாள். துக்கம் பந்தாக தொண்டையை அடைக்க வயிற்றை என்னவோ செய்தது.''

4

**க**ண்களில் கறுப்புக் கண்ணாடியும், கழுத்தில் தடியான தங்கச் சங்கிலி, சற்றே கலைந்த தலை. ஒரு பாலிஸ்டர் வேட்டியும், சில்க் ஜிப்பாவும் அணிந்திருந்தான். கையில் சற்று தடியான ஸ்டராப் போட்ட வாட்ச். இரண்டு கைகளிலும் நான்கு விரல்களிலும் மோதிரம்.

''ஐயா காசு வாங்கிட்டு போய்தான் உலை வைக்கணும். ''சொல்லும்போதே கண்கள் கலங்கின. கொழந்தைங்க வந்திடுங்க. ராத்திரி தாங்க சாப்பாடே. ஐயா பெரிய மனசு

பண்ணி ரூபாயை கொடுத்திடுங்க''. சொல்லும்போதே மறுபடியும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

என்ன ஈனத்தனம்? நாள் முழுவதும் வேலை செய்து வயிற்றுப் பசியைத் தீர்க்க மாட்டோமா என்று ஏங்குகையில் இந்த ஆளுக்கு உடல் பசி. தனக்கு கீழ் வேலை செய்தால் கூப்பிட்ட போதெல்லாம் வருவாள் என்ற இளக்காரமா?

''என்னது ஒனக்கு கொழந்தைங்க இருக்கா? பாத்த இளமையா இருக்கே.'' சொல்ல சொல்ல மறுபடியும் கண்கள் ஊற்றெடுத்தன.

''ஐயா பிள்ளைங்க சுருண்டு போய் கெடக்கும். தயவு செஞ்சு தாங்க.'' சொல்லும்போதே அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

அவளையே சற்று நேரம் ஆசையாக பார்க்கிறான்.

''புருஷன் என்ன வேலை செய்யறான். அவள் மௌனமாக இருக்க, ''இத பாரு பதமா நடந்துகிட்டயானா நல்லா கவனிக்கறேன். ராணி மாதிரி இருக்கலாம். எதுக்கு இந்த மாதிரி செங்கல்லையும், சிமெண்டையும் சுமக்கணும்.''

''ஐயா கூலியைக் கொடுத்திடுங்க ஐயா. பிள்ளைங்க பசியால வாடிகிட்டு இருக்கும்.'' சிறிது நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன்.

''சரி. இன்னிக்கு வாங்கிட்டு போ. நாளைக்கு திரும்ப அனுப்ப மாட்டேன். அப்புறமா புள்ளைங்களை நம்ப இடத்துக்கே கூட்டிக்கலாம் சரியா?'' பணம் தரும்போது கைகளை பிடித்து அழுத்தி விட்டுத் தருகிறான். வீட்டிற்கு ஓட்டமும் நடையுமாக வந்து, பிள்ளைகளின் பசி தீர்த்தும்



மனம் அடங்கவில்லை. நெருப்பாக எரிகிறது. இல்லாத கொடுமைக்கு வேலைக்குச் சென்றால் இதென்ன அநியாயம். அடாவடித்தனம் மனது வெந்தது. ராத்திரி சாப்பாட்டை செய்து போட்டு விட்டு குத்து காலிட்டு அமர்ந்தவாறே கண்ணீர் வடிக்கிறாள். கருணா சாப்பிட்டுத் தூங்கியே போய்விட்டான். காவ்யா ஏதோ எழுதிக் கொண்டிருந்தவள் மெதுவாக அம்மாவிடம் வருகிறாள்.

''ஏம்மா அழறீங்க?'' இந்தக் குழந்தையிடம் என்னத்தை சொல்வது? மறுபடியும் அது. குருட்டான எதிர்காலம் வேறு பயமுறுத்த, விக்கி விக்கி அழுகிறாள்.

''கடவுளே நான் அனுபவிக்கும் கொஞ்ச நஞ்ச சுகம் கூட உனக்கு பொறுக்கவில்லையா? ''அம்மா அழாதீங்க.'' அம்மா கண் கலங்க, காவ்யா துடைத்ததும் காவ்யாவை கட்டி அணைத்துக் கொள்கிறாள். இந்தச் சிக்கலில் இருந்து எப்படி விடுபடுவது? ஒன்றும் வேண்டாம் என்று சொல்ல முடியாது. அவனிடம் முறைத்துக் கொண்டால், அடுத்த வேளை சாப்பாடே கிடையாது. தெருவுக்கு அல்லவா வந்து விடுவோம். இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது?

அவளுடன் வழக்கமாக ஒன்றாகப் போகும் ராசாத்தி வந்து கேட்க, கூறி விட்டாள் கமலம்.

''அக்கா சொல்லுங்க, நான் என்ன செய்ய?'' இனிமே அக்கா எப்படி வேலைக்கு வரும்? சாதாரணமாக அந்தக் ஜாதியில் சற்று பொறாமை அதிகம்தான். அடுத்தவள் நன்றாக இருந்தால் பொறுக்காது. கமலம் வேறு வெளேரென்று தோற்றத்தோடு சிக்கென்று இருப்பதைப் பார்க்க, பார்க்க மற்றவர்களுக்கு அடிவயிறு வெந்து போனது. அதனால் தன் நிலைமையைப் பற்றி கூடுமான வரை வாயைத் திறக்கவில்லை.

ஆனால் தன்னுடன் வரும் ராசாத்தி மிக, மிக நல்ல பெண், இந்த வேலை பற்றிச் சொல்லி அழைத்துச் சென்றதே அவள் தான்.

''இத பாரு அழுவாதே. நாளைக்கு இந்த கஸ்மாலத்து கிட்டே வேலைக்கு போக வேணாம். இன்னிக்கு நீன்னா, நாளைக்கு என்ன தானே கூப்பிடும். எங்கண்ணன் மேஸ்திரியா வேலை செய்யுது. அங்க போய் பாத்துட்டு வரேன். நாளைக்கு வரச் சொல்லிச்சு. அங்க போயிடுவோம். கவலைப்படாதே.'' இவள் என்ன சொந்தமா? பந்தமா? என் கஷ்டங்களில் பங்கெடுக்க அவளுக்கு எப்படி மனது வந்தது? சட்டென்று ராசாத்தியின் கையைப் பிடித்துக் கொண்டு ஒவென்று கதறி அழுதாள்.

''அக்கா பெத்தவங்க, கட்டினவன் எல்லாமே கைவிட்ட பிறகு கூட கடவுள் மாதிரி வந்து ஒதவி பண்றியே. உனக்கு என்ன கைம்மாறு செய்ய முடியும் சொல்லு.''

''அட என்னம்மா இதெல்லாம் பெரிசு படுத்திகிட்டு. மனுஷங்களுக்கு மனுஷங்க செய்யற உதவி.'' வாயில் புகையிலையை அடக்கிக் கொண்டு அவள் நகர, அவள் போன திசையையே கண்ணீரோடு பார்க்கிறாள் கமலம்.

அடுத்த நாள் பிள்ளைகளைக் கூப்பிட்டுக் கொண்டு வேறு ஒரு இடத்திற்கு மாற்றம். குப்பத்தில் ஒரு வீடு. கிராமத்தில் குடிசை வீட்டில் இருந்தாலும் மிக, மிக சுத்தமாக சாணி போட்டு மொழுகப்பட்டு இருக்கும். வாசலில் பெரிய பெரிய கோலங்களும், முன்பக்கம் அந்திமந்தாரை, டிசம்பர் கனகாம்பரச் செடிகளும் - குடிசையாக இருந்தாலும் வாழ்க்கை ரம்யமாகத் தான் இருந்தது. ஆனால் இங்கே சுத்தம் என்பதே கிடையாது. நடுவில் ஓடும் சாக்கடை நீரும், கழிவுகளும்,



குப்பைகளும், குப்பத்துக்குள் கால் வைக்கவே ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

''வா. என்ன செய்யறது? இந்த ஊர் சனங்களுக்கு தெரிஞ்ச சுத்தம் இதுதான். வா... ''ஏ தூ...'' என்று துப்பிக் கொண்டே வந்தாள் ராசத்தி. மேஸ்திரியைப் பார்த்து விட்டு பிள்ளைகளை பள்ளியில் விட்டு விட்டு வந்து வீடு தேடும் படலத்தில் இறங்கினாள். எல்லாக் குப்பைகளும் குப்பத்தில்தான் இருக்கின்றன. குப்பங்களில் சுத்தம் என்பது மருந்துக்கு கூட இல்லை. எப்படி இருப்பது? ராசாத்தியும் அவளுடன் வந்து தெரிந்த இடத்திற்கெல்லாம் அழைத்துச் சென்றாள்.

கடைசியில் பள்ளிக்கு அருகிலேயே சில குடிசைகள் அவற்றில் கரெண்ட் எல்லாம் கூட இருக்கிறதாம். மாதம் ஐநூறு ரூபாய் வாடகை நாலு மாத அட்வான்ஸ் என்று சொன்னார்கள். போஸ்ட் ஆபிசிலிருந்து எடுத்து நாலு மாத அட்வான்ஸ் கொடுக்கலாம். இருந்தாலும் இந்த இடமும் ஏனோ மனநிறைவைத் தரவில்லை. அந்த தெருவாசிகள் வீட்டின் முன்பு கொட்டியது போதாது என்று எல்லோரும் சேர்ந்து ஒரு இடத்தில் குப்பை கொட்ட, அங்கே அமைந்திருந்தது அந்தக் குடிசைகள். ஒரே ஈயும், கொசுவும் போட்டி போட்டுக் கொண்டு ரீங்காரமிட்டது. கதவை மூடிக் கொண்டால் ஒன்றும் தெரியாது. கண்களை மூடிக் கொண்டாள். இத்தனை நாள் ஓரளவு சுகம் கொடுத்த ஆண்டவன் இன்று இதையும் தருகிறான். அதை ஏற்றுக் கொண்ட மாதிரி இதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். ''அம்மா நாளைக்கு வந்து அட்வான்ஸ் கொடுத்திடறேன்.'' சொல்லிவிட்டு நகரும் போது அது நடந்தது.

சைக்கிள் ரிக்‌ஷாவில் அமர்ந்திருந்த பெண்மணி சட்டென்று மயங்கி, ரிக்‌ஷாவிலிருந்து சரிந்து விழ, தெருவைக் கடக்க எண்ணியவள் ஓடிவந்து தாங்கி பிடித்தாள். அதற்குள் கூட்டம் கூடிவிட அந்த அம்மாள் கமலத்தின் மடியில். அந்த அம்மாள் கண் விழித்தபோது கமலத்தின்மடியில் தான் இருப்பதைப் பார்த்து நன்றியோடு கைகளைப் பிடித்துக் கொண்டாள். ஒரு வழியாக அவளை சைக்கிள் ரிக்‌ஷாவில் ஏற்றி டாக்டரிடம் காண்பித்து விட்டு, வீட்டிற்கு கொண்டு போய் விட்டபோது கமலத்தை போகவே விடவில்லை அவள்.

''எனக்கு சக்கரை வியாதிம்மா. இந்த மாதிரி அடிக்கடி மயக்கம் வந்திடும். இன்னிக்கு டாக்டர் வீட்டுக்கு போய் வரும்போது இப்படி ஆயிடுச்சு.''

கடல் போன்று பரந்து விரிந்திருந்தது அந்த பழைய கால வீடு. கீழே, மாடி என்று முப்பது பேர் தாராளமாக தங்கக் கூடியதாக இருந்தது. வாசலில் வீட்டைச் சுற்றி ஒரு பெரிய காம்பௌண்ட். வீட்டைச் சுற்றி மாமரம், கொய்யா, தென்னை, வேம்பு என்ற மரங்கள். மரங்களின் கீழே உட்காருவதற்காக கட்டப்பட்ட திண்ணைகள், சிமெண்ட் பெஞ்சுகள், தோட்டத்தில் அழகான சிறிய ஊஞ்சல். சொர்க்கத்துக்கே வந்துவிட்டது போல் தோன்றியது. கமலம் கைத்தாங்கலாக அந்த அம்மாளை வீட்டில் விட்டு விட்டு யாராவது இருக்கிறார்களா அந்த அம்மாளை பார்த்து கொள்ள சொல்லி விட்டு விட்டு வரலாம் என்று பார்த்தால், 'யாரையும் காணவில்லை. அப்போதுதான் அந்த அம்மாவைத் தவிர வேறு யாருமே இல்லை என்று தோன்றியது.

''அம்மா... இங்கே?''

''யாரும் கிடையாதும்மா, நான் மட்டும்தான்.''



''தனியாகவா இருக்கீங்க. உடம்பு வேற சரியில்லை.

''வேலைக்கு ஒரு ஆள் வரா. என்னை கவனிச்சிக்கணும். வீட்டை சுத்தப்படுத்தி இருக்கிற பாத்திரம் தேச்சு சுத்தப்படுத்திட்டு போவா. மத்தியானம் எனக்கு வேண்டிய கூழோ, கஞ்சியோ காச்சி வச்சிட்டு போவா. அவளுக்கு எத்தனை சம்பளம் தரேன் தெரியுமா? இரண்டாயிரம் ரூபாய். பணத்துக்காக வேலை செய்யறவங்க கிட்டே வேற என்னம்மா எதிர்பார்க்க முடியும். ஆரம்பத்துலே அடக்க ஒடுக்கமா வேலை செஞ்சவ, இருக்க இருக்க எனக்கு நாதியில்லேன்னு தெரிஞ்சுகிட்டு, அரையும் கொறையுமாக வேலையை செஞ்சிட்டு போயிடுவா. ஒண்ணு கேக்க முடியாது. பேச முடியாது. அவளை விட்டா எனக்கு வேறு யார் நாதி இருக்கா?'' சொல்லும்போதே குரல் கம்மியது.

''ஒங்க பிள்ளைங்க?'' மறுபடியும் பெருமூச்சு விடுகிறாள் முதியவள்.

''ஒரே பையன். அவன் அப்பாவே நிறைய நிலபுலன் வீடு எல்லாம் வச்சிட்டுதான் போயிருக்காரு. எதுவும் புடிக்காம அமெரிக்கா போயிட்டான்.'' படிச்சிட்டு வரேன்னு 'போனவன்' இனிமே திரும்ப முடியாதுன்னு சொல்லிட்டான். மருமக, பேரன் எல்லாம் இருக்காங்க. அந்த காலத்தைவிட, இந்த காலத்து பெத்தவங்க பாசத்தை அதிகமா காண்பிக்கிறாங்க. நாம உயிரைக் கொடுத்து எல்லாம் செய்யறோம். ஆனா பிள்ளைங்க அவங்க காரியம் ஆகிற வரைக்கும் நம்மை பயன்படுத்திக்கிறாங்க. பிள்ளையே ஒலகம்னு நாங்க வாழ்ந்தது கூட பிள்ளைக்கு மறந்து போச்சு. அவர்களுக்கு உபயோகப்பட்டாச்சு. உபயோகப்படுத்தின பழைய பொருளால யாருக்கு என்ன லாபம்? தூக்கி போட்டாச்சு. நல்ல

வேளை புருஷன் ஊர்பட்டதை வச்சிட்டு போனாரே. பணத்துக்காக யாரையும் கை ஏந்த வேண்டியதில்லை. ஆனா தனிமை பல நேரம் தற்கொலை பண்ணிக்கலாம்னு தோணும். என் கடமை முடிஞ்சிடுச்சு. இனிமே எதுக்காக உயிரோடு இருக்கணும்னு தோணும். ஆனா அதுக்கும் தைரியம் வரலை.''

சட்டென்று முகத்தை மூடிக் கொண்டு அந்த முதியவள் அழ விதிர்த்துப் போகிறாள் கமலம். பட்டினி, ஏழ்மை, பசி இதுதான் துன்பம் என்றால் எல்லாம் இருந்தும் எதையும் அனுபவிக்க முடியாத நிலை அந்த முதியவளுக்கு. வாழ்க்கையில்இப்படி கூட ஒரு நிலை வருமா? ஆச்சரியம், சோகம், பரிதாபம் எல்லாம் கலந்த உணர்வு கமலத்திற்கு. பின் கமலத்தைப் பற்றி விசாரிக்கிறாள். கமலம் சுருக்கமாக கணவனால் கைவிடப்பட்டவள் என்றும் குழந்தைகளுக்காக தான் உழைப்பதை சொன்னபோது.

''வேலை செய்யறவ ஊருக்கு போயிருக்கா. ஒரு நாலு நாளைக்கு என்னைக் கவனித்துக் கொள்ள முடியுமா?'' முதியவள் கேட்க, அதற்கு தனியாக ரூபாய் கொடுப்பதாக சொல்ல, கமலம் சற்று தயங்கி பின் ஒத்துக் கொள்கிறாள்.

கமலம் கிளம்ப யத்தனிக்கையில் முதியவள் தடுக்கிறாள். ''குழந்தைகளை அழைச்சுகிட்டு இங்கே வந்திடேன்.''

''இல்லே நாலு நாளைக்கு அப்புறம்?''

''நீ எனக்கு வேலை செய்யலேன்னா கூட இருக்கலாமே. கீழே நிறைய அறைகள் இருக்கு. நான் இங்கே தனியாத்தான் இருக்கேன். எனக்குன்னு துணையா இருந்த மாமி சொந்த ஊரோடு போயிட்டாங்க. ஒரு பேச்சுத் துணைக்கு கூட ஆள் இல்லே. காலைல வர வேலைக்காரி பத்து மணிக்குள்ளே



திரும்பிப் போயிடுவா. அதுவும் நாலு நாளா இருக்கப் போறதில்லே. வேலைக்காரி சொந்தக்காரங்களுக்கு கல்யாணமாம். அதுனால ஒரு நாலு நாளைக்கு வரமாட்டா. அதுக்குள்ளே என்னை யாராவது வெட்டிப் போட்டா கூட கேட்பாரில்லை. சட்டென்று கண்கள் கலங்கிப் போயின.

இந்த தள்ளாத வயதில் நோயோடு பாவம். பாழும் மனம். இந்த பணத்திற்காகக் கூட யாரும் கிழவிக்கு உதவி செய்யவில்லையே. நாலு நாளைக்குப் பிறகு ஒரு வேளை கிழவி வெளியே போ என்று சொன்னால், சொன்னால் சொல்லி விட்டு போகட்டும். பாவம் மனதால் பலவீனப்பட்டு, ஆதரவு தேடி நிற்கும் இவளுக்கு நான் உதவி செய்தே தீரணும். அன்றே குழந்தைகளை அழைத்துக் கொண்டு அங்கே வந்து விட்டாள். குடிசை வீட்டிற்கு இன்னும் நாலு நாட்கள் கழித்து வருவதாக தகவல் தந்துவிட்டு வந்தாள். நாம் ஒன்றை நினைப்பதற்குள் தெய்வம் இன்னொன்றை முடித்து போட்டு செயலையே முடித்து விடுகிறது. கிழவியை கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்டாள். சர்க்கரை வியாதிக்காக பாவக்காய் செய்து போட்டாள். சர்க்கரை சேர்க்காமல் பார்த்து பார்த்து செய்து, வாங்கப் போகும் பணத்திற்காக இல்லாமல், நோயாளி நன்றாக ஆக வேண்டும் என்ற மனத்தோடு வேலை செய்தாள்.

நான்கு நாட்களில் முதியவள் பத்மாவதி பாதி குணம் ஆன மாதிரி தென்பட்டாள். நாலாவது நாள் முடியும்போதே சட்டென்று கமலத்தின் கையைப் பிடித்துக் கொண்டாள். ''கமலம் நான் பொய் சொல்லிட்டேன். மாதம் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்திட்டு இருந்தேன். வர வர வேலையும் செய்யறதில்லே. அடிக்கடி என்னை விட்டுட்டு வேற போயிடறா. சண்டை போட்டேன் நின்னுட்டா. எனக்கு நாலு

நாளாவது தனிமைய்ய ஒழிக்கனும் போல இருந்தது. ஆனா இப்ப ஒன்னையும், கொழந்தைகளையும் பிரிய முடியும்னு தோணலை. நீயேன் கட்டட வேலைக்கு போகனும். அவளுக்கு கொடுத்த மாதிரி உனக்கும் மாதம் இரண்டாயிரம் ரூபாய் தரேன். இங்கயே இதே வீட்டிலே இருந்திடேன்.''

கமலம் நினைத்ததுதான் எதிர்பார்த்ததுதான். அந்த முதியவள் கூப்பிடுவாள் என்று நினைத்தாள். கூப்பிடவில்லை என்றால் 'என்னாகும்' பயந்தாள். பிள்ளைகளுக்கும் அந்த வீடு மிகவும் பிடித்து விட்டது. தோட்டத்தில் ஓடிப் பிடித்து விளையாட, ஊஞ்சலில் வீசி வீசி ஆட, கொய்யாவைப் பறிக்க, மல்லி, முல்லை எல்லாவற்றையும் பறித்து அம்மாவிடம் கொடுத்து கொடுத்து தலையில் வைத்து குதித்து குதித்து ஓடினர். இத்தனை நாட்கள் குடிசையில் இருந்துவிட்டு இந்த வீடு பெரிய அரண்மனை போன்று பிரம்மாண்டமாக இருக்க ஆனந்தத்தில் திளைத்தனர்.

''அம்மா இங்கே இருக்கலாம்மா'' கருணா முதல் நாளே நச்சரிக்கத் தொடங்கி விட்டாள். வாழ்க்கையின் அடுத்த கட்டம் சற்று அமைதியான கட்டம் போலும். ஓடி, ஓடி ஓய்ந்து போன உடம்புக்கு ஓய்வு கொடுக்கும் கட்டம்.

காலையில் எழுந்து பத்மாவதி அம்மாவிற்கு தேவையானவைகளைச் செய்து விட்டு குழந்தைகளுக்கு சாப்பாடு தயார் செய்து, அவைகளை பள்ளிக்கு அனுப்பி விட்டு, வீட்டைச் சுத்தம் செய்து, பூக்களைப் பறித்து, மாலையாகத் தொடுத்து படங்களுக்குப் போட்டு, பின் பத்மாவதி அம்மாள் சாப்பிட்ட பின்தான் சாப்பிட்டு, இருவரும் டி.வி பார்த்து, பத்மாவதி அம்மாள் வீட்டிற்கு வரும் புத்தகங்களை படித்துக் காண்பித்து, அவளுக்குத் துணையாக



முக்கியமாக பேச்சுத் துணையாக கமலம் மாற, மழையை வேண்டிய பயிருக்கு மழை கிடைத்தது போல், காற்று வேண்டியவருக்கு தென்றல் வீசியது போல், பத்மாவதிக்கும் வாழ்க்கையில் வசந்தம் வீசியது. இத்தனை நாள் கொன்று தின்ற தனிமையிலிருந்து விடுதலை. இதுவரை அனாதையாக இருந்தவளுக்கு ஒரு நாதி கிடைத்தது. ஒரு தோழமை கிடைத்தது. உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு தோழி கிடைத்தாள்.

காலம் தான் எத்தனை வேகமானது. மனிதர்களை மட்டுமல்ல வருடங்களையும் அல்லவா சேர்த்து விழுங்குகிறது. ஐந்தாவது படித்துக் கொண்டிருந்த கருணா பி.எஸ்ஸி கடைசி வருடம், காவ்யா பி.எஸ்ஸி இரண்டாம் வருடத்தில் அடி எடுத்து வைத்த போதுதான் வாழ்க்கையின் அடுத்த கட்டம் துவங்கியது. கிட்டதட்ட பத்து வருடங்கள் முழுவதுமாக கழித்த அந்த வீட்டில் பத்மாவதி சௌக்யமாக சந்தோஷமாக ஆனந்தமாக கண்ணை மூடியவுடன் கமலத்தின் நிலமைதான் ரொம்ப ரொம்ப பாவமாகி விட்டது.

பத்து வருடங்கள் துணைக்குத் துணையாக, பெரியவள் என்கிற விதத்தில் நல்லபடியாக உபதேசங்கள் செய்து, சொந்த பாட்டியைப் போல, குழந்தைகளின் நலன்களில் ஈடுபட்டு எத்தனை ஆசையாக எல்லாம் செய்தாள். பிறந்த நாட்களிலும் சரி, தீபாவளி போன்ற நல்ல நாட்களிலும் சரி, குழந்தைகளுக்கு வேண்டிய துணிமணிகள் எல்லாவற்றையும் வாங்கித் தருவாள். இப்படி கூடவே இருந்த பெருந்துணையை இழந்து அவள் மட்டுமல்ல, குழந்தைகளும் கஷ்டப்பட்டனர். வசதியான வாழ்க்கை போய் விடுமே என்று கருணா பயந்தே போய்விட்டாள். சுகமான வீடு. அருமையான சூழ்நிலை.

ஆசையைக் கொட்டும் பாட்டி. அம்மாவும் கிடைத்த இரண்டாயிரம் ரூபாயை செலவு செய்யாமலேயே பாட்டியின் உத்தரவுப்படி வங்கியில் கட்டி வந்தாள். பத்மாவதி அம்மாளே இவளின் துணைக்காக சந்தோஷப்பட்டு செலவு செய்ய, முதலில் சில மாதங்களுக்குப் பிறகு கமலம் பணம் வாங்கவே மறுக்க, பிடிவாதமாக கமலத்தின் பேரில் வங்கிக் கணக்கு எடுத்து வங்கியில் கட்ட வைத்தாள். பத்து வருடங்களில் அந்தப் பணமே மலை போல் சேர்ந்து அதற்கு வட்டி என்று கணிசமாக வந்து அதையும் வங்கியில் டெபாசிட் செய்ய சொல்லி எல்லாம் பத்மாவதி அம்மாவின் ஏற்பாடுதான்.

பத்மாவதியின் மறைவிற்குப் பிறகு கமலத்திற்கே அந்த வீட்டில் இருக்க பிடிக்கவில்லை. காரியத்திற்கு என்று வந்த பிள்ளை பதினைந்து நாட்கள் இருந்து வீட்டை எல்லாம் விற்று பணமாக்கிக் கொண்டு செல்ல, பத்து வருடத்திற்குப் பிறகு கமலத்தின் நிலமை மறுபடியும் சங்கடதுக்குள்ளாகியது. ஆனால் இம்முறை பத்மாவதி அம்மாள் சேர்த்து வைத்து விட்டுப் போன பணம் உதவிக்கு வந்தது. பத்மாவதி அம்மாள் காரியங்கள் முடிந்தவுடனே எல்லாவற்றையும் பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டு தன் பெண்களோடு வெளியே வந்தாள் கமலம். வாடகை குறைச்சல் என்பதால் ஊருக்கு வெளியே உள்ள ஒரு வீட்டைப் பார்த்து குடியேறியாகி விட்டது. வருமானம் போதாது என்பதால் வீட்டில் அப்பளம், வற்றல், பருப்பு பொடி, மிளகாய்பொடி என்றெல்லாம் போட்டு விற்க ஆரம்பித்தாள் கமலம். பத்மாவதியோடு இருந்ததால் நிறைய கடைகளுடன் நன்றாகப் பழக்கம் இருந்ததால் பிழைப்புக்கும் ஒரு வழி கிடைத்தது. இதுவரை இருந்த ராஜ வாழ்க்கை போய், சற்று இழுத்து பிடிக்கும் வாழ்க்கை ஆரம்பித்தது. கடந்த இரண்டு வருடங்களாக எல்லாமே அட்ஜஸ்ட்மென்ட்தான்.



சாப்பாட்டிலிருந்து துணிமணி வகை வரை எல்லாமே சாதாரணம்தான்.

காவ்யாவாவது நிஜத்தை புரிந்து கொண்டவள். ஆனால் கருணா பத்மாவதி தன் பாட்டி என்று நினைத்து, அந்த வீட்டை தன் சொந்த வீடு என்று நினைத்து வாழ்ந்தவள்.

''கமலம் உருளைக்கிழங்கு ஒரு கிலோ பண்ணு.''

''எதுக்கும்மா நீங்க கூட சாப்பிட போறதில்லே.''

''பாவம்டி கொழந்தைகள்'' என்பாள்.

''கமலா இன்னிக்கு வெஜிடபிள் புலாவ் பண்ணு. பெரியவ நேத்தே, என்னம்மா எப்ப பாத்தாலும் பருப்புக் குழம்பான்னு அலுத்துகிட்டா.''

''இன்னிக்கு கேசரி கிளறு. காவ்யா குட்டி எல்லாத்திலேயும் பஸ்ட் வந்திருக்கா. அதுக்கு டிரீட். தான் சாப்பிடா விட்டாலும் இரண்டையும் தன் பேத்திகளாக பாவித்து எத்தனை ஆசை. அந்த வீட்டை விட்டு போனதில் இருந்து கருணாவிற்கு வெறுப்பு. போதாத குறைக்கு வேண்டியதை சாப்பிட முடியவில்லை. ஒரளவு கிடைத்து வந்த துணிகள் கூட உடுத்த முடியவில்லை என்பதெல்லாம் அவளுக்கு எரிச்சலையும், ஏமாற்றத்தையும் தந்தது. இந்தப் பெண் கனவுலகில் வாழ்ந்து கொண்டு இருப்பவள். இவளை எப்படி திருப்புவது? என்ன சொல்லி மாற்றுவது? என்ன சொன்னால் புரிந்து கொள்வாள். எத்தனை நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள். அவளுக்காக தெரியவில்லை. பெண்ணின் முதிர்வு இல்லாத மனம் எரிச்சலை மூட்டியது. புரிந்து கொள்ள மறுக்கும் பெண்ணைப் பார்த்தாலே எரிச்சல் வந்தது. தன்னைக் குறைத்துக் கொண்டு, தாழ்த்திக் கொண்டு, சொந்தக்காரர்களின் வாலைப் பிடித்துக்

கொண்டு. இந்தப் பெண் உண்மையை எப்போது புரிந்து கொள்வது? பெண்ணை நினைக்க, நினைக்க வேதனை, இதுவரைதான் பட்ட கஷ்டங்கள் எல்லாம் வீணாகி விடுமா? இந்த நினைப்பு வந்ததுமே நெஞ்சு நடுங்கியது. 'கடவுளே, போதும். என் வாழ்க்கையின் கடைசி கட்டத்தை நோக்கி சென்று கொண்டு இருக்கும் எனக்கு உதவி செய்ய மாட்டாயா? நிம்மதியான வாழ்க்கையை ஏன் பறித்துக் கொண்டாய்? இன்னும் பெண்ணை அறியாமையிலேயே வைத்திருப்பது ஏன்? இவளை விடச் சிறியவள் புரிந்து கொள்ளும்போது இந்தப் பெண்ணுக்கு என்ன?

''அம்மா'' காவ்யாதான் தோளைத் தொடுகிறாள்.

''என்னம்மா இத்தனை நேரமா என்னமோ செய்யறே? பழைய விஷயங்களை நெனச்சியா?''

''இந்தப் பெண்ணுக்கு கற்பூர புத்திதான். எதை எடுத்தாலும் சட்டென்று புரிந்து கொண்டு பேசும்.''

''அக்காவை பத்தியா கவலைப்படறே?''

''ஆமாம்மா. நிஜத்தை நீயாவது சொல்லி புரிய வைக்க கூடாதா?''

''அம்மா! என்னம்மா புரியாம பேசறே. ஒவ்வொரு மனுஷனும் தானா புரிஞ்சிக்கணும். அடுத்தவன் சொன்னான் புரிஞ்சிகிட்டேன்ங்கறது எல்லாம் பம்மாத்து வேலை. அவளா அனுபவப்படணும். புரிஞ்சுக்கணும். அதுனால அந்த அனுபவம் வர வரைக்கும் அவளை ப்ரீ ஆக விட்டுடு.''

''அவளுக்கு அனுபவம் வருமோ இல்லை, ப்ரீ ஆக அவளை விட்டால் நமக்கு வருமோ தெரியலை.''

அம்மா பெருமூச்சு விடுகிறாள்



''நாலு தடவை அடிபட்டா தானா புத்தி வந்திடும்.''

''அவளால அடிபட்டா தாங்க முடியுமா?''

''என்னம்மா நீ சொல்றே. இந்த அடிங்கறது அறிவைக் கொடுக்கற அடி. ஒவ்வொரு அடியும் ஒரு அறிவு. அனுபவம்தான். பட்டை தீட்ட, தீட்டதான் வைரத்துக்கு மதிப்பு. பட்டை தீட்டறதே கஷ்டம்னா, வைரம் வெறும் கல்லாகத்தான் இருக்கும்.''

''உனக்கு இருக்கற அனுபவ முதிர்ச்சி அவளுக்கு இல்லையேடி.''

''அவ டி.வி, சினிமான்னு பகல் கனவே பார்த்து வாழ்ந்தவ. ஒவ்வொரு கனவு சீனுக்கும் கவிஸ்சர்வேண்ட். அமெரிக்கா போறதுதான் நெஜம்னு நம்பிகிட்டு இருக்கறவ. உண்மையிலே இதெல்லாம் சாத்தியப்படுமான்னு யோசிக்கணும். விழுந்த கனவுலேந்து எழுந்து வரவே தோன்றாத போது யோசிக்க எப்படித் தோன்றும். அவ வாழ்க்கையை ஆரம்பிக்கும் போதே நிஜம் பிடிபட்டு போயிடும். அவளை நினைச்சு வருத்தப்படாதே 'கொஞ்சம் அவமேல கண் வச்சுக்கலாம். பயப்படாதே. ''இது குழந்தையா? அல்லது தெய்வமா? குழந்தை பிறந்ததிலிருந்து அம்மா என்பவள்தான் குழந்தைக்கு விழுந்து விழுந்து செய்வாள். இதென்ன இத்தனை ஆச்சரியமாக இருக்கிறது. இந்தப் பெண்ணுக்கு மட்டும் அன்பைக் கொட்ட எப்படித் தெரிகிறது? சிறு குழந்தை முதல் இப்போது வரை அவள் கொடுக்கும் தைரியத்தில்தானே என்னால் வேலை செய்ய முடிகிறது. சட்டென்று உணர்ச்சி பெருக்கில் பெண்ணின் கையை இறுகப் பிடித்துக் கொள்ள-

''என்னம்மா இது சின்னக் குழந்தை மாதிரி!'' அம்மாவின் தலையைத் தடவிக் கொடுக்கிறாள். பாவம் அம்மா. தன் குழந்தைகள், அம்மா என்ன சாமான்யப்பட்டவளா? தன் குழந்தைகள், தன்மானத்தோடு வாழணும், தலை நிமிர்ந்து நடக்கணும்னு எத்தனை கஷ்டப்பட்டு இருக்கிறாள். புருஷன் பாதியிலே விட்டுப் போனதில் எத்தனையோ பேர் தான் பெற்ற குழந்தைகளைக் கூட தூக்கிப் போட்டிருப்பதை பார்த்திருக்கிறாள். இப்படி குழந்தைகள் மேல் பித்தாக, ஒவ்வொரு செயலையும், அவர்கள் நன்மைக்கே செய்து, இப்படி ஒரு அம்மா கிடைக்க உண்மையிலேயே தவம்தான் செய்து இருக்க வேண்டும்.

அவளுடைய உழைப்பு, பரிவு, பாசம் வேறு ஒருத்தருக்கு இருக்குமா? என்பது கூட ஆச்சரியம்தான். இந்த அக்கா ஒருத்தி தேவை இல்லாததுக்கெல்லாம் நினைத்துக் கொண்டு, தானும் கெட்டு அம்மாவையும் கஷ்டப்படச் செய்து சே.... அம்மா படுத்துக் கொள்ள, ஒரு பத்து நிமிடம் தானும் படுத்தவள் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று வெளியே வந்தாள். அங்கே கருணா யாருடனோ தொலைபேசியில் அவசரம் அவசரமாக சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பேசுவது தெரிந்து உறைந்து போய் நின்றாள்.

5

''அக்கா உன்னை ஒன்றும் தெரியாத பச்சைக் குழந்தை என்று நினைத்தேன். இத்தனை மோசமாக இருக்கிறாளே. அம்மா சொல்வது போல் ஆற்ற முடியாத கஷ்டம் ஏற்பட்டு விட்டால் பின் யாரை நொந்து கொள்வது? அக்கா வருத்தப்பட்டோ



காயப்பட்டோ வந்தால் சந்தோஷமாக வா இருக்க முடியும். இதை அம்மாவிடம் சொல்லலாமா? வேண்டாமா? மறுபடியும் வந்து படுத்தபோது உறக்கம் வரவில்லை; கமலம் அத்தனை தூரம் பழைய நினைவுகளில் மூழ்கி மனது சங்கடப்பட்டது போய் தன்னையறியாமல் கண்ணயர்ந்து உறங்குவதைப் பார்க்கிறாள். அம்மாவிடம் சொல்லலாமா? பாவம்... வேண்டாம். இதுவரைக்கும் இருந்த மன அலைச்சல்களே போதும். இதை வேறு சொல்லி எதற்காகத் துன்பப்படுத்த வேண்டும். இதற்கு என்ன செய்வது அக்காவை எப்படி சரி செய்வது? மனது கிடந்து துடிக்க, மௌனமாகத் திரும்பி வந்து படுக்கிறாள் காவ்யா. யாரது? யாரோடு இந்த அர்த்த ராத்திரியில் அக்கா பேசுகிறாள். கண்டிப்பாக அது ஒரு பெண்ணாக இருக்க முடியாது. தூங்குவதை கெடுத்துக் கொண்டு திருட்டுத்தனமாக பேச மாட்டாள். இவளை என்ன செய்வது? குடிதார் கொடுத்து அனுப்பினாளே. அந்த அரவிந்தனா? யார் அவன்? அக்காவின் கல்லூரியில் படிப்பவன் என்றாள். அவனோடு அவளின் நெருக்கம் எப்படி என்று தெரியவில்லையே. அக்காவைப் பற்றி நினைத்தவாறே உறங்கிவிட காலை அம்மாதான் உலுக்கி எழுப்புகிறாள்.

''என்னடி இது? இத்தனை லேட்? மணி ஏழரை ஆகுது. இன்னும் தூங்கிகிட்டு இருக்கே. ஏழரை மணிக்கு எழுந்திருக்கிற உங்க அக்காலே சீக்கிரம் எழுந்து போயாச்சு. ''அம்மாவின் கடைசி வாக்கியம் சொரேலென்று மனதை தாக்கியது. அக்கா கிளம்பியாச்சு. அதுவும் ஏழரை மணிக்கு. வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள். அக்கா எந்த தப்பு, தண்டா செய்யாமல் இருக்க கண் காணிக்கணும் என்றிருந்தவளுக்கு கண்ணில் மிளகாய் தூவி விட்டு அக்கா ஓடி விட்டாள்.

''அக்கா விட மாட்டேன். யாருன்னு பாத்து ஒள்ளை சரி பண்ணலைன்னா பாரு.'' கறுவிக் கொள்கிறாள்.

அவசரம் அவசரமாக குளித்து உடை உடுத்தி, வெறும் காபியை மட்டும் சாப்பிட்டு விட்டு கிளம்பி விட்டாள். தன் டூவிலரை எடுத்து அக்கா காலேஜிக்கு ஓட்டினாள்.

''ஏன்டி வந்தே?'' என்று அக்கா கோபித்துக் கொண்டால்,

பார்ப்போமா? முதலில் அக்காவின் நடவடிக்கை என்ன என்று கண்டுபிடிக்க வேண்டும். அக்காவின் கல்லூரிக்கு சென்றாள். அக்கா எங்காவது தென்படுகிறாளா? தேடினாள். ம்... ஆளே காணவில்லை. அக்காவைத் தேடிக் கொண்டு அவள் வகுப்பு இருக்கும் இடத்தில் போய் நின்றாள். ம்... அக்காவை காணவே இல்லை. இந்தக் கூட்டத்தில் எங்கே தேடுவது? ஏதாவது விஷயம் இருந்தாலும் அவளிடம் சொல்லி அவளைப் பார்த்து விட்டு வரலாம். இப்போது என்ன செய்வது? தெரிந்தவர்கள் யாராவது தென்படுகிறார்களா என்று பார்த்தாள். கண்ணுக்கு எட்டியவரை தெரிந்தவர் யாருமில்லை. அரவிந்தன் யாரென்று விசாரித்துப் பார்ப்போமா? கருணா 'என் கிளாஸ்' என்று தானே சொன்னாள். மறுபடியும் மாடி ஏறி அக்காவின் கிளாஸுக்கு வருகிறாள். ''மிஸ்டர் அரவிந்தன் இருக்காருங்களா?''

''இல்லையே. வெளியே போயிருக்கான். நீங்க யாரு?''

''நான் அவர்களின்.'' சட்டென்று மனதில் ஏற்பட்ட ஒரு பொய்யை சொல்லி விட்டு திரும்ப.

''மேடம் அர்விந்த் கேன்டீன்ல தான் இருக்கான். பாக்கறீங்களா?'' அவள் சரியென்று தலையை ஆட்டி விட்டு அவனோடு கேன்டீனுக்கு போகும் போது கூட வந்தவனின்



கண்கள் தன்னையே மேய்வதைப் பார்த்து எரிச்சல் வந்தது. அந்தப் பையனைப் பார்த்துவிட்டு கிளம்பி விட வேண்டியதுதான். துப்பட்டாவை சரி செய்து கொண்டாள். ஆனால் கூட வந்தவனின் பார்வை தன் மேலேயே மேய்வதைப் பார்த்து எரிச்சல் வந்தது.

''என்னது இன்டீஸன்டா? டி.வியில் அந்தக் காலத்து தமிழ்ப் படங்களை பார்த்திருக்கிறாள். ஹீரோ அசட்டுத் தனமாக ஹீரோயினை விழுங்கி விடுவதைப் போல பார்ப்பான். உடனே ஹீரோயின் வெட்கப்பட்டுக் கொண்டு, நாணி கோணிக் கொண்டு சே! பார்த்தாலே அவளுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வரும். நல்ல வேளை இந்தக் காலத்து படங்களில் இந்தக் கன்றாவி இல்லை. இந்தப் பொய்யான உணர்வுகள், பட்டிகாட்டான் மிட்டாய் கடை பார்த்தான் என்று பாட்டி அடிக்கடி சொல்லும் பழமொழி. அதுபோல இவனை விடக் கூடாது.

''ஹேய்... மிஸ்டர் நாம இப்ப கேன்டீன் பக்கம் தானே போயிட்டு இருக்கோம். எம் மூஞ்சியிலா கேன்டீன் போற வழி ஒட்டியிருக்கு. அப்படி பார்த்துட்டு வரே.''

''மேடம் அழகான எதையாவது கண்டா வேற திருப்பி பார்க்க தோன்றுமா?''

''த பாருங்க. மிஸ்டர் நீங்க வைக்கற ஐஸுக்கெல்லாம் நான் மயங்கி உருகுவேன் என்று நினைக்க வேண்டாம். முன் பின் தெரியாத பொண்ணுகிட்டே இந்த மாதிரி பிஹேவ் பண்றது ஒனக்கு அநாகரீகமாய் தெரியலை?'' பதில் பேசாது தோளை குலுக்கி விட்டு கேன்டீனுக்குள் நுழைந்தான்.

''என்ன சாப்பிடறீங்க மேடம்?''

''மிஸ்டர் அரவிந்தனைக் காண்பிங்க. நான் கிளம்பிடு போகனும்.

''சொல்லுங்க அரவிந்தன்கிட்டே என்ன விஷயம் பேசனும்?''

''என்னய்யா அநாகரீகமாய் பேசறே?''

''மேடம் அநாகரீகமாய் நடந்துக்கறது யாரு? நீங்களா? நானா? முன்பின் தெரியாத நீங்க என்னோட கசின்னு எதுக்கு பொய் சொல்லனும்?''

''ஒன்னோட கஸினா?''

''ஆமா நான்தான் அரவிந்தன். உங்களைப் பார்த்ததே இல்லை. சரி கொஞ்சம் தமாஷ் பண்ணலாமேன்னுட்டு ஒங்களோடு இத்தனை தூரம் வந்தேன். சரி என்னை எதுக்காக தேடினீங்க? நீங்க யாரு?

அவன் நேரடியாக விஷயத்துக்கு வந்ததும் என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஒரு நிமிடம் மௌனம் சாதித்தவள், பின் மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

''ஆமா எங்க அக்காவுக்கு எதுக்கு குடிதார் செட் கொடுத்து அனுப்பிச்சீங்க?''

''யாரு?''

''கருணா?''

''ஓ... கருணாவோட சிஸ்டரா?''

''ஆமா எதுக்காக கொடுத்து அனுப்பினீங்க?'' அவன் முகத்தில் லேசான சிரிப்பு வந்து மறைந்தது.



''மேடம் ஒருத்தரை நமக்கு பிடிச்சா, நமக்கு என்ன தோணுதோ அதைப் பிரஸன்டாக அனுப்புகிறோம்.

''மிஸ்டர் இங்கே படிக்க வந்திருக்கீங்க படிப்பை மட்டும் தான் ஞாபகம் வச்சுக்கனும். மீதி எல்லாம் அப்புறம்தான்.''

''மேடம் ஒருத்தரை பிடிக்கறதுக்கும், படிக்கறதுக்கும் என்ன சம்பந்தம்? அதுல என்ன படிப்பு கெட்டு போயிடும்?''

''சார் நீங்க எப்படியாவது போங்க. எங்கக்காவுக்கு இதெல்லாம் கொடுக்காதீங்க. நாங்க எல்லோரும் சாதாரண வீட்டைச் சேர்ந்தவங்க. படிச்சாதான் முன்னுக்கு வர முடியும். எங்க அக்காவுக்கு அநியாயமா ஆசையை வளத்து விடாதீங்க மொதல்ல அவபடிச்சு அவளை ஸ்டெபிலைஸ் பண்ணிக் கனும்.''

''இதென்னடா வம்பா போச்சு. ஒரு டிரஸ் அனுப்பினா அவங்களை ஸ்பாயில் பண்ண மாதிரியா அர்த்தம் ஆவது. பாவம் எப்பவுமே ஒரு குடிதார் தான் போட்டுகிட்டு வருவாங்க. என்னவோ வாங்கி கொடுக்கனும்னு தோனிச்சு. குறை சொல்றீங்க?'' அவனின் பதிலைக் கேட்டு எரிச்சல்தான் வந்தது.

''ஏன் மிஸ்டர் நீங்க எனக்கு சிலேடிவ்வா. நீங்க யாரு அவளுக்கு வாங்கி தரதுக்கு? இத பாருங்க ஒங்களோட வாதம் பண்ண வரலை. குட்-பை டுயூ. இன்னொரு தடவை இப்படி ஏதான ஆச்சு உங்களை சும்மாவிட மாட்டேன்.''

''சரி இனிமே உங்க அக்காவுக்கு எதுவும் அனுப்பலே. உங்களுக்கு எந்த கலர் பிடிக்கும்.''

சொன்னவனை முறைத்துப் பார்த்து விட்டு விருட்டென்று கிளம்பினாள். ''மேடம் ஏதேனும் சாப்பிட்டு போங்க.

``சொல்லச் சொல்ல புயலைப் போல் விறுவிறுவென்று கிளம்பிப் போகிறாள். சே எத்தனை மோசமான மனிதர்கள். இவர்கள், தாங்களும் கெட்டு மற்றவர்களையும் கெட வைத்து அக்கா இவர்கள் மத்தியில் ஒழுங்காக இருப்பதே அதிசயம்தான். மனதில் ஆத்திரம், கோபம் ``மேடம்... மிஸ்... மிஸ்...'' பின்னாலே அவன் கூவிக் கொண்டு வருகிறான். சே! என்ன மனிதர்கள். தேர்ட் ரேட் பெல்லோ.'' அவள் கிளம்பி டி.வி.எஸ் பிப்டியை ஸ்டார்ட் செய்து நகரத் தொடங்கிய போது ``ஓ... மிஸ்.. இந்தாங்க. மை ஸ்மால் கிப்ஃட்'' பின்னாலேயே ஓடி வந்தவன் சட்டென்று அதை வீசி எறிய, டி.வி.எஸ் பிப்ஃடியின் முன் பக்க கொக்கியில் வந்து மாட்டியது. பெரிய மஞ்சள் ரோஸ் இரண்டும், சின்ன சின்ன சிவப்பு ரோஜா நான்கும், ஒன்றாக கட்டப்பட்டு ரொம்ப அழகாக இருந்தது. காவ்யாவிற்கு வந்த எரிச்சலில் பூவைக் கசக்கி எறியலாமா? என்று பார்த்தாள். பூவின் நிறமும், கொத்து கொத்தான அந்த ரோஜாக்களின் அழகும் அவளின் கையை கட்டிப் போட இன்னும் வேகமாக டி.வி.எஸ் பிப்டியை கிளப்பிக் கொண்டு போகிறாள். அக்கா எங்கே? காலையில் தனக்கு முன்னே கிளம்பியவள் அப்படி எங்கே போயிருப்பாள். இவளைச்சுற்றியுள்ள மனிதர்கள் இத்தனை மோசமாக நடந்தால், சாதாரணமாகவே சபல புத்தி உள்ள அக்கா என்ன செய்வாள்? இந்தச் சூழ்நிலை சற்று மாறினால்தான் அவளை மாற்ற முடியும். பெற்றோர்கள் எத்தனையோ கஷ்டப்பட்டு, பணத்தைக் கொடுத்து உழைப்பை சிந்தி படிக்க வைத்தால், பிள்ளைகளுக்கு அதில் எப்படி நாட்டம் இல்லாமல் போய் விடுகிறது. குறைந்த பட்சம் எதிர்காலம் நன்றாக இருப்பதற்காவது படிக்கக் கூடாதா?

பெற்றவர்கள் உழைப்பையும், அவர்களின் துன்பத்தையும் பார்த்து இருந்தால் அனுபவித்து இருந்தால்,



நிச்சயமாக பிள்ளைகள் தப்பு செய்ய சந்தர்ப்பமே கிடையாது. அம்மா எத்தனை கஷ்டப்பட்டிருப்பாள். எத்தனை துடித்து வேலைப்பளுவில் எப்படி எல்லாம் துவண்டு இருப்பாள். தாங்கள் இருவரையும் இந்நிலைக்குகொண்டு வர அம்மா பட்ட பாடு கொஞ்சமா? அக்காவுக்கு இதெல்லாம் தெரியாதா? ஏன் இப்படி நடந்து கொள்கிறாள். அம்மாவின் ஏழ்மை நிலைமையை சொல்லக் காண்பித்து, மற்றவர்களிடம் கை ஏந்தி, தன்னை பெரிய ரம்பை என்று நினைத்து கனவுகளில் சஞ்சரித்து அதுதான் நிஜம் என்று நினைத்துக் கொண்டு...

``ஐயோ அக்கா! இத்தனை அசடாக இருப்பியா?'' பெருமூச்சு விட்டாள். அவளுடன் தனியாகப் பேச வேண்டும். ஆமா அக்கா எங்கே? எனக்கு முன் புறப்பட்டவள் இன்னும் கல்லூரிக்குக் கூட வரவில்லை. எங்கே போயிருப்பாள்? ஏதேதோ நினைத்துக் கொண்டிருந்தவளுக்கு, இப்போதுதான் காலையில் வீட்டை விட்டு சென்ற அக்கா இன்னும் கல்லூரிக்கு வரவில்லை என்று தெரிய வர மனது கிடந்து அடித்துக் கொண்டது. அம்மாவிடம் இது பற்றி எப்படிப் பேசாமல் இருப்பது? நல்லவேளை அவள் காலேஜ் ஒன்பதரைக்குதான். இன்னும் கால் மணி நேரம் இருக்கிறது. அதற்குள் அடைந்து விடலாம்.

தன் கல்லூரி செல்லும் சாலையில் வண்டியை திருப்பி ஓட்டும்போது சட்டென்று எதன் மீதோ வண்டி மோதி, நல்லவேளை சட்டென்று பிரேக்கை போட வண்டி நின்றது. எதிரில் இருந்த உருவம் வண்டியில் மோதி, கீழே விழ ஒரு நிமிடம் பதறிப் போகிறாள் காவ்யா. விழுந்தவன் எழுந்த போது ஆறடி உயரம் இருப்பது தெரிந்தது. தன் அக்காவின் நிறம், தன் அம்மாவின் நிறம் தீர்க்கமான மூக்கு, சிவந்த அழகான சிறிய உதடுகள். அழுத்தமான முகவாய், பார்த்தாலே

சற்று பிடிவாதக்காரன் போல் தோன்றியது. 'நல்ல எக்ஸ் ரேகண்கள்.' அடிபட்டவனிடம் ஸாரி என்று சொல்லி, அவனுக்கு உதவி செய்வதை விட, அவனைப் படித்து, அலசி, ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

சற்று சுதாரித்துக் கொண்டு எழுந்தவனுக்கு அவள் தன்னையே ஆராய்ந்து பார்த்து கொண்டிருப்பதைப் பார்த்தவன் முகத்தில், லேசாக புன்னகை எழுந்தது. கீழே விழுந்ததில் லேசான சிராய்ப்பு. கர்ச்சீப்பால் துடைத்துக் கொண்டவன் அவள் இன்னும் ஏதோ யோசனையில் இருப்பதைப் பார்த்தவன். எழுந்து நடக்க சட்டென்று தெளிந்தாள் காவ்யா. 'இது என்ன அசட்டுத்தனம். இதுவரைக்கும் ஆண்களை பார்த்ததில்லையா என்ன? இதென்ன அவனைப் பார்த்து மெஸ்மரைஸ் ஆன மாதிரி.''

''சாரி ஏதோ ஞாபகம்.''

''ம்...'' என்று கன்னங்களில் குழி விழ கண்களில் சிரிப்போடு அவளைப் பார்க்கிறான். இன்னொருவனாக இருந்தால் வார்த்தைகளில் கனம் விழுந்து மரியாதை போய் தானே அசிங்கப்பட்டு இருக்க வேண்டும்.

''சாரி... ஏதோ ஞாபகம்!''

''இட் ஈஸ் ஓ.கே.''

''காயம் பலமா பட்டுடுச்சா?''

''இல்லியே. அவன் சொல்ல, சிராய்ப்பிலிருந்த ரத்தத்தைப் பார்த்தவள் பதறி விட்டாள்.

''சாரி சார். மன்னிச்சிடுங்க. ஏதோ கொழப்பத்துனாலதான் எதையும் கவனிக்கலே. டாக்டர்கிட்டே போகலாம் வாங்க.''



''ஐயோ அதெல்லாம் ஒண்ணுமில்லே. லேசான காயம்தான். கவலைப்படாதீங்க.'' தான் செய்தது தவறு என்று உறுத்த, மறுபடியும் மறுபடியும் மன்னிப்பு கேட்டாள். ''ஆக்ஸிடண்டெல்லாம் ரொம்ப சகஜம். வருத்தப்படறதுக்கு ஒண்ணுமே இல்லை.'' அதற்கு மேலும் நில்லாமல் அவன் நகர, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. இப்படிக் கூட ஒரு மனிதனால் பொறுமையாக இருக்க முடியுமா? சாதாரணமாக ஆபத்து வரும்போது அதுவும் எதிர்பாராத நேரத்தில் வரும்போது மனது எரிச்சல்பட்டு, கஷ்டத்திற்கு காரணமானவர்கள் கையில் கிடைத்தால் கிழி, கிழி என்று கிழிக்கத் தோன்றும். ஆனால் இவன் எப்படி? இத்தனை பொறுமையாக ஒன்றுமே நடக்காதது போல ரொம்பச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு. தான் தேவையில்லாமல் இன்று போயிருக்கவே வேண்டாம். அம்மா வயதில் பெரியவள், அனுபவப்பட்டவள் குடும்பம் தெருவுக்கு வந்தபோது தூக்கி நிறுத்தி இந்த நிலைமைக்கு கொண்டு வந்தவள். அவளிடம் உண்மையைச் சொல்லி இருக்கலாம். பெண்ணின் செயலைப் பார்த்து வருத்தப்பட்டாலும் என்ன செய்ய வேண்டும் என்று தெளிவான முடிவை எடுத்திருப்பாள். தான் ஏதோ தாங்குவதாக நினைத்துக் கொண்டு, பயித்தியக்காரி போல் சுற்றிவிட்டு வந்ததோடு சரி. மறுபடியும் கீழே விழுந்த பையனே அவளைத் தொல்லை படுத்துகிறான். மறுபடியும் மறுபடியும் நினைவுகளில் வந்து போய், கன்னத்தில் குழி விழச் சிரித்து, நாற்பது அல்லது நாற்பத்து ஐந்து வயதுக்கு மேல் வரும் மெசூரிட்டி இந்தப் பையனுக்கு.

சே! தேவையில்லாம எனக்கு ஏன் இந்த நினைவுகள்? மெதுவாக வண்டியை கிளப்பிக் கொண்டு சற்று பார்த்துதான் ஓட்டிக் கொண்டு வந்தாள் காவ்யா.

''காவ்யா.'' யாரோ கூப்பிட நிறுத்தி விட்டு திரும்பிப் பார்க்க, அவளின் முதல் பெரியப்பா நின்று கொண்டிருந்தார்.

''என்னம்மா காலேஜ் லீவா. இங்கே என்ன பண்ணிகிட்டு இருக்கே.''

''கொஞ்சம் புக்ஸ் சேர்ச் பண்ண வேண்டியிருந்தது அதான்.'' சொல்லிவிட்டு அவள் மெதுவாக புன்னகைக்க,

''சரி இப்ப டைம் வேஸ்ட் பண்ணாதே. மொதல்லே காலேஜுக்குப் போ. என்னென்ன புக் வேணும்னு எழுதிக் கொடு. மூர் மார்க்கெட்டிலே இல்லே வேற ஏதேனும் கடையிலே இருக்கான்னு பாக்கறேன்.''

''சரி. பெரியப்பா. வண்டியை வேகமாக செலுத்திக் கொண்டு காலேஜுக்குப் போன போதும், பழைய நினைவுகள் வந்து மொய்த்தது. இன்று என்னவோ வகுப்பில் கூட பாடங்களை கவனிக்க முடியவில்லை. நல்ல வேளை நான்கு பீரியட்கள் வேறு ப்ரீ ஆகிவிட சற்று நிம்மதியாக இருந்தது. இன்று பெரியப்பாவே வந்து என்ன புத்தகம் வேண்டும் என்று கேட்டது ஆச்சர்யமாக இருந்தது. வாழ்க்கை என்பது எப்படி எல்லாம் மாறி விடுகிறது. ஒரு காலத்தில் அம்மா கட்டின புடவை சில துணிகளோடு நிர்கதியாக இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சென்றபோது 'ஏன்' என்று கேட்க நாதியில்லை. இதே பெரியம்மா, பெரியப்பா லட்சியம் கூட செய்யவில்லை. அம்மாவை அப்பா கழுத்தைப் பிடித்த காட்சி மட்டும் மறக்கவே இல்லை. பெரியம்மாக்கள், பெரியப்பாக்கள் பாட்டி எல்லோரும் நமக்கு என்ன என்ற பாவனையில் பார்த்துக் கொண்டிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. 'அம்மா வீட்டை விட்டுப் போறேன்' என்ற போது



அத்தையின் புருஷன் வாய் கொழுப்பெடுத்து சொன்னது, நேற்று சொன்னது போல் இருந்தது.

''போயேன். ஒன்னை யாராவது கூப்பிடறாங்களா என்ன? யாரு மதிக்கறா ஒன்னை? வெளியே போய் சீரழிஞ்சாதான் தெரியும்.'' எத்தனை மோசமான வார்த்தைகள். அந்தச் சின்ன வயதில் ஏதோ திட்டுகிறார் என்று மட்டும் புரிந்தது. பிறகு பேச்சு வாக்கில் அம்மா சொன்ன போது மனது உறைந்தது. என்ன அநியாயம்? அந்த அத்தையின் கணவர் ஐ.ஆர்.எஸ். ரயில்வேயில் மகா உயர் உத்யோகம். நெஞ்சில் ஈரமில்லாத நடப்பவைகளை பார்த்துக் கொண்டிருந்ததே தவறு. இதில நாக்கில் நரம்பில்லாமல் பேச்சு வேறு. அவர் பேசப் பேச, எல்லோரும் காட்சிப் பொருளாக பார்க்க ஒரு நல்ல ஆத்மா கூட 'இப்படிச் செய்யாதே' என்று சொல்லவில்லை. அந்தச் சின்ன வயதில் அப்பா என்ன தப்பு செய்தார் என்று கூடத் தெரியவில்லை. சற்று பெரியவள் ஆனபிறகு விஷயத்தைக் கேட்ட போது மனதே விண்டு போனது. எப்பேற்பட்ட தவறு? ஏன் ஒருவர் கூட அம்மாவின் பக்கம் பேசவில்லை. எத்தனையோ நாட்கள் மனதில் போட்டு குழம்பிய கேள்விகள். இந்த குடும்பத்தோடு மறுபடியும் எப்படி சம்மந்தம் ஏற்பட்டது. நினைத்துப் பார்க்கையிலேயே ஆச்சரியமாகத் தான் இருந்தது.

தான் பி.எஸ்ஸி படிக்கும்போது வீட்டுக்கார பாட்டி இறந்து விட அம்மா பத்து வருடம் கழித்து மறுபடியும் வீடு தேடும் படலத்தில் ஈடுபட்டாள். ஒரு வழியாக ஒரு சிறு வீட்டை வாடகை எடுத்து, தாங்கள் அங்கே நகர்ந்த போது கல்லூரித் தோழி ஒருத்தி வற்புறுத்தி கூப்பிட்டதின் பேரில் அவள் வீட்டிற்கு செல்ல அதன் பக்கத்து வீட்டில்தான், முதல்

பெரியம்மா பெரியப்பா இருந்தார்கள். காவ்யாவை அவர்களுக்கு தெரியவில்லையே தவிர காவ்யாவிற்கு பெரியப்பாவை அடையாளம் தெரிந்தது.

"இவர் பெரியப்பாவா என்ன?" இதற்குள் காவ்யாவின் தோழி பக்கத்து வீட்டிற்கும் அவளை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைக்க, இவர்கள் யாரென்று தெரிந்தபோது வியப்பின் உச்சிக்கே போய்விட்டனர். பின் அவர்கள் வீட்டு அட்ரஸ் வாங்கி ஒருநாள் அவர்கள் வீட்டிற்கு வந்து ஒருவரோடு ஒருவர் பழகி, பிறகு சகஜமாக வர ஆரம்பித்தார்கள்.

அப்பா என்பவர், அம்மா போனபிறகு வேறு ஒரு பெண்ணோடு அவள் வீட்டிற்கே சென்றதாகவும் பிறகு இவர்களைப் பார்க்கவே வரவில்லை என்றும் எங்கே இருக்கிறார் என்றே தெரியாது என்றும் சொன்னதும், இவளுக்கே சற்றுகஷ்டமாகத்தான் இருந்தது. சகோதரர்களுக்கு வேண்டுமானால் அவர் ஒரு பொருட்டாக இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் பெற்றவள். அவள் கூட எப்படி வேறுபட்டு போனாள். பிள்ளை வரவில்லை என்றவுடன் துடித்திருக்க வேண்டாமா? இப்படிக் கூட நமக்கு என்ன என்று தேடாமல் இருப்பார்களா? ஆனால் மீண்டு வந்த உறவுகளிடம் மறுபடியும் இதைப் பற்றி கேட்டு பெரிய விவகாரத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. பல வருடங்களுக்கு முன்னர் கேலி பேசி சிரித்தவர் கூட இன்று உறவு வைத்துக் கொள்ள விரும்பினர். அம்மாவிடம் புலம்பியபோதே அம்மா சொல்லி விட்டார். தேவை இல்லாத விஷயங்களைக் கேட்டு, அவர்களையும் கஷ்டப்படுத்தி தானும் கஷ்டப்படக் கூடாது என்று கட்டாயமாகச் சொல்லி விட்டாள். அப்படி மறுபடியும் துளிர்த்த உறவுகள்தான்.



பெரியம்மா, பெரியப்பா என்று எல்லோருமே மிக நன்றாகப் பேசுவார்கள். வேலையில் இருக்கும் பெரியம்மாவின் மகன், திருமணமான பெரியப்பாவின் மகள் எல்லோரும் விழுந்து விழுந்து பேசுவார்கள். இன்னொரு பெரியம்மாவின் பிள்ளை இன்ஜினியரிங் படிப்பவன் அவனும் விழுந்து, விழுந்து பேசுவான். பி.எஸ்ஸி படிக்கும் பெண்ணும் நன்றாகப் பேசுவாள். அப்பாவைப் பெற்றவள் அருமையாகப் பேசுவாள். அதுவும் பி.எஸ்ஸி கோல்ட் மெடலில் பாஸ் செய்து இவள் பெயர் பேப்பரில் வந்தபின் பெரியம்மா, பெரியப்பாக்களுக்கு மிகவும் வேண்டிய பெண்ணாக மாறிவிட்டாள். எப்போதெல்லாம் உதவி தேவைப்படுமோ அப்போதெல்லாம், என்ன ஏது என்று கேட்டு உதவி செய்ய முனைகிறாள். உதவி வேண்டி அவர்கள் இருந்த காலத்தில் ஒருவர் கூட உதவி செய்ய முன்வரவில்லை. இன்று சற்று நல்ல நிலமைக்கு வந்தபின் தேவையில்லை என்றால் கூட உதவி செய்ய காத்துக் கொண்டு இருக்கின்றனர். பெருமூச்சுதான் வந்தது. பெரியப்பாவே தன் புத்தகங்களை வாங்க உதவுவதாகச் சொன்னபோது மகிழ்ச்சி இருந்தாலும் மனது ஏனோ கஷ்டப்பட்டது. அம்மா சொல்வது போல் குற்றங்களைப் பெரிதுபடுத்தக் கூடாது. வருவது வரட்டும். இன்று பெரியப்பாவின் சொற்கள் சிறிது ஆறுதலையும் கூடவே வருத்தத்தையும் தர பெருமூச்சு விட்டாள்.

இப்போது அக்கா விஷயம் தெரிய வரும்போது நிலமை என்னாகும்? இத்தனை நாட்கள் தாங்கள் எங்கேயோ தங்கி விட்டோம். இப்போது அப்படியா? சாதாரணமாகவே பாட்டி நக்கல் எடுப்பார். அக்கா விஷயம் தெரிந்தால் அம்மாதான் கண்டிப்பாக அவமானப்படுவாள். பாவம் அம்மா! தங்களுக்காக உழைத்து உழைத்து ஏணியில் ஏற்றியும்

விட்டாகி விட்டது. இன்னும் அவளுக்கென்று ஒரு சுகம் கிடையாது. இந்த வயதான காலத்தில் அவளை நிம்மதியாக இருக்க விடக் கூடாதா? அக்காவால் இன்னும் என்னென்ன பிரச்சனைகள் வருமோ? இன்று அக்கா கல்லூரியிலேயே இல்லை. பின் எங்கே போயிருப்பாள். யாருடனாவது குடிதார் கொடுத்தவனும் அங்கேயேதான் இருக்கிறான். பின் எங்கே போனாள்? எது எப்படி இருந்தாலும் இந்த விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது. முக்கியமாக உறவுக்காரர்களுக்கு தெரியவே கூடாது. இல்லாத பொல்லாத கதைகளைக் கட்டி அம்மாவிடம் என்ன கேட்கிறோம் என்று தெரியாமல் கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்டு அவளை வருத்தப்பட வைத்து அதில் இன்பம் கண்டு கொண்டு இருப்பார்கள். எதுவாக இருந்தாலும் நாங்களே நேரிடையாக இதில் தலையிட்டால் மிக நன்றாக இருக்கும். மீதி எந்தச சொந்தக்காரர்களுக்கும் ஒன்றும் தெரியக்கூடாது. நினைத்துக் கொண்டிருக்கும் போதே பெரியப்பா வந்தார். அந்த புக்குக்கு சொல்லி வச்சிருக்கேன். பாக்கலாம்'' என்றார். ''வா. டிராப் பண்றேன்.'' என்றவரின் கண்களிலும், காவ்யாவின் கண்களிலும் பட்டது அந்தக் காட்சி. அக்கா கருணா ஒருவனைக் கட்டிப் பிடித்தவாறே மோட்டர் பைக்கில் செல்கிறாள். பக்கத்தில், எதிரில் யார் வருகிறார்கள் என்று கூட பார்க்காமல் அப்படி ஒரு நெருக்கம்.

## 6

தன் பெரியப்பா பார்த்திருப்பாரோ. என்ன நினைத்துக் கொள்வாரோ? அம்மாவிற்கு பெண்ணை வளர்க்கத் தெரியலை என்ற ஒரு பாட்டு கட்டாயம் உண்டு. பெரியப்பா, பெரியம்மாக்கள்



போட்டி போட்டுக் கொண்டு அம்மாவை குறை சொல்ல ஆரம்பிப்பார்கள். பாவம் அம்மா. அம்மா மேலே என்ன தவறு இருக்க முடியும். மழை கொட்டுகிறது. சேற்றில் விழுந்தால் அசுத்த தண்ணீராக மாறி விடுகிறது. அதே ஏரியில் தேக்கி வைத்த மழை நீரைக் குளிக்க, துணி துவைக்க, சற்று சுத்தம் பண்ணி ஏன் குடிக்கக் கூட உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஒரே மழைநீர்தான். சேறாகிப் போனதில் மழைநீரின் தவறு என்ன இருக்க முடியும்? பாவம் அம்மா! அவள் இன்னும் கஷ்டப்பட வேண்டியது பாக்கி இருக்கிறதோ என்னவோ? 'மண்ணின் மதகாக' அம்மா - தானாய்த் திறப்பதில்லை. இருந்தாலும் அந்த ஊற்றுக் கண்ணுள்ள கிணறு எத்தனையோ இயற்கை இடர்பாடுகளுக்கிடையே இன்னும் நீர் கொடுக்கிறது!

''ஏம்மா கருணா தானே அது?'' பெரியப்பா கேட்க பரபரக்கிறாள். பார்த்துவிட்டார்.

''இல்லை பெரியப்பா. கருணா இல்லை அது?'' நிதானமாக திடமாகக் கூறியதும் அவரே சற்று குழம்பி நின்றார்.

''கருணா இல்லையா?''

''இல்லை பெரியப்பா. இப்பதான் அவளை காலேஜ்லே டிராப் பண்ணிட்டு வரேன். இன்னிக்கு ஈவினிங் ஏதோ ஸ்பெஷல் கிளாஸ்ன்னாளே. இதே உடுப்புல அவள மாதிரி யாராவது இருக்கலாம். கிட்டே போய் பாத்தா தானே தெரியும். சரி பெரியப்பா நான் கெளம்பறேன். வண்டி இருக்கே.'' என்றவாறு வண்டியைக் கிளப்பிக் கொண்டு வருகிறாள். இனிமேலும் அம்மாவிடம் மூடி மறைப்பது தவறு. முன்னால் அமர்ந்திருந்தவன் தன்னோடு பேசினானே. அந்தப் பையனா? தெரியலையே. இவளை மட்டும்தான் பார்த்தோம். முன்னால் அமர்ந்திருந்தவன் மூஞ்சியே தெரியலையே வீட்டிற்கு சென்றபோது பாட்டி வந்திருந்தாள். அம்மாவைப் பெற்றவள்.

"என்ன காவ்யா? சீக்கிரம் வந்துட்டே?"

"வழக்கமா இருக்கற கிளாஸ் எல்லாம் கேன்சல்ட். அதான்" லேசாக புன்னகைத்தவாறே "பாட்டி எப்படி இருக்கீங்க?" என்கிறாள்.

"வாம்மா கண்ணு. சரியா சாப்பிடறதே இல்லையா? இளைச்சிட்டே" அத்தனை பரபரப்பிலும், சங்கடத்திலும் காவ்யாவிற்கு சிரிப்புதான் வந்தது. பாட்டியால் சமையலைப் பற்றி பேசாமல் இருக்க முடியாது. ஐன்ஸ்டின் தியரியைப் பற்றி பேசினாலும், சமையலில் கொண்டு வந்து முடித்து விடுவாள். இத்தனை நேரம் சிக்கலில் ஆழ்ந்த மனது லேசானது. "ஒரு பத்து நாள் எங்க வீட்டுக்கு வா. நல்ல கொழுக்கட்டை மாதிரி வீங்க வச்சு அனுப்பிடறேன்."

சிரிப்பு போய் பெருமூச்சு தான் வந்தது. காட்ட வேண்டிய நேரத்தில் எல்லாம் ஆதரவே கிடையாது. எப்போது தேவை இல்லையோ, அப்போது வண்டி வண்டியான ஆதரவு. அம்மாவை அனுப்பிவிட்டு எத்தனை வருடங்கள் கவலைப்படாமல் இருந்திருக்கின்றனர். கிட்டதட்ட இரண்டு வருடங்கள் கழித்து ஏதோ வேலையாய் பெண்ணை பார்க்கப் போன தாத்தா பெண் வீட்டில் போய் தங்கினார்,

அங்கே போனபின்தான், பொண்ணு இரண்டு வருடத்திற்கு முன்பு ஓடி விட்டாள் என்ற உண்மை தெரிந்தது.

"ஐயோ இப்படின்னு தெரிஞ்சா இங்கயே வச்சிருந்திருக் கலாமே. பின் பெண் வந்த செய்தியை சம்பந்தி மூலம் தெரிந்து கொண்டவர்கள் போக வர என்று போய் வந்து கொண்டு இருக்கலானார்கள்.



"ஏண்டி கருணா வரலே. அவளை பாக்கத்தான் வந்தேன். நேற்றே ரொம்ப அமக்களம் பண்ணிட்டாளே. இத பாரு இன்னும் நாளைத் தள்ளி போடாதே. கருணாவிற்கு ஒரு நல்ல மாப்பிள்ளையா முடிச்சிடு.

"அவ படிக்கறாளே."

"என்ன படிக்கறா? எம்.எஸ்ஸி கடைசி வருஷம்தானே. முடிச்சிடு. அதான் நல்லது. கல்யாணத்தை ஒரு செமிஸ்டர் முடிஞ்சு வச்சுகிட்டா அடுத்த செமிஸ்டர் அப்படியே வந்து எழுதிட்டு போகட்டுமே. என்னவோ நல்ல விதமா இரண்டு பிள்ளைகளையும் ஆளாக்கி படிக்க வச்சிருக்கே. ஒம் கடமையும் முடிச்சிடலாமில்லே. ஒங்க மாமியார் வீட்டிலே ஒன்னைக் காணோம்னவுடனே எப்படி பதறிப் போயிட்டேன் தெரியுமா?"

இந்தக் கதையை ஒரு முன்னூறு தடவையாவது சொல்லியிருக்கிறார். இருந்தாலும் மீண்டும் புதுசு போல சொல்வாள். நீ திரும்பி வந்த போது ஒரு பொண்ணு எம்.எஸ்ஸி இன்னொருத்தி எம்.சி.ஏ எல்லாத்திலேயேயும் கோல்ட் மெடல் வாங்கியிருக்கிறா அப்படீன்ன போது எத்தனை பெருமையாக இருந்தது தெரியுமா? எப்படி எம் பொண்ணு சாதிச்சான்னு மலைச்சு போயிருக்கேன், காலா காலத்திலே கல்யாணம் கட்டி வச்சா ஒம் கடமை முழுவதுமா முடிஞ்சிருமில்லே."

"சரிம்மா பாரு. நல்ல ஜாதகமா பாரு. கருணா ஜாதகத்தைத் தான் ஒங்கிட்டே ஏற்கனவே கொடுத்திருக்கேனே. நம்ம நெல்லு கடை ஜோஸியர்கிட்டே நேத்தே கொடுத்திட்டு வந்திட்டேன். முக்கால்வாசி, நாளைக்கு ஜாதகம் எடுத்துகிட்டு வருவார்னு நெனைக்கறேன். வந்து பொண்ணை பாத்துட்டு போனாங்கன்னா முடிச்சிடலாம்." "அம்மா பாக்கறது பெரிய

இடமா பாக்காதே. அகலக்கால் வைக்க முடியாது. நமக்கு ஒத்த இடமா பாரு."

"கூட கொறைஞ்சா என்ன பாத்துப் போட்டுக்கலாம்."

"என்னால எத்தனை செய்ய முடியும்னு சொல்லி இருக்கேன். அதுக்கு மேலே என்னால ஒரு சின்ன பவுன் கூட போட முடியாது. இவளுக்கு முடிச்சதும் அவளும் பின்னாடியே வந்திடுவா. "அம்மா கறாராகப் பேசி அவள் அம்மாவை அனுப்பிவிட்டு உள்ளே வரும்போது, காவ்யா விஷயத்தை மெதுவாக போட்டு உடைத்தாள்.

"நெஜமாவா சொல்றே. இது அசட்டுப் பொண்ணு. போகலாம்னு நினைச்சேன். ஆனா நிச்சயமா போகும்னு தோணலை."

"அதெல்லாம் விடு. இப்ப என்ன செய்யறது?"

"அக்கா பழகறவன் நல்லவனா, கெட்டவனா ஒண்ணுமே தெரியலை. தான் காலையில் அக்காவின் கல்லூரிக்குச் சென்றதெல்லாம் ஒப்புவித்தாள்.

"நீ ஏன் அங்கெல்லாம் போனே. இத என் காதுல போட்டிருந்தா செய்ய வேண்டியதை செய்திருப்பேன் இல்லையா? நீ சீக்கிரம் என்னோட கிளம்பு. இந்த டிடக்டிவ் ஏஜன்ஸியை பார்த்து விட்டு வருவோம். நம்ப பழைய வீட்டுக்கார பாட்டி இருந்தாங்களே அவங்களுக்கு தூரத்து சொந்தம்தான். ரொம்ப நல்லா தெரியும். நம்ப நிலமையும் அவருக்கு நல்லா தெரியும்" போய் பாத்துட்டு வருவோம்.

பேசினதில் சற்று நிம்மதி அடைந்தாள். இன்னும் இரு தினங்களில் எல்லாவற்றையும் சொல்வதாகச் சொன்னவர்.



"இதோ பாருங்க. கவலையே படாதீங்க. அந்த பாட்டிம்மா புள்ளை மாதிரி எனக்கு உதவி பண்ணி யிருக்காங்க. அவங்களுக்கு உதவி பண்ணவங்களை நான் மறக்க மாட்டேன். எல்லாத்தையும் நான் பாத்துக்கறேன். கவலைப்படாதீங்க. பையன் மோசம்னா இரண்டு தட்டு தட்டி சரி பண்ணுவோம். நீங்க கவலைப்படாம போங்க. என்னதான் டிடக்டிவ் ஜென்ஸியில் தைரியம் கொடுத்தாலும் பெண்ணின் செயல் அத்தனை அவமானப்படுத்தியது.

அவங்கப்பாவைப் போல இந்தப் பெண்களுக்கே. வாழ்க்கையிலே எத்தனை கஷ்டப்பட்டு இருக்கோம். சாதாரண லெவல் கூட வர முடியாதபடி வாழ்க்கை எத்தனை போராட்டங்களைத் தாண்டி வந்திருக்கிறது. சரியான ஆண்பிள்ளை கிடைக்கவில்லை என்றால் என்னை விடக் கேவலமாக அல்லவா ஆகிவிடுவாள். திருமணத்தோடவா எல்லாம் முடிந்து விடுகிறது. தவிரவும் படிப்பை இன்னும் முடிக்கவில்லை. படிப்பை முடித்து ஒரு வேலை என்பது கட்டாயம் என்று இருப்பது இந்தக் காலம். பெண்களுக்கு வேலை கையில் இருந்தே ஆக வேண்டும். சார்ந்து வாழும் காலம் எல்லாம் எங்கள் தலைமுறையோடு ஒழிந்துவிட்டது. ஒரு எட்டணாவுக்கும், புருஷன் கையை எதிர்பார்த்துக் கொண்டு சுயமரியாதை கூட அற்றுப் போய் தவித்தது அந்தக் காலம்.

இந்தக் காலம், பெண்கள் நூற்றாண்டு கொண்டாடிய காலம். பெண்ணை மதிக்கப்பட வேண்டுமானாலும் நாலு காசு கையில் இருந்தால்தான் சாத்தியம். தான் சார்ந்து இருந்ததனால் தானே பிறந்த வீடு, புகுந்த வீடு என்று மாறி மாறி அடித்து துரத்தினார்கள். இன்று என்பலம் நிரூபிக்கப்பட்டது.

மிதித்தவர்கள் கூட மதிக்கிறார்கள்.

பெண்ணுக்கு இதெல்லாம் சொல்ல வேண்டும். முதலில் அவள் தன் காலில் நிற்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அவள் யாரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளட்டும். ஆனால் அவன் நல்லவனாக இருப்பது ரொம்ப, ரொம்ப அவசியம். மனைவி என்று தலையில்தூக்கி வைத்துக் கொண்டு ஆட வேண்டுமென்று அவள் சொல்லவில்லை. அவளை சக மனுஷியாக நினைத்தாலே போதும். வாழ்க்கைக்கு அன்பு மட்டும் தேவை. பெண்ணிடம் கட்டாயம் சொல்ல வேண்டும். தன் எண்ணங்களை காவ்யாவிடம் சொல்கிறாள்.

"இத பாரும்மா. வாழ்க்கைங்கறது விளையாட்டு அல்ல. மொதல்லே அந்த அனுபவம் புதிதுதான். இனிக்கத்தான் செய்யும். ஆனா கடைசி வரைக்கும் அப்படியே இருந்தா பரவாயில்லை. என்னைப் போல் நாலு வருடத்தில் முடிகிற கதையாக ஆகிவிடக் கூடாது. மொதல்லே பிடிப்பு. அப்புறம் காலை ஊன்றிக் கொள்ள ஒரு நல்ல வேலை. அதுக்கப்புறம்தான் கல்யாணம், கார்த்தி எல்லாம். உங்க காலத்துல எல்லாம் சுயமா சம்பாதிக்காத பெண்களே இருக்க மாட்டாங்க. அதுனால சுய சம்பாத்தியம் ரொம்ப முக்கியம். சுய கௌரவம் வேணும்னா சுய சம்பாத்தியம் ரொம்ப அவசியம். பொண்ணுங்கறவ மொதல்ல தகப்பனைச் சார்ந்து இருக்கணும். அப்புறம் புருஷனை, அப்புறம் புள்ளைங்கன்னு சார்ந்து இருப்பாங்க. அதுதான் சரின்னு அந்தக் காலத்துலே எழுதி வச்சாங்க. இந்தக் காலம் யாரையும் யாரும் சார்ந்திருக்க முடியாது. பெண்ணுக்கு சுய சம்பாத்தியம் இல்லைன்னே பெற்ற தந்தை கூட அவளுக்கு செலவு பண்ண யோசிப்பான். காலணா



காக இல்லேன்னா தாய் கூட பிள்ளைகிட்டே ஒண்ட முடியாது. காலணாவிற்கு பிரயோசனம் இல்லாத மனைவிக்கு புருஷன்கிட்டே மரியாதை இருக்கறதில்லே. ஒரு பெண் ஒரு எட்டணாவுக்கும், நாலணாவுக்கும் கையேந்தி நிற்க முடியாது. நின்னு அசிங்கப்படறது பாவம்தான். ஒனக்கு முக்கியம்ங்கறது ஓம் புருஷனுக்கு முக்கியமில்லாமத் தோணலாம். அதுனால சுய சம்பாத்தியம் ரொம்ப ரொம்ப முக்கியம்.

அவளின் வார்த்தைகளில் உண்மை இருந்தது. அடிபட்ட வேதனை தெரிந்தது. தான் அனுபவித்த கஷ்டம் எல்லாம் பெரியவள் அனுபவிக்கக் கூடாது என்று நினைக்கிறாள். இத்தனைக்கும் காரணமான கருணாவை இழுத்து ஒன்றுவிட வேண்டும் போல் தோன்றியது. அன்று கருணாவிடம் எப்படிப் பேச வேண்டும், என்ன பேச வேண்டும் என்று யோசித்து, தாய் மகள் ரெண்டு பேரும் காத்துக் கிடந்தார்கள். சரியாக எட்டரை மணிக்கு ஸ்கூட்டர் ஒன்று வர, அதில் மாலையும், கழுத்துமாக கணவனோடு உள்ளே நுழைந்தாள் கருணா. பெண்ணுக்கு உபதேசங்கள் செய்து அவளை மாற்றாமல் விட மாட்டேன் என்று கங்கணம் கட்டிய கமலம் செயலிழந்து நின்றாள்.

இந்தப் பெண் ஒருவரை நேசிக்கிறேன் என்றாவது சொல்லி இருக்கலாம் அல்லவா! எதுவுமே சொல்லவில்லையே. இது என்ன அநியாயம். தான் பாசத்தைக் கொட்டி கொட்டி தானே வளர்த்தோம். எதை விதைக்கிறோமோ, அதை அறுவடை செய்வார்கள் என்பார்களே. தான் அன்புச் செடியைத் தானே பயிரிட்டு வளர்த்தோம். இந்த விஷவிருட்சம் எங்கிருந்து முளைத்தது. ஒரு தவறு நடந்து விட்டால் போதும் கிழி கிழி என்று கிழிக்கத் தயாராக இருக்கும் சுற்றங்கள். நம்ம பலவீனங்களை மற்றவர் அறிந்தால் துக்கப்படுவார்களோ

இல்லியோ, கண்டிப்பாக இளக்காரத்திற்கு இடம் உண்டு. எத்தனை முறை படித்து படித்து உபதேசம் செய்திருக்கிறேன். இந்தக் கடைசி வருடப் படிப்பை முடித்து விட்டுத் திருமணம் புரிந்திருக்கலாகாது. தான் பணம், பணம் என்று நாயாய் பேயாய் அலைந்ததில் குழந்தைகள் வயிற்றுக்கு மட்டும் தீனி போட்டு மனதை அப்படியே வளர்க்காமல் விட்டு விட்டேனா? அதுதான் பெண் தடம் புரண்டு போனளா? எல்லாமே முடிந்துவிட்டது. இனிமேல் நடந்ததை நினைத்து வருத்தப்படுவதும் வேதனைப்படுவதும் முட்டாள்தனம் பெண்ணையே வெறித்துப் பார்க்கிறாள்.

முதல் பெண் அம்மாவை சற்று அலட்சியமாகப் பார்த்தாள்.

''அம்மா மீட் மை ஹஸ்பண்ட்'' என்கிறாள்.

''யார் இவர்? என்னவாக இருக்கிறார்?''

''பிரபல தொழிலதிபர் ராமையாவோட ஒன்லி ஸன்.'' சொல்லும் போதே கண்கள் மிதப்பில் இருந்தது. அவளுடைய எண்ணம் நிறைவேறியது. பெரிய பணக்காரனைத் திருமணம் புரிய வேண்டும் என்ற ஆசை நிறைவேறிவிட்டது. இந்தப் பையன் நல்லவனா? நம்பி மணம் புரியலாமா? இவன் அவளைக் காப்பாற்றுவானா? 'இந்த எண்ணங்களோடு மனக்கலக்கத்தோடு அவளையே பார்க்க, ''வாங்க அருண்'' என்று கொஞ்சலாக கணவனைக் கூப்பிடுகிறாள்.

''ஏம்மா வீட்டுக்கு வந்தவங்களுக்கு ஒண்ணும் தரமாட்டியா?'' சட்டென்று காவ்யா உள்ளே போய் ரஸ்னாவை கலக்கிக் கொண்டு வந்தாள்.



''இது தான் கெடச்சுதா ஒனக்கு, அவர் யாருன்னு நெனச்சே. போய் ப்ரஷ்ஷா ப்ரூட் வாங்கி ஜூஸ் போட்டு கிட்டுவா,'' அவள் அடித் தொண்டையில் மிரட்ட,

''இல்லே. பரவாயில்லே'' என்கிறான் புது மாப்பிள்ளை. பெண்ணின் அதட்டல், மிரட்டல் எல்லாவற்றையும் பார்க்கிறான். கமலம் அவன் நல்லவனாக இருந்தால் நீ என்ன வேணா செய்யலாம். ஆனா அவன் நல்லவனா இல்லையா தெரியலையே. மனம் கூவிக் கூப்பாடு போட்டது.

''வாங்க மாப்பிள்ளை'' கமலம் மெதுவாகச் சொன்னாள்.

''மொதல்ல சாமிகிட்டே விழுந்து கும்பிடுங்க'' சாமி அறையில் விளக்கேற்றி இருவரையும் கும்பிட வைத்து திருநீறு பூசுகிறாள். பெண் அம்மாவிடம் வந்து அடித் தொண்டையில் கேட்டாள்.

''என்னமோ சொன்னியே. என் ஆசைப்படி என்னை விட பணக்காரனா, எனக்கு எதுவேனா செய்யக் கூடியவனா புடிச்சேன் பாத்தியா. குரலில் பெருமிதம். கமலம் பதில்பேசவில்லை.

''ஏன்டி கல்யாணத்தை ரிஜிஸ்தர் பண்ணியா?''

''ரிஜிஸ்தரா? எதுக்கு?''

''இந்த காலத்துலே கட்டாயமா ரிஜிஸ்தர் பண்ணித்தான் ஆகணும்.

''அம்மா ஒளராதே. கோவில்ல முறைப்படி கல்யாணம் நடந்தது.''

''பிள்ளை வீட்டுக்காரங்கள்லாம் வந்தாங்களா?''

''அவங்க எப்படி வருவாங்க?''

''இவர், வேறு ஜாதி.''

''கோவில்லே கல்யாணத்துக்கு ரசீது கொடுத்தாங்களா?''

''நீ வேற. கோவில்ல கல்யாணம் கட்டறதுக்கே ஆயிரம் கண்டிஷன்ஸ்.'' நல்ல வேளை வேற ஒருத்தர்கிட்டே துட்டு கொடுத்து மாலை மாத்தி இதோ சக்கரைப் பொங்கல் சாமிக்கு படைச்சு கொணந்திருக்கேன் பாரு.'' தூக்கைத் தருகிறாள்.

''அப்ப இதுக்கு சாட்சி இல்லையா?''

''எதுக்கு? அதான் கடவுளுக்கு நேரே கல்யாணம் கட்டியாச்சு இல்லே. இனிமே என்ன சாட்சி வேணும்?''

''வேணும். எல்லாத்துக்குமே வேணும். இப்ப எல்லாம் அம்மா அப்பா பாத்து கல்யாணம் பண்ணா கூட ரிஜிஸ்தர் பண்ணிக்கராங்க.''

''அம்மா பேசாம இருக்கியா? என் வாழ்க்கை எனக்குத் தெரியும். நீ இதுலே தலை இடாதே. இந்தக் காலத்தில் தன் வாரிசுகள் தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழனாகக் கூட கொள்ள முடியாது. எந்தத் தலையீடும் அவர்கள் விரும்புவதில்லை. எல்லாமே அவர்கள் விருப்பம்தான். அம்மா அப்பா என்பவர்கள் ஒரு எல்லையில் நிற்க வேண்டும். அதைத்தான் இந்தக் கால இளசுகள் விரும்புகின்றன. ஆழ்ந்த பெருமூச்சு ஒன்று அடிவயிற்றினின்று எழும்ப கமலம் சற்றே மௌனம் சாதிக்கிறாள்.

''சாரி டார்லிங். இந்த இடம் உங்களுக்கு வசதி இருக்காது. நீங்க வசதியா வாழ்ந்தவங்க. அம்மா அந்த பேனைப் போடு. ப்ளீஸ் உக்காருங்க'' என்று கணவனை உபசரித்தாள் கருணா.



அம்மாவைப் பார்த்ததுமே அதட்டுகிறாள். ''அம்மா என்ன இப்படி மசமசன்னு நிக்கறே. போய் நல்ல விருந்துக்கு ஏற்பாடு பண்ணு.''

கமலம் மகளையே பார்க்க ''ஏம்மா ஒத்த பைசா செலவில்லாம மாப்பிள்ளை கெடச்சிருக்குன்னு சந்தோஷம் வேண்டாம்.''

பெண் சொல்ல, சொல்ல ஒரு நிமிடம் மௌனமாக நின்றவள் மறுநிமிடம் எல்லாவற்றையும் ஏற்பாடு செய்கிறாள். காவ்யாவும் எல்லாவற்றையும் கூட மாட செய்ய, ஒரு மணி நேரத்தில் ஒரு நல்ல விருந்து ஏற்பாடு ஆயிற்று. கதம்ப சாதம், அவியல், உருளை, வெங்காயம் கலந்த பொரியல், அப்பளம் வெங்காயம், தக்காளி, கேரட் சீவிப் போட்டு பச்சடி. பூரியும் குருமாவும், சேமியா பாயசம் என்று வெளுத்துக் கட்டியிருந்தார்கள்.

மாப்பிள்ளையையும், பெண்ணையும் உட்கார வைத்து பால், பழம் கொடுத்து பின் விருந்தை கொடுத்த போது மாப்பிள்ளை வெகுவாக ரசித்துச் சாப்பிட்டான்.

''ரொம்ப தேங்ஸ் ஆன்டி'' என்றான். மாப்பிள்ளையைப் பார்த்தால் நல்லவன் போல் தான் தோன்றியது. இருந்தாலும் இரண்டு நாட்கள் தள்ளி ஒரு நாளை குறித்து விட்டு வந்தான்.

பின் ''கருணா நான் சொல்றதைக் கேளு. நாளு நட்சத்திரம் பாக்காம செஞ்சிருக்க கூடாதாம். நாளைக்கு ஸர்வ முகூர்த்த நாளாம். நாளைக்குப் போய் ரிஜிஸ்தர் ஆபிசுலே முறைப்படி பண்ணிகிட்டு மாலையை மாத்திகிட்டு வந்திடுவோம். உங்க ரெண்டு பேருக்கும் மோதிரம், உனக்கு தாலி, தாலிச்சரடு எல்லாத்துக்கும் ஆர்டர் பண்ணிட்டு வந்துட்டேன். ரிஜிஸ்தர்

மேரேஜ் ஆனவுடனே அதை உன் கழுத்திலே கட்டட்டும். மோதிரத்தை ரெண்டு பேரும் மாத்திக்கங்க. நான் பெரியம்மா பெரியப்பாக்களுக்கு. தாத்தா, பாட்டிகளுக்கு சொல்லி விட்டுடறேன் சரியா?'' என்றாள்.

பெண் ஆனந்தத்தில் இருந்ததால் 'ம்' என்று மிதப்பில் பதில் தந்தது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. பெண் சம்மதம் தந்தபின் தன் அம்மாவிற்கு போன் போட்டு பேசினாள், விஷயத்தை சற்று மாற்றி சொன்னாள்.

''கருணாவிற்கு ஒரு பையன் பாத்திருப்பதாகவும், நாளைக்கு ரிஜிஸ்தர் திருமணம் என்று கூறினாள். ரிசப்ஷன் ஏதாவது நன்றாக கொடுத்துக் கொள்ளலாம் என்று கூறினாள்.

''மருமகப் பிள்ளை என்ன செய்யறாரு? என்ன சம்பளம்?'' அம்மா கேட்ட எந்த கேள்விக்கும் பதில் இல்லை. ''பிஸினஸ்'' என்று மட்டும் சுருக்கமாய் சொன்னாள். 'நல்ல பிள்ளை' என்றாள். அடுத்து மாமியாரிடமும் போன் செய்து, ஒரகத்திகளுக்கு போன் செய்து 'நாளை திருமணம்' என்றும் வரும்படியும் சொன்னாள்.

பெண் திருமணம் புரிந்து வந்ததுமே இந்தப் பிரச்சனையை அப்படியே விட முடியாது. இதைச் சரிப்படுத்தி, முறைப்படுத்தி பிறகுதான் எல்லாம். முடிவு செய்து கொண்டவள், மாப்பிள்ளைக்கு இருந்த பெட்ரூமில் பரபரவென்று படுக்கையை போட்டு, பேனைச் சுழலவிட்டு, ''தூங்க படுங்க மாப்பிள்ளை'' என்றாள். அப்புறம் பெண்ணிடம் பேசினாள்.

''கருணா கல்யாணம்தான் ஒரு வார்த்தை கூட என்கிட்டே சொல்லாம பண்ணிட்டே. மீதி சடங்கு எல்லாம் சம்பிரதாயப்



படித்தான் நடக்கனும். உன்னை விட வயதுல பெரியவ. அதுக்காவது மரியாதை தரலாம்னு நினைக்கறேன்.''

''சொல்லக் கூடாதுன்னு ஒன்னும் இல்லே. நான் சொல்லாததுக்கு நீங்க தான் காரணம். ஒரு சுடிதார் வந்ததுக்கே எத்தனை சத்தம் போட்டீங்க? கல்யாணம்னா ஒத்துகிடுவீங்களா? அதான்...'' என்றாள்.

அவள் சொல்வதும் ஞாயம்தான். கட்டாயம் ஒத்துக் கொண்டு இருக்க மாட்டோம். படிப்பதற்கு முன் என்ன கல்யாணம்னு தடுத்து நிறுத்தி இருப்போம்.

''சரி இப்பதான் கல்யாணம் ஆச்சு. இல்லே. இனிமே என் பேச்சை கேக்கலாமில்லே. ஒரு நல்ல நாள் பார்த்து, நானே எல்லா ஏற்பாடும் செய்யறேன். பெண் அப்போதுக்கு தலையை ஆட்டினாள். அன்று அம்மாவுடன் ஹாலுக்குள் படுத்துக் கொண்டாள்.

பிறகு மறுநாள் தான் நாள் பார்க்க என்று ஜோஸியர் வீட்டுக்குச் சென்றாள் கமலம். எப்படியாவது பெண்ணுக்கு ரிஜிஸ்தர் திருமணம் செய்து வைத்திட வேண்டும். அதற்கான வழியையும் மனம் ஆராய்ந்தது. ஜோஸியர் வீட்டிற்கு சென்று வந்தபின் நாளைக் குறித்து, பெண்ணிடம்பேசி, நெருங்கிய உறவினரிடம் சொல்லி ''இதோ, நாளை முடிந்து விட்டால் என் கடமை முடிந்துவிடும்.'' ஆனால் நாம் ஒன்று நினைக்க, கடவுள் வேறொன்றை அல்லவா நினைக்கிறார்.

அடுத்தநாள் காலை எழுந்ததுமே மகள் முரண்டு பிடித்தாள்.

''இத பாரும்மா எம் புருஷனுக்கு எதுவும் புடிக்கலே. 'ஏற்கனவே கல்யாணம் ஆயிடுச்சு. இன்னும் எத்தனை தடவை

கல்யாணம்னு கேக்கறாரு.' நாங்க இன்னிக்கு ஹனிமூனுக்கு ஊட்டிக்குப் போகனும். ஏற்கனவே ப்ளைட்லே டிக்கெட் புக் பண்ணியாச்சு. என்னடி இதுன்னு திட்டறாரு. நாங்க கிளம்பறோம். ஒரு வாரம் கழிச்சுதான் வருவோம்.

''என்னடி இது?'' கமலம் பதறிப் போய் கேட்கிறாள்.

''எம்மா நீயே சொல்லு மொத நானேவா புருஷனுக்கு எதிரா நடந்துப்பாங்க.

''நான் மாப்பிள்ளையிடம் பேசறேன்.''

''வேண்டாம். ஒங்க அம்மாவை வச்சு என்ன மாத்த பாக்காதேன்னாரு. என்ன செய்யறது சொல்லு. நாங்க இப்பவே கெளம்பறோம். கமலம் பார்க்க, பார்க்க கிளம்பிப் போனாள். இந்த பெண்ணை நம்பிக் கொண்டு பார்ப்பவர்கள் எல்லோருக்கும் சொல்லியாகி விட்டது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அத்தனை பேரும் வந்து நிற்பார்களே. என்ன சொல்வது? புகுந்த வீடு தன்னைப் பார்த்து கை கொட்டி சிரிக்குமே. பிறந்த வீட்டில் அம்மா ஒருத்தியே போதும். பேசிப் பேசி ஊர் சிரிக்கச் செய்து விடுவாள். இந்தப் பொண்ணு என்ன இப்படிச் செய்கிறாள்? என்னைப் பழிவாங்க ஏற்பாடா? ஏன் இந்தப் பெண் இப்படி நடந்து கொள்கிறாள். மனது கிடந்து தவித்தது. தனக்கு மட்டும் ஏன் சோதனைக்கு மேல்சோதனை. தான் என்ன அத்தனை பாவமா செய்தோம். இல்லை கடவுளுக்குதான் விளையாட யாருமே கிடைக்க வில்லையா?

விண்டு போன மனதை அடக்க, அடக்க துக்கம் தாங்காது போக சோர்ந்து போய் அழலானாள். அக்காவின் திருமணத்திற்காக லீவு போட்டிருந்த காவ்யா விஷயம் அறிந்ததும் அசந்து போனாள்.

''என்னம்மா அக்காவுக்கா இத்தனை தைரியம்?''



''இல்லைடி. எனக்குதான் கஷ்ட காலம். அடிபட்டா புரிஞ்சுப்பான்னு சொன்னியே அடி அவளுக்குத் தெரியலை. வலியை நாம அனுபவிக்கிறோம்.'' மறுபடியும் திரும்பி அழ, ''அம்மா அழாதே'' காவ்யா தேற்ற, ''ஒங்க பாட்டி, பெரியம்மா எல்லாம் கேலி பேசும்படி செய்துட்டாளே. எங்க அம்மா, அப்பாவுக்குத் தெரிஞ்சா விஷயம் இன்னும் விபரீதமாகிடுமே. இப்படி மானத்தைக் குழி தோண்டிப் புதைக்க இவளுக்கு யார் சொல்லித் தந்தது? நல்லதைச் சொல்லிக் கொடுத்து நானே வளர்த்தேன். நல்லது செஞ்சாக் கூட கெட்டதுதான் நடக்குமா?''''அம்மா அழாதே. தைரியமா இருக்கற நீயே கலங்கலாமா? மொதல்ல அந்த ரெண்டு வீட்டுக்கும் போன் பண்ணி வரவேண்டாம்னு சொல்லு.''

''எப்படிடீ?''

''நான் சொல்றேன். நீ பேசாம இரு.''

இரு பாட்டிகளிடம் போனில் 'கல்யாணம் இன்று இல்லை' இன்னும் ஒரு வாரம் கழித்து வைத்திருப்பதாகவும் சொன்னாள். மற்ற உறவினர்களிடம் சொல்லும்படி திரும்பும் போது வாசலில் காட்டு ஆள் போல கிரிதா, மீசை, கதர் சட்டை, கதர் வேட்டி அணிந்து அசத்தலாக வந்து ''யாருடி ஊட்லே'' என்று கேட்ட போது இருவரும் அதிர்ந்து போயினர்.

## 7

''**சா**ர் யார் நீங்க?'' ''யாரா?'' அம்மாவும், மகளும் வேலை காட்ட நீங்களா? ஒண்ணும் தெரியாத பணக்கார பையனை மயக்கி, கடத்திகிட்டு வந்து வச்சிருக்கீங்கல்ல. எங்க அவன்?

'மருமகப் பிள்ளையின் தந்தை போல் இருக்கிறது. நல்லவேளை, அவர்கள் யாரும் அங்கே இல்லை — இருந்திருந்தால் வேறு கதையாக ஆகி இருக்கும். வீடும் சிரித்துப் போயிருக்கும்.

"சார் இங்க யாரும் இல்லை. உங்க பையன் தான் படிக்கற பொண்ணை ஆசை காட்டி மோசம் செய்து கல்யாணம் கட்டிகிட்டான். எங்க யாருக்குமே இதுல இஷ்டம் இல்லே. அதனால அவங்க வீட்டை விட்டு போயாச்சு. இப்ப இங்க யாரும் இல்லே." அழுத்தம் திருத்தமாக காவ்யா பேசப், பேச சில நிமிடங்கள் அவளையே பார்த்தவன்.

"பொம்பளைப் பிள்ளைங்களா இருக்கீங்களேன்னு விட்டுட்டு போறேன். அந்தப் பய வந்தா உடனே சொல்லி அனுப்பு. ஏதோ ஒரு போன் நம்பரை அவர்களிடம் தந்து விட்டு அவன் நகர கமலமும், காவ்யாவும் சோர்ந்து போய் அமர்ந்தார்கள்.

கருணாவால் இன்னும் என்னென்ன அவமானப் படணுமோ. வாழ்க்கையில் கஷ்டம் வரலாம். ஆனால் கஷ்டமேவா வாழ்க்கையாக இருக்கும். அன்று மதியத்திற்குள் 'என்ன ஆயிற்று?' என்று கேட்டு அவளின் ஓரகத்திகள், மூத்தார்கள், மாமியார் என்று ஒரே கூட்டம். அவர்களிடம் பொய்யையும் கூற முடியவில்லை, உண்மையையும் போட்டு உடைக்க முடியவில்லை. ஆனால் எத்தனை நேரம் ஒன்றும் நடக்காதது போல் வேஷம் போடுவது? கடைசியில் காவ்யாவும், கமலமும் உண்மையைக் கூறி விட அதிர்ந்து போய் நிற்கிறார்கள்.

"இத பாருங்க. கருணா சின்னப் பொண்ணு. அவளுக்கு ஒண்ணும் தெரியாது. ஊரிலேந்து வரட்டும். எங்களுக்குப்



போன் பண்ணுங்க. எல்லோரும் பேசி ஒரு ரிஸப்ஷன் வச்சிடுவோம். மாலை மாத்திகிட்டு, மோதிரத்தை மாத்திகிட சொல்வோம். தாலி, செயின் எல்லாம் செய்ய ஆர்டர் கொடுத்திருக்கே இல்லே. அதை போட்டுவிட சொல்வோம். ஒரு சின்ன டின்னர் வச்சு எல்லாத்தையும் முடிப்போம். வந்தவுடனே போன் பண்ணுங்க."

அவர்கள் சென்றதும் சொல்லி வைத்தாற் போல் அம்மா, அப்பா, தம்பி, தங்கைகள், அக்காள் எல்லோரும் வந்திருந்தனர். கமலம் இடிந்து போய் நடந்ததைக் கூற அதிர்ந்து போனார்கள்.

"ஏன்டி இனிமேலாவது விஷயத்தை மறைக்காதே. நாங்க பெரியவங்க வந்தா ஒரு வழி செய்யாமயா போவோம். மொதல்லே அவ வந்தவுடனே சொல்லி அனுப்பு. ஒரு நல்ல நாள்ல முடிச்சிடுவோம். அது எப்படி டீ? ஒரு சின்ன முணுமுணுப்பு கூட இல்லாமல் வரவழைக்க அத்தனையும் செய்து 'நீ அம்மாதானே. ஒன்னோட மொதப் பொண்ணு கல்யாணம்னு எத்தனை கனவுகளை வளர்த்துகிட்டு இருப்பே. அத்தனையும் ஒடைச்ச பின்னும் எப்படி இத்தனை சாந்தமா இருக்க முடியுது.

மனதின் கோபங்களை யாரிடம் காட்ட முடியும் பெற்ற பெண்ணிடமா? அவள் - எதையும் தாங்கும் மண். அந்த மண்ணின் ஊற்று வாயான மதகு. தன்னிடம் தன் தந்தை நடந்து கொண்டது போல்தான் நடக்ககூடுமா? அது சாத்தியப்படுமா? பெண் ஒரு இரண்டும் கெட்டான். தானும் ஆதரவு தரவில்லை என்றால் எங்கே போவாள்? பெண் வரட்டும். அவளை ஒரு நல்ல நிலைக்கு எப்படியாவது உயர்த்திக் காட்டத்தான் வேண்டும். தான் செய்து வைத்த திருமணம் இல்லை என்று

வேறொரு பெற்றோராக இருந்தால் உதவவே மறுத்திருப் பார்கள். தன்னால் பெண்ணுக்கு உதவாமல் இருக்க முடியாது. உதவவில்லை என்றால் கஷ்டப்படப் போவது தன் பெண் தானே. அவளை விட்டு விட முடியாது. அவளுக்கு எப்பாடு பட்டாவது ஒரு நல்ல வழியைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்தால் அவளின் வாழ்க்கைத் தரம் சற்று உயர்ந்து விடும். ஆனால் கடவுள் வேறு விதமாக அல்லவா நினைத்துக் கொண்டே இருக்கிறார்.

"என்ன நடக்கும்?" சற்று பயந்தபடி நாட்கள் ஓடின. பறந்தன. சரியாக நான்கு நாட்கள் கழித்து பெண்ணும், மாப்பிள்ளையும் வந்து இறங்க ஆரத்தி சுற்றி வரவேற்றாள். குளிக்க வெந்நீர் போட்டு அவர்களுக்கு வேண்டியதை செய்து கொடுத்து சமையலை ஆரம்பித்தாள்.

அவர்கள் வந்த செய்தியை தன் பிறந்த வீட்டிற்கும், புகுந்த வீட்டிற்கும் தெரிவித்து விட வாழ்த்து சொல்லும் சாக்கில் வந்தவர்கள் சிரித்தபடி பேசினார்கள்.

"ஒரு ரிசப்ஷனை வச்சிடு" என்றார் மாமியார். சற்று உரக்க எல்லோர் காதிலும் விழும்படி சொன்னார். "நாங்க எல்லோரும் கல்யாணத்தை பாக்க வேண்டாமா? மாலை மாற்றி அந்த பவுன் தாலியை போட சொல்வேன். என்றைக்கு ஏற்பாடு பண்ணப் போகிறாய்? மாப்பிள்ளை வேண்டாம் என்று தயங்கியதும் "இல்லை தம்பி. நீங்க நினைக்கறாப்ல இல்லே. எங்க ஆசைக்கு நாங்க செய்துதான் ஆகணும். இதெல்லாம் செய்யலைன்னா ஒலகம் உங்க மாமியாரைத்தான் தப்பா பேசும். அதுமட்டுமல்ல. எங்களை எல்லாம் கூட பேசுவாங்க. பெரியவங்க செய்திருக்கக் கூடாதான்னு திட்ட மாட்டாங்களா? அதனால நீங்க ஒத்துகிட்டுதான் ஆகணும்பா. மாமியாரும்,



அம்மாவும் மாற்றி மாற்றி பேசி ஒத்துக் கொள்ள வைத்தனர். மாப்பிள்ளை இருப்புக் கொள்ளாமல் தவிப்பது தெரிந்தது. எப்படியும் அடித்துப் பேசி சம்மதிக்க வைத்த போது. அடுத்தநாளே ரொம்ப ஆடம்பரமா இருப்பது அப்பாவுக்கு தெரிஞ்சா அவ்வளவுதான். ரிஸப்ஷனை கொஞ்சம் ஸிம்பிளா நடத்துங்க. சிம்பிளா நடத்துவது என்று தீர்மானம் ஆயிற்று. "ரொம்ப பேர் வேண்டாங்க. நம்ம வரைக்கும் போதும்." மாப்பிள்ளை திரும்ப, திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருந்தார்.

அவன் சொன்னபடியே இந்தக் குடும்பம், அந்தக் குடும்பம் என்று சேர்ந்து ஒரு இருபத்து ஐந்து பேர் விழா நடத்தினர். விழாவில் மற்றவர்களின் விருப்பப்படி இருவரும் கமலம் செய்து வைத்திருந்த மோதிரத்தை மாற்றிமணமகன், மணமகளுக்கு பொன் தாலியை அணிவித்தான். மாலையை வேறு மாற்றிக் கொண்டு விருந்துக்கு ரெடியானார்கள். கமலம் பெண்ணுக்கு மெட்டியும் வாங்கி அணிவித்தாள்.

கமலத்தின் முகத்தில் லேசான நிம்மதி. ரிஜிஸ்டர் மேரேஜ் ஆகவில்லை என்றாலும் சாட்சியை வைத்து திருமணத்தை முடித்தாகி விட்டது. இனிமேல் கவலை இல்லை. எதற்கும் கவலைப்பட வேண்டாம். ஆனால் அடுத்து வந்த நாட்கள் எல்லாம் அவளை நிம்மதியாகவே இருக்க விடவில்லை. வீட்டில் ஆளுக்கொரு வேலை செய்து விருந்து கொடுத்து எல்லாம் முடிந்த பின்னும் மாப்பிள்ளை பையன் அங்கயே தங்கினான். இருக்கும் ஒரு படுக்கை அறையையும் அவர்களுக்கு கொடுத்து விட்டு படுக்கை அறையினுள் இருக்கும் குளிக்கும் அறைக்கும் தயங்கித் தயங்கி போக வேண்டியிருந்தது. போதாத குறைக்கு வயதுப் பெண்ணை

வீட்டில் வைத்துக் கொண்டு புது மண தம்பதிகள் செய்யும் சிலமிஷங்களும் கஷ்டப்படுத்தின. புதிதாகத் திருமணம் ஆனவர்களை கண்டிக்கவே மனம் வரவில்லை. இந்த நேரம் இப்படித்தான் இருக்கத் தோன்றும். இதைக் கட்டுப் படுத்துவதே அசட்டுத்தனம். தன் இளைய மகளைக் கூடுமான வரையில் இந்நிகழ்ச்சிகள் கண்களில் பட்டு பாதிக்காதபடி பார்த்துக் கொண்டாள் கமலம்.

இன்னுமொரு பெரிய சங்கடமும் முளைத்து விட்டது. தாங்கள் எல்லாம் சுத்த சைவம். மாப்பிள்ளை வீட்டார் அசைவம் சாப்பிடுகிறவர்களாம். பிள்ளைக்கு ஒருநாள் கூட அசைவம் இல்லாமல் இருப்பது கஷ்டமாம். பெண் புருஷனுக்கென்று விதவிதமான ஹோட்டல் சாப்பாடுகளை வாங்கி வந்தாள். தினமும் ''அம்மா நூறு கொடு, நூத்தம்பது கொடு'' என்ற ஒரே பிடுங்கல். மறுபடியும் கமலம் பணத் தட்டுப்பாட்டுக்கு ஆளானாள்.

வந்த ஒரு வாரத்தில் பேங்கிலிருந்து எடுத்து வந்த வட்டிப் பணம், கையிருப்பாக வைத்திருந்த பணம் எல்லாமே காலியாகிவிட்டது. மாதம் பிறந்து பத்து தேதிக்குள் எல்லாம் தீர்ந்து விட்டது என்றால்,மாதம் முழுவதும் எப்படி ஓட்டுவது? மறுபடியும் கமலம் பழையபடி அலைந்தாள். கடை கடையாக சென்றாள். ஜவ்வரிசி வற்றல், கூழ்வற்றல், அப்பளம், சுருள்வற்றல், ஊறுகாய் இப்படி வகை, வகையாய் செய்தாள். ஒரு நாளைக்கு கஷ்டப்பட்டால் இருபது ரூபா கிடைத்தால் மாப்பிள்ளைக்கே ரூ.நூற்றம்பது ஆனது. திருமணம் ஆகியும் பெண்ணும், மருமகப்பிள்ளையும் வீட்டோடு இருந்தனர். பெண் கல்லூரிக்கும் செல்லவில்லை. கமலம் பெண்ணைத் தனியே கூப்பிட்டு எத்தனையோ உபதேசங்கள் செய்தாள்.



13032 MAR 2003

எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குதான். இன்னும் ரெண்டு செமிஸ்டரில் எம்.எஸ்ஸி முடித்து விடுவாள். ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் போகும் வாய்ப்பு இருக்கிறதே' இப்படிக் கெடுத்துக் கொள்கிறாளே. மனதிற்குள் புழுங்கினாள்.

காவ்யாவும் தன் பங்கிற்கு உபதேசம் செய்து பார்த்தாள். எதுவுமே காதில் ஏறவில்லை. மாப்பிள்ளை படித்தது போதும் என்று சொல்லி விட்டானாம். ''கமலம் மருமகனை நேராகவே கேட்டாள்.

''நான் சொல்றனேன்னு தப்பா நினைக்காதீங்க. படிப்பை பாதியிலே நிறுத்துவானேன். முடிச்சா நல்லா இருக்கும்.''

''த. பாருங்க. பொண்ணை படிக்க வாணாம்னு நான் சொல்லலை. ஆனா எதுக்கு வேஸ்டா படிக்கணும். இது முடிச்சாலும் எனக்கு சமைச்சு தானே போடப் போகிறாள். கட்டாயமா நான் வேலைக்கு அனுப்ப மாட்டேன். எங்க அப்பா இப்ப என்னமோ கோவிச்சுகிட்டு இருக்காரு. ஆனா அது எத்தினி நாளைக்கு? நாளைக்கே 'வாடா மகனேன்னு' கூப்பிடலாம். அங்க எல்லாம் போனா மொதலாளி மாதிரி இருக்க வேண்டிய பொண்ணு. இப்படி எல்லாம் கஷ்டப் படுத்தறதை எங்கப்பாவே ஒத்துக்க மாட்டார். அதனால வேண்டாங்க. ஒங்க பொண்ணை வற்புறுத்தாதீங்க.'' இது என்ன? எது பேசினாலும் பையன் எதிர்மறையாகவே பதில் சொல்கிறான். தன் பெண் சுகப்படுவாளா? ஒருவேளை இது தவறான சம்பந்தமாக இருந்தால் மனது வலித்தது. 'கடவுளே என் ஒருத்திக்கு தண்டனை போதாதா? என் குடும்பத்தையே கச்சைக் கட்டிக் கொண்டு பழிவாங்குகிறாயே ஏன்? மறுபடியும் கண்கள் திரண்டது. அவளுடைய எதிர்காலத்தை அவள் தான் முடிவு செய்ய வேண்டும். யானை தன் தலையில்தானே

மண்ணை வாரிக் கொட்டிக் கொள்வது போல் இவள் செய்யும் செயல்கள் இவள் எதிர்காலத்தை அல்லவா அழிக்கிறது. இதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறாளே. காவ்யா சொல்வது போல் அவரவர் பட வேண்டும்.

கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும் எத்தனை நாளைக்கு? நடக்கட்டும். ,பெண் கஷ்டப்படட்டும். பெண் சொன்னது போல் கஷ்டமும் ஒரு அனுபவம்தான். அந்த அனுபவம் வரவிடாமல் செய்ததே பாவம்தான். மனதைச் சுதாரித்துக் கொண்டாள். நடப்பது நடக்கட்டும். எல்லாமே அந்த நாராயணன் செயல். இவளுக்கு என்று எழுதி வைத்த விதியை எப்படி மாற்ற முடியும்? கண்களில் கண்ணீரோடு, இதயத்தில் ரத்தம் வடிக்க, செய்வதறியாது கவலையோடு வேலை செய்கிறாள். பணப் பற்றாக்குறைக்கு ஏற்கனவே இருந்த தையல் மிஷினில் துணி தைத்துக் கொடுக்க ஆரம்பித்தாள். அப்பளம், வடகம் இதைவிட தைப்பதில் சற்று லாபம்தான். குறைந்த பட்சமாக வாங்கினால் கூட துணியில் நன்றாகவே கிடைத்தது. ஜாக்கெட் தைத்தால் ஒரு ஜாக்கெட்டுக்கு ரூ 20 வாங்கிக் கொள்கிறாள். சுடிதாருக்கு அறுபது ரூபாய், ஷர்ட்டுக்கு அறுபது, பேன்டுக்கு நூறு என்று சற்று கணிசமாகவே வந்தது. அதுவும் பற்றாத நிலை என்று வந்தது. பெண் கணவனுடன் ஊர் சுற்ற, துணி எடுக்க என்று காசு, காசு என்று காசு கேட்க காசு கரைந்தது.

ஒரு நிலையில் கமலமே பொறுக்க முடியாமல் "கருணா இத பாரு. இனிமேல் பணம் தர என்கிட்டே ஒண்ணுமே இல்லை. வெளியே போகணும்னா பீச், பார்க்னு போயிட்டு வாங்க. சினிமா, டிராமா, ஓட்டல்னு துட்டு கேக்காதே."

"என்னம்மா இப்படி இருக்கற நீ. அவங்க அவங்க பொண்ணையும், மாப்பிள்ளையும் கொஞ்ச நாள் வீட்டுலே



வச்சுக்க மாட்டோமான்னு உருகுவாங்க. எனக்கு என்னமோ தெய்வாதீனமா இந்த வரன் கிடைச்சது. இதை நல்லபடியா கவனிச்சு அனுப்ப மாட்டியா? அசட்டுத்தனமா பணக் கணக்கு போட்டுகிட்டு இருக்கே. நாங்க ரெண்டு பேரும் அவங்க வீட்டுக்கு போனப்புறம் திரும்பி வருவோம்னு நினைக்கறியா? நெவர். சும்மா அல்பத்தனமா செலவு அது இதுன்னு நெனைக்காதே."

பெண்ணிடமிருந்து வேறு எப்படிப்பட்ட பதில் வரும்? மனம் விண்டு போனது. இத்தனை நாள் உழைத்தாயே. போய் ரெஸ்ட் எடு என்று சொல்லத் தெரிந்ததா? சதா தன்நலம்தான். மறுபடியும் தெரிந்தவர் இடம் எல்லாம் சொல்லி எக்ஸ்போர்ட் துணி வேறு தைக்க ஆரம்பித்தாள். விடியற்காலையில் எழுந்திருக்கும் அம்மா ஓய்வு ஒழிவு இல்லாமல் வேலை செய்வது காவ்யாவின் கண்களுக்கு தப்பவில்லை. தானும் வேலைக்குப் போனால் என்ன? பார்ட் டைம் ஆக போகலாம். ஏற்கனவே கற்றுக் கொண்டிருந்த கம்ப்யூட்டர் உதவி செய்ய அலைந்து திரிந்து ஒரு இடத்தில் பார்ட்டைம் வேலை கிடைத்து வேலை செய்யலானாள். வழக்கமாக ஏழு மணிக்கெல்லாம் வந்துவிடும் பெண் இரண்டு நாட்களாக ஒன்பது மணிக்கு வருகிறது. இதுவும் ஒருவேளை பெரியவள் போல் அதற்கு மேல் யோசிக்க முடியவில்லை. பெண் லேட்டா வருவது ஒரு பக்கம் சந்தோஷம் என்றாலும், பெரியவளின் லீலைகளைப் பார்க்காமல் இருக்கிறாளே என்ற ஆனந்தமும் இருந்தாலும் மறுபக்கம் என்னவோ ஏதோ என்று மனது விகாரப்பட்டது. பெண்ணின் மனதில் லேசான குதூகலம் வேறு. ஆனால் காவ்யா அப்படிப்பட்ட பெண் இல்லையே.

அன்று காவ்யா உள்ளே நுழையும் போதே வழக்கமாக தையல் மிஷினோடு மிஷினாக உட்கார்ந்திருக்கும் அம்மா,

நேரே பெண்ணிற்குச் சாப்பாடு போட்டு அருகிலேயே அமர்ந்திருக்கிறாள்.

''ஏம்மா இப்ப ரெண்டு நாளா லேட்.''

''லேட்டாகும் படி வேலைம்மா.''

''ஒன்பது மணி வரைக்கும் என்னம்மா?''

''சந்தேகமா இருக்கா?''

''வழக்கமா வரவ ஒன்பதரை மணி வரைக்கும் வரலைன்னா என்னம்மா அர்த்தம்?''

''பெண்ணுக்கு முக்கியமான வேலை வந்திருக்கலாம்.''

''அப்படி என்னம்மா வேலை?'' முகம் வெளுத்து, கண்கள் ஏங்கி என்ன ஆகுமோ என்ற பயத்தோடு அம்மா பார்க்க, பரிதாபப்பட்டாள் காவ்யா. ''பாவம் அம்மா இனிமேல் அவள் கஷ்டப்படுவதிலும் அர்த்தமில்லை. அம்மா.... கவலைப் படாதே. நான் பார்ட்டைம் வேலைக்கு போறேன். கம்ப்யூட்டர் படிச்சிருக்கேன் இல்லையா? அதுலதான் வேலை கவலைப்படாதே.'' ''ஏன்டி... ''அம்மா திகைத்துப் போய் கேட்கிறாள். ''உன்னையும், மிஷினையும் சேர்த்து பாக்க என்னால முடியலே. இன்னும் எத்தனை தாம்மா கஷ்டப்படுவே. போதும்மா எல்லாத்தையும் விட்டுடு. அஞ்சு மணிக்கு காலேஜ் முடிஞ்சா பக்கத்துலேதான் இருக்கு. ஒரு எட்டு மணிவரை வேலை செய்துட்டு வரேன். மாதம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் வரும். ஓரளவு குடும்பத்தை தள்ளிகிட்டு போக முடியும்னு நினைக்கறேன். இந்த வயசான காலத்துலே ஊசிலே நூலை கோத்துகிட்டு ஓயாம மிஷினை ஓட்டிகிட்டு போதும்மா....'' பெண் மெல்லச் சொல்ல கண்கள்



அப்படியே கலங்கிப் போகிறது. எத்தனை சிறிய பெண் இவள்? எப்படி அன்பைக் கொட்டுகிறாள். பெரியவர்களுக்காக ராத்திரி பகலாக, தான் உழைப்பதை பெரியவள் கண்டு கொள்ளவில்லை. ஆனால் அவளுக்காக அல்லவா சின்னவளும் சேர்ந்து உழைக்க வேண்டியிருக்கு. கடவுளே போதும். இனிமேல் கஷ்டப்பட இதயத்தில் இடமில்லை. கஷ்டங்கள் போதும். தாயே நீயாவது கருணை காட்டக் கூடாதா? மனது இறைவனை ஆழ்ந்து வேண்டியது. காவ்யா வேலைக்குப் போய் ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. காவ்யா முதல் மாத சம்பளத்தை எடுத்து வந்து அம்மாவிடம் கொடுத்தாள். பெண்ணைப் பார்க்க, பார்க்க பெருமையாக இருந்தது. எப்பேற்பட்ட பெண். குறிப்பறிந்து எப்படி எல்லாம் உழைக்கத் தயாராக இருக்கிறாள். இவளுக்கு ஒரு நல்ல இடமாகத்தான் வர வேண்டும். மருமகன் வீட்டிற்கு வந்து தங்க ஆரம்பித்து விளையாட்டுப் போல ஒன்றரை மாதம் ஓடிவிட்டது. மருமகனோ, மகனோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் லவ் பர்ட்ஸ் போல் சுற்றி, சுற்றி வந்தார்கள். குதித்து கும்மாளம் போட்டனர்.

பெண்ணுக்காவது பிறந்த வீடு. மருமகனுக்கு வெட்கமாய் இராதா? தன் பெண் தவறான துணையைத் தேடி இருக்கிறார் என்பது கொஞ்சம் கொஞ்சமாக ஊர்ஜிதமாயிற்றே. இந்தப் பையன் ஒரு வேலைக்கு என்று போனால் கொஞ்சமாவது பொறுப்பு வராதா? வேலைக்கு அனுப்புவதற்காக மகளிடம் பேசினாள்.

''ஏம்மா ஏதேனும் குற்றம் சொல்லணும்னு சொல்லிகிட்டே இருக்கியா?'' அவர் யாரு தெரியுமா? பெரிய பணக்கார தொழிலதிபர், எம்எல்ஏவோட ஒரே பையன். கம்பனியை

நிர்வாகம் பண்ண வேண்டியவர். ஒரு இரண்டு மாசம் போனா எப்படியும் போகத் தானே போறோம். அதுக்குள்ளே வேலை, கீவைன்னு ஏன் அசிங்கப்படுத்தறே.''

கமலத்திற்கு பதில் இப்படித்தான் வரும் என்று தெரியும். 'போகட்டும் மனதைத் தேற்றிக் கொண்டாள். கடவுள் ஏதேனும் ஒரு வழி காட்ட மாட்டாரா? பார்ப்போம். நம்பிக்கையுடன் காத்திருந்தாள். கமலம் இதைப் பற்றி பெண்ணிடம் வருத்தப்பட்டுப் பேசினாள்.

''அம்மா நீ பேசாம இரு. நீ கேட்டா ஆய், ஊய்னு குதிப்பா. நானே எனக்குத் தெரிஞ்ச கம்பனியிலே வேலை கெடைக்கு மான்னு கேக்கறேன். வேலை கெடைச்சா அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் அனுப்ப சொல்றேன். நீ கவலைப்படாதே.'' அம்மாவிடம் சொல்லி விட்டு கிளம்பினாள்.

அன்று கம்பனிக்கு போன போது என்றுமில்லாத கூட்டம். 'எம்.டி புதுசா பொறுப்பெடுத்துட்டு இருக்கார். ஒரே கும்பல் வேறு. தனியாகச் சந்திக்க முடியுமா? அக்காவின் கணவனுக்கு வேலை கேட்டுப் பார்க்கலாமா? வேலை கொடுப்பார்களா? பார்ப்போம் இன்று எப்படியும் அவரை சந்தித்துத்தான் ஆகணும்.

''ஏய் காவ்யாவா....வா அத்தனைபேரும் எம்.டியை இன்ட்ரடியூஸ் பண்ணிக்கப் போறாங்க. நாமளும் போகலாம். வா. வா.'' இந்தச் சந்தர்ப்பத்துலே தான் கொஞ்சம் காக்கா பிடிக்கணும். அப்போதுதான் வேலையோ இன்கிரிமென்டோ, பதவி உயர்வோ கிடைக்கும்.

''சரி....வா போவோம்.'' இவளும் கிளம்ப வரிசையில் நின்றவாறே ஒவ்வொருவராக எம்.டி ரூமுக்குள் போய் வந்தார்கள். இவளுடைய தோழி போய்விட்டு வந்தாள்.



''போடி நல்லவரா இருக்கார். நல்லா, கைகண்டா பேசறார். நாம எந்த உதவி கேட்டாலும் கிடைக்கும். பிராப்ளம்ஸ் எல்லாம் எழுதிக் கொடுக்க சொல்கிறார். ''தோழி சொல்ல சொல்ல தன் அக்காள் கணவனுக்கு வேலை வேண்டும் என்று எழுதிக் கொடுக்க வேண்டும். மனதில் நினைத்துக் கொள்கிறாள்.

மெதுவாக உள்ளே நுழைந்தவள் அதிர்ந்து போனாள். அன்று டி.வி.எஸ் பிப்டியில் கீழே இடித்து தள்ளினானே அந்த இளைஞன் இவனா எம்.டி. ''குட்மார்னிங் சார்'' விஷ் பண்ண நினைத்து நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

''ஓ. நீங்களா? நல்லவேளை இங்க வண்டி, கிண்டி கொண்டு வரலையே.''

''சாரி சார்.''

''எதுக்கு சாரி.'' அந்த வண்டியிலே இடிச்ச பாக்கியம்தான் எம்.டி. போஸ்ட்.

''இன்னுமொரு தடவை இடிச்சீங்கன்னா இன்னுமொரு பெரிய போஸ்ட்தான்.''

''எங்கே? மேலேயா?'' அவள் சட்டென்று மேலே காண்பிக்க, அவன் கலகலவென்று சிரித்தே விட்டான்.

''பீ சீட்டட்'' என்று இருக்கையை காண்பிக்க.

''தேங்க்யூ சார்'' என்றாள்.

பொதுவாக அவள் படிப்பு, வேலை, பெயர் இதைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தவன் அவள் படித்துக் கொண்டே வேலை செய்கிறாள் என்றதும் ஆச்சரியப்பட்டான்.

"சாதாரணமா இந்தியாவிலே படிச்சுகிட்டே வேலை செய்யறவங்க குறைவுதான். அவளுடைய சான்றிதழ்கள், இளங்கலையில் கோல்ட் மெடல் வாங்கிய சான்றிதழ், எம்.பி.ஏவில் முதல் செமிஸ்டரில் யூனிவர்ஸிடி ரேங்க் எல்லாவற்றையும் பார்த்து அசந்து விட்டான்.

"கிரேட்" என்றான்.

"உங்களுக்கு இன்டென்ஷிப் மாதிரி ஏதானும் ஏற்பாடு செய்யறேன். வேலை செய்யறதுனால ஒங்க படிப்பு கெடக்கூடாது. லீவு நாள்ள வேலை செய்யற மாதிரி ஏற்பாடு பண்ணலாமா?" என்றான்.

"நோ நீட் சார். அன்றன்றைய பாடங்களை அப்பவே படிச்சிடுவேன். எனக்கு எக்ஸாமுக்கு முன்னால ஒரு வாரம் லீவு கொடுத்தா போதும்."

"ஓ.கே" என்றவன், அவளுடைய வேலைகளைப் பற்றி பேசலானான்.

மிக மிகச் சுத்தமாக, சரியாக செய்யப்பட்ட வேலையில் சற்று ஆச்சரியப்பட்டு போனான்.

"ஓ.கே. ஸீ.யூ" அவன் புன்னகைத்த போது மறுபடியும் 'தேங்யூ ஸார்' என்றவாறே விடை பெற்றாள். எதைக் கேட்க வேண்டுமென்று நினைத்தாளோ எல்லாமே மறந்து விட்டது. இதுவரை எந்த ஆண் பிள்ளையும் தன் நினைவுகளில் இத்தனை தூரம் வந்து போனதில்லை. இவன் மட்டும் சே! இதெல்லாம் தவறு. அவனுடைய தீர்க்கமான கண்கள், சற்று தூக்கிய முகவாய், சிவந்த உதடுகள், பம்மென்று எழும்பிய கன்னங்கள், அந்த நிறம், சாதாரணமாக வடக்கு இந்தியாவில் உள்ளவர்களுக்கே இருக்கும் நிறம். தொட்டால் அந்தச் சிவப்பு



கூட கையில் ஒட்டிக் கொள்ளுமோ என்பது போல பளிச்சென்ற நிறம். ஆறடி உயரம் வேறு. ஒரு முறை நின்றாலே பல கண்கள் அவனையே பார்க்கிறது. பெண்கள் மட்டுமல்ல. ஆண்கள் கூட அல்லவா ஆழ்ந்து பார்க்கிறார்கள். முக்கால் வாசிப் பேரிடம் பொறாமை' சில பேரிடம் அவனைப் பார்த்த ஆச்சரியம் கலந்த பிரமிப்பு. இதுதான் காரணம். அவனிடம் மனம் ஓடிச் செல்வதற்கு இது மட்டும்தான் காரணமாக இருக்க முடியும். அரவிந்தனைப் பார்க்க போனபோது. அவனைப் பார்த்தது வேறு ஞாபகத்துக்கு வந்தது. அப்போதுதான் என்னவெல்லாம் நினைத்தோம். சே! இது சாதாரண இன்பேருவேஷன். இதைப் பெரிதாக நினைத்ததே தவறுதான். அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தால் தன் வேலைகளை யார் செய்வார்கள். பருவ உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் காலம் இதுவல்ல. முதலில் குடும்பம் முன்னேற வேண்டும். அம்மாவிற்கு ஏற்பட்ட கஷ்டத்தை தீர்க்க வேண்டும். கருணாவினால் ஏற்பட்ட சீர்குலைவை சரி செய்ய வேண்டும். பின்தான் எனக்கு இந்த மாதிரி உணர்ச்சிகள் வரலாம். அதுவரைக்கும் எல்லாவற்றிக்கும் குட்-பை சொல்லி விட வேண்டியதுதான். ஆனாலும் அப்படி எல்லாம் அவனிடமிருந்து விலகி இருக்க முடியவில்லை.

காலையில் இருந்து ஐந்து மணி வரை வராதவன் ஐந்து மணிக்கு மேல் வர ஆரம்பித்தான். காலையில் எல்லாம் எப்போதுமே வர மாட்டானாம். பேஃக்டரி இன்ஸ்பெக்ஷன், மீட்டிங் அது இது என்று சுற்றிக் கொண்டே இருப்பானாம். மாலைதான் வந்து எல்லாவற்றையும் சரி பார்ப்பானாம். பல தடவைகள் கணக்குகளைச் சரி பார்த்து, வாங்கியது, விற்றது எல்லாம் கணக்கு பார்த்து ஆராய்ந்து அலசிப் பார்த்துவிட்டு, தேவையானவற்றை கம்ப்யூட்டரில் பதிவு பண்ணச் சொல்லி,

அவன் கொண்டு வரும் முக்கியமான விஷயங்களையும் அடித்து தரச் சொல்லி அவன் எட்டு மணிக்கு மேல் ஆனாலே சாப்பாடு அவளுக்கு மட்டுமல்ல, கூட வேலை செய்பவர்களுக்கும் சேர்த்து சாப்பாடு வந்துவிடும். ஆனால் சில சமயங்களில் எட்டு என்பது ஒன்பது பத்தரை கூட ஆகிவிடும். ஒவ்வொரு முறையும் பஸ் பிடிக்க ஓடுவாள். அன்று மிக, மிக லேட், வேலை முடியவே பத்தாகி விட்டது. மற்றவர்கள் அவர்கள் வேலையை முடித்துவிட்டு எட்டு மணிக்கே கிளம்ப

''இத முடிச்சிட்டு போங்க. நாளைக்கு வேணா ஆப் எடுத்துக்கங்க.'' என்று சொல்லி விட்டான். வழக்கம் போல் கம்பனியில் சாப்பிட்டு விட்டு பஸ் ஸ்டாப்பிற்கு வந்தால் தன் இடத்திற்கு போகும் கடைசி பஸ்ஸும் போய்விட்டது. தனியாக இந்த இருட்டு வேளையில் எப்படி நிற்பது? என்ன செய்வதென்று தவித்த போது, அந்த ஆபிஸின் மாடியிலே இருக்கும் தன் வீட்டின் ஜன்னலின் வழியாக எம்.டி பார்ப்பது தெரிந்தது.

''இவருக்கென்ன? மாடியிலே வீடு. கீழே ஆபீஸ். இங்கே நான்தானே கிடந்து லோல் படறேன்.'' வாய் முணு முணுக்கவும் எதிரே எம்டி மாதவன் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

## 8

''சார்''

தான் சொன்னதைக் கேட்டிருப்பானா? மனதிற்குள் அசை போட்டாள். ''திட்டணும்னா டைரக்டா கூப்பிட்டு வச்சு திட்டுங்க. நாலு அடி கூட அடிச்சிடுங்க.'' அவன் நைட்டிரஸ்ஸில் வந்தவாறே சிரித்தபடிகூற,



''அதெல்லாம் ஒண்ணுமில்லே சார். லாஸ்ட் பஸ்ஸும் போயாச்சு. எப்படி வீட்டுக்கு போறதுன்னு தெரியலே. அம்மா வேற கவலைப் படுவாங்க.''

''அதுக்கு இங்க நின்னுகிட்டு என்னை திட்டினா விமோசனம் கிடைக்குமா?''

''ஒங்களை... நாலு.''

''என்ன மேடம். நீங்க என்னை ஒரு பார்வை பாத்துட்டு. இந்தாளுக்கு மட்டும் மாடியிலே வீடு. கீழே ஆபீஸ்னு முணுமுணுத்தது எல்லாம் தெரியும்.''

அவள் லேசான பயத்துடன் அவனைப் பார்க்க,

''அடாடா இதுல பயப்பட என்ன இருக்கு? யாருக்குமே அகாலத்துலே விட்டா கோபம் வரத்தான் வரும். வாங்க நானே டிராப் பண்றேன்.'' பெருந்தன்மையுடன் அவன் கூற 'நோ, சார்' என்கிறாள் சற்று பயந்தபடி.

''மேடம் எப்படிப் போவீங்க? நாளைக்கு உங்களுக்கு ஒண்ணு ஆச்சுன்னாலும் கம்பனிக்கு கெட்ட பேரு. மாடிக்கு வாங்க. நான் டிரஸ் சேன்ஜ் பண்ணிட்டு வரேன்.'' மாடிக்கு லிப்டின் மூலம் சென்றார்கள்.

ஒரு பெரிய ஹால், படுக்கை அறை, சமையல் அறை பார்க்கவே பளபளவென்று மார்பிளும், கிரானைட்டும் புதைக்கப்பட்டு இவரை மணம் செய்து கொள்பவள் மிக மிக அதிர்ஷ்டசாலிதான் என்று நினைத்துக் கொள்கிறாள். எல்லா பொருட்களும் அந்த அந்த இடத்தில் மிக நேர்த்தியாக வைக்கப்பட்டிருந்தது.

அவன் பைஜாமா, ஜிப்பா போன்ற ஒன்றை அணிந்து கொண்டு வந்தவன் மறுபடியும் சமையலறைக்குச் சென்று,

''ஹாட் சாக்லெட் சாப்பிடுங்க'' என்றான்.

''இல்லை...'' அவள் தயங்க,

''வீட்டுக்கு யார் வந்தாலும் உபசரிக்கிறது நம்ம பண்பாடு இல்லையா?'' மொதன் மொதல்ல வந்திருக்கீங்க. எடுத்துக்கங்க.''

அவனும் ஒரு கப்பை அவன் முன் வைத்துக் கொண்டு அமர்ந்தான். பாலில் கோ கோ கலந்து அளவான சர்க்கரை போட்டு கடச் கட மிக நன்றாக இருந்தது.

''சமையல் எல்லாம் கூட நீங்க செய்வீங்களா?''

''ம்...'' என்றான்.

''எப்படி?''

''யு.எஸ்ஸீக்கு போன போது கத்துகிட்டது.''

திரும்ப, திரும்ப உயர எழும்பும் அலைபோல் அவனைப் பார்த்தவுடனே ஆசை அலைகள் உயர எழும்புகின்றன. எழும்பும் அலைகளை கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறாள்.

'ம். முதலில் லட்சியம். பிறகுதான் என்ஜாய்மெண்ட்.'

''என்ன போகலாமா? அது என்ன? என்னை பாக்கும் போதெல்லாம் ஏதோ கோட்டையைப் பிடிக்கிற மாதிரி.''

அவன் போட்டிருந்த வெள்ளை ஜிப்பாவும், வெள்ளை பைஜாமாவும் அவனை இன்னும் பளீரென்று காட்ட, சட்டென்று கண்களை தாழ்த்திக் கொள்கிறாள்.

''வீட்டை பத்தி யோசனை சார்.''

''ஒங்க வீட்டுலே அம்மா அப்பா திட்டுவாங்களா?''



''அப்பா இல்லே.'' அவள் சொல்ல, சொல்ல அவனையே பரிதாபமாக பார்க்கிறான்.

''ஐயம் சாரி!'' ''நீங்க என்ன பண்ண முடியும்?''

''என்னத்துக்கு உங்க பழைய கஷ்டமான நினைவுகளை ஞாபகப்படுத்தணும்.''

''கஷ்டங்கறது எங்களுக்கு ஞாபகமே வச்சுக்க வேண்டாம் சார். அது எப்பவுமே எங்க கூட இருக்கறது.''

அவளின் வார்த்தைகள் அவன் மனதை அதிகமாக வேதனைப்படுத்தியதோ என்னவோ, சட்டென்று அவளின் கைகளைப் பிடித்து விட்டான்.

''ஐயம் சாரி'' உணர்ச்சி வசப்பட்டவனின் முகத்தைப் பார்த்தவள் லேசாய் தலை குனிந்தாள்.

''சார் நேரமாகிறது.''

''ஓ. ஐயம் சாரி.''

''எத்தனை சாரி சொல்லுவீங்க?'' சிரிக்கிறான்.

அதற்கு மேல் அவளைப் பார்த்த பார்வையில் அனுதாபம்தான் தெரிந்தது. காவ்யாவிற்குத்தான் தவிப்பாக இருந்தது. தான் தப்பு செய்து விட்டோமோ. தன் கஷ்டப்பட்டது பற்றி சொன்னது தவறோ. இருப்பதைத் தானே சொன்னேன். என்னதான் இருந்தாலும் அவன் ஒரு மூன்றாம் மனிதன். அவனிடம் போய் தன் விஷயங்களைச் சொல்லி இருக்கக் கூடாதுதான். மறைமுகமாகக் கூட சொல்வது தவறுதான்.

அம்மாவிற்கு விஷயம் தெரிந்தாலே கோபிப்பாள். சொந்தக்காரர்களுக்கே தன் கஷ்டம் தெரியக்கூடாது என்று

நினைத்தவள். கூலி வேலைக்குப் போகும் நிலை வந்தபோது கூடத் தன் கஷ்டத்தை ஒரு வரி கூடத் தன் சொந்த தாய்க்கோ தந்தைக்கோ எழுதிப் போடவில்லை.

''ஏம்மா இத்தனை கஷ்டம். உன்னைப் பெத்தவங்களுக் காவது சொல்லலாமில்லே.''

''வேண்டாங்க. சந்தோஷத்தை மட்டும்தான் கொண்டாட ணும். துக்கத்தைத் தனியாதான் அனுபவிக்கணும். அப்படி எல்லாம் துக்கத்தையும் துன்பங்களையும் துணையாகக் கொண்டு வாழ்ந்தவள். அவளுக்குத் தோழியே துக்கம்தான். அவளுக்கு மூச்சே கஷ்டம்தான். அவளுடைய பெண்ணாக இருந்து கொண்டு இப்போது கஷ்டத்துக்கு ஒரு விடிவு காலம் வரும்போது தன் கஷ்டத்தைப் பற்றிச் சொல்லலாமா? லேசாகக் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள். இருவருக்குமே பேச வார்த்தைகள் இல்லாதது போல் மௌனமானார்கள். வீடு வரும்வரை இருவராலும் பேச இயலவில்லை. வீட்டை நெருங்கும் போது மணி பதினொன்றை எட்டியது. அம்மா வாசலில் உள்ளவராண்டா விளக்கை போட்டு பதை பதைத்து நிற்பது தெரிந்தது. 'பாவம் அம்மா' மனது அனுதாபப்பட்டது.

இருவரும் இறங்கி உள்ளே நுழைந்த போது, அம்மா அடிபட்டவளாய் தன்னையே பார்ப்பது தெரிந்தது.

''அம்மா இவர் என் பாஸ். இன்னிக்கு வேலை முடியவே லேட்டாயிடுச்சு. ரொம்ப நேரம் பஸ் ஸ்டாண்டிலேயே நின்னுகிட்டு இருந்தேன். பாத்துட்டு, பரிதாபப்பட்டு அழைச்சிகிட்டு வந்திருக்காங்க. அம்மாவின் முகத்தில் ஒரு ஒளி வந்தது.



''ரொம்ப நன்றிங்க. வாங்க தம்பி உள்ளே வாங்க.''

''இல்லேம்மா. லேட்டாயிடுச்சு. இன்னொரு முறை வரேன். வணக்கம்மா.''

அவன் மிக பணிவுடன் சொல்லிவிட்டு 'போய்ட்டு வரேன்' என்று காவ்யாவிடம் சொல்லிவிட்டு மெல்லிய புன்னகையுடன் அவன் நகர்ந்து, காரில் ஏறி பறக்க, கார் மறையும் வரை அம்மாவும் பெண்ணும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

''நல்ல பையனா இருக்கான் இல்லே.'' அம்மா ஒரு யோசனையுடன் சொல்ல,

''நெஜமாகவே ரொம்ப நல்லவர்தாம்மா'' என்கிறாள் காவ்யா.

''இவர்கிட்டே கருணாவோட ஹஸ்பண்ட்டுக்கு வேலை கேக்கணும்னு நெனச்சுகிட்டு இருக்கேன். இன்னும் கொஞ்சநாள் ஆகட்டும்.''

அம்மா பெரியவள் பேச்சை எடுத்தாலே மௌனமாகி விடுகிறாள். இவர்களுக்காகத் தானே சின்னவள் உழைக்கப் போகிறாள். ராத்திரி பத்து மணிக்கும், பதினோரு மணிக்கும் வந்து மறுபடியும் காலைல எழுந்து ஓடுகிறாள் பாவம். என்னவோ. கடவுள் இந்தப் பெண்ணுக்கும் கஷ்டப்படணும்னு எழுதி வைத்து விட்டானே.

விளையாட்டு போல் திருமணம் ஆகியே மூன்று மாதங்கள் ஆயின. உண்மையான வீட்டு வாரிசு போல், அட்டே, இங்கே நகராது மூன்று வேளையும், மூக்கு பிடிக்க தின்கிறான் மருமகப்பிள்ளை. இவனை என்ன செய்வது?

நாளாக ஆக, இவரால் பிரச்சனைகள் அதிகரித்துக் கொண்டே போனது. அன்று எழுந்திருக்கும் போதே தலை சுற்றுகிறது என்று கருணா அழ ஆரம்பிக்க, டாக்டரிடம் அழைத்துப் போகிறாள், கமலம்.

காலையில் காவ்யா போகுமுன் சமைத்துக் கொடுத்து விட்டு, பெண்ணையும் அழைத்துக் கொண்டு அருகில் உள்ள லேடி டாக்டரைப் போய் பார்க்கிறாள். டாக்டர் 'கர்ப்பம்' என்று சாப்பிட வேண்டிய மருந்துகளை எழுதிக் கொடுக்க இடிந்தே போகிறாள் கமலம். மருமகப் பிள்ளைக்கு இன்னும் வேலை இல்லை. திருமணம் ஆகி விளையாட்டு போல மூன்று மாதங்கள் ஆனது. இன்னும் மருமகன் ஒரு வேலைக்கும் போக முயற்சிக்கவில்லை. பெண்ணும் அதைப் பற்றி கவலைப் படாமல் ஜாலியாக இருக்கிறாள். அம்மாவின் உயிரை எடுத்துக் கொண்டு இருக்கிறாள். அம்மாவின் கஷ்டம் பொறுக்க முடியாமல் தங்கை வேறு வேலைக்குப் போகிறாள். இந்நிலையில் குழந்தை என்பது தேவையா? மனது அழுதது.

அன்றே இருவரையும் விரட்டி இருக்கனுமோ. தன்னை தன் தாய், தந்தை விரட்டி இருக்கா விட்டால், தான் இத்தனை தூரம் வந்திருக்க மாட்டோமோ. நான் தவறு செய்து விட்டேனே. கண்கள் நீரைச் சொரிந்தன. மனதைக் கல்லாக்கி கொண்டு அனுப்பி விடலாமா? இன்னும் மகனின் மாமனார் வந்து கூப்பிடவில்லையே.

அன்று வந்து மிரட்டி விட்டுப் போனவர் பின் வரவே இல்லையே. என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினாள் கமலம். மருமகனுக்கு எப்படியும் ஒரு வேலை பார்த்துக் கொடுத்துவிட்டு, தனிக் குடித்தனம் வைக்க வேண்டும். அப்போதுதான் பொறுப்பு வரும். பையனைப் பற்றிய



விவரங்கள் இன்னும் ஒன்றுமே தெரியாது. என்னவென்று சொல்லி வேலை கேட்பது? யோசித்து, யோசித்து மூளை குழம்பியது. தான் சாமான்கள் கொடுக்கும் கடைகளை எல்லாம் கேட்டுப் பார்த்தாள். "பிகாம் படிச்சவர்னா சொல்லுங்க. என் மச்சினனுக்கு ஒரு அக்கௌண்டண்ட் வேணும். மாதம் இரண்டாயிரம் ரூபாய் தருவாங்க. போகப் போக அதிகமாகும்."

"நன்றி." சொல்லிவிட்டு வீட்டிற்கு ஓட்டமும் நடையுமாக ஓடி வருகிறாள். பெண்ணை கூப்பிட்டு சொன்னபோது பெண் ஒன்றும் மகிழ்ச்சி அடையவில்லை.

"என்னடி இது? வேலைக்குப் போகாமல் எத்தனை நாள் இப்படி?" கேட்டது தவறாகப் போய்விட்டது. பெண் கோபித்துக் கொண்டு 'தாட், பூட்' என்று குதிக்க, மருமகன் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டே புறப்பட்டு போனான்.

"இப்போ திருப்தி தானே உனக்கு?" பெண் கத்தினாள்.

"அவர் இல்லாத வீடு எனக்கும் வேணாம்."

எல்லாவற்றையும் மனதில் போட்டு அடக்கிக் கொண்டு தானும் கஷ்டப்பட்டு மற்றவர்களையும் கஷ்டப்படுத்துவதில் என்ன லாபம்? இவளுக்கு பொறுப்பு வேண்டுமென்றால் சற்று விரட்டித்தான் பிடிக்கனும். அறுபத்து ஐந்து வயதுக்கு மேல் அம்மாவை இப்படி உழைக்க விடுகிறோமே என்ற அக்கறை இல்லை. படிக்கும் தங்கை வீட்டு செலவுக்காக பகுதி நேர் வேலைக்குப் போய் இரவு பத்து, பதினொன்று என்று வருவதைப் பற்றியும் அக்கறை இல்லை. இவள் எல்லாம் என்ன பெண்? சில பேருக்கு சொன்னால் புரியாது. பட்டால்தான் புரியும். அந்தச் சின்ன பெண்ணுக்கு இருக்கும் அறிவு கூட பெரியவளுக்கு இல்லை.

மருமகன்தான் ஆகட்டும். வருமானம் இல்லாத வீடு. பெண்கள் மட்டும் இருக்கும் இடம் என்று வெட்கம் கூட இல்லாமல், என்னவோ தான் பெரிய அமெரிக்காவிலிருந்து வந்த மாப்பிள்ளை போல் தன்னை நினைத்துக் கொண்டு, வேளா வேளைக்கு சாப்பிட்டு ஊர் சுத்திக் கொண்டு... நினைக்க நினைக்க பெருமூச்சுதான்.

''கருணா நீ ஏமாந்துட்டே. ஆனா அடைக்கலம்னு நீ வரும்போது உன்னை விட மாட்டேன்.''

மனதில் நினைத்தவள் கருணாவிடம் பேசினாள்.

''கருணா. நான் சொல்றதைக் கேளு. உன்னைப் போக வேணாம்னு தடுக்க மாட்டேன். ஆனா நீ உன் புருஷன் வீட்டுக்கு போயிட்டு. அவங்க ஒன்னை ஒத்துக்கலைன்னா நீ திரும்பி வா ஒனக்காக இந்த வீட்டு வாசக்கதவு எப்பவுமே திறந்திருக்கும்.''

''நீ விரட்டறியே. அது மாதிரி அவங்களும் என்ன, கேடு கெட்டவங்கன்னு நினைச்சியா? என் புருஷன் ரொம்ப, ரொம்ப நல்லவரு. என்னை ராணி மாதிரி வச்சிருப்பேன்னு சொன்னாரே.''

ஒரு சூட்கேஸை எடுத்து அதில் தன் துணிமணிகளை அடுக்கிய வாறே கிளம்பினாள். கமலத்தின் கண்கள் நிறைந்தன.

'போ... போயிட்டு வா. நீ நன்றாக இருந்தால் எனக்கு பெருமைதான். சீரழிந்து விட்டால்... கருணா தாயின் கண்ணீரைப் பார்க்காதவளாய் தடதடவென்று இறங்கி கிளம்பிப் போனாள்.



இரவு காவ்யா வந்தபோது வருத்தப்பட்டாள். ''ஏம்மா இப்படி பண்ணிட்டே.'' ''என்ன பண்ணச் சொல்றே? வேலை வெட்டிக்கு போகாம பொம்பளை சம்பாரிச்சு போட்டு தின்னா நல்லதா? ஊர் உலகம் காரி துப்பாது.''

''எல்லாம் சரிதான். அவ யாரு. என் அக்கா தானே. போகட்டும்னு விட வேண்டியது தானே.''

''அக்கா. தங்கை எல்லாம் அவங்கவங்களுக்கு ஒரு குடும்பம் வரும் வரைக்கும்தான். அந்தப்பையனைப் பாத்தா எனக்கு திருப்தியே இல்லையே. சந்தேகமாகவே இருக்கு. என்ன நிமிர்ந்து நேரா பாக்கவே பயப்படறான். கருணாவிற்கு காதல் கண்ணை மறைச்சிடுச்சு. நாம என்ன சொன்னாலும் ஏறல.''

''அம்மா நீயும் வா. நாம போய் சமாதானம் பண்ணி கூப்பிட்டகிட்டு வரலாம்.'' காவ்யா கேட்க, ''வேணாம்டி. அவளும் அனுபவப்படணும். நெருப்பு சுடும்னு சொல்லித் தரதைவிட, அதுல கையை வச்சு பாத்தா கிடைக்கற அனுபவம் அதிகம்தான். நான் சொல்ல மாட்டேன். அவளே வச்சு பார்த்து கத்துகிடட்டும்.''

அம்மாவை பாவமாகப் பார்க்கிறாள் காவ்யா. பெண் துன்பப்பட்டால் அம்மாவின் இதயத்தில் இரக்கம் கொட்டுவது நிச்சயமான ஒன்று. அம்மாவும் மகளுக்கு அனுபவம் வர அவளுடைய வலியைத்தான் ஏந்திக் கொள்ள தயாராகி விட்டாள் பாவம்.

''கவலைப்படாதேம்மா வந்துடுவா'' என்றாள் காவ்யா.

கருணா சென்ற பின் அம்மாவின் பார்வை கூட வெறித்துப் போனது. ''குழந்தை என்ன பாடுபடுகிறதோ பாவம்''

என்கிறாள். இரண்டு மூன்று நாட்கள் கருணாவைப் பற்றி தகவல்கள் இல்லை. கமலம் தவித்துப் போகிறாள்.

''இத பாரும்மா. சொல்றதைக் கேளு. பேசாம இரு. ஒருவேளை செட்டில் ஆகிவிட்டாளோ என்னவோ?''

''பாவம்டீ கருணா. உலகம் தெரியாம வளந்திட்டாள். கஷ்டத்தை தாங்கிக்கற சக்தி அவளுக்கு கிடையாதுடீ.''

''நீயே ஏன் தேவையில்லாததை எல்லாம் நினைக்கறே. ஒருவேளை நல்லா இருந்தா.''

''இருப்பாளாடீ?'' ''இருக்கணும். கவலைப்படாதே. தைரியமாக இரு. கடவுள்இருக்கார். கடவுளை நம்பு.'' பெண் அம்மாவாக - அம்மாவைத் தேற்றுகிறாள். மனம் பதை பதைத்தது. ஆறுதல் அடைய மறுத்தது. இந்த எல்லை இல்லாத பாசத்தினால் பிள்ளைகள் கெட்டு விட்டதா? தெரிய வில்லையே. மனம் பித்தானது. கவலையை மறக்க இன்னும் ஆயிரம் வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்கிறாள் கமலம். கமலத்தைப் பார்த்து, பார்த்து காவ்யா வேதனைப்படுகிறாள். 'பாவம் அம்மா. பெத்த மனம் பித்து என்பார்களே. சரியாகத்தான் இருக்கு. சனியன் ஒரு போன் பண்ணக்கூடாது. அம்மா பாவம்.

கல்லூரிக்கு போய்விட்டு மாலை வேலைக்கு போன போதும் இதே நினைவுகள், வருத்தங்கள், சாதாரணமாக வேலையில் தீவிரமாக நின்று செய்ய முடியாத வேலைகளையும் செய்பவள், இன்று சாதாரண வேலையைக் கூடச் செய்ய முடியாமல் திணறுகிறாள். மனம் அம்மாவின் மேலேயே இருந்தது. இப்படிக் கூட ஒருத்தி பெற்றவளைத் தவிக்க விட்டு, அழச்செய்து. சே!



''என்ன இன்னிக்கு முகமே சரியாயில்லே. நான் நிறைய டிஸ்டர்ப் பண்றேனா?'' சிரித்தவாறு மாதவன் கேட்க,

''இல்லியே. இப்பதான் டிஸ்டர்ப் பண்றீங்க'' என்று சொல்லி லேசாக சிரிக்கிறாள்.

''என்னாச்சு?'' என்கிறான். அவனுக்கு என்ன பதில் சொல்வது? அப்பா தங்களை விட்டு ஓடின கதையிலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கும். ஆயிரம் இருந்தாலும் மூன்றாம் மனிதன். அவனிடம் எல்லாவற்றையும் சொல்வானேன். இப்படி படபடத்த நெஞ்சத்தோடு இருக்கும்போது அந்த போன் வந்தது.

''காவ்யா. திஸ் ஈஸ் பார் யூ'' என்று அவளிடம் போனைத் தருகிறான் எம்.டி. தனக்கு இந்த நேரத்தில் யார் போன் செய்வார்கள். ஒருவேளை அம்மாவிற்கு உடம்பு, கிடம்பு சரியில்லையா? ஏதேனும் ஆஸ்பிடல்லே அட்மிட் ஆயிட்டாங்களா என்ன? மனது கிடந்து தவித்தது.

''மிஸ். காவ்யா. திஸ் ஈஸ் ஃப்ரம் ஜே. ஆர். ஆஸ்பிடல். மிஸஸ் கருணா ஈஸ் நாட் வெல் அண்ட் ஷி வாண்ட்ஸ் டு ஸீ யூ.'' என்னது கருணாவுக்கு உடம்பு சரியில்லையா? அம்மாவுக்கு சொல்லலாமா? வேண்டாம்.

அம்மா உடைந்து விடுவாள். என்னவென்று பார்த்துவிட்டு வருவோம். அவள் முகம் கலவரமடைந்து கவலையோடு இருப்பதைக் கண்டவன்.

''எனி பிராப்ளம்?'' என்கிறான்.

''மெனி'' என்று சொல்லிவிட்டு லேசாக முறுவலித்து விட்டு விஷயத்தை சொன்னபோது, அவனே காரை எடுத்து வந்து அவளுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தான்.

அங்கே கிழிந்த நாராகக் கருணா. முகம் வெளிறி அழகெல்லாம் போய், லேசாகக் கறுப்படைந்து போய் 'கருண்' மெதுவாகக் கூப்பிட்டவளை நர்ஸ் வந்து கையை அமுக்கி எச்சரிக்கிறாள்.

''ஸ்... அவங்களா முழிக்கட்டும். இப்ப முழிச்சிடுவாங்க. டிஸ்டர்ப் பண்ணாதீங்க''

''என்னாச்சு?'' மெல்லிய குரலில் வினவுகிறாள்.

''சூயஸைட் ட்ரை பண்ணியிருக்காங்க. விஷம் சாப்பிட்டதிலே குழந்தை போயிடுச்சு. அபார்ஷன் ஆயிடுச்சு. நல்லவேளை இவங்க பொழைச்சுகிட்டாங்க கொஞ்சம் லேட்டாக வந்திருந்தால் இவங்களே மேலே போயிருப்பாங்க.

சட்டென்று கண்கள் ரொம்பிப் போனது. கடைசியிலே இவ்வளவுதானா உன் வாழ்க்கை. பாவம் அம்மா எத்தனை படித்து. படித்துச் சொன்னாள். அவனை எதிரியாக பாவித்தாயே. ஆனால் நடந்தது என்ன? ஒனக்கு இப்பவாவது புத்தி வந்திருக்குமா?

கூட வந்த மாதவன், ஒரு ஓரமாக சேரில் அமர்ந்திருந்தான். காவ்யா கலங்குவதையும், குமுறுவதையும், அழுவதையும் வேடிக்கை பார்த்தான். அவன் முகமும் லேசாக இருண்டது.

சட்டென்று விழித்த கருணா காவ்யாவை பார்த்து, பார்த்து அழுகிறாள்.

''நான் தப்பு பண்ணிட்டேன். அம்மா... அம்மா... அம்மா எங்கே? அம்மா மடியிலே படுக்கணும். அம்மா கரக்டாக சொன்னாங்க. 'அவனை நம்பாதேன்னு' பாவி கேக்கலையே'' மறுபடியும் குலுங்கி, குலுங்கி அழுகிறாள்.



அக்காவின் தலையைத் தடவிய காவ்யா ''என்னாச்சு அக்கா?'' என்றுகேட்கிறாள். நர்ஸ் 'வேண்டாம்' என்று சைகை செய்ய, ''எனக்கு ஒண்ணும் இல்லீங்க. நான் சொல்லிடறேன். ''மெதுவாகச் சொல்லத் தொடங்குகிறாள்.

அம்மாவிடம் கோபித்துக் கொண்டு கிளம்பியவள், நேரே தன் மாமனார் வீட்டிற்குப் போனாள்.

''என்னது என் பையனா? என்னம்மா விளையாடறியா'' என்றார். அவர் பையனை கூப்பிட்டுக் காண்பித்த போது தான் திருமணம் செய்த ஆள் அவன் இல்லை என்று தெரிந்தது. நல்லவேளை, ரிசப்ஷன் என்று வைத்து எடுத்த போட்டோவை எடுத்துக் கொண்டு போய் காண்பித்த போது

''ஓ. இவனா? இங்க எடுபிடி வேலை செய்யறவன். இவனுக்கு கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகள் கூட இருக்கே'' என்றார்.

இவள் கலங்கி நிற்பதைப் பார்த்து. ''இரு இரு. ஆளை விட்டு அனுப்பறேன். பேசு என்றான். இப்பதான் ஞாபகம் வருது. இவன் மாமனார்தான் உன் வீட்டுக்கு வந்து மிரட்டிட்டு போனார்னு பையன் சொன்னான். அதான் விஷயமா? ஏம்மா ஏற்கனவே கல்யாணம் ஆனவங்களை யாராவது கட்டுவாங்களா? சட்டப்படி இது செல்லாதேம்மா'' என்றார்.

மறுபடியும் கண்கள் கலங்கின. இவன் பணக்காரன் இல்லை என்றதுமே இறந்து விழுந்த மனக்கோட்டை. அவன் திருமணம் ஆனவன் என்றதும் தரைமட்டம் ஆனது.

''அம்மா படித்து, படித்து சொன்னாங்களே. இவனை நம்பாதேன்னு சொன்னாங்களே. 'நான்தான் கேக்காம அவனை தூக்கி எறிஞ்சேன். இப்ப அனுபவிக்கறேன்.''

''சரி போகட்டும் விடு. அதுக்கு தற்கொலை என்னத்துக்கு? எதுக்கு விஷம் சாப்பிட்டே? குழந்தையும் இல்லே. அபார்ஷன் ஆயிடுச்சு.''

''ஆகட்டும்டி. ஒரு ஏமாத்துக்காரனின் குழந்தையை நான் சுமக்க விரும்பலை. அவன் ஏமாத்தினவன் மட்டுமல்ல. அயோக்கியனும் கூட.''

''என்ன சொல்றே?''

''எங்க மாமான்னு நம்பிகிட்டு ஒருத்தர்கிட்டே போனேனே. அப்ப அந்த ஆளு இவளை அழைச்சு பேசினாரு. இவன் கூலா சொல்றான். கொஞ்ச நாளைக்கு ஒரு சேஞ்ஜிக்காக என்னை வச்சிருந்தானாம். துட்டைக் குடுத்தியானா இவளை நீ கூட உபயோகப்படுத்தலாம்னு பேரம் பேசிகிட்டு இருக்கான். சரி மானம் போய் வாழப் போறோம்னு நெனச்சுகிட்டேன். என் நல்ல காலம். கடவுளுக்கு என் மேலே கொஞ்சம் இரக்கம் இருந்தது. அந்த வீட்டு ஜன்னலில் ஒரு ப்ளேடு அகப்பட்டது. அதை வச்சு கையை அறுத்துகிட்டேன். இங்கே கொண்டு வந்து சேத்தாங்க. இங்கேதான் விஷம் கிடைச்சது. சாப்பிட்டேன். கைகளில் பிளாஸ்திரியும், மனதில் ஆவேசமுமாக, கண்களில் உயிரில்லாமல் அவள் பேசப், பேச வருத்தமாக இருந்தது. ''எந்த பள்ளத்தில் நீ விழுவியோ. அடிபடுமோன்னு'' அம்மா துடிச்சிட்டு இருந்தாங்க. அந்த வலி அவளை விட நமக்குதாண்டி நிறைய இருக்கும்னு சொன்னாங்க. அதேபோல் ஆயிட்டுதே. அக்கா கிழிந்த நாராக கிடந்தாள். அவளின் வேதனை என் மனதை அல்லவா தாக்குகிறது. அம்மா சொன்னது சத்தியமான உண்மை. அக்காவைப் பார்க்க, பார்க்க வேதனை பொங்குகிறது. அவளை ஏமாற்றியவனை நினைக்க, நினைக்க ஆத்திரம் வந்தது.



ஒரு அரை மணி நேரம் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் மாதவன். மெதுவாக அருகே வந்து அமர்ந்தான்.

''நீங்க தைரியமா இருக்கணும். இந்த நேரத்துலே யாராவது தைரியத்தை இழப்பாங்களா? அக்காவுக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்களே அழுதா அப்புறம் என்ன சொல்றது? அவன் சொன்னதில் இருந்த உண்மை மனதைத் தொட, கண்ணைத் துடைத்துக் கொண்டு, தன்னை சுதாரித்துக் கொண்டாள்.

அந்த வார்டுக்கு டியூட்டிடாக்டர் யார் என்று விசாரித்தவள் அவரிடம் போனாள். மெதுவாக தன் அக்காவைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள்.

அக்கா, சரியாகி விட்டாள் என்றும் தேவையென்றால் இரவு பத்து மணிக்கு டிஸ்சார்ஜ் செய்து அழைத்துப் போகலாம் என்றார். காலையில் அழைத்துப் போனாலும் சரி என்றார்.

இரவில் சென்றால், சற்று நேரம் பேசிவிட்டு தூங்கி விடலாம். காலையில் என்றால் அம்மாவோடு வாக்குவாதம் வரலாம். அம்மா ஒன்றும் புரிந்து கொள்ளாதவளல்ல. இருந்தாலும் ஒன்று போட்டு ஒன்று ஏதாலும் பேசி பிரச்சனை சீரியஸ் ஆகிவிட்டால், இன்று இரவே அழைத்துப் போய் விட்டால் அதுதான் வசதி. டாக்டரிடம் பத்து மணிக்கு அழைத்து செல்வதாகச் சொல்லிவிட்டு பில் எத்தனை என்று கேட்டு கட்டுவதற்கு மாதவனைக் கேட்டு கொள்ளலாம் என்று நினைத்தபோது-

''எப்பவேணா அழைச்சிகிட்டு வாங்க. பணமெல்லாம் ப்ரீ பெய்ட் அதனால் பயப்பட வேண்டாம். எம்.எல்.ஏவே கட்டிட்டாருங்க.''

ஒரு நிமிடம் சோரேல் என்றது. இந்த பணத்தை அவன் எதுக்காக கட்டினான். இவளை வைத்து வியாபாரம் பண்ணவா? 'அக்கா வேண்டாம், வேண்டாம் என்று சொல்லியும் புதை குழியில் போய் விழுந்து விட்டாயே.' மனம் அடித்துக் கொண்டது.

காவ்யாவை அங்கயே விட்டு விட்டு, மறுபடியும் பத்து மணிக்கு மேல் மாதவன் அங்கே வந்து, கருணாவை டிஸ்சார்ஜ் செய்து அழைத்துக் கொண்டு வந்தான்.

வீட்டை நோக்கி வண்டி போனது. அம்மா வழக்கம் போல் தவித்துக் கொண்டிருந்தாள். காவ்யாவை மறுபடியும் முதலாளியுடன் பார்த்ததும் முகம் சுளித்தாள். இதென்ன தினம் இந்தப் பையன் வந்து விடுகிறான். காரின் பின் கதவைத் திறந்த காவ்யா, கருணாவை கைத்தாங்கலாக அழைத்து வர அதிர்ந்து போனாள் கமலம்.

## 9

"என்னம்மா, கருணாவுக்கு என்னாச்சு?"

"ஒண்ணுமில்லேம்மா. பேசாம வாங்க. "உள்ளே கைத்தாங்கலாக அழைத்துப் போய் உட்கார வைக்கிறாள்.

"அம்மா அக்காவை பெட்ரூமில் படுக்க வச்சிடு." பெட்ரூமில் படுக்கையில் படுக்க வைத்து கண் கலங்கிப் போய் கமலம் மகளைப் பார்த்தபோது, காவ்யா அவசரம், அவசரமாக ஹார்லிக்ஸ் கலந்து கொண்டு வருகிறாள். மாதவன் எல்லாச் சாமான்களையும் உள்ளே எடுத்து வைக்கிறான். பிறகு ஒரு ஓரமாக நின்று கொண்டு இருக்கிறான். கருணாவிற்கு



ஹார்லிக்ஸ் கலந்து கொடுத்தவள், நின்று கொண்டிருக்கும் மாதவனைப் பார்க்கிறாள். பாவம் மணி பதினொன்றைத் தொடுகிறது. இந்நேரம் சொகுசாக டிவியை பார்த்துக் கொண்டு அந்த ஏஸி அறையில் சாய்ந்து கொண்டு, ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பான். தனக்காகக் கால் கடுக்க நின்று கொண்டு, "சார் உக்காருங்க" என்கிறாள்.

"நோ, தேங்ஸ், நான் கெளம்பணும்." அவன் கிளம்பிச் சென்றவுடன் மெல்லிய பெருமூச்சு ஒன்று எழுந்தது. அவனைப் பார்த்தால் தூக்கம் தொலைந்து போகிறது. துக்கமும் மறைந்து போகிறது. இதெல்லாம் தவறுதான். இந்த நினைப்பை மறக்க வேண்டும். லட்சியங்கள் நிறைவேறும் வரை பெரிய ஆசையாக இருந்தாலும் தூக்கிப் போட வேண்டியதுதான். அவன் விடைபெற்றுச் சென்று காரில் ஏறி, மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தவள் பிறகு கதவைச் சாத்திவிட்டு மெதுவாக உள்ளே நுழைந்தாள்.

மற்றொரு சமயமாக இருந்தால் அம்மா வெடுக்கென்று கேள்வி கேட்டிருப்பாள். இப்போது கருணாவின் பரிதாபமான நிலை. போதாத குறைக்கு 'அம்மா... அம்மா...' என்று அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, சின்னக் குழந்தையாக அழும் கருணாவைப் பார்க்க, பார்க்க மனது ஆதங்கம் பொங்குகிறது.

அம்மாவும் வாய் விட்டு அழுகிறாள். 'கருணா அடியைத் தாங்கக் கூடியவள் இல்லை' என்பது நிஜமாகி விட்டது. 'ஐயோ. இந்தக் குழந்தையின் துக்கம் நெஞ்சைப் போட்டு பிசைகிறதே' கமலம் துடித்துக் கொண்டு இருக்கிறாள்.

"அம்மா, என்னை மன்னித்து விடு. நீ அத்தனை தூரம் சொல்லியும் விளையாட்டுத்தனமாகத் தோளைப்

பிடிக்கணும்னு அழற குழந்தை மாதிரி நான் இருந்துட்டேன். ஊரறிய பெரியவங்களா பாத்து வச்ச கல்யாணத்தை ஒடைச்சிட்டார் அப்பா. எங்களது போலிக் கல்யாணம். திருட்டுக் கல்யாணம். யாருக்கும் தெரியாமல் நடந்தது. இதுனால பிரச்சனை வரும்னு நான் நெனக்கலே இல்லை. எனக்கு அத்தனை சிந்திக்கிற அறிவைக் கூட அந்தக் கடவுள் ஏம்மா கொடுக்கலை. டி.வியிலே விளம்பரத்துலே வருமே, அதுமாதிரி பணக்காரங் கன்னா ஜாலியா சினிமா போறது, ஊட்டி போறது கொடைக்கானல் போறது. கால சுத்திகிட்டே இருப்பாங்க. மனைவி கேட்டதெல்லாம் வாங்கித் தருவாங்கன்னு நெனைச்சேனே. ஒரு பெண், ஆண்கிட்டே எதிர்பார்க்கற மாதிரி ஒரு ஆணும் பெண்கிட்டே எதிர்பார்ப்பான்னு தெரியாம போச்சு. பணக்காரனைக் கல்யாணம் செய்துகிட்டு ஆயுசுக்கும் ஒக்காந்து சாப்பிடலாம்னு நெனச்சேன். என்னோட கொஞ்ச நாள் ஜாலியா இருக்கற துக்காக லவ் பண்ற மாதிரி நடிச்சான்னு அப்புறம்தானே புரிந்தது. அம்மா அவன் ஏற்கனவே கல்யாணம் ஆகி இரண்டு குழந்தைகளுக்கு தகப்பனம்மா. அயோக்கிய ராஸ்கல். என்ன பண்ணான் தெரியுமா? அவன் வேலை செய்யற மொதலாளிகிட்டே என்னை துட்டுக்கு விக்க பாத்தாம்மா.''

இதையெல்லாம் கேட்க, கேட்க கமலம் அழுகிறாள். சிறு வயதில் என்னை என் கணவன் விட்ட மாதிரி இவள் வாழ்க்கையும் ஆகிப் போனதே. இது சாபக்கேடா. மனது நிலையில்லாமல் தவித்தது. ஏன் இப்படி ஆகிறது? கண்களில் நீர் கட்டி வழிகிறது. கருணா பிறந்த வீட்டை விட்டுப் போன செய்தி மாமியார், அம்மா எல்லோருக்குமே தெரியும்.

''போகட்டும் போ. மருமகன் வெக்கமில்லாமல் மாமியார் உழைப்பையா தின்னுவான் சே!'' என்கிறார் மாமியார்.



''விட்டது சனியன்னு நினைச்சுக்கோ. எல்லாத்தையும் நீயே செய்துகிட்டு இருந்தா அவர்களுக்கு பொறுப்பு வர வேண்டாமா?'' இது அம்மா.

ஆனால் கருணா திரும்பி அபார்ஷன் ஆகி வாழ்க்கையை இழந்து கலங்கிப் போய் வந்திருப்பதைப் பார்த்து மாமியார், அம்மா எல்லோருமே அதிர்ந்து போகிறார்கள்.

''எல்லாம் தான் தான் பெரிய இதுங்கற கர்வம். பெரியவர்களை மதிக்கறதில்லே. இந்தக் கல்யாணத்தை எங்களை வச்சுட்டு செய்திருந்தா அவனுக்கு ஒரு பயம் இருக்குமில்லே. ''மாமியார் சிடுசிடுக்க, ''பெண்ணுக்கு ஓவரா செல்லம் கொடுத்து வச்சிருக்கே. பெரியவங்க பாத்து செய்ய வேண்டியது எல்லாம் தானா முடிச்சிகிட்டு இப்ப கஷ்டம்னவுடனே நம்மகிட்டே வரணுமா? அடிச்சு விரட்டு. ''இது அம்மா. மாமியாரும் இதையே ஆமோதிக்கிறாள். ''ஆமா. அடிச்சு விரட்டு.'' நல்ல வேளை பெண் தூங்கிக் கொண்டு இருந்தாள். இவர்கள் சொன்னது எதுவுமே காதில் விழுந்திருக்காது. ஓரகத்திகள், மச்சினர்கள் எல்லோருமே அவளை வேலைக்கு அனுப்பி, ஹாஸ்டலில் விட்டுவிடச் சொன்னார்கள். இந்தப் பொண்ணாலே எத்தனை அவமானம். சட்டென்று கண்ணீர் வழிந்தது.

'இது என்ன நாகரீகம்? ஒருவர் தவறு செய்தார் என்றே வைத்துக் கொள்வோம். அதற்காக மன்னிப்பே கிடையாதா? அடித்து துரத்துவதுதான் நாகரீகமா? இவர்களிடம் கேட்க முடியாது. பாவம் என் பெண். என்ன செய்வது? யோசித்து, யோசித்து தலை சுற்றியது.

''அம்மா நீ சாப்பிட்டியா?'' காவ்யா கேட்க,

''மனசும் இல்லே. பசிக்கவும் இல்லே.''

''வாம்மா நீ. சின்ன, சின்ன சங்கடங்களுக்கு பயந்தா வாழ்க்கையிலே எதுவுமே சாதிக்க முடியாது. நீதானே சொல்லுவே. மறந்துட்டியா?''

''எல்லாமே மறந்து போச்சடி.'' மறுபடியும் கண்ணீரோடு மனம் பாரமாக அமர்ந்திருக்கும் அம்மாவை தேற்றுகிறாள். ''ஏதேனும் செய்ய முடியுமா பார்ப்போம்.''

கமலம் அன்று முழுவதும் பேசவில்லை. ஆழ்ந்த யோசனையில் இருந்தாள். முதலில் தன் பெண்ணை இப்படியே விட்டு விடக்கூடாது' இடிந்து விழுந்திருக்கும் அவளை குற்ற மனப்பான்மையில் இருந்து விடுவிக்க வேண்டும். பிறகு எதிர்காலத்தைப் பற்றி திட்டமிடல் வேண்டும். வெகுநேரம் யோசித்ததில் என்ன செய்ய வேண்டும் என்ற தெளிவான சிந்தனை உருவாயிற்று. பெண் சொல்வது போல் கஷ்டம் வந்தால் யோசிக்கணுமே தவிர அழக்கூடாது' கடலின் ஆழத்தில்இறங்காமல் முத்து எப்படி எடுக்க முடியும்? வாழ்க்கையும் அப்படித்தான். மனதைத் திடப்படுத்திக் கொள்கிறாள். பெண் ஏமாந்து போய் விட்டாள். இல்லை என்று சொல்லவில்லை. அதற்காக அடித்து துரத்த வேண்டுமா? இல்லை வாழ்க்கையே இல்லை என்று ஆகிவிடுமா?

அன்றையிலிருந்து கமலத்தின் கைக் குழந்தை ஆனாள் கருணா. 'அம்மா, அம்மா என்று நூறு அம்மா கூப்பிடும்மகள். ஒவ்வொரு முறையும் தான் ஏமாந்ததை சொல்லி அழுது. அம்மாவின் பேச்சை அலட்சியப்படுத்தியதை சொல்லி அழுது. அவளை தேற்றுவதற்குள் போதும் போதும் என்றானது. பிடிவாதம் பிடித்து அழும் சின்னக் குழந்தை போல் தன்னையே



தாழ்த்திக் கொண்டு, தன்னையே கடிந்து கொண்டு அழும் சின்னக் குழந்தை. எத்தனைசொன்னாலும்...

''நான் தப்பு பண்ணிட்டேன். தப்பு பண்ணிட்டேன் என்று அழும் சின்னக்குழந்தை இன்னும் அப்படித்தான்.

''அம்மா நான் தப்பு பண்ணிட்டேன். உனக்கு லாயக்கில்லாத குழந்தை நான்.

''நீ ஒரு தப்பும் பண்ணலைம்மா.''

''இல்லை. பொய். உன் பெருந்தன்மையைக் காமிக்குது. ரெண்டு பாட்டிகளும், ஏன் பெரியப்பா கூட என்னை வீட்டில்சேர்க்காதேன்னு சொல்லலே.''

''பயித்தியம் எல்லோருக்குமே ஒரு ஷாக். வெறுப்பிலே பேசறாங்க. அதை எல்லாம் நெஜமாவா எடுத்துப்பாங்க.''

''இல்லை நீ சமாதானப்படுத்தச் சொல்லுகிறாய்.''

''இல்லேம்மா தப்பே பண்ணியிருந்தா கூட என்ன? தப்பு பண்ற வயசு தானே அது.''

''அம்மா.''

''ஆமாம்மா. பதினாறு வயதிலேந்து இருபத்து இரண்டு வயது வரை கூட உலகம் புரியாத வயதுதான். அப்ப நேருகிற அவசரத் தவறுகள்.''

''என்னால உனக்கு எத்தனை தலை குனிவு.''

''இந்த காலத்துலே புடிச்சவனைக் கல்யாணம் பண்ணிக்கறது. ஆண் பிள்ளைகள் கூட ப்ரீயா இருக்கறது. அப்படீன்னு நிறைய சுதந்திரம் பெண்களுக்கு இருக்கு. அதுனால எதுவும்தப்பில்லே. கொஞ்சம் உஷாரா இருந்திருக்கலாம்.''

''அப்ப. அவன் கூட என் கல்யாணம் தப்பில்லைங்கறியா. அவன்தான் என் புருஷன்னு சொல்றியா?''

''நான் அப்படி சொல்லலியே.''

''பின்னே.''

''அசட்டுத்தனமா கற்பனையை வளத்துக்காதே. இப்ப ஒரு பாதையிலே போய்கிட்டே இருக்கோம். அந்தப் பாதை முடிவுல போகாதே. பாறை இருக்கும். முள்ளு இருக்கும். விழுந்துடப் போறேன்னு சொல்றாங்கன்னு வச்சுக்க. அப்படி சொல்லியும் உன்னை மாதிரி ஒரு பொண்ணுக்கு ஆர்வம் அதிகம் போய் பாக்குறா. பாறை வழுக்கி கீழே விழறா. நல்ல அடிவேற. இந்த நிலைமையிலே பாறையோட ஒரு முனையைப் பிடிச்சுகிட்டு தொங்கறா. அவ பொழைக்கலாமா? சாகலாமா?''

''இது என்ன கேள்விம்மா. உயிர்தான்மா முக்கியம். அடிபட்டா என்ன? தொங்கிகிட்டு இருக்கறவளை காப்பாத்தக் கூடாதா?''

''அதைத்தாம்மா நான் செய்யறேன். நீ சின்னக் குழந்தை ஒரு ஆர்வத்தில் தப்பு செய்துட்டே தப்புதான். இல்லைன்னு சாதிக்க வரலை. ஆனா அந்தத் தப்புக்கு என்ன தண்டனை. இந்த அனுபவமே ஒரு தண்டனை தானே. போதாதா? அதுக்கு மேலே உன்னை தண்டிக்கனுமா? மகள் பெருமூச்சு விட, ஏமாந்து தப்புன்னா, ஏமாத்தினது தப்பு இல்லையா? பாவம் இல்லையா? அவங்க எல்லாம் தலை நிமிர்ந்து நடக்கறாங்களே.''

அம்மாவின் உபதேசங்களில் மனம் பக்குவப்பட்டது.

''அம்மா என் கூடவே இரேன்''



''உன் கூடத்தான் இருக்கேன். கவலைப்படாதே. பெண்ணிடம் பேசிப்பேசி சரிப்படுத்தி பெண் ரெண்டு வாரங்களில் சகஜ நிலைக்கு வந்தாள். ஆனால், உறவினர் களுக்காக வெளியே வராமல் உள்ளே அடைகாத்தாள்.

''வேண்டாம்மா. யாரையும் போல் பண்ணப் பிடிக்கலை.'' இதோ அடுத்த உபதேசத்தை ஆரம்பித்தாள்.

''கருன்.''

''அம்மா.''

''ரோட்டிலே போறே. வழுக்கி விழுந்துட்டா. அப்புறம் ரோட்லே நடக்கவே மாட்டியா?''

''அம்மா. இதுவும் அதுவும் ஒண்ணா?''

''எல்லாமே ஒண்ணு தான். சரி எதிர்பாரத விபத்து தான். உன்னுடைய தப்பாலே முதல்லே ஆச்சு. ஆனா இது ஒரு விபத்து. அடிபட்ட ஒனக்கு சிகிச்சை தான் அளிக்கனுமே தவிர உன்னை யாராவது தண்டிப்பாங்களா?

இரண்டாவது உபதேசம் முடிந்ததும். அவள் சற்று தைரியமாக யார் வந்தாலும் பழையபடி சகஜமாக இருக்க முற்பட்டாள். ஆனால் நாம் நினைக்கற தெல்லாம் நடக்கறதா என்ன? வக்கிரம் பிடித்த மனிதர்கள் இருக்கும் உலகமல்லவா இது? அண்டை அது மட்டுமல்ல சொந்தம் கூடப் புரளி பேசியது.

''கொழுப்பெடுத்துட்டுப் போனா? அம்மாகாரி ஒக்கார வச்சு உபசாரம் செய்கிறாள். நானா இருந்தா வெட்டி போட்டிருப்பேன்''

கருணா அன்றெல்லாம் அழுது கொண்டு இருந்தாள். வீட்டிற்கு வரும் மனிதர்களை வேண்டுமானால் விரட்டி விடலாம். இவளே நாளைக்கு வெளி இடத்திற்கு செல்லும் போது இந்த மாதிரி ஏச்ச, பேச்சக்களை வாங்கித் தானே ஆகவேண்டும். போன செமிஸ்டரே போகவில்லை. இவளை காலேஜுக்கு அனுப்பத் தயார் படுத்தனும். மறுபடியும் பெண் அழத் தொடங்க.

''ஆமா ஏன் அழறே?'' 'எப்படி உன்னைப் பத்தி பேசினாங்கம்மா...''

''பேசட்டுமே?''

''என்னம்மா இது? ''நல்லா இருந்தாலே இந்த உலகம் பேசும்.தொடிச்ச வந்திருக்கே. உலகம் விட்டுடுமா?''

''என்னால தாங்க முடியலே?''

''தாங்கனும். தாங்கறதுக்கு உன்னைத் தயார் படுத்திக் கனும்.''

ரெண்டு குழந்தைகளையும் அழைச்சுக்கிட்டு வெளியே வந்தேனே எப்படி உங்கப்பாவை அடிச்சிட்டு வந்தேன். அவர் என் கழுத்தைபிடிச்சாரு. என்னைக் காப்பாத்திக்க சண்டை போட்டேன். எத்தனை பேர் என்னென்ன பேசினாங்க. எங்க அத்தை வீட்டுக்காரர் ஒருத்தர் ''போ போய் சீரழி. ஒன்னை யாரு கூப்பிட்டாங்கன்னு கேட்டார்?' கண்ணுக்கு எதிர்லே நடக்கிற அநியாயத்தை தட்டிக்கேட்க ஒருத்தனுக்கும் துப்பு கிடையாது. ஆனா வாயில வராத வார்த்தை எல்லாம் கேட்டாங்க. பிறந்த வீட்டிலேயும் பாவம் பார்க்கலை. அன்றைக்கு வெளியே போக அழுதிருந்தேன்னா என்னை தூக்கிப் போட்டார்களே பிறந்த வீடும், புகுந்த வீடும் இன்றைக்கு கொண்டாடி இருக்காது.



புருஷனை அடிச்சது வேறு' ஒரு பெண் எப்ப அடிப்பா? அதுவும் புழு மாதிரி வீட்டிலே உறைஞ்சு கிடந்தவ அடிக்கறான்னா அவ பிரச்சினை எந்த அளவுக்குப் போயிருக்கும்? இதை யாருமே யோசிக்கலை. இரண்டு காதுகள்ளேயும் பஞ்சை அடைச்சு வச்சுப்பேன். 'சதா கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன். புருஷனையா அடிக்கிறது? இப்படிப்பட்ட வாசகங்கள் தான். என்ன பண்ண முடியும்? அவசரத்தில் வந்த முடிவு. வந்த விமர்சனங்களை எல்லாம் காதுலேயே போட்டுக்கலை. இன்றைக்கு நான் ஒரு மனுஷியாக மதிக்கப்படலையா? நீ கண்டிப்பாக வெளியே வரணும். இந்த விமர்சனங்களை தாங்கிக்கொள்கிற மனப்பக்குவம் ஒனக்கு வரணும். 'நீ உன்னுடைய எம்.எஸ்.ஸியை முடிக்கனும். உனக்கு பிடித்த நல்ல வேலையில் சேரணும். செய்வியா?''

அம்மாவையே பார்க்கிறள் கருணா. இதெல்லாம் நடக்குமா!'' ''நடக்கனும். மூச்சு முட்டுமென்று பயந்தா மூழ்கி முத்தெடுக்க முடியாது. செய் - செஞ்சே ஆகனும்.''

''இல்லேம்மா இத்தனை நாள் காலேஜுக்கே போகலை. இனிமே போக முடியுமா?''

''நான் நாளைக்கு உங்க பிரின்ஸ்பாலை பார்க்கப் போறேன். என்ன சொல்கிறார் பார்ப்போம்.''

''ஒரு வேளை முடியாதுன்னு சொல்லிட்டா, கடைசி ரெண்டு செமிஸ்டரை பிரைவேட்டா எழுதிடு.''

''இது சத்தியப்படுமா?'' பெண் அம்மாவையே பார்த்தாள்.

''சாத்தியப்படனும்.''

அடுத்த நாளே கமலம், 'கருணாவின் காலேஜுக்கு சென்றாள். கருணாவைப் பற்றி பேச்சை எடுக்கும் போதே 'ரெண்டு மாதத்துக்கு மேலே வரலை...'' சற்று மிரட்டும் தொனியில் கேட்க, 'பெண்ணுக்கு உடம்பு சரியில்லை என்றும் இந்த முறை செமிஸ்டர் எழுத முடியுமா? என்று கமலம் கேட்க, முதலில் பிடிகொடுக்காதவள், அந்தக் கல்லூரியின் முதல் மாணவி காவ்யா சொன்னதும்' சற்று யோசித்தாள்.

''நாளைக்கு வாங்க என்ன செய்ய முடியும்னு சொல்றேன்.''

காவ்யா போய் என்ன பேசினாளோ தெரியாது. அடுத்த நாள் பிரின்ஸிபல் சிரித்தபடியே என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்ல, அடுத்த ரெண்டுநாட்களுக்குள் கருணா மறுபடியும் கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்தாள். இம்முறை துடிதுடிப்பான விளையாட்டுப்பெண்ணாக இல்லாமல் அமைதியான அடக்கமான தன் லட்சியம் ஒன்றே குறிக்கோளாக புதிய அவதாரம் எடுத்திருந்தாள் கருணா.

கமலத்தின் ஒருபெரிய முயற்சி வெற்றிதான். ஆனால் கமலத்தின் தாயாருக்குத் தான் இது பிடிக்கவே இல்லை.

''மறுபடியும் எதுக்கு காலேஜுக்கு அனுப்பறே.''

''அவ போகட்டும்மா..''

''அதான் ஏன்?''

''என்னம்மா படிப்பு, பாதியிலே நிக்குது.''

''அது உன் பொண்ணுக்குத் தெரியாதா? படிச்சு முடிச்சிட்டு லவ் பண்ணியிருக்கலாமில்லே.''

''முடிஞ்சதைப் பத்தி இப்ப என்னம்மா?''



''மறுபடியும் எதுவும் ஆரம்பிச்சிடக் கூடாதுன்னு தான் சொல்றேன்.''

அம்மாவுக்கு இவளால் பதில் சொல்ல முடியவில்லை. இவளின் சொற்களை அம்மா கேட்க மாட்டாள். எதிர்த்துக் கேள்வி விழும். கருணா காலேஜுக்கு போயிருக்கிறாள் என்றதும் மாமியாரும் முணுமுணுக்க ஆரம்பித்தாள்.

''ஏம்மா ஒரு தடவை பட்டது போதாதா? முடிஞ்சு போன திரியை இழுத்து விட்ட கதையாக அல்லவா இருக்கு. நாளை லேந்து அவ போக வேண்டாம் நிறுத்திடு. இதற்கும் அவளால் பதில் பேச முடியவில்லை.

'ம்' என்று மெதுவாக முணுமுணுத்தவள், யோசிக்கிறாள். வாழ்க்கையென்பது நாம் நிர்மாணிப்பது இல்லையா? அல்லது தான் ஆசைப்படுவது போல் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக் கூடாதா? மற்றவர்கள் சொல்லி அவர்கள் நினைத்த மாதிரி வாழ்வது தான் வாழ்க்கையா? லேசான அழுகையுடன் எரிச்சல் வந்தது. இந்த உறவுகளை 'உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போங்கள் என்று சொல்லலாம்' ஆனால் முடியாது. சுற்றத்தால் பிரயோசனம் இருக்கிறதோ இல்லையோ. ஆனால் சுற்றம் என்பது கட்டாயம் தேவையான ஒன்று. நான் தனி மனிதன் இல்லை என்று காட்டுகின்ற அடையாளம். இதை ரொம்பச் சாமர்த்தியமாகத் தவிர்க்க வேண்டும்.

அவர்கள் சொல்லியும் கருணா வழக்கம் போல் கல்லூரிக்குச் சென்று வந்து கொண்டிருந்தாள். இரு பெண்களை கல்லூரிக்கு அனுப்புவதும், சாப்பாடு கட்டிக்கொடுப்பதும், நடுவில்தன் வேலைகளைப் பார்ப்பதும் வாழ்க்கை சற்று வேகமாகத் தான் ஆனது.

காவ்யா கல்லூரிக்கும், அலுவலகத்திற்கும் போய் வந்த போது அம்மாவே திடீரென்று கேட்டாள்.

"ஏன் காவ்யா நீ வேலையை விட்டுடலாமா? இந்த செமிஸ்டர் நல்லா பண்ணனுமே."

"எனக்கு ஒண்ணும் கஷ்டமில்லே. தவிரவும் எக்ஸாட் டைம்லே லீவு கொடுக்க ஒத்துக்கிட்டாங்க."

"இல்லை..." அம்மா தயங்கிய போது,

"நீதானேம்மா சொன்னே. பெண்கள் தன் காலில் நிக்கனும்னு ஒரு சந்தர்ப்பம் வரும் போது ஏன் வேணாங்கறே."

"சரி." கமலம் அரை மனதுடன் சம்மதிக்கிறாள்.

காவ்யா மிக நல்ல பெண் என்று தெரியும். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எப்படி ஆகுமோ? ஒவ்வொரு நாளும் ஒன்பது, ஒன்பதரை என்று ஆகிவிடுகிறது. லேட்டாகும் நாளில் அந்தப் பிள்ளையே தன் காரில் கொண்டு வந்து விட்டு விடுகிறான். ஒரு பெண் பட்டது போதும். தன் பெண் கட்டாயம் புரிந்து கொள்வாள். ஆனால் கமலம் பயந்தது போல் ஒன்றும் நேரவில்லை. வழக்கம் போல் இம்முறையும் காவ்யா எல்லாப் பாடங்களிலும் முதல் மாணவியாக யுனிவர்ஸிடியில் கோல்ட் மெடல் வாங்கி தனித்து நின்றாள். தன் அலுவலகத்தில் இருக்கும் வேலைகளையும், ரொம்ப கச்சிதமாக முடித்து பெரிய திறமைசாலி என்றும் பெயர் எடுத்தாகி விட்டது.

கருணாவும் இரு செமிஸ்டர்களிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேறி கருணா - ஒரு தனியார் கம்பெனி போக ஆரம்பித்தாள். இப்போதெல்லாம் அம்மாவை ஒரு வேலை



செய்ய விடுவதில்லை கருணா, எல்லா வேலைகளையும் கூடமாடச் செய்கிறாள்.

"த பாரு நான் சம்பாதிக்கிறேன். இனிமே இந்தவத்தல் போடறேன். வடாம் போடறேன்னு உடம்பை கெடுத்துக்கக் கூடாது. அம்மாவிற்கு அன்பு கட்டளை போட்டு விட்டாள். தான் வாங்கும் சம்பளத்தை அப்படியே அம்மாவின் கையில் தருவாள். வேண்டாம் என்றாலும் கேட்க மாட்டாள்.

கமலம் சிறிது சிறிதாக எல்லா வேலைகளையும் விட்டுவிட்டு ஓய்வு எடுக்க ஆரம்பித்தாள். வீட்டில் கலர் டி.வி, ∴பிரிட்ஜ், வாஷிங் மெஷின் என்று எல்லாமே வந்தது.

கருணா, காவ்யா, இருவரும் போட்டிப் போட்டுக் கொண்டு அம்மாவிற்குச் செய்தனர். தீபாவளிக்கு அம்மாவிற் கென்று மூன்று பவுனில் சங்கிலியும் இரண்டு பவுனில் வளையலும் செய்து கொடுத்தனர். வீட்டில் லஷ்மி தாண்டவம் ஆடிற்று. 'கருணாவை விட்டு விடு' என்று சொன்னவர்கள் எல்லோரும் கருணாவை புகழ் மாலையில் தான் கோக்கின்றனர். இப்போதெல்லாம் பாட்டியே கருணாவிடம மணிக்கணக்காகப் பேசுகிறாள். அப்பாவின் அம்மா வேறு கருணாவைப் பற்றி கேட்டு ஒரே புகழாரம் வாழ்க்கையின் நல்ல தருணத்திற்கு வந்து விட்டோமா? காவ்யாவும் தன் படிப்பை முடித்து விட்டு தான் வேலை செய்த ஆபீஸ்லேயே ஒரு நல்ல வேலைக்குச் சேர்ந்து விட்டாள். மாதம் ஒன்பதாயிரம் ரூபாய்க்கு மேல் வருமானம்.

வீட்டில் செல்வம் தாண்டவமாடியது மட்டுமில்லாமல் மகிழ்ச்சியும் தாண்டவமாடியது.' இனிமேல் என் பெண் களுக்கு கஷ்டங்கள் இல்லை. வேலை கிடைத்து தன் காலிலே நிற்க ஆரம்பித்து விட்டார்கள். வேலையின் முக்கியத்துவம்,

படிப்பின் அவசியத்தையும் எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்து கொண்டு இருப்பார்கள். கையில் நாலு காசு இருந்தால் நெருங்கிய சொந்தம் கூட அந்தர் பல்டி அடிக்கும்.

இந்தக் கூத்துக்களை அன்றாட வாழ்க்கையில் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறோம். இனி மேல் கவலை இல்லை. வாழ்க்கையின் நிஜங்களைப் புரிந்து கொண்டனர் பெண்கள். இரு பெண்களுமே அம்மா ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடக் கூடாது என்று அன்பு கட்டளை இட்டுவிட்டனர். இருவரும் கலை எழுந்து மாய்ந்து, மாய்ந்து ஆளுக்கொரு வேலை செய்து விட்டு ஆபீசுக்கு ஓடுவார்கள். இரண்டு நாட்கள் லீவு கிடைத்தால் அம்மாவையும் கூட அழைத்துக் கொண்டு முக்கியமான கோவில்கள் மகாபலிபுரம், பீச்சு என்று சென்று பார்த்துவிட்டு வருவார்கள்.

ஐம்பது வயதிற்கு மேல் கமலம் சுகம் அனுபவிக்க ஆரம்பித்திருந்தாள். கொஞ்ச நேரம் தரையிலாவது படுக்க மாட்டோமா, ஓய்வு கிடைக்காதா என்று ஏங்கிய கட்டைக்கு பஞ்சணையே கிடைத்தது. நினைத்தது போல் எல்லாம் நடந்ததால் வீட்டில் ஆனந்தம், அமைதி சந்தோஷம் என்று எல்லாமே குடி கொண்டிருந்தது. இப்போதெல்லாம் கமலம் தினமும் கோவிலுக்குப் போகிறாள். முன்பெல்லாம் அதற்கு நேரமே இருந்ததில்லை. இப்போதெல்லாம் தேவையான அளவு வீட்டு வேலைகளைப் பெண்கள் பகிர்ந்து கொள்வதால் ஏற்றி இறக்கி என்று சமையல் வேலை மட்டும் தான். அதுவும் லீவு நாட்கள் வந்து விட்டால், புதுசு புதுசாகச் செய்கிறேன் என்று கருணா ஒரு நாளும், காவ்யா ஒருநாளும் என்று சமையற் கட்டை பிரித்துக் கொள்வார்கள். இந்த நாட்களுக்காக இத்தனை நாளும் காத்துக் கொண்டிருப்பதைப் போல வாழ்க்கை சுகமாய் போனது.



முன்பெல்லாம் எப்படி இருக்கிறாய்? என்று கூட கேட்காத மாமியார். இப்போதெல்லாம் தினமும் போனில் பேசுகிறாள். மருமகள் வாழ்க்கையிலேயே முதல் முறையாக பட்டுப் புடவைகள், நகைகள் என்று உயர்ந்தது அவளின் தரத்தையே உயர்த்திற்று. இதெல்லாம் சிந்தித்தவாறே அமர்ந்திருக்கிறாள் கமலம். இதனோடு கூட வேறு ஒரு சிந்தனை கூட அவள் மனதை தாக்க ஆரம்பித்தது. 'பெண்களிடம் தன் ஆசையைக் கூறலாமா?'' ஆசையாக எழும் மனதை அடக்கிக் கொள்கிறாள். 'அதற்கு இன்னும் நேரம் கனியவில்லை. கருணாவும், காவ்யாவும் அலுவலகத்திற்கு சென்று விட, அப்போது திடுப் திடுப்பென்று அம்மா வந்தாள்.

''என்ன ரெஸ்ட் ஆ?'' என்றாள். எனக்கு முடியவே இல்லை. மருமக முகத்தைப் பார்த்து வேலை செய்ய வேண்டியிருக்கு. உனக்கு பரவாயில்லே. பொண்ணுங்க நல்லா சம்பாதிக்கிறாங்க. ஓய்வும் கொடுத்திடுவாங்க. காலைல எழுந்து காபி போட்டு, அரிசி கழுவி வச்சிட்டு, கறிகாய் நறுக்கி, சோத்தை வடிச்சு, குழம்புக்கு ரெடி செய்து புளி குழம்பு செய்து, நறுக்கி வச்ச காய்கறியை எடுத்து பொரியல் செய்து, எத்தனை வேலை தெரியுமா? ஒரே மூச்சு வாங்கியது ஒடம்பே முடியலே.''

''சாதம், குழம்பு பொறியல் செய்தது தான். ஒரே வேலை தான் பதினைந்து தடவை மாற்றி, மாற்றி சொல்வதில் அம்மா எக்ஸ்பர்ட். அம்மாவின் பேச்சைக் கேட்டு புன்னகை மலர்ந்தது.

''ஆமா எத்தனை நாளைக்கு பொண்ணுங்க சம்பாதிச்சு சாப்பிடப் போறே. அதுங்களுக்கு கல்யாணம், கார்த்தின்னு ஏதாவது செய்ய மாட்டியா?'' என்றாள் அம்மா.

## 10

"என்னம்மா சொல்றே?"

"என்னடி புதுசா கேக்குறே? பொண்ணுக சம்பாதிச்சா போதுமா? அவளை வீட்டோட வச்சிகிட்டா உன் கடமை எங்க முடியுது? மொதல்ல அது அதுக்கு கல்யாணத்தைப் பண்ணு."

"என்னம்மா பேசறே. கருணாவோட கடந்த காலத்தைப் பத்தி தெரிஞ்சு கிட்டு அவளை யாரும்மா பண்ணிப்பாங்க."

"ஏன் தான் இப்படி இருக்கியோ தெரியலை. மொதல்ல காவ்யா கதையை முடி. அப்புறம் கருணாவைப் பத்தி யோசிச்சு ஒரு வழி பண்ணலாம். எத்தனையோ நல்ல மனது உடையவங்க இருக்கத்தான் இருக்காங்க."

"அம்மா சொன்னது நிஜம். சுகம் வந்தவுடன் எனக்கு எப்படி கடமை மறந்து போச்சு!

"காவ்யா ஜாதகம் காபி எடுத்துத் தரேன். பூ போட்டு, பேர் ராசி பார்த்து சரியான மருமகப் பிள்ளையை கொண்டு வாயேன்."

"சரிதான் இப்பத்தான் இதெல்லாம் யோசிப்பியா? நான் எல்லா ஏற்பாடும் செய்து விட்டேன். இந்தா நாலு பிள்ளைங்க ஜாதகம். நம்ம காவ்யாவோட நட்சத்திரம் எல்லாம் எனக்கு அத்துப்படி. பூசை போட்டு, பூ போட்டு பாத்து, பொருத்தம் இருக்கவே தான் இந்த நாலு மாப்பிள்ளைகளையும் செலக்ட் செய்தேன். ஒருவன், பி.யி இன்னொருவன் எம்.பி.ஏ இன்னொருவன் பி.சி.ஏ., கடைசி பையன் எம்.டெக் இவங்க எல்லாமே பெரிய வேலைல இருக்கிறவங்க. எது புடிக்குதோ செலக்ட் பண்ணு.



"ரொம்ப தேங்க்ஸ்ம்மா."

"எதுக்கும் மொதல்ல பொண்ணு கல்யாணத்தை சீக்கிரம் நிச்சயம் செய்து சாப்பாடு போடு."

கமலத்திற்கு சந்தோஷம் தாளவில்லை. இதற்குத் தான் பெரியவர்கள் வேண்டுமென்று சொல்வது? மனது ஆனந்தக் கூத்தாடியது.

"இத பாருடி. நாலுபேரோட போட்டோ இதுல வச்சிருக்கேன். பாரு புடிச்சதுன்னா பொண்ணுக்கிட்டே குடு. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரட்டும் பொண்ணை பார்க்கட்டும். இரண்டு பேருக்கும் பிடிச்சிருந்தால் கல்யாணம் தான்.

அன்று கருணா ஏதோ ஆபீசில் ஆடிட்டிங் என்றும், லேட்டாத்தான் வருவேன் என்று சொன்னதால் காவ்யா வந்ததுமே இதைக் காட்டலாம் என்று நினைத்தாள். முன்பு போல் பெண் என்ன நினைத்துக் கொள்வாளோ, சண்டை போடுவாளோ என்ற எண்ணம் எல்லாம் எப்போதோ ஒழிந்துபோனது. இப்போது தன் பெண்களுக்கெல்லாம் ஒரு தோழி மாதிரி இருக்கிறாள் கமலம். எந்த விஷயத்தைப் பற்றியும் நேரடியாக அவளிடம் பேசலாம்.

பஸ்ஸில் பக்கத்து வீட் ஆண்மகன் கண் அடித்ததிலிருந்து, தூரத்தே ஒருவன் ஹலோ என்று கைவீசி விட்டுப் போனவரை எல்லாவற்றையும்மே இருவரும் சொல்வார்கள். சிலவற்றிற்கு வேடிக்கையாக பதில் சொல்வாள். சிலவற்றிற்கு பொறுப்பாக பதில் சொல்வாள். எந்தச் சச்சரவும், சண்டையும் ஒருவரையொருவர் சரியாகப் புரிந்து கொள்ளாமல் தவறாகப் புரிந்து கொள்வதால் தான். அம்மாவை இரண்டு பெண்களுமே, மிக

மிக நன்றாகப் புரிந்து கொண்டதால் அந்த குடும்பத்தில் ஆனந்தம் தான்.

''சரிதான் கருணா இருக்கும் போது எனக்கு என்ன கல்யாணம்?''

''என்னடி அவ நிலைமையை தெரிஞ்சுகிட்டுத் தான் பேசறியா?''

''அவ வயசு என்ன தெரியுமாம்மா. இருபத்து அஞ்சு. இத்தனை இளமையான வயசுலே ஏதோ ஒரு தடவை தப்பு பண்ணிட்டான்னா அதுக்கு சாமியார் வாழ்க்கை வாழச் சொல்றாயா?'' அப்படி இல்லேடி. நாம பார்க்கிற எந்த வரனும் இதுக்கு ஏத்துப்பாங்கன்னு எனக்கு தோணலை.

''அம்மா சம்பந்தப்பட்டவர்களைப்போய்ப் பார்க்கிறேன். பேசறேன். வேண்டாம்னாலும் பரவாயில்லை. ஆனா வேணும்னா நமக்கு லாபம் தானே?'' பெண் சொல்வதெல்லாம் சரி - ஆனால் பலிக்குமா?

அன்று ஆபீசுக்குப் போன பெண் எம்.டி. மாதவன் முன் போய் நின்றாள். சாதாரணமாக ஒரே ஆபீசில் வேலை செய்தாலும், கணக்கு, வழக்குகளை சரி பார்க்கத் தினமும் ஒரு மணி நேரம் கூப்பிடுவான். அப்போது பார்த்துக் கொள்வது தான். வேலையோடு கூட கிண்டலும், கேலியும் அவளைச் சீண்டியும் பார்ப்பான். சாதாரணமாக சற்று ஜாலியான பேர்வழி. டென்ஷன் அதிகம் அடையாதவன். எதையும் பல வழிகளில் யோசித்து முடிவெடுப்பவன். 'இல்லை என்றால் இந்த இருபது வயதில் ஒரு பெரிய நிறுவனத்தின் எம்.டி. ஆக முடியுமா? எல்லாரையும் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவான். அவன் அறைக்குச் சென்று விட்டு வந்தாலே, எல்லாருடைய கண்ணும் மனமும் விகசித்துப் போய் விடும்.



இன்று லன்ச் அவரில் அவனைப் பார்க்கப்போன போது

''என்ன இந்த நேரத்திலே? சாப்பாடு கீப்பாடுன்னு கொண்டு வந்திருக்கீங்களா என்ன? நான் ஹோட்டல்லேயே ஆர்டர் பண்ணிட்டேனே'' என்று முகத்தைச் சாதாரணமாக வைத்துக் கொண்டு சொல்லுகிறான். இவனிடம் பிடித்த குணமே இது தான். வாயைத் திறந்தால் ஜோக்குகள், தமாஷ் தான். பெரிய மேலதிகாரி என்று ஒரு நாள் கூட மிரட்டியதில்லை' தட்டிக்கொடுத்து வேலை வாங்கும் குணம்.

''சார் இன்னிக்கு ஆப்டர்நூன் லீவு வேணும்.''

''ஏன் பொண்ணு பார்க்க வராங்களா?'' சட்டென்று சிரிக்கிறான் காவ்யா.

''நான் கொஞ்சம் வெளியே போகணும்.''

''இன்னிக்கு அகௌண்ட்ஸ் எல்லாம் டேலி பண்ணி முடிக்கணும். இன்னும் சில முக்கியமான மேட்டர்ஸ் எல்லாம் கம்ப்யூட்டரில் பீட் பண்ணணும்.

சட்டென்று முகம் தமாஷிலிருந்து நிஜத்திற்கு வந்தது. ''அம்மாவுக்கு போன் பண்ணி லேட்டாகும்னு சொல்லிடுங்க. இன்னிக்கு அந்த சிக்ஸ் மந்த் கணக்கையும் முடிச்சிட்டு பெண்டிங் வேலை இல்லாமல் முடிச்சிட்டுத் தான் போகணும். நைட் இங்கேயே சாப்பிட்டுக்கலாம்.

''ஓகே சார்.'' என்றவள் கிளம்பினாள்.

போட்டோவில் உள்ள முதல் மாப்பிள்ளையின் ஆபீசுக்குப் போன போது

''யார் நீங்க? என்ன வேணும்?'' என்றான்.

அக்காவைப் பற்றி பேச்சை எடுக்கு முன் கல்யாணம் என்று சொல்வதைக் கேட்டவன்

"மேடம் கல்யாண விஷயம் எல்லாம் முடிவே பண்ணலே." எதுவாக இருந்தாலும் பேரன்ட்ஸை போய்ப் பாருங்க." என்றான் வெடுக்கென்று. அடுத்தவன் ஊரிலேயே இல்லை. கடைசி பையன் தான் இவளை வரவேற்று காபியைக் கொடுத்து, உபசரித்து பின் இவள் சொன்ன விஷயங்களை ஒன்று விடாமல் கேட்டு, கடைசியில் பதில் சொல்கிறான்.

"நான் பண்ணிக்கறது கல்யாணம். சோஷியல் சர்வீஸ் அல்ல. எனக்கு வர மனைவி என் இஷ்டப்படி தான் இருக்கனும். தவறு செய்தவங்களுக்கு மறு வாழ்வு மையம் எதையும் நான் அமைக்கலை."

சற்று சோர்வாக திரும்பி வந்த போது மணி ஐந்தைத் தொட்டிருந்தது. ஆபீஸில் எல்லோருமே வீட்டுக்குப் போய் இருந்தார்கள். மாதவன் ஏதோ கணக்குகளை சரிபார்த்துக் கொண்டிருந்தான்.

"சார்" என்று குரல் கேட்டு நிமிர்ந்தான்.

"என்ன வேணும் சொல்லுங்க" ஒ நீங்களா? என்ன போன காரியம் ஸக்ஸஸா?" அவள் முகத்தைப் பார்த்தபடி கூறினான்.

"ச்ச..." என்று உதட்டை பிதுக்கியவள் "உலகத்துல நல்ல மனச இருக்கிறவங்க கூட ரொம்ப பேர் இல்லைன்னு தெரியுது."

அவனின் எதிர் இருக்கையில் அமர்ந்த வாறே சொல்ல

"ஏம்மா என்ன ஆச்சு?" அவள் மெதுவாக விஷயத்தைக் கூற



"இட் ஈஸ் ஹைலி இடியாடிக்" என்றான்.

"ஏன் சார் இடியாடிக்குன்னு சொல்றீங்க?"

"த பாருங்க காவ்யா, உங்க அக்கா தப்பு பண்ணிட்டு இப்ப திருந்திட்டாங்க. அதுக்காக இன்னொருத்தனை வாழ்க்கையை கொடுன்னு கேக்கறது முட்டாள்தனம். திருமணங்கறது பரஸ்பர மரியாதை, அன்பு தானா பிறக்கனும். நான் உன்னை விட உயர்ந்தவன் என்ற எண்ணம் வந்துச்சன்னா, ரெண்டு பேரும் ஒத்துப் போக முடியாது' அதுக்கு பதிலா நீங்க பிராட் மைண்டட் ஆளு வேணும்னு விளம்பரம் கொடுக்கலாம். இல்லேன்னா அவங்க மேலே விருப்பப்பட்டு அவங்களோடு பழகறவனுக்கு அவங்களை முடிச்சி வைக்கலாம் "நீங்க எப்படி இப்படி ஒரு முடிவெடுத்தீங்க."

காவ்யாவிற்கு சற்று புரியத்தான் இல்லை' நேரடியாகப் போனால் நல்லது தான். இதை ஏன் குறை சொல்கிறார்.

"இத பாருங்க மேடம் உங்க அக்காவோட சம்பந்தப்பட்ட அவங்க விரும்பறவனுக்கு இல்லைன்னா இப்படிப்பட்ட வாழ்க்கையை கொடுக்கணும்னு நினைச்சவனுக்கு உங்க அக்காவை கல்யாணம் செய்து கொடுங்க. அது தான் வொர்க் ஔட் ஆகும். அதை விட்டுட்டு இப்படிப் போனா? பேசாம மூணு வரனுக்கும் ஒங்க அம்மா சொன்ன மாதிரி மொதல்ல பச்சைக் கொடி காட்டுங்க. உங்க கல்யாணம் நல்லா நடந்தா அப்புறம் ஆட மேடிக்கா அக்காவுக்கு தேடலாம்."

அவன் தமாஷாக சொல்வது போல் சொல்ல, 'அவன் உண்மையைப் பேசுகிறானா, இல்லை பொய்யா?" உண்மை என்றால் என்னை வேறு இடத்தில் திருமணம் புரிய

சொல்கிறானா? சட்டென்று மனம் இடிந்து போனது. இரண்டு பேருமே ரொம்ப கண்யமாய் பழகுகிறவர்கள் தான். அவன் ஒரு நாள்கூட விகல்பமாகவோ இல்லை தவறுதலாகவோ பழக முயற்சி செய்ததே இல்லை. சதா குறும்பும், வேடிக்கை பேச்சுகளும். மூன்று மணி நேரம் வேலை செய்தாலும் அவன் பேச்சில் நெளிவு சுளிவு ரசனைகளில் களைப்பு கொஞ்சம் கூடத் தெரியாத வண்ணம் போக்கிடுவான். அவன் இருக்கும் போது எல்லாத் துன்பங்களும் தொலைந்த மாதிரியே தோன்றும் எப்படிக் கடவுளிடம் எல்லாப் பாரங்களையும் போட்டு விட்டு நிம்மதியாக இருக்கிறோமோ, அதே போல் அவனைப் பார்த்தாலே இது வரை அடித்துக் கொண்டிருக்கிற துன்பங்கள் கூட மறைந்து விடும். எத்தனை தலை போகிற பிரச்சினையாக இருந்தாலும் சட்டென்று மனதை இளக வைத்து விடுவார். தெரிந்தோ தெரியாமலோ மனம் அவனிடம் போய் ஒட்டிக் கொண்டது. அதற்காக அவனோடு டூயட் பாட வேண்டும். சந்தோஷமாக ஆட வேண்டும் என்று அவள் நினைத்ததே இல்லை. அவன் அருகாமை அவளுக்குப் பிடித்திருக்கிறது. அதில் ஒரு பாதுகாப்பு இருக்கிறது. எல்லா துக்கங்களையும் அவன் தலையில் போட்டு விட்டு, தூரப்போய் அப்பாடா என்று ஓய்வு எடுக்கும் ஒரு இன்பம் இருக்கிறது. இந்த வேலையில் அவனால் ஈடுபாட்டோடு செய்வது கூட அவனால் தான்.

ஒரு முறை கருணா தனக்கும் அவளுக்கும் ஒரே மாதிரியான சிவப்பில் ஒரு புடவை எடுத்திருந்தாள். அதில் ஒரு பச்சை பார்டர். அதில் ரவிக்கை. அக்கா வாங்கி கொடுத்தாளே என்று அதைக் கட்டிக் கொண்டு ஆபீஸ் போனபோது ஆபீசில் அனைவரின் பார்வையும் தன்புறம் திரும்பியது. மாதவன் இவளைப் பார்த்ததுமே லேசாக விசிலடித்தான்.



''இந்த ஜாக்கெட்டையும் ரெட் கலருக்கு மாத்திட்டியான்னா மாரியம்மான்னு உன்னைப் பார்த்து எல்லாரும் கும்பிடுவாங்க. கடவுள் பக்தி சொட்ட... சொட்ட வந்திருக்கியே. நேர்த்திக் கடனா?'' என்றான்.

இந்த உடை எல்லாருடைய கவனத்தையும் கவர்கிறது என்று நினைத்தாள். இவன் கேலி செய்த அன்றிலிருந்து அந்தப் புடவையை தொடுவதே இல்லை.

அவனுக்கு கண் உறுத்தலாக உள்ளது என்றால் அதை அணியாமல் தவிர்த்து விடுவாள். ஒருமுறை ரோஸில் மணிகள் எல்லாம் புதைக்கப்பட்ட சுடிதார் போட்டுக் கொண்டு வந்திருந்தாள்.

''இந்த மிட்டாய் கலர் உங்களுக்கு ரொம்ப பிடிக்குமா?'' கிண்டல் செய்தான். அதிலிருந்து அப்புறம் அதையும் தொடவில்லை. தன் ஆசையைப் பொருட்படுத்தினதே இல்லை. ஒரு முறை பொட்டு ஒன்று சிறியது போல் இல்லாமல் நாகம் எல்லாம் போட்டு இருபக்கமும் நிலவு போட்டு, ஜிகினா, எல்லாம் தூவி அமர்க்களமாக இருந்தது. 'பார்த்தவர்கள் எல்லாம் நன்றாக உள்ளது என்று கை கொடுத்த போது இவன் அறையில் நுழைந்த போதே...

''அடடா உங்கள் நெற்றிக்கு என்ன ஆச்சு? ஏதாவும் அடிகிடி பட்டுடுச்சா'' என்ற அக்கறையாக வினை. அதிலிருந்து அந்த மாதிரி பொட்டுக்கெல்லாம் விடுதலை கொடுத்தாள்.

ஆழ்ந்த நீலநிற சுடிதார், பச்சையில் ரோஸ் காம்பினேஷன் உள்ள சுடிதார், அரக்கு கலர் புடவை இதெல்லாம் போட்டு வந்தாலே

''குட் யு ஆர் லுக்கிங் லோ நைஸ்'' என்பான்.

அவனுடைய வார்த்தைகளில் தன்னைப் பற்றி பெருமையாக ஏதேனும் பேசமாட்டானா என்று ஏங்கியிருக்கிறாள். எத்தனையோ அறிவாளியாக இருந்தாலும் சில நேரங்களில் மனம் பச்சைக் குழந்தையாகி விடுகிறது. அதுவும் அவனைப் பார்த்தாலே மனம் பச்சைக் குழந்தையாகவே ஆகி விடுகிறது. அவனுடைய சொல்லுக்காக மனம் ஏங்குகிறது. அவன் மிக மிக புத்திசாலி. அவனுக்குப் புரியாமல் இருக்குமா என்ன? இல்லை புரியாதது போல் நடிக்கிறானா? தான் வேறு இடத்தில் திருமணம் புரிந்தால் இவனுக்குப் பரவாயில்லையா? மனதில் என்னென்னவோ எண்ண அலைகள். ஒரு வேளை என்னுடன் அவன் சாதாரணமாகப் பேசுகிறானா? அவன் அலுவலகத்தில் இருக்கும் எல்லோருமே சிரிக்கும் படிதான் பதிலே பேசுவான். எம்.டி எம்.டி என்று கல்யாணமாகாத பெண்களுக்கெல்லாம் அவன் மேல் ஒரு நாட்டம். ஒரு வேளை மற்ற பெண்களிடம் பழகுவது போல் தன்னிடம் சாதாரணமாகத் தான் பழகுகிறானா? தான்தான் அவனைத் தவறாகப் புரிந்து கொண்டோமா? மனது கிடந்து அல்லல் பட்டது. "என்ன கேட்டுக்கிட்டே இருக்கேன், பதிலே காணோம், நான் வேணா பையன்களை பாத்துட்டு வரட்டுமா?"

ஏற்கனவே கருங்கிய முகம் பின்னும் கருங்கிப் போனது. இவன் மனதில் தனக்கு என்ன இடத்தைக் கொடுத்து இருக்கிறான். இவன் தன்னை காதலிக்கவே இல்லையா? ஒரு வேளை எல்லாரிடமும் இனிக்க இனிக்கப் பேசியதை தான் தவறாக எடுத்துக் கொண்டு விட்டோமா? நினைக்க நினைக்க கண்களின் ஓரத்தில் லேசாக நீர் திரண்டது. ம்... தன் மனதை வெளிப்படுத்தக் கூடாது. அவன் தன்னைக் காதலிக்கவே இல்லை என்றால் மிகவும் கேவலமாகிவிடும். கொதிக்கும் மனதை அடக்கி வைத்தாள்.



உதட்டில் ஒரு புன்னகையோடு "வித் பிளஷர். ஆனால் மொதல்ல கருணா கல்யாணம் தான். அப்புறம் நீங்களே நல்ல மாப்பிள்ளையாகப் பாருங்களேன்."

அவன் முகத்தில் மாறுதல் தோன்றுகிறதா?ம்.. அவன் அதே சிரித்த முகத்துடன் 'சூர்' என்கிறான். அன்று வேலையிலிருந்து நழுவும் மனதை கஷ்டப்பட்டு நிறுத்தி வேலையைச் செய்து விட்டு வரும்போதே மணி பத்தை தொட்டுக் கொண்டிருந்தது. வழக்கம் போல் இரவு உணவையும் தாங்கள் இருந்த இடத்திற்கே வரவழைத்தான்.

"ஏன் டல்லா இருக்கீங்க? சாப்பாடு பிடிக்கலையா?"

"இல்லை அக்கா கல்யாணம் நல்லபடியா நடக்கணும்ங்கற டென்ஷன்."

"அதெல்லாம் நடக்கிற டைம் வரும் போது நடக்கும். அதுக்கு இப்பவே வருத்தப்படுவாங்களா? கண் வேற கலங்கிப் போயிருக்கு. தூரத்திலே இருந்த மை கரைஞ்சு எனக்கே பயமாயிருக்கு. முகத்தை எல்லாம் துடைச்சிட்டு வாங்க."

"கண்ணும் முகமும் அத்தனை விகாரமாகவா இருக்கிறது. சனியன் என்னை வெளிப்படுத்தக் கூடாது என்றாலும் எப்படியோ தெரிந்து விடுகிறது.

சட்டென்று முகத்தைத் துடைத்துக் கொண்டு வந்து "ஓகே ஸார். நான் கௌம்பறேன், என்ற போது.

"எங்கே?" என்றான்.

"எங்கேயா? சரிதான். என் வீட்டுக்குத் தான். அம்மா தேடமாட்டாங்களா?"

''அதான் என் கார்ல டிராப் பண்ணப் போறேன் இல்லே..''

''வேலை முடிஞ்சிடுச்சி இல்லையா? அப்புறம் இங்கே என்ன வேலை?''

''என்ன சொல்றீங்க. நீ போய் பஸ் ஸ்டாண்டுலே நின்னாலும், கடைசி பஸ்லூம் போயிருக்கும். இப்ப உன்னை யாரு தனியா அனுப்புவாங்க. கொஞ்சம் இருங்க நானும் வாஷ் பண்ணிட்டு டிரஸ் சேன்ஜ் பண்ணிட்டு வரேன்.''

அவன் ஒருமையில் தன்னை அழைத்தது ஒரு மாதிரியாக இருந்தாலும் மனம் கூப்பாடு போட்டது. இவள் எதற்காக பயந்து ஓட வேண்டும். அவனுக்கு உண்மை தெரிந்தால் கேலி செய்ய மாட்டானா?

''சரி சார் சீக்கிரம் வாங்க.'' அவன் மேலே போகாமல் அலுவல் அறையை ஒட்டியிருந்த அவனுடையதனி அறைக்குப் போய் விட்டான்.

லேசான மிதமான, மூக்குக்கு இதத்தை தரும் மணம். பாரின் சோப் போல இருக்கிறது. தலைக்கு ஷாம்பூ போட்டு குளித்து விட்டு, டர்க்கி டவலில் தைக்கப்பட்டிருந்த ஜாக்கெட்டை அணிந்து வெளியே வந்தவன்,

''ஒன் செக்கண்ட். இதோ டிரஸ் சேன்ஜ் பண்ணிகிட்டு வந்திடறேன். எடுத்துகிட்டு வர மறந்துட்டேன்.'' என்றான்.

''அந்தக் கீயை கொடுங்க'' அழகான டீஷர்ட், ஷர்ட், பேண்ட் என்ற இவனைப் பார்த்துவிட்டு, பைஜாமாவில் பார்த்தாலே மனம் கலங்கிப் போய் விடுகிறது. இன்னும் டர்க்கிடவலில் ஜாக்கெட் போல் அணிந்து வந்தவனைப் பார்த்ததுமே, ஓடிப்போய் அணைத்துக் கொள்ள என்று மனம் பரபரக்க சட்டென்று சாவியை எடுத்துக் கொடுத்தாள்.



''தாங்க்யூ'' என்றவன் தன் தலையை வேகமாக சிலுப்ப, நீர்த்திவலைகள் இவள் உடல், முகம் என்று பரந்தது.

''கடவுளே.. என்ன சோதனை இது? நானே வெட்கத்தை விட்டு அவனிடம் போய் கெஞ்சி, என்னை அப்படி எல்லாம் ஆக்கிவிடாதேப்பா. சீக்கிரம் வீட்டுக்குப் போய் தொலைந்தால் தேவலை. இறங்கி வரும் போது நைட் கவுனோடு காரில் அமர்ந்தவனைப் பார்க்க, பார்க்க உணர்ச்சிகள் தறிகெட்டு ஓடியது. அந்த அமுல் பேபி கன்னத்தைக் கிள்ளி அதில் விழும் குழியை தொட்டுப் பார்க்க ஆசை. கண்களை காருக்கு வெளியே செலுத்தினாள். வீடு வந்து சேர்ந்தது கூடத் தெரியாத ஒரு சிந்தனை. அவள் ஏதோ யோசனையில் வெறிக்கப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அவன் வீட்டிற்கு சில அடிகள் தூரத்தில் காரை நிறுத்தி விட்டு தன்னையே பார்ப்பதைக் கூட அவள் அறியவில்லை.

'ம்.. அந்த ஜன்னலுக்கு வெளியே அப்படி என்ன இருக்கு? நானும் நீ பாக்கறதை பாக்கனும்னு ஒரு கால் மணி நேரமா தேடறேன். கண்டு பிடிக்க முடியலையே' என்ன தேடற. சொன்னா நானும் சேர்ந்து தேடுவேனில்லை. தன் வீட்டுக்கு சிறிது தூரத்திற்கு முன்னால் கார் நிற்பதைப் பார்க்கிறாள்.

''சே.. தான் ஒரு முட்டாள் என்பதை காட்டியே விட்டோம். ஆனாலும் இவன் ரொம்ப டீஸிங் டைப் தான்.

''தேங்யூ ஸார்.'' வேறென்ன அக்கா கவலை தான்.' சொன்னவள் 'பை' என்று இறங்கி நடந்தாள்.

அவன் சிரித்தபடி காரைக் கிளப்பிக் கொண்டு போவது தெரிந்தது. ஆஜானுபாகுவான அவன் தோற்றமும், பரந்து விரிந்த அவன் மார்பும், பளீரென்ற அந்த வெண்மையும்,

அளவெடுத்தாற் போல் வைக்கப்பட்ட மீசையும் அலை அலையான கிராப்பும் அவனின் நினைவுகளை அலைக் கழித்தது.

என்னதான் நினைக்கக் கூடாது என்றாலும் மனதில் ஒவ்வொரு நிகழ்ச்சியாக வந்து போயின. அவனை அடைய மாட்டோமா. தனக்கு யாராவது உதவி செய்வார்களா? யார் என்ன செய்ய முடியும்? அவனின் விருப்பம் தெரிந்தால் செய்யலாம்.

வீட்டினுள் நுழையும் போதே அம்மா பரபரத்தாள். "என்னம்மா முகமெல்லாம் சிவந்து இருக்கு. கண்கலங்கி இருக்கு." கருணா வேறு ஹாலிலேயே உட்கார்ந்திருந்தாள்.

"என்ன காவ்யா? உடம்பு சரியில்லையா?" சட்டென்று பரிவாக உடம்பில் கை வைத்துப் பார்த்தாள். அக்காவும், அம்மாவும் தனக்காக பதறிக் கொண்டு வருவதைப் பார்க்கிறாள்.

"பாவம் ரெண்டு பேரும். என் மேல் எத்தனை அன்பு." தான் களைத்துப் போய் வேலை செய்து விட்டு வந்தால் கூட லட்சியம் பண்ணாத அக்காவா இவள்? முகமெங்கும் பரிவு. தங்கையின் கலக்கத்தைப் போக்க வேண்டும் என்ற ஆர்வம். தன்னால் ஏதேனும் உதவ முடியுமா என்ற ஆசை.

"பாவம் அக்கா.. எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறாள் அப்பப்பா!" அம்மா அதற்கு மேல் பாவம். கணவன் என்ற பந்தமே இல்லாமல் வாழ்ந்திருக்கிறாள். அக்கா அவள் வாழ்க்கையும் பாதியில் கருகிய மொட்டானது. இது அத்தனையும்தெரிந்தும் என் மனம் ஏன் அவனை நோக்கி ஓடுகிறது. அவனை நினைத்து நினைத்து ஏங்கி.. ஏங்கி.



சட்டென்று அழுகை வருகிறது. இருபத்து ஐந்து வயதில் குழந்தைகளோடு வெளியே வந்த அம்மாவால் மனதை அடக்க முடிந்தது என்னால் ஏன் முடியவில்லை? இத்தனை படித்தும் நல்ல வேலையில் இருந்தும் அம்மா சொல்வது போல் சொந்தக் காலில் நின்றும், மனம் மட்டும் ஏன் இப்படி பலவீனப்பட்டு நிற்கிறது. தான் இத்தனை வீக்காகவா இருக்கிறோம். அவனை நினைத்துநினைத்து அழுது அழுது மனம் ஏங்கிக்கொண்டு இருக்கிறது. என்னதான் அம்மா தோழி போல் பேசினாலும் அவளிடம் உண்மையைப் பேச முடியாது.

"உன் மனது ஏன் இத்தனை பலவீனப்பட்டு போய் விட்டது." என்று கேட்டால் என்ன சொல்வது?"

சாதாரணமாக இருக்க முயன்று தோற்றாள். "என்னாச்சு" மறுபடியும் அம்மா கேட்கிறாள்.

"காவ்யா என்னம்மா ஆச்சு?" இது கருணா.

"ஒன்னுமில்லேம்மா. ஒரே வேலை இன்னிக்கு அஞ்சு மணிக்கு ஆரம்பிச்ச வேலை பத்தாயிடுச்சு. முடியலே இல்லை."

சட்டென்று புடவையைக் கூட மாற்றாமல் படுக்கையில் சரிந்தாள்.

"காவ்யா. என்னம்மா?" அம்மா பதறிவிடுகிறாள். நெஞ்சையும், நெற்றியையும் பார்த்து விட்டு "ஐயையோ உடம்பு காயுதே." கருணா ஓடிச் சென்று மெட்டாசினையும் சுடுநீரையும் எடுத்துவந்து அவள் வாயில் போட்டு நீர் ஊற்றுகிறாள். காவ்யா படுக்கையில் அப்படியே சுருண்டு படுக்கிறாள். அம்மாவும், கருணாவும் பக்கத்திலேயே வந்து அமர்ந்திருக்கிறார்கள். அம்மா விக்ஸை எடுத்து காவ்யாவின் நெஞ்சுக் கூட்டில் தடவுகிறாள்.

கொஞ்ச நேரம் மாதவனைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்த மனது ஒரு நிதானத்துக்கு வந்தது. மூளை சோர்ந்து போக, கண்கள் மூட ஒரு ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தாள். ''பாவம் குழந்தை அல்லாடிட்டு வந்திருக்கிறாள். இத்தனை நாள் படிப்பு வேலைன்னு ஓடியாச்சு. எத்தனை தடவை ஓட முடியும்?''

''இவளும் கொழந்தை தானே.'' கருணா தங்கையின் தலையில் கை வைத்து தடவுகிறாள்.

அடுத்த நாள் காவ்யாவால் எழுந்திருக்கவே முடியவில்லை. கருகருவென்று ஓடிக் கொண்டிருந்த காவ்யா, பிடுங்கிப் போட்ட வாழைக் குருத்தாகக் கிடந்தாள். காலையில் கருணாவும் அம்மாவுக்கு கூடமாட செய்து, தங்கைக்கு கஞ்சியைப் போட்டு வைத்து, பிரட்டை வாங்கி வைத்து டாக்டரிடம் வாடி என்று கூப்பிட, எனக்கு ஒன்னுமில்லே. கொஞ்சம் பெய்ன்'' என்று படுக்கையில் கண்ணை மூடி படுக்கிறாள்.

''காவ்யா டாக்டர்கிட்டே போயிட்டு வரலாம்மா'' இது அம்மா.

''சாதாரண ஜுரத்துக்கெல்லாம் என்னம்மா. மெடிசன் போட்டா சரியாயிடும். மறுபடியும் உடம்பெல்லாம் வின் வின்னென்று வலிக்க திரும்பிப் படுக்கிறாள். கண்களை மூடுகிறாள். மூடினாலும் அவன் உருவம் தான் தோன்றுகிறது. டர்க்கி டவலில் ஜாக்கெட் அணிந்த அந்த உருவம் தான் கண் முன் நின்றது. அவன் தலையை சிலுப்ப தன் மேல் நீர்பட்டதையும் நினைத்துக் கொள்கிறாள். இந்த நினைவுகள் வரக் கூடாது. என்று விரட்ட, விரட்ட - மறுபடியும் அல்லவா வந்து விடுகிறது.



'சே! ஒரு நல்ல ஆபீசில் வேலை கிடைத்தால் போய் விட வேண்டும். இல்லையேல் இவனின் நினைவுகள் இன்னும் பயங்கரமாக ஆட்டுவிக்கும். முதலில் வேறு வேலை தேட வேண்டும். பின் அவனை விட்டு விலகிவிட வேண்டும். விலகுதல் என்று எண்ணும் போதே மனதை அறுத்தது. இல்லை கட்டாயமாக விலகிப் போய்த் தான் ஆக வேண்டும். இனிமேல் இங்கே இருந்தால் கட்டவிழ்த்துப் போன மனதைக் கட்ட முடியாது.

''என்ன காவ்யா பிடிவாதம்?''

''டாக்டர்கிட்டே வா. ஒரு நாள் முழுவதும் படுத்ததில்லே. இது என்ன இது?'' அம்மா கண்கலங்க.

''எனக்கு ஒண்ணும் இல்லேம்மா'' என்கிற காவ்யா

சொல்லி முடிக்கவில்லை. மாதவன் பரபரப்பாக உள்ளே வந்தான். ''என்ன ஆன்ட்டி இன்னைக்கு காவ்யாவுக்கு உடம்பு சரியில்லேன்னு போன் பண்ணீங்களே. டாக்டர்கிட்டே காண்பிச்சீங்களா? டாக்டர் என்ன சொன்னார்?'' என்றவாறே வந்தான் மாதவன்.

## 11

''இல்லைப்பா. ஒண்ணுமில்லேன்னு பிடிவாதம் பிடிக்கறா?''

''ஒண்ணும் இல்லையா?''

சட்டென்று நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். உடம்பு கொதித்தது. ''என்னங்க அவங்க அப்படித்தான் சொல்லுவாங்க.' அதுக்காக டாக்டர்கிட்டே காண்பிக்காம இருப்பீங்களா? ஸிஸ்டர் நீங்க

கூட வாங்க. டாக்டர்கிட்டே காண்பிச்சிட்டு வரலாம்'' கருணாவைப் பார்த்தபடி சொன்னான்.

''இல்லே எனக்கு ஒண்ணும் இல்லே?'' அவள் வரவில்லையென்று எதிர்க்க.

''ஆன்ட்டி டாக்டர்கிட்டே காண்பிச்சிட்டு வந்திடட்டுமா? பெரிசா ஏதாவது வந்துடப்போவுது'' அவன் கேட்க.

''அழைச்சுகிட்டுப் போப்பா'' என்கிறாள் கமலத்தின் தாய்.

''வேண்டாம். வேண்டாம். அவள் மறுக்க, மறுக்க சட்டென்று கைலாகு கொடுத்து தூக்கி காரினுள் கிடத்துகிறான்.

''ஸிஸ்டர் வாங்க'' கருணா காவ்யாவின் அருகில் அமர, என்னவென்று யோசிப்பதற்குள் கார் பறக்கிறது. ஏற்கனவே டாக்டரிடம் அப்பாய்ன்மெண்ட் வாங்கி வைத்திருக்கிறான் போல இருக்கிறது.

ஒரு பத்து நிமிடத்தில் டாக்டர் அவளைப் பார்த்து விட்டு ''அவள் வீக்காக இருக்கிறாள் என்றும், ஒரு வாரமாவது ரெஸ்ட் எடுக்கவேண்டும்'' என்று கூறினார். 'ஓவர் ஸ்டிரெயின்' என்றும் சொன்னார்.

''ரொம்பவும் டென்ஷன் படக் கூடாது'' என்று மருந்துகளை எழுதிக் கொடுக்க. அந்தக் காலை வேளையில் எங்கோ ஒரு டிஸ்பென்சரிக்கு அழைத்துப் போய் மருந்து வாங்கி கொடுத்து வீட்டில் கொண்டு வந்து இறக்கி, ஒரு வாரத்திற்கு வேலைக்கு வர வேண்டாமென்று சொல்லிவிட்டுப் போனான்.

''தம்பி. ரொம்ப நன்றி. இப்படி யாரு இருப்பாங்க?



''இது எங்க கடமை இல்லையா? உங்க பெண் ஒரு அருமையான ஸ்டாப். கம்பெனிக்காக எத்தனையோ பாடுபட்டிருக்காங்க. அவங்களுக்காக ஒரு கடுகளவுக் கூட நாங்க படக்கூடாதா?'' உரிமையுடன் சொன்னவன் ''த பாருங்க மாத்திரையெல்லாம் சாப்பிடுங்க, வரும் போது முழு தெம்போட வரணும் புரியுதா'' என்றவன்

''ஆன்டி நான் கெளம்பறேன். ஏதாவது வேணுமின்னா போன் பண்ணுங்க.'' சொல்லிவிட்டு நகர்ந்து போனான்.

அவன் தன்னை தொட்டு தூக்கியதால் ஒரு நிமிடம் அவனுக்குத் தன் மேல் காதலே என்று நினைத்து. பிறகு அவன் எங்கள் கம்பெனியின் உண்மையான ஊழியர் கம்பெனி உதவி செய்ய வேண்டாமா?'' என்று கேட்டதும் மனது மறுபடியும் விழுந்தது. வெறும் கடமைக்காகத் தான் செய்தானா? என் மேல் கொஞ்சம் கூட ஆசையில்லையா? இவனை யார் வரச் சொன்னது? எல்லாவற்றையும் மறக்க வேண்டும். என்று உள்ளம் குமுறிக் கொண்டு இருக்கும் போது இவனை யார்வரச் சொன்னார்கள்? இந்த உதவிகள் இல்லையென்று யார் அழுதார்கள்? தன் வாழ்க்கையே அந்தரத்தில் தொங்குகிறது. இவனை தன் காவலன் என்று மனது ஏன் நினைத்தது? இதிலிருந்து விடுபட முடியாமல் இது என்ன அவஸ்தை.

கருணா காவ்யாவிற்கு வேண்டியதெல்லாம் செய்து விட்டு ஆபீசுக்குப் போய் விட்ட பின்னும், மாதவனை நினைத்துக் கொண்டு அழுகிறாள். கருணா ஆபீசுக்குப் போன பின் அம்மா காவ்யாவின் அருகில் வருகிறாள்.

''என்னம்மா உனக்கு என்ன பிராப்ளம்?'' என்கிறாள்.

அம்மா கண்டு பிடிக்கும் அளவிற்கா தான் நடந்து கொண்டு விட்டோம். அருகில் வந்து தலையைத்தடவுகிறாள்.

உன்னைத் தான் ரொம்ப புத்திசாலி என்று நினைத்தேனே. நீ எந்தப் பிரச்சினையில் அம்மா மாட்டிக் கொண்டாய்?" அம்மாவிடம் தன் காதல் பிரச்சினையை எப்படி சொல்வது? அவளால் புரிந்து கொள்ள முடியுமா?

"ஏண்டி என் வாழ்க்கையை நினைக்கலையா? ஒங்க அக்கா வாழ்க்கையை மறந்துட்டியா? நீ கூடவா அப்படி ஆகணும்? உன்னை ரொம்ப புத்திசாலின்னு நினைச்சேனே." கட்டாயம் இப்படித்தான் சொல்வாள். தன் காதல் நிஜமா, பொய்யா என்று தெரியாத போது இதை வெளிப்படுத்துவானேன்.

"ஒண்ணுமில்லேம்மா" என்கிறாள். கம்பெனியில் ஊர்பட்ட வேலை. முடியலை என்கிறாள்.

"அது மட்டும் தானா?"

"என்னம்மா சந்தேகம் உனக்கு?"

"இல்லேம்மா உன் துன்பத்தை பாத்தா எதனாலேயோ மனசு ஒடைஞ்சிட்டிபோன்னு தோணுது."

அம்மாவின் கண்கள் எக்ஸ்ரேக்கண்கள். அனுபவப்பட்டவள் அல்லவா? இவள் நிலைமையை ஊகித்துக் கொண்டு இருக்கிறாள். 'இல்லேம்மா உன் மனது கஷ்டப்படற மாதிரி எந்த நியூஸும் வராது. வர விடமாட்டேன். மனதிற்குள் உறுதி செய்து கொள்கிறாள்.

"அம்மா நீ ஏன் கஷ்டப்படறே. எல்லாம் சரியாயிடும். ஓவர் வொர்க் அதான் ஸ்ட்ரெயின். எனக்கு நெஜமாகவே முடியலேம்மா. அதான் இந்தக் கண்ணீர். மத்தவங்க முன்னாடி இப்படி இன்வாலிட் ஆகிட்டோமேன்னு கவலை. நீ கவலைப்படாதே. எல்லாம் சரியாயிடும்."



பெண் ஆறுதல் சொன்னாலும் அம்மாவின் மனதில் அதையெல்லாம் நம்ப முடியவில்லை. அம்மாவை நேரடியாக பார்ப்பதையே தவிர்த்தாள். பார்த்தால் அவளால் தொடர்ந்து பொய்யைச் சொல்ல முடியாது. 'அம்மா என்னை மன்னித்து விடு. உன் கதையைக் கேட்டும் அக்கா துடிப்பதைப் பார்த்தும் கூட எனக்கு புத்தி வரவில்லை. எல்லாம் என் தலை எழுத்து.'

அவனைப் பார்த்து மனசு ஏங்கி, பரிதவித்து, காதலாக மாறி இது எப்படி சாத்தியம்? வீடு நிறையத் துன்பங்களை வைத்துக் கொண்டு எந்த மனிதனும் துன்பத்தை நோக்கி ஓட மாட்டான். இங்கே எல்லாமே வித்தியாசமாகத் தான் இருக்கிறது. ஆலாய்ப் பறக்கிற என் மனதிற்கு எதுவும் தெரியவில்லை. 'மாதவன் மாதவன்' என்று அவன் அறிவும், அழகும் மட்டும் தான் மனதிற்கு ரம்யமாகத் தோன்றியது. நிஜம் கூட மறந்துபோயிற்று. இதைத் தான் பெண்மனது பேதமை என்கிறார்களோ. நெருப்பு தொட்டால் சுடும் என்று சொல்லியும் அதைத் தொட்டுத்தான் தீரவேண்டும் என்ற குழந்தையைப் போல நான் ஏன் இப்படி ஆகிவிட்டேன். ரொம்ப மனமுதிர்ச்சி உடையவள் என்று அம்மாகூட பாராட்டியிருக்கிறார்கள். இதுவா முதிர்ச்சி. விளக்கை நோக்கி ஓடும் விட்டில் பூச்சியைப் போல அல்லவா என் வாழ்க்கை ஆகிவிட்டது. மனது ஒடிந்தே போனது. இந்த மன இழப்பை சரி செய்தே ஆக வேண்டும். அதற்குக் கொஞ்ச நாட்கள் பிடிக்கும். இந்த ஒரு வார விடுமுறை அவளுக்கு மிகமிகத் தேவையான ஒன்று தான். அதற்குள் தன்னைச் சுதாரித்துக் கொள்ளலாம். அவனிடமிருந்து பிரிந்து போவதற்கும் யோசனையை மாற்றுகிறாள். இனி மேல் அந்த எழுத்தைப் பற்றிக் கூட எனக்குத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசிய மில்லை. ஆனால் அவள் பிடிவாதம் கூடத் தவிடு பொடியாகி

விடும் படி ஒரு சம்பவம் மாலையில் நடந்தது. சுரம் சற்று குறைந்து காற்றோட்டமான இடத்தில் அவள் அமரும் போதே வந்து விட்டான்.

''கொஞ்சம் சரியானா உடனே வெளியே வந்திடறதா? ஏன் ஆன்ட்டி அவங்களைப் பார்த்துக்கக் கூடாதா?''

''ஆனா இப்ப ஜுரம் இல்லே. சரியாயிடுச்சு.'' அவள் அம்மா சொல்லச் சொல்ல கேட்காதவனாய் அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தான். சட்டென்று மனது லேசானது.

''தேங்க் காட் பீவர் ஒண்ணுமில்லே'' என்றான்.

''ஆன்டி இவங்க சாப்பிட என்ன கொடுத்தீங்க.'' கேட்டுத் தெரிந்து கொண்டான்.

''கஞ்சி, பிரட், பால்'' சொல்லச் சொல்ல குறித்துக் கொண்டான். ''ஆப்பிள் சாப்பிடலாமா?''

'சாப்பிடலாம் என்று கமலம் சொல்ல, ஒரு கூடை நிறைய ஆப்பிள் பழங்களை மேசையின் மேல்வைத்தான். ஒரு ஆப்பிள் எப்படியும் ஐந்து ரூபாய்க்கு குறையாமல் இருக்கும். கிட்டத்தட்ட நூறு ரூபாய்க்கு ஆப்பிளை கொண்டு வந்து கொட்டியிருக்கிறான்.

''தேங்க்ஸ்''

''எதுக்குப்பா இதெல்லாம்'' என்றாள் கமலம்.

''இருக்கட்டும்மா.'' சிறிது நேரம் உட்கார்ந்து கமலத்திடமும் காவ்யாவிடமும் பேசிவிட்டு விடை பெற்றுச்சென்றான்.

இவனைப் பாம்பு என்று நினைத்து ஒதுங்க முடியவில்லை. பழுது என்று நினைத்து மிதிக்க முடியவில்லை. யார் பெயர்



கூடத் தன் காதில் விழக் கூடாது என்று நினைக்கிறாளோ அவன் மறுபடியும் வந்து வந்து உயிரை எடுக்கிறான். ஆனால் கமலம் மட்டும் கவனித்துவிட்டாள் போல் தோன்றியது. முதலில் ஒன்றும் கேட்கவில்லை. பின் மெதுவாகக் கேட்கிறாள்.

''ஏம்மா உனக்கும் அந்தத் தம்பிக்கும் நடுவே ஏதாவது பிரச்சினையா?''

''ஏம்மா கேக்கிறே?''

''சும்மாதான்.''

''அம்மா பிரச்சினையா இருந்தா அவங்க ஏம்மா வந்து இத்தனை உதவி பண்றாங்க...''

''அதான் எனக்கும் யோசனையா இருக்கு''

''சரி... விடு'' என்றவள் ஏதோ யோசனையில் ஆழ்ந்தாள். அம்மா கண்டுபிடித்து விட்டாள்.நெஞ்சு குறுகுறுக்கத் திரும்பிப் படுத்தாள் காவ்யா.

அன்று மாலைக்குள் ஒரு முடிவுக்கு வந்தாள். அவசரம் அவசரமாகத் தலைமை அலுவலகத்திற்கு ஒரு கடிதம் எழுதி தனக்கு மாற்றல் வேண்டுமென்று எழுதிப்போட்டாள். பெங்களூருக்குத் தான் மாற்றல் கேட்டு எழுதினாள். அங்கே கர்நாடகாவில் ராஜ்குமார் சமாச்சாரத்தில் எல்லோரும் அமைதி இல்லாமல் தவிக்கும் போது அங்கே போவது புத்திசாலித் தனமா? இருந்தாலும் சரி, இறந்தாலும் சரி மன உளைச்சலுக்கு ஒரு விடிவு வேண்டும். அவனைப் பார்க்காமல் சிறிது காலம் இருக்க முடிந்தால் காலம் எத்தகைய புண்ணையும் ஆற்றி விடும். பிறகுதான் சற்று நிம்மதியாகப் படுத்தாள். அம்மா தன்னைத் தனியே போக விடுவாளா? போய்த்தான் தீர

வேண்டும். இல்லையென்றால் மாதவனைப்பற்றிய கவலையே இதயத்தை அரித்துத் தின்று விடும்.

அன்று வேலைகளை முடித்து விட்டு வந்த போது வழக்கத்துக்கு மாறாக காவ்யாவின் முகத்தில் ஒரு அமைதி தெரிவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்.

''என்னவாக இருக்கும்?''

மாலை ஆறு, ஏழு மணிக்குத் தன்னைப் பார்க்கிறேன்' என்று சொல்லி மாதவன் வந்தாலும் வரலாம்.

''அம்மா என் ப்ரண்ட் ஒருத்தி வீட்டுக்கு போயிட்டு வரேன்.

''யாரு?''

''தீபா'' என்றவள் எழுந்தாள்.

''ஏய் ரெண்டு நாளா உடம்பு சரியில்லே. இப்பத்தான் பரவாயில்லை. போகக் கூடாது.''

''அம்மா தடுக்காதீங்க. போயிட்டு சீக்கிரம் வந்திடறேன்.'' கிளம்பிப் போயே விட்டாள். தீபாவுடன் பேசிவிட்டு வரும்போது தன் வீட்டு வாசலில் மாதவனின் காரைப் பார்த்தவளுக்கு உள்ளே போகவே பிடிக்கவில்லை.

சட்டென்று பக்கத்துவீட்டில் நுழைந்து அந்த வீட்டுக்காரர்களிடம் பேசிக் கொண்டே ஜன்னலில் ஒரு கண்ணை வைத்திருந்தாள். இவன் எப்பொழுது போய்த் தொலைவான். மாதவனும் விடாப்பிடியாக அங்கே அமர்ந்திருப்பது அவளுக்கு எரிச்சலைத் தந்தது. மணி எட்டையே தொட்டு விட்டது. சாதாரணமாக வருபவள் 'இரு இரு என்றால் கூட இருக்காமல் ஐந்து நிமிடத்திற்கு மேல் நிற்காமல்



ஓடிக்கொண்டே இருப்பாள். இன்று கட்டிப்போட்ட மாதிரி அமர்ந்திருப்பது வியப்பைத் தந்தது. அவளும் 'என்னம்மா ஏதேனும் சொல்லணுமா? என்று பக்கத்து வீட்டு ஆண்டி திரும்பத் திரும்பக் கேட்க...

''வரேன் ஆண்டி உங்கடைம்மை வேஸ்ட் பண்ணினதுக்கு சாரி.''

அவள் வீட்டினுள் அடியெடுத்து வைக்க மாதவன் வரவேற்கிறான்.

''வாங்க. என்ன சீக்கிரம் வரேன்னு போனீங்களாம். இவ்வளவு நேரம்?

''ப்ரண்ட் வீட்டுக்கு போயிருந்தேன்.'' ரொம்ப நாளாயிட்டதுனால புடிச்சிகிட்டாங்க. ஐயையோ எனக்காகவா வெயிட் பண்றீங்க அம்மா கிட்டே சொல்லிட்டுப் போயிருக்கலாமே உங்க டைம் எல்லாம் வேஸ்ட் பண்ணிட்டீங்களே.''

''காவ்யா என்னம்மா இது?'' கமலம் கண்டிக்கிறாள்.

சாதாரணமாகக் காவ்யாவிற்கு யாரையும் புண்படுத்தும் வழக்கம் கிடையாது. சகஜமாகப் புன்சிரிப்பாகப் பேசுகிறவள். இன்று ஏன் இப்படி மாறிப்போயிருக்கிறாள். கமலத்திற்கு ஏதோ கொஞ்சம் புரிவது போல் இருக்கிறது. ஒரு வேளை காவ்யா அவனை விரும்புகிறேன் என்று சொல்லி அவன் மாட்டேன் என்று சொல்லிவிட்டேனா? காவ்யா நீ கூடவா இப்படி? கஷ்டங்களை நேரில் பார்த்து, நெஞ்சில் தாங்கிக் கொண்டவளுக்கு மறுபடியும், அந்தக் கஷ்டத்தில் போய் மாட்ட எப்படி மனது வரும்? என் பிள்ளைகளின் வாழ்க்கையில் நல்லது என்பதே இல்லையா? ஏன் இப்படி ஒரு தவிப்பையும் தந்து சங்கடத்தையும் தருகிறான்? இந்தக்

குழந்தைக்கு என்ன வழி. அந்தப் பிள்ளையிடம் பேசிப் பார்க்கலாமா? நாமாகவே போய் காவ்யாவை பண்ணிக் கொள்கிறாயா என்று கேட்டால் என்ன? பல பல சிந்தனைகளில் தன்னை மறந்தாள் கமலம்.

மாதவனை அனுப்பி விட்டு வந்த காவ்யாவின் மனதிலும் ஆயிரம் சிந்தனைகள். இவனிடமிருந்து நிஜமாகவே தூர விலகுவது எப்படி?

அம்மா சொன்னதும் நிஜம் தான். பணம் சம்பாதித்து ஒரு பொஸிஷனுக்கு வருவது மட்டும் வாழ்க்கை இல்லை. தன் தன் குடும்பம் என்று வாழ்வதும், அதற்கு ஒரு சமூக அங்கீகாரம் கிடைப்பதும் வாழ்க்கையின் ஒரு அங்கம். பிள்ளைகளைப் படிக்க வைத்து நல்ல வேலையில் சேரும்படி செய்து தன் காலின் தான் நிற்க வழிசெய்தாயிற்று. இன்னும் அவர்களுக்குச் செய்ய வேண்டியது திருமணம் தான். காவ்யா திருமணம் புரிந்து கொள்கிறேன் என்றால் திருமணத்தை முடித்துவிடலாம். பின் எப்பாடுபட்டாவது கருணாவின் திருமணத்தை முடிக்கணும். ஆனால் காவ்யா சம்மதிக்க வேண்டும். அந்தப் பையனை மனதில் நினைத்துக் கொண்டிருக்கிறாளா? தான் போய் அந்தப் பையனிடம் பேசினால் ஏதாவது பலன் கிடைக்குமா?

அன்று பெண் வீட்டிலிருக்க கோவிலுக்கு ராகுகால பூஜைக்கு போவதாகவும், லேட்டானால் தேடாதே என்றும் சொல்லிவிட்டு காவ்யா தினமும் ஆபீஸ் போகும் அந்த பஸ்ஸில் ஏறினாள். காவ்யாவின் ஆபீசுக்கு போய் என்ன கேட்பது? நினைப்பதை கேட்டுத் தான் ஆகவேண்டும்.

வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுமானால் ஒரு தெளிவு வேண்டும். முன் வைத்த காலைப் பின் வைக்கக் கூடாது. பேசுவோம். பேசினால் என்ன சொல்கிறான் என்று பார்க்க வேண்டும். ஒத்துக் கொள்வானா!



'நான் ஏன் மண்டையைக் குழப்பிக் கொள்ள வேண்டும். பேசுவோம். பிறகு பார்ப்போம். அவனுடைய துரதிஷ்டமோ என்னவோ அவன் அலுவலகத்தில் இல்லை.

''உக்காருங்க எம்.டி. வரநேரம் தான். ஏதாவது வெளியே வேலை இருக்கும். அதான் லேட்'' என்றார்கள்.

சரி வந்தது வந்தோம். ஒரு அரைமணிநேரம் ஆனாலும் பார்த்து விட்டுப் போக வேண்டும். கமலம் போய் அமர்ந்து கொண்டாள்.

''காவ்யா மேடம்க்கு சரியாச்சா இல்லையா?

''அவங்க ஒன் வீக் ஸிக்லீவ். மண்டே தான் வருவாங்க. என்ன உடம்புன்னு தெரியலேப்பா. சாதாரண ஜுரம் தான். எம்.டி. ஒரு வாரம் லீவு கொடுத்திருக்காரு. அவர்கள் பேசுவதையே கவனிக்கிறாள். நான் தான் காவ்யாவின் தாயார் என்று சொன்னால் என்ன ஆகும்? இருக்கட்டும். இன்னும் பெண்ணைப் பற்றி என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்க வேண்டும்.

''சார் ரெண்டு வேளையும் அங்கே தான் இருக்காரு. அதான் இப்ப இல்லையா? அவரைத் தேடிட்டு வந்திருக்காங்க. அவர் இன்னும் ஒருமணி நேரத்துக்கு வர மாட்டாருங்க.''

''தான் சந்தேகப்பட்டது சரி தான். இதற்குத் தானா தினமும் வருவது. பெண்ணுக்கும் அவனுக்கும் ஏதோ டைஅப். அதான் பெண் விழுந்துவிட்டாள். ஒரு வேளை அக்கா கல்யாணம் முடிந்ததும் தான் கல்யாணம் என்று சொன்னதால் அந்தப் பிள்ளை கோபித்துக் கொண்டு விட்டானா? இல்லை. இந்தச் சிக்கலான பிரச்சினையை தீர்க்காமல் போகக் கூடாது. எத்தனை நேரம் ஆனாலும் இந்தப் பிரச்சினையை முடித்து

விட்டுத் தான் போகனும். கருணாவிற்கு நிதானமாக ஒரு மாப்பிள்ளையைப் பார்த்துக் கொள்ளலாம். மனது முழுவதும் எதிர் பார்ப்புடன் அமர்ந்திருந்தாள்.

கொஞ்ச நேரம் அமர்ந்த போது திடீரென்று ஒரே பரபரப்பாகியது. ''மேடம்.. மேடம்..'' என்று எல்லோரும் எழுந்து மரியாதை செய்ததும் 'யார் அது?' கமலம் யோசிக்கிறாள். ஏறக்குறைய படையப்பாவில் வரும் ரம்யா கிருஷ்ணனைப் போல் பளபளவென்று ஒருத்தி உள்ளே வந்தாள். எல்லோரையும் ஏதோ விசாரித்து விட்டு ஆபீஸ் அறையினுள் போய் அமர்ந்தாள்.

''யாருங்க இவங்க''

''கம்பெனி மொதலாளியோட பொண்ணு. எம்டிக்கு நிச்சயிக்கப்பட்ட பொண்ணுங்க. இன்னும் ரெண்டு மாதத்திலே கல்யாணம் நடக்கும். அப்பப்ப வருவாங்க. ஆபீஸ் வேலை எல்லாம் பாத்துட்டு போவாங்க. மேடம் ரொம்ப கறுசுறுப்புங்க' நம்ப எம்டிக்கு ஏத்த ஜோடி 'அவள் சிலாகித்துப் பேச, கமலத்திற்கு நன்றாக புரிந்தது. பையன் பழகினானே தவிர பொண்ணைத் திருமணம் செய்ய ஒத்துக் கொள்ளவில்லை. அதான் பெண் மனது உடைந்து போயிருக்கிறது. சட்டென்று பெண்ணைப் பற்றி நினைக்கையிலே கழிவிரக்கம் தாங்க முடியாமல்நெஞ்சில் குமைகிறாள்.

''பாவிப்பெண்ணே நீ ஒருத்தியாவது இந்த வேதனை இல்லாம இருப்பேன்னு பாத்தா நீ கூட அல்லவா இதுல மாட்டிக்கிட்டே. அந்தப் பையனைப் போய் கேட்டால் ஏதேனும் நடக்குமா? ஒத்துக்கொள்வானா? 'சாரி, நான் சாதாரணமாக பழகியிருக்கேன்னு சொல்லிட்டா கொஞ்ச நேரத்தில் மண்டையை வலித்தது. ஏன் தனக்கு மட்டும்



ஏதானும் ஒரு பிரச்சினை. நன்றாகப் படித்து வேலைக்குப் போய் பாதி கிணறு தாண்டியாயிற்று. அவர்களுக்கு ஒரு நல்ல குடும்ப வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தால் தான் நல்லது. உள்ளே போய் அந்தப்பெண்ணிடம் பேச ஆரம்பிக்கலாமா? என்ன கேட்பது? என் பெண் ஆசைப்படுகிறாள். உன் புருஷனை விட்டுக் கொடுத்துவிடு என்றா சொல்ல முடியும். முள்ளின் நடுவில் உள்ள பூவைப் பறிப்பதைப் போன்ற சமாசாரம். கொஞ்சம் ஏமாந்தாலும் முள் கையை குத்திவிடும். பொறுமையாக கையாள வேண்டிய சங்கதி. ஏதானும் பேச்சுக் கொடுத்தால் தெரியாதா? வெளி ஆளுங்களை விட சம்பந்தப் பட்டவர்களுக்குத் தான் உண்மை தெரியும். சாதாரணமாக பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம். இப்போது வந்திருக்கும் பெண்ணே நல்ல அழகியாக இருக்கிறாள். அவளை விட்டு விட்டு பையன் என் பெண்ணின் பின்னே சுற்றுவானேன். ஆளை மயக்கும் நிறமோ, கவர்ச்சியோ பெண்ணுக்குக் கிடையாது தான். ஆனால் பார்ப்பதற்கு நன்றாக இருப்பாள்.

ஆனால் இவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் அழகில், பணத்தில், பலத்தில் பல மடங்கு அதிகமாக இருக்கிறதே. அவன் ஏன் தன் பெண்ணைத்தேடித் தேடி வருகிறான்.

''மேடமை பார்க்க வேண்டும்''

''சார் இன்னும் வரலீங்களே.''

''பரவாயில்லைங்க. மேடத்தைப் பார்க்கணும். ''விஷயத்தை சொன்னதும் வரச் சொன்னார் முதலாளியின் மகள்.

''உக்காருங்க. என்ன வேணும்? எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?'' ம் யோசித்தவன்..

"நான் மாது. அதான் மாதவனுக்கு தூரத்து சொந்தம்." ம்.. என்றவளின் கண்களில் ஒரு நிமிடத்தில் ஒரு மின்னல் வந்து போயிற்று.

"சொல்லுங்க."

"ஊரிலேர்ந்து வந்தேன். அவன் இருப்பானேன்னு பார்த்தா ஆளையேக் காணோம்."

"அப்படிங்களா? அவர்வேலை விஷயமா வெளியே போயிருக்கிறார். வந்தவுடனே பாத்துட்டுப்போங்க. ஏதாவது சாப்பிட்டீங்களா என்றவள் ஒரு இரண்டு காபியை வாங்கி வரச் சொல்லி ஒன்றை அவளுக்குக் கொடுத்து, மற்றொன்றை தான் எடுத்துக் கொள்கிறாள். கமலத்தோடு பேசிக் கொண்டிருக்கும் போதே, பார்க்க வேண்டிய விஷயங்களைப் பார்க்கிறாள். திறமையான பெண் தான். ஆனால் இந்தப் பெண்ணுக்கு மாதவன் போல் எத்தனையோ ஆண் கிடைக்கும். ஆனால் தன் பெண்ணுக்கு. மனதை வேறு அவனிடம் கொடுத்து தொலைத்து விட்டாள். பெண்ணுக்காக மனம் மறுகியது.

இவளிடம் ஒரு கோடி காட்டினால் என்ன?

"என் பெண்ணுக்கு மாதவனை நிச்சயம் பண்ணிட்டு வந்தேன். சின்ன வயசுலே ஒருத்தருக்கு ஒருத்தர்னு போட்டு வச்சது."

சொல்ல, சொல்ல இவளையே உற்றுப் பார்க்கிறாள் முதலாளியின் மகள்.

"என்ன அம்மா பார்க்கிறீங்கள்.. அவர் சின்ன வயசுலே அனாதை தான். நாங்க தான் எடுத்து வளர்த்தோம். ரொம்ப கஷ்டப்பட்ட பிள்ளை' சரியா சாப்பாடு கிடையாது. கொஞ்ச



நாட்கள் எங்க வீட்டுலே வச்சு காப்பாத்தினோம், எங்களால எத்தனைம்மா செய்ய முடியும்? கொஞ்ச நாள்ல முடியலேன்னவுடனே அவனே பட்டணத்துக்குப் போயிட்டான்.

"அத்தை கட்டினா உங்க பொண்ணைத்தான் கட்டுவேன் என்று சொல்லிகிட்டு இருப்பான். நல்ல மனசு அவனுக்கு. இப்ப பொண்ணும் பெரியவளாகி கல்யாணத்துக்கு நிக்கறா? அதான் சம்பந்தம் பேசலாம்னு வந்தேன். வந்தா தம்பியைக் காணோம்."

கொஞ்சம் நேரம் வரைக்கும் இவளையே உற்றுப் பார்க்கிறாள். கமலத்திற்கு லேசாக உறுத்தல் ஏற்பட்டது. தான் சொன்னது பொய் என்று கண்டு பிடித்து விட்டளா? மனதில் மறுபடியும் உறுத்தல் ஏற்பட்டது.

"என்னம்மா அப்படி பார்க்கறே. அவனைப் பார்த்து சம்பந்தம் பேசிவிட்டு போகலாம்னு வந்தேன்" இது வரை இருந்த உறுத்தல் பார்வை போய் கண்களில் ஓர் அலட்சியம் வந்தது.

"என்கிட்டே பேசிட்டீங்க இல்லே. நீங்க கிளம்புங்க. நான் ஏற்பாடு பண்றேன்"

ஒரு நிமிடம் அசையாமல் உட்கார்ந்திருந்தாள். இந்தப் பெண் நிஜமாகவேவா சொல்கிறாள்? இதற்கு மாதவன் மேல் விருப்பமில்லையா?"

"இல்லைம்மா.. நானே இருந்து..."

"போதும். நீங்க பாடுபட்டு வளர்த்த உரிமையிலே சொல்லப் போறீங்களா? வயசானவங்களா இருக்கிறீங்களே

என்று பார்க்கிறேன். எதுக்குமா பொய் சொல்றீங்க? மிஸ்டர் மாதவன் வேறு யார்கிட்டேயும் இல்லை. அவர் எனக்கு மாமா பையன். அவங்க அம்மா அப்பா எல்லாம் எங்க வீட்டோடு தான் இருக்காங்க. சின்ன வயசுலேர்ந்து சாப்பாட்டுக்கு மட்டுமில்லே. எதுக்கும் அவர் கஷ்டப்பட்டதில்லை. என்னவோ தூரத்து சொந்தம்னீங்களே - எங்க அத்தை வழி சொந்தமோன்னு நினைச்சேன். அப்புறம் தான் நல்லாவே பொய் சொல்றவங்கன்னு தெரிஞ்சது. என்ன மேடம் இப்படி பண்றீங்க? எத்தனை நாள் உண்மையை மறைக்க முடியும்? உங்களுக்கு அவரால் என்ன வேலை நடக்கணும்னு நெனச்சுக்கிட்டு இந்த பொய்யை சொன்னீங்க, உங்க பெண்ணுக்கும் அவருக்கும் சம்பந்தம் என்பது பித்தலாட்டம் தானே' ஏன் இப்படி செய்தீங்க?

## 12

கமலம் கூசிப்போனாள். எத்தனையோ கஷ்டப்பட்டு இருக்கிறாள். எத்தனையோ துன்பங்களையும் வயிற்றுப் பசியையும் தாங்கி இருக்கிறோம். ஆனால் இதுவரை பொய் என்று சொன்னதில்லை. திருட நினைத்ததில்லை. அடுத்தவர்களை துன்பப்படுத்தியது இல்லை. இன்று தனக்கு ஏன் இப்பேற்பட்ட நினைவு. இது எத்தனை தவறானது. மாதவனுடன் யாருக்கு முடித்துபோட்டு வைத்திருக்கின்றதோ அவர்கள் சேரட்டும். எதற்காக ரொம்ப அசிங்கமாகத் தேவை இல்லாத ஒரு பொய். தான் செய்த காரியம் மனதை வாட்ட அசிங்கப்பட்டுப் போய் அமர்ந்திருந்தாள். தன்செயலுக்கு வருத்தப்பட்டு அமர்ந்திருந்தாள். தான் செய்த தவறு தன்



மனதை அரித்தது. தன் சுய நலத்தினால் விளைந்த தவறு அடுத்தவரின் நன்மையைப் பொறுக்காத மனம். தன் மனதே தன்னைச் சாட அதற்கு மேல் உட்கார முடியாமல் மெதுவாக எழுந்தாள்.

''என்னம்மா எழுந்திட்டீங்க. பொண்ணுக்கு நிச்சயம் செய்துட்டுப் போகலையா?'' முதலாளியின் பெண்ணுடைய பேச்சில் கிண்டல் தெரிந்தது.

தன் பிரச்சினைகளை தன் வேதனையை சொல்ல முடியுமா? மௌனம் சாதித்தவளாய் போகத் திரும்பியவளை

''நில்லுங்க. எங்கே போறீங்க?'' என்ற குரல் தடுத்தது.

''நிஜத்தை சொல்லிவிட்டுப் போங்க. எதுக்காக பொய் பேசி சம்பந்தம் பேசற மாதிரி வந்து நடிச்சீங்க.''

முதலில் சற்று தயங்கியவள் பிறகு உண்மையைச்சொல்ல முடிவெடுத்தாள். தான் யார் என்பதைப் பற்றி சுருக்கமாகச் சொன்னாள். தன் பெண்ணைப் பற்றியும் சொன்னாள். தன் கதையைப் பற்றி ஓரளவு சொல்லிவிட்டு பின் மாதவனின் நடவடிக்கை. அவனின் செயல், பெண் இப்போது உடல் நிலை சரியில்லாமல் இருப்பது என்பது பற்றியெல்லாம் விலாவாரியாக கமலம் சொல்லக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''எந்த அம்மாவுக்கும் அவ பொண்ணு வாழ்க்கை நல்லா இருக்கணும்ங்கற ஆசை வரக்கூடாதா? நான் இப்படி நடந்துகிட்டதும் எம்பொண்ணு நல்லா இருக்கணும்னுதான். நான் நெனைச்சதிலே என்ன தப்பு இருக்கு! இங்க வந்த போது யாரோ, உனக்கும் தம்பிக்கும் முடிச்சி போட அதனால் மனம் பதறிப் போச்சு. அது தான் உங்கிட்டே கேட்டேன். எல்லாத்திலேயும் என் பொண்ணை விட உயர்ந்தவள் நீ.

உனக்கு எந்த ஊருக்குப்போனாலும் எந்த இடத்தில் இருந்தாலும் நல்ல பையன் கிடைப்பான். ஆனா என் மகளுக்கு?''

ஒரு தாயின் ஆசையை புரிந்து கொண்டாளோ என்னவோ சில நிமிடங்கள் மௌனமாக இருந்தாள்.

''இத பாருங்கம்மா ஒருத்தர் வைஃப்பை இன்னொருத்தருக்கு மேரேஜ் பண்ண முடியாது. எங்க மாமாவுக்கு யாரைப் புடிச்சிதோ, அவதான் அவருக்கு மனைவியா இருப்பா. சின்ன வயசுலேயே போட்டது எங்க முடிச்சு. பெரியவங்க போட்ட முடிச்சு. அது சரியா தப்பான்னெல்லாம் எனக்குத் தெரியாது. மாமா ஆசைப்பட்டா பெரியவங்க விருப்பப்படி அவரோட கல்யாணம் நடக்கும். உங்களை மொதல்ல தப்பா தான் நெனச்சேன். ஆனா ஒங்க நிலமையை நினைச்சா பாவமாகத் தான் இருக்கு. நீங்க நினைக்கற மாதிரி வேறு எந்தவிதமான ஸ்பெஷல் ஃபீலிங்க்ஸும் எங்ககிட்டே கிடையாது. அவங்க ரெண்டுபேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பினா அதுக்கு குறுக்கே யாரும் வர முடியாது நம்புங்க.''

இயல்பான புன்சிரிப்புடன் அவள் கூறக்கூற இந்த சின்னப் பெண்ணுக்கு இருக்கும் ஞானத் தெளிவு கூட எனக்கு இல்லாமல்போய் விட்டதே. மனது கிடந்து அடித்துக் கொண்டது.

''ரொம்ப நன்றிம்மா இப்ப எம்மனசு ரொம்ப தெளிவாயிடுச்சு. நான் கிளம்பறேன்.'' அவள் நகர, ''இருங்கம்மா மாமாவை ஒரு வழியா பார்த்துட்டே போங்களேன்.''



''இல்லேம்மா உங்க கூட பேசினதே போதும். உலகத்தையே ஜெயிச்ச மாதிரி ஒரு நம்பிக்கை. உன் ஒவ்வொரு சொல்லையும் ஞாபகம் வச்சிப்பேன். நன்றிம்மா.''

அவளுக்கு நன்றி சொல்லிவிட்டு வெளியே வரும் போதே மணி ஒன்றைத் தொட்டு இருந்தது. பெண் பதறிப் போயிருப்பாள். வழக்கமாக தேடும் கோயிலில் தேடிவிட்டு என்னைக் காணாமல் தவித்திருப்பாள். பெண்ணுக்கு போனில் சொல்லி விட்டு கிளம்பினால் என்ன? அதற்குள் அவர் போகும் இடத்திற்கு தேவையான பஸ் வந்ததும் சட்டென்று ஏறி அமர்ந்து கொண்டாள். மனதில் நிம்மதிப் பெருமூச்சு எழுந்தது. தனக்கும் தன் பெண்ணிற்கும் கட்டாயம் விடிவு உண்டு. மனதில் திடமான நம்பிக்கை தோன்றியது. புன்னகை வேறு முகத்தில் வந்தது. உலகத்தையே விலைக்கு வாங்கிவிட்ட பெருமை. வானம் தன் வசப்பட்ட சந்தோஷம். ஆனந்தமாக கண்ணை மூடி லேசான நித்திரை வேறு செய்கிறாள். காலையில் போன அம்மா வரவில்லை. லேட்டாகும் என்றாலும், ராகு காலம் என்றாலும் இத்தனை நேரமா மனது குடைந்து கொண்டிருந்தது.

அம்மாவின் முகத்தில் மட்டுமில்லை. நடவடிக்கைகளிலும் நல்ல மாற்றங்கள். என்ன ஆயிற்று? குடைந்த மனதை கடிவாளம் போட்டு இழுக்கப் பார்க்கிறாள். சே! தான் உடம்பு சரியில்லாமல் படுத்து இருக்க வேண்டாம். இத்தனை இடர்பாடுகளும் வந்திருக்க வேண்டாம். பன்னிரண்டு மணி வரைக்கும் பொறுமையாக இருந்தவள், ராகுகாலம் முடிந்த போது தவித்துப்போகிறாள். வீட்டைப் பூட்டிக்கொண்டு கோவிலுக்குப் போன போது, 'அம்மாவை எங்குமே காணோம். எங்கே போய் விட்டாள். மனதில் ஏகப்பட்ட

பரபரப்பு. 'கோவிலுக்கு போகிறேன்' என்றவள் 'எங்கே போனாள்?' எங்காவது விழுந்து விட்டாளா? வயதானவள் வேறு. கவலையுடன் அமர்ந்த போதே மாதவன் வந்திருந்தான். இந்த நேரத்தில் இவன் எங்கே? நீங்க எங்கே? ''இப்பதான் பேக்டரிக்கு போய்ட்டு வந்தேன். வரவழியிலே உன்னைப் பார்க்கலாம்னுட்டு வந்தேன்.

''ரொம்ப தேங்க்ஸ். எனக்கு நல்லாயிடுச்சு. இனிமே வேலை நேரங்களை வேஸ்ட் பண்ணிட்டு வரவேண்டாம். எப்படியும் அடுத்த வாரத்திலிருந்து வேலைக்கு வரப்போகிறேன். இல்லையா? சிரித்தபடி அவள் கூறக்கூற அவன் முகம் லேசாக மாறியது போல் தோன்றியது. 'ஓ.கே. இப்ப எங்கே பதட்டமா போயிட்டு வரீங்க?'' ஒரு நிமிடம் சுருக்கென்று எழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான்.

''சார்.. நாங்க உங்க ஸ்டாப்ஃ. என்னைப் பத்தி இத்தனை அக்கறையா விசாரிக்கிறதுக்கு ரொம்ப ரொம்ப நன்றி. ஆனா எல்லா மேட்டரையும் மேலதிகாரிக்கிட்டே எப்படி பகிர்ந்துக்க முடியும் சொல்லுங்க.''

அவள் பதிலில் சற்று அசந்துபோனவன் மாதிரி காணப்பட்டான். எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கும் முகம் லேசாக விழுந்தது. இருந்தாலும் சுபாவச் சிரிப்பை விடாமல் ஓ.கே தேங்க்யூ. டேக்கேர்!'' என்றவாறே கிளம்பிச் சென்ற பின் அவன் இருக்கும் வரை இருந்த எரிச்சல் அவன் போன பின் இல்லை. மாறாக லேசான அழுகை வந்தது. தன் நடத்தைக்கு வருத்தம் தான் வந்தது. அவனை மறக்கவும், முடியாமல் அவனோடு சகஜமாக இருக்கவும் முடியாமல் இது என்ன அவஸ்தை? அம்மாவின் கவலையைக் கூடப் படமுடியாமல் அவன் நினைவுகள் தன்னை இத்தனை



அவஸ்தை படவைக்கிறது. கொஞ்சம் நேரம் இங்கும் அங்கும் தேடினாலும் அம்மாவின் மேல் கவனத்தையும் சேர்த்து மாதவன் விழுங்கிக் கொண்டிருந்தான். தான் அதிக பிரசங்கித் தனமாக நடந்துவிட்டோமோ தவறுதான். இப்படிநடந்து கொண்டிருக்கக் கூடாது. தான் செய்த அநியாயம் என்று மனம் கூவிக் கொண்டிருந்தது. கூப்பாடு போடும் மனதை அடக்க முடியாமல் தவிக்கிறாள்.

அம்மா ஒன்றரை மணிக்கு வந்து சேர்ந்த போது. சற்று தவிப்போடு கேட்டாள்.

''எங்கம்மாபோயிட்டே...''

''கோவிலுக்கு..''

''கோவிலுக்கா? நான் தான்அங்கே வந்தேனே நீங்க இல்லையே.''

''கோயில் எல்லாம் பாத்து முடிஞ்சதும் ஒரு ப்ரண்ட் வந்து அழைச்சிட்டுப் போனா''

''அது தான்.''

''அது யாருப்பா ப்ரண்ட்.''

''இங்க வருவாங்களே. காமாட்சி பாட்டி அவங்க தங்கை பொண்ணு.'' ஏனோ அம்மாவின் வார்த்தைகளில் நம்பிக்கை வரவில்லை. இருந்தாலும் அதைப் பற்றி விவாதிக்கும் மன நிலையிலும் அவள் இல்லை.

கமலம் ஏதோ யோசனையில் இருந்தாள். மாதவனை இன்னும் ரெண்டு ஒரு நாளில் பார்த்துஅவன் சம்மதித்தால் தேதி குறித்துக் கொண்டு வரவேண்டும். திருமணத்துக்கு நாளைக்குறித்து விட்டால் பாதிக் கவலை தீர்ந்த மாதிரித் தான்.

அம்மாவும் காவ்யாவும் அவரவர்கள் கவலையில் மூழ்கியிருக்க, மாலை ஆனதோ கருணா வந்ததோ இருவருக்கும் தெரியாது. மாலைமணி ஐந்தைத் தொட்டுக் கொண்டு இருந்தது. எப்போதும் மாலை தெருவாசலைப் பெருக்கிக் கோலம் போடும் அம்மா இன்று உள்ளேயே இருக்கிறாள். காவ்யா, தன்னையறியாமல் அமர்ந்து மோட்டுவளையைப் பார்த்துக் கொண்டிருக்க கமலமோ கொதிக்கும் நீரைக் கூட பில்டரில் கொட்டாமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அம்மா என்னாச்சு?" தண்ணி கொதிச்சிட்டு கெடக்குது. ஏன் பில்டர்ல கொட்டலே."

"ஆம்.. என்றவள் 'ஐயையோ' என்று பதற அதற்குள் கருணா பில்டரில் சுடு நீரைக் கொட்ட கமலம் பெருமூச்சு விட்டாள்.

"என்னம்மா ஆச்சு? "சொல்கிறேன் என்றவள், காவ்யாவைப் பற்றிய செய்திகள் எல்லாவற்றையும் கூறினாள். ஒரு எம்.டி. விட்டுவிட்டு பத்து தடவை வந்து பார்ப்பாங்களா என்ன? நான் கூட மொதல்ல அப்படித்தான் யோசிச்சேன்."

கமலம் கருணாவிற்கு பதில் சொன்னாள். அப்புறம் காவ்யா உடம்பு சரியில்லாம படுத்து டல்லா ஆகி அப்புறம் தான் தெரிஞ்சது அவங்க கம்பனி டைரக்டர் பெண்ணுக்கும், இவருக்கும் கல்யாணம்னு ஏற்கனவே நிச்சயம் ஆனதுன்னு பேசிகிட்டு இருந்தாங்க. ஒரு வேளை அதனால் தான் காவ்யா டல்லா ஆயிருக்காளோ என்னவோ, ஆனா விசாரிச்சதுலே அப்படி எல்லாம் ஒண்ணும் தெரியலே. அந்தத் தம்பி காவ்யாவைக் கட்டாயம் கல்யாணம் செய்துக்கும். எனக்கு நம்பிக்கை இருக்கு." தான் அந்த கம்பெனியின் டைரக்டரைப்



பார்த்து விட்டு வந்ததைப் பற்றி எல்லாவற்றையும் விலாவாரியாகச் சொன்னாள்.

"நான் போய் நாளைக்கு மாதவனை பார்த்துப் பேசறேன்மா. எல்லாத்தையும் பிக்ஸ் பண்ணிக்கலாம் கவலைப்படாதே. காவ்யா கிட்டே போய் பேசிட்டு வரேன்."

"வேண்டாம் அவகிட்டே இப்ப ஒண்ணும் சொல்லாதே. அவளுக்கு ஆச்சரியமாக இருக்கட்டும். நாம முடிச்சிட்டு பேசறது தான் நல்லது." அது வரைக்கும அவகிட்டே சொல்லாதே."

கமலம் சகஜத்திற்கு வந்தாள். வழக்கம் போல் வேலைகளில் ஈடுபட்டாள். கருணா வந்ததும் வெகு நேரம் வரை காவ்யா தன் நிலையில் இல்லை. தான் செய்தது தவறோ என்னவோ என்று மனது இடித்துக் கொண்டிருந்தது. அவனை இப்படி விரட்டியிருக்க வேண்டாம். சகஜமாக பேசிக் கொண்டிருந்தவனின் முகமே விழுந்துவிட்டது.

"ஏய் காவ்யா என்ன இது? உனக்குள்ளே பேசிக்கிட்டு. என்னவோ செய்துகிட்டு என்ன இதெல்லாம் 'என்னம்மா ஆச்சு?' கருணா வந்து தலையைத் தடவும் வரை காவ்யா தன் நிலையிலேயே இல்லை.

"சாரி.. ஏதோ ஞாபகம்! பாத்தியா உனக்கு ஏதோ ஒரு லெட்டர் குரியரில் வந்தது. கொடுக்கணும்னு நெனைச்சு எடுத்து வச்சேன். மறந்துட்டேன். என்றவள் கருணாவிடம் குரியரில் வந்த லெட்டரைக்கொடுத்தாள்.

"யார் எழுதியிருக்காங்க?" பரபரவென்று கடிதத்தை பிரிக்கிறாள்.

''இன்னும் இரு தினங்களுக்குள் தனக்கு ரூபாய் ஐயாயிரம் அனுப்பி வைக்குமாறு அது வராவிட்டால் அவள் தன்னோடு வந்து குடித்தனம் செய்ய வேண்டும்'' என்று சற்று மிரட்டப்பட்டு எழுதப்பட்டிருந்தது.

'எத்தனை துணிச்சல் இருக்கனும்? என் வாழ்க்கையைக் கெடுத்த பாவி. அதுக்காகவே கேஸ் போட்டிருக்கனும். போனால் போகிறது என்று விட்டதே தப்பு?' உணர்ச்சி பெருக்கில் நகங்களைக் கடிக்கிறாள். ஆத்திரத்தில் நெஞ்சே எழும்பி, எழும்பி அடங்கியது. எத்தனை துணிச்சல் இருந்தால் இப்படியெல்லாம் எழுத முடியும்?

சாதாரணமாக காவ்யா இருந்திருந்தால் இத்தோடு நூறு கேள்விகள் கேட்டிருப்பாள். இன்று அவள் மனநிலையே சரியில்லாமல் இருக்க அக்காவின் நிலைமை பற்றி அவளுக்கு என்ன கவலை இருக்க முடியும்? கருணா தங்கையின் சுமையைப் பார்த்து அவளோடு விவாதிக்கத் தயங்கினாள். லெட்டரை எடுத்து மடித்து தன் கையில் எடுத்து வைத்துக் கொண்டு அம்மாவைப் பார்க்க உள்ளே போனாள்.

''என்னம்மா காவ்யாகிட்டே ஒன்னும் சொல்லலையே.''

''ம்.. சொல்றதைக் கேக்கற நிலமையிலா அவ இருக்கா?''

''என்னடி..''

''அவ ஏதோ யோசனையில் இருக்கா. என்னன்னு தெரியலை..''

''ஆனா நீ என்னம்மா ஒரு மாதிரி இருக்கே?'' கமலம் பதட்டத்தோடு கேட்க மௌனமாக அம்மாவிடம் கடிதத்தை நீட்டுகிறாள். படித்த கமலம் பதறிப் போகிறாள்.



''என்னடி இது அநியாயம்? என்ன பண்ணனும் தெரியலையே.''

''மொத பொண்டாட்டி இருக்கும் போது இன்னொருத்தியை ஏமாத்தினதுக்கே கேஸ் போட்டிருக்கனும். அதெல்லாம் வேண்டாம் துஷ்ட பிள்ளைகளோடு எதுக்கு மோதனும்னு ஒதுங்கினா அநியாயமா இருக்கே. யாராவது லாயரைப் பார்க்கலாம் வா.''

அம்மாசொன்னாலும் கருணாவின் முகம் இருண்டது. இத்தனைக்கும் காரணம் தான்தான். கொஞ்சம் அம்மா சொல்வது போல் நடந்திருந்தால் இத்தனை இக்கட்டிலா மாட்டியிருப்போம். முக மாறுதலில் அம்மாபுரிந்து கொண்டாளோ என்னவோ.

''நீயேம்மா கவலைப்படறே. வக்கீலைப் பார்க்கலாம்.''

அவசரம் அவசரமாக டிபனை முடித்துவிட்டு, இரு மகள்களுக்கும் கொடுத்துவிட்டு தானும் உண்டு முடித்து பெரியவளுடன் கிளம்பினாள். முதலில் இவள் பக்கம் நியாயம் இருப்பதாகக் கூறி ஆதரித்தவர்கள் கூட எம்.எல்.ஏ ஸப்போர்ட் இருக்கிறது என்றதும் கேஸை எடுத்துக் கொள்ளத் தயங்கினார்கள். இரண்டு, மூன்று இடங்களில் இப்படி ஆனதும் கருணா நம்பிக்கையை இழந்தாள்.

''அம்மா நமக்கு யாருமே இல்லே?''

''ஏன் அப்படி நினைக்கறே''

''மாதவன் தம்பியைப் போய் பார்த்தா என்ன?''

''வேண்டாம்மா? இப்பவே நிறைய உதவிகள் - என்னதான் சொந்தமாகப் போகிறார் என்றாலும் அவங்க கிட்டே போய் உதவி கேக்கறது அசிங்கம்.''

''இல்லேடி இதைச் சாக்கா வச்சு பேச ஆரம்பிச்சா, அப்புறம் மெதுவாகக் காவ்யா விஷயத்தை இழுக்க முடியும்' நான் போயிட்டு வரேன். நீ பேசாம இரு.''

''இல்லைம்மா. . நீங்க போக வேண்டாம். நானே வேற ஏற்பாட்டை பாத்துக்கறேன். எங்க ஆபீஸ்ல யாரையாவது கேட்டு இதுக்கு ஒரு வழி பண்ணிக்கறேன்.''

''சரி நீ பாத்துட்டு வந்து சொல்லு. முடியலேன்னா மாதவன் தம்பியைப் போய்ப் பார்க்கலாம்.''

ஆனால் கமலம் சும்மாவேனும் சோர்ந்து இருக்கவில்லை. ஏற்கனவே அவசரத்திற்கு என்று எழுதிவைத்த காவ்யாவின் நம்பரை எடுத்து தொடர்பு கொண்டபோது அவள் அலுவலகத்தில் போன் நம்பரை வாங்கிக் கொண்டவர்கள் இன்னும் அரைமணி கழித்து எம்.டியே தொடர்பு கொள்வார் என்று சொல்லிவிட்டனர்.

அரை மணி நேரம்சென்றது. போன் வரவில்லை. ஒருவேளை தன்பெண்ணுக்கும் அவனுக்கும் ஏதானும் லடாயா? அது தான் பெண் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருக்கிறாளா. அதனால் தான் அவனிடமிருந்து பதில் இல்லையா? மனது அடித்துக்கொண்டது. சாண் ஏறினால் முழம் சறுக்கும் நிலை. தனக்கு மட்டும் தன் தேவை இல்லாமல் இத்தனையும் நடக்கிறது. இத்தனை நாட்கள் இல்லாமல் இப்போது கருணாவை வேறு மிரட்டல். இதை எல்லாம் நினைக்க நினைக்க கண்ணீர் நிரம்பிக் கொட்டியது. இவன் கட்டாயம் உதவி பண்ணுவான் என்று நினைத்தேனே. அதிலும் அல்லவா மண் விழுந்து விட்டது.'

பெருமூச்சு விட்டுத் திரும்பும் போது மாதவன் காரை ஓசைப்படாமல் நிறுத்துவதைப் பார்க்கிறாள். மனது ஒரு நிமிடம் துள்ளிக் குதித்தது.



''வாங்க தம்பி.''

''போன் பண்ணீங்களாம்... காவ்யாவுக்கு ஏதாவது?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லைப்பா..''

''பின்னே..'' கொஞ்சம் உட்காருங்க.''

காபி கலக்கப் போனவளை தடுத்து 'சொல்லுங்க' என்றான்.

கருணாவிற்கு வந்த கடிதத்தைக் காண்பிக்க ''இதுல எம்.எல்.ஏ சம்பந்தப்பட்டிருக்கார்னு தெரிஞ்சவுடனே வக்கீலுங்க எல்லாமே விலகிட்டாங்க.''

''அம்மா கொஞ்சம் போனை யூஸ் பண்ணிக்கிறேன்.'' என்றவன் எம்.எல்.ஏ வீட்டிற்கே போன்செய்தான்.

கருணாவின் விஷயத்தை சுருக்கமாகக் கூறிவிட்டு அவன் காத்திருக்கவும். ''இதென்ன கட்டுக்கதையா இருக்கு. என்கிட்டே வேலை செய்தவன் அவன். மத்தபடி அவனுக்கும் எனக்கும் ஒரு கனெக்‌ஷனும் கிடையாது. இது விஷயமா நானே அவனை கூப்பிட்டுக் கண்டிக்கிறேன். எங்களுக்கு வேண்டியவங்கனு தெரியாது. இனிமே இது மாதிரி நடக்காம நான் பாத்துக்கறேன்.''

எம்.எல்.ஏ சொன்னதை அவன் சொன்னபோது ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அம்மா கவலையே படாதீங்க. இவங்க எல்லாம் என் கன்ட்ரோல்ல தான் இருக்காங்க.'' அதனால என்னை மீறி எதையும் செய்ய மாட்டாங்க. நிம்மதியா இருங்க.''

''கிளம்ப முயற்சி செய்தவனைப் பார்த்து

''காவ்யாவைப் பார்க்கலையாப்பா?''

''இல்லை.. வெளியே வேலை இருக்கு. நீங்க கூப்பிட்டீங் கன்னு தான் சொல்லிவிட்டு வந்தேன். அப்றம் வரேன்.''

பதிலுக்கு காத்திராமல் விறுவிறுவென்று வெளியே போய் காரில் ஏறி அமர, ஏதோ யோசனையாய் இருந்த காவ்யா திடுக்கிட்டாள்.

''மாதவனா அது?'' மனது ஒரு நிமிடம் துள்ளல் கட்டம் கொண்டது. நல்லவேளை கோபிக்கவில்லை. வந்தாச்சு. இப்போது மாதவன் வரப்போகிறான். என்று நினைத்து தன் அறையில் அமர்ந்து கொண்டு அவனுக்காக காத்து நின்ற போது அவன் வரவே இல்லை. 'என்ன ஆச்சு?' மறுபடியும் பரபரக்க, வெளியே பார்க்கிறாள்.காரையும் காணோம். மாதவனையும் காணோம். அம்மாவிடம் ஓடி வருகிறாள்.

''ஏம்மா மாதவன் வந்தாரா?''

''ஆமாம்மா ஒரு உதவி வேண்டியிருந்தது. சொல்லி அனுப்பினேன்.உடனே வந்து உதவி பண்ணிட்டுப் போச்சு. ரொம்ப நல்ல தம்பி.''

''உதவியா.. என்னம்மா இது?''

பெண்ணை ஒரு நிமிடம் பார்த்தவள் கருணாவிற்கு லெட்டர் வந்ததிலிருந்து சொன்னாள். போன் பண்ணேன். உடனே தம்பி வந்திடுச்சம்மா.''

''இத்தனை நடந்திருக்கு. ஏம்மா என்கிட்டே சொல்லலை..''

''நீ எதையும் கேக்கற மனநிலையில் இல்லை.'' பெருமூச்சு விடுகிறாள்.



தான் அடித்து விரட்டியும், மாதவன் வந்து உதவி செய்து விட்டுப்போகிறான். உண்மையில் அவனுக்கு உதவும் மனது தான். தான் தான் தவறாக நினைத்து விட்டோம். தான் அடித்து விரட்டியும் எத்தனை பெருந்தன்மையுடன் உதவி செய்திருக் கிறான். அவன் மேல் இருந்த கசப்பு மறைந்து மரியாதை வந்தது.

## 13

அவனுக்குத் தன் மேல் காதல் இல்லையானாலும் பரவாயில்லை. கண்ணனைக் காதலித்த மீரா போல் தான் வாழ்ந்துவிட்டுப் போகலாம். ஒரு நல்லவனைக் காதலிப்பதிலும் ஒரு சுகம் இருக்கத்தான் இருக்கிறது. அவனுக்காகவே வாழ வேண்டியதுதான் உண்மையான காதல். அவனின் நன்மைகள் மட்டுமே தன் வாழ்க்கையில் லட்சியங்கள் என்று வாழ்ந்து விடலாம். நாளையிலிருந்து வேலைக்கு மறுபடியும் போக வேண்டும். இப்போது போய் எத்தனை வேலைகள் பாக்கி இருக்கின்றன என்று பார்த்து மாதவனை தரிசித்துவிட்டு வந்தால் என்ன? இத்தனை நேரம் இருந்த சோர்வு, துன்பங்கள், வேதனை எல்லாம் விலகிச் செல்ல, இயல்புக்கு வந்தாள். தான் ஆபீஸ் போய் அடுத்த நாள் வேலையைப் பார்த்து விட்டு வருவதென கூறிவிட்டுக் கிளம்புகிறாள்.

''எதுக்கும்மா ரொம்ப டல்லாக இருந்தேம்மா.''

''இப்ப ஒண்ணுமில்லேம்மா, கொஞ்சம் வெளியே போயிட்டு வந்தால் தான் சரியாகும் போல் இருக்கிறது.''

அதற்கு மேல் கமலம் பேசவில்லை. ஆபீஸ் சென்ற போதே காவ்யாவிற்கு பயங்கர வரவேற்பு.

''வாங்க மேடம். உடம்பு எப்படி இருக்கு பரவாயில்லையா?'' பரஸ்பர குரல்கள். விசாரிப்புகள். மனதிற்கு இதமாக இருந்தது. சிறிது நேரம் எல்லோருடனும் கலகலவென்று உரையாடிவிட்டு, தன் இருக்கைக்கு வந்து எது எது பெண்டிங் என்று பார்த்தாள். சில கோப்புகளை எடுத்து வைத்து விட்டு எம்.டி இருக்கிறாரா என்று சில கோப்புகளை எடுத்து வைத்தாள். ''இல்லை மேடம். காலைல வந்தார். அப்புறம் உங்க வீட்டுக்குத்தான் கிளம்பி வந்தார். உங்க வீட்லேர்ந்து கிளம்பிட்டதாக போன் வந்தது. அப்புறம் இங்கு வரலை.''

''எங்கே போனார்.''

''தெரியல மேடம்.''

'எங்கே போயிருக்கக் கூடும்?' மனது அவனைக் காண துடித்தது.ஏங்கியது.

''சரி.. நான் சில பைல்ஸ் எல்லாம் எடுத்துட்டுப் போறேன். இந்த லெட்டரை மொதலாளி வந்தாக் கொடுத்திடு'' அவள் கிளம்பினாள்.

மாதவன் உன்னை விட என்னை நன்றாகப் புரிந்து கொண்டேன். உன் நினைவுகள், உன் சுகம், உனக்காக வாழ்வதிலும் ஒரு சுகம் இருக்கத் தான் செய்கிறது. சரிவருவது வரட்டும். இந்த ஏக்கமும் எனக்குத் தேவை தான். ஆபீஸிலிருந்து வெளியே வந்து பஸ்ஸுக்கு நின்ற போது கருணாவைப் பார்த்தாள். வேறு யாரோ ஆடவனுடன்.

''யார் அது கருணா? உன் கூடப் போவது யார்? யாராவது ஆபீஸ் ஆளாக இருக்கும். சீ, எதைப் பார்த்தாலும், ஏன் இப்படி சந்தேகம்? என் மனம் இத்தனை கீழ்த்தரமாக போய்விட்டது.



என்னதான் மனதை அடக்கப் பார்த்தாலும், அக்காவுடன், போனவன் நல்லவனா, கெட்டவனா என்ற கேள்வி குடைந்து கொண்டிருந்தது. அக்கா மறுபடியும் ஏமாந்து போய் விடப் போகிறாள். கடவுளே அவளைக் காப்பாற்று. என்னதான் மனதைக் கட்டுப்படுத்தினாலும் அக்கா இன்னொரு ஆபத்தில் போய் மாட்டிக்கொள்ளாமல் இருக்கணுமே என்று மனது பதைபதைக்கிறதை தடுக்க முடியவில்லை.

காவ்யா பஸ்ஸில் ஏறி அமர்ந்த இரண்டாவது ஸ்டாப்பில் அக்கா வந்து ஏறினாள். நல்ல வேளை கூட்டம் அதிகமாக இருந்ததால்அக்கா இவளைக் கவனிக்கவில்லை.

'தனக்கு சற்று அருகிலேயே நின்றுகொண்டு தான் பிரயாணம் செய்தார்கள்.

''என்ன கருணா எப்ப தான் முடிவு சொல்லே?''

''என் தங்கைக்கு ஒரு வழி செய்துட்டேன்னா, அப்புறம் அம்மாக்கிட்டே நம்ம மேட்டரை சொல்லலாம்.'' காவ்யாவிற்கு உண்மையிலேயே ஆச்சரியமாக இருந்தது. இது எப்படி சாத்தியம்? ஒரு தடவை குட்டிக்கொண்டவள் அடுத்த முறையும் ஒரு ஆண்பிள்ளையை எப்படி நம்புவது? யோசித்தவாறே அக்கா இறங்கி சற்று நேரம், கழித்து இறங்கினாள். இது கடைசி ஸ்டாப். அதனால் நிதானமாக இறங்க முடிகிறது. அக்கா இறங்கி ஒரு பத்து நிமிடம் கழித்து தங்கை நுழைகிறாள். அக்கா மறுபடியும் ஏமாறக் கூடாது. அந்தப் பையனைப் பற்றி முழு விவரம் தரும்படி ஏதேனும் டிடெக்டிவ் ஏஜென்சியிடம் தர வேண்டும்.

அக்காவின் போட்டோ எடுத்துக் கொண்டு மறுபடியும் கிளம்ப ...

''எங்கேம்மா போறே. இப்பதானே போயிட்டு வந்தே.''

''வந்திடுவேம்மா.'' கிளம்பினாள்.

தன் தோழியை அழைத்துக் கொண்டு அவளுக்குத் தெரிந்த டிடெக்டிவ் ஏஜென்சிக்குப் போனாள். அக்காவின் படத்தைக் கொடுத்துஅவள் தற்போது காதலிப்பவன் நல்லவனா? திருமணம் புரியலாமா? என்று சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். வீட்டிற்கு வந்து சற்று நிம்மதியாக இருந்தாள்.

அடுத்த நாள் வழக்கப்படி இருவரும் வேலைக்குச் சென்றார்கள். அக்காவைப் பற்றி என்ன சொல்லப் போகிறான்? வந்தவன் நல்லவன் என்று சொல்லி விட்டால் பரவாயில்லை. இல்லையென்றால் பாவம் அக்கா எத்தனை ஏமாற்றத்தைத் தாங்குவாள்.

அடுத்த நாள் டிடெக்டிவ் ஏஜென்சியில் இவளை வரும்படி போன். எம்டி.தான் கண்ணிலே படவில்லை. இரண்டு நாளாக அவன் இல்லாதது அலுவலகமே வெறிச்சென்றிருந்தது. தான் சொன்னது அவனை புண்படுத்தியிருக்க வேண்டும். அதற்காகத் தான் இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு போலும். மறுபடியும் பெருமூச்சு. அன்றும் ஒரு நோட் எழுதி வைத்து அவள் கிளம்பிச் சென்ற பின் தான் மாதவன் வந்தான். வழக்கப்படி வேலைகளெல்லாம் பார்த்து விட்டு பின் எல்லாவற்றிலும் கையெழுத்து இட்டுவிட்டு பின் இருக்கும் வேலைகளை கவனிக்க ஆரம்பித்தான்.

''நேற்று உங்க அக்காவைச் சந்தித்து ரொம்ப நேரம் பேசிக் கொண்டிருந்தார். பையன் ரொம்ப நல்லவன் தான். ஆனா அவனுக்கு வேற பொண்ணு நிச்சயம் பண்ணியிருக்கு. உங்க அக்காவை ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லுங்க. அந்தப்



பையனோட காலைல பத்துலேர்ந்து பதினோரு வரை இந்த ஹோட்டல்லே இருந்தாங்க. ''இந்த வார்த்தைகளைக் கேட்டதும் காவ்யா அதிர்ந்து நின்றாள். ''சரி டீடெயில் ஆக எழுதியிருக்கீங்க இல்லையா?'' பாவம் கருணா எப்படி தாங்கப் போகிறாளோ. நாம என்ன செய்ய முடியும்? கடவுள் விட்டவழி. அவள் மனதை தேற்றி அம்மாவை அவளுக்கு வேற மாப்பிள்ளை பார்க்கச் சொல்லணும்.

அன்று கருணா வந்த போதே சந்தோஷத்தில் குதித்துக் கொண்டு வந்தாள். ''அம்மா காவ்யாவுக்கு மாதவனை பிக்ஸ் பண்ணியாச்சு. நாளைக்கு சாயங்காலம் எல்லாம் வர்றாங் களாம். எல்லாம் ரெடி பண்ணும்மா..''

''என்னடி இப்படி திடுதிடுப்புன்னு சொன்னா எப்படி?''

''அம்மாநான் தான் காவ்யாவுக்கு மொதல்ல முடிக்கணும்னு சொல்லிகிட்டு இருக்கேன் இல்லே. அதான் மாப்பிள்ளையை மொதல்ல பாத்துப் பேசினேன். நாளைக்கு ஸ்வீட், காரம், எல்லாம் ஏற்பாடு பண்ணு. அவங்க அப்பா, அம்மா பார்த்து ஒகே ஆயிடுச்சன்னா ஒரு பொறுப்பு முடிஞ்சிடும்.

அம்மாவும் மிகவும் சந்தோஷப்பட்டாள். கருணாவைத் தனியாகக் கூப்பிட்டாள் காவ்யா.

''கருணா கொஞ்சம் உள்ளே வா. ஒங்கிட்டே நான் பேசணும்.''

''என்னது?''

''த பாரு என் பிரச்சினை இருக்கட்டும். உன் பிரச்சினை என்ன ஆச்சு?'' சட்டென்று கண்கள் கலங்குகிறது'

''அக்கா நீ ஏமாறக் கூடாது.''

''நான் ஏன் ஏமாறனும்.'' முந்தா நாள் அவனை ஒரு பையனுடன் பார்த்ததையும், தான் டிடெக்டிவ் ஏஜென்சியில் கொடுத்து விட்டு வந்ததை எல்லாம் சொன்னாள்.

''இதோ பார் ரிப்போர்ட் உன்கிட்டே எப்படி சொல்ற துன்னு தவிச்சுக்கிட்டு இருக்கேன். வந்தவனும் ஒழுங்கில்லே.''

''அப்படியா?''

''நீயே பாரு.'' டைப் அடிக்கப்பட்ட காகிதத்தைக் காண்பிக்கிறாள். படித்தவள் அவளிடமே அதைப் பத்திரமாகத் திருப்பிக் கொடுத்து விட்டு.

''அவர் ரொம்ப நல்லவர். நீ பயப்படற மாதிரியோ, கவலைப்படற மாதிரியோ ஒண்ணும் இல்லே. அவங்க அம்மாலேர்ந்து எல்லாரையும் எனக்குத் தெரியும். என்னைப் பத்தியும் அவங்க குடும்பத்துக்கே தெரியும். ரெண்டு வருஷமா ஒருத்தர் மனதை ஒருத்தர் நல்லா புரிஞ்சுகிட்டோம். இப்ப உன் கல்யாணம் முடிஞ்சவுடனே ஒரு நல்ல நாள் பார்த்து எங்க கல்யாணம்.''

''அக்கா என்னக்கா உளர்றே''

''பையனுக்கு அல்ரெடி நிச்சயம் ஆயிட்டுது. நீ ஏதேதோ பேசறியே!''

''மோசமில்லே..''

''அப்ப அந்த ஏஜன்ஸி பொய் சொல்றாங்களா? பையனுக்கு நிச்சயம் ஆயிட்டுதாம். ''இத பாரு கீழே அந்தப் பையனைப் பற்றி மொத்தமும் கொடுத்து இருக்கு. பேரு கூட கொடுத்திருக்கு படி. அந்தப் பையன் என் ஆளு இல்லே.



அவங்க அம்மாவைப் பார்த்து நம்ம அம்மா பேசி. கிட்டத்தட்ட என் கதை அல்மோஸ்ட் முடிஞ்சிது தான். பின்னை வீட்டுக்காரங்க நாளைக்கு வராங்க உன்னைப் பார்த்து ஓகே சொல்லிட்டா மளமள வென வேலை நடக்கும்.

''என்னென்னவோ பேசறே'' என்றவள் தன் பெயரைப் பார்த்து திடுக்கிட்டாள். மாதவன் எம்.டி இது என்ன கூத்து?''

''நேத்து எனக்கு ஹெல்ப் பண்ணியிருக்காரேன்னு தேங்க் பண்ண போனேன். கம்பெனி விஷயமாகவும் பேச வேண்டியிருந்தது. அதனால நீ அனுப்பிச்ச ஆளு மாதவனை என்கூடப் பார்த்ததுமே, மாதவனைப் பத்தி தெரிஞ்சதெல்லாம் கலெக்ட் பண்ணி எழுதியாச்சு.''

''அக்கா கல்யாணம் மொதல்ல உனக்கு நடக்கட்டும். எனக்கு வேண்டாம்.''

''உளராதே.. வரச்சொல்லி ஏற்பாடு பண்ணியாச்சு. வந்து பார்த்துட்டு போகட்டும். வேண்டாம்னா விட்டுடுவோம்?

அடுத்த நாள் வெறுப்போடு தான் இருந்தாள். அலங்காரம் எதுவும் செய்து கொள்ளவில்லை. தமக்கையும், தாயாரும் எத்தனையோ உபதேசம் செய்தும் கேட்கவில்லை. வேலைக்குச் செல்லும் போது அணிவது போல் சாதாரணமாக அணிந்திருந் தாள். கணவன், மனைவி இருவரும் வந்திருந்தனர். பையன் வரவில்லையா என்ன?

இவளை கூப்பிட்டு அவர்கள் அருகே அமர்ந்து சகஜமாக பேசிக் கொண்டிருந்த போதே மாதவன் உள்ளே நுழைந்தான்.

''என்ன நிச்சயம் பண்ணிடலாமா? என்னைக்கு வச்சுக்கலாம்?'' மாதவனின் தாய் கேட்க கமலத்திற்கு தாள முடியாத சந்தோஷம். காவ்யா ஒரு நிமிடம் இமைக்க

மறந்தான். இது மாதுவா தன் மாதுவா. எப்படிக் கண்ணில் படாமல் தன்னை அலைக்கழித்து விட்டான். என்னவோ 'நிச்சயம்' என்று எழுதினார்களே அது என்ன? மாது ஓரக்கண்ணால் அவளைப் பார்த்து விட்டு கருணாவிடம் பேசிக்கொண்டிருந்த போது காவ்யா மட்டும் வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருக்கிறாள், எதுவும் பேசத் தோன்றவில்லை. அவர்கள் நிச்சயம் செய்யும் நாளைக் குறித்துக் கொண்டு போனது கூட கனவோ என்று தோன்றியது.

''என்னம்மா இது? வேறு ஒரு பொண்ணை நிச்சயம் செய்தார்கள் என்று பேசிக் கொண்டார்களே ''காவ்யா கேட்க கேட்க அதற்கு மேல் குழப்பாமல் கமலம் எல்லாவற்றையும் சொல்ல, சொல்ல.

''அம்மா.. நீயா? நீயா செய்தாய்?'' பெண் ஆச்சரியப் பட்டுப் போனாள்.

''ஒரே முகூர்த்தத்தில் இரண்டு கல்யாணத்தையும் வச்சிடணும்.'' சொல்லிவிட்டு எழுந்த போது, காவ்யா அம்மாவிடம் கையைப் பிடித்து இழுத்தாள்.

''அம்மா கல்யாணத்துக்கு அப்புறம் நீ என்னோடு தான் இருக்கணும்.''

''நீ மாமியார் வீட்டுக்கு போயிடுவே. அம்மா என் கூடத்தான்.'' இது கருணா.

''ஏன் எனக்கு கூடத்தான் மாமியார், மாமனார் கூட இருக்காங்க''

''அவங்க கிட்டே எல்லாவற்றையுமே நான் பேசிட்டேன்.'' இது கருணா.



''அதெல்லாம் நடக்காது' காவ்யா கூற, அம்மா என்றோ நினைத்த விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தாள்.

''இதுவரைக்கும் நான் என் குடும்பம்னு வாழ்ந்துட்டேன். இனி மேலாவது மத்தவங்களுக்காக வாழணும். அன்றைக்கு மாதவனைப் பார்க்கப் போகுமுன் உண்மையிலேயே என் தோழியைப் பார்த்தேன். அவ அனாதை விடுதி ஒண்ணு நடத்தறா. அவ ஒருத்தியால சமாளிக்க முடியலே. அதனால அங்க போகப் போறேன். உங்களுக்கு செய்ய வேண்டிய கடமை முடிஞ்சதுன்னா, மீதி நாளை மத்தவங்களுக்காக வாழணும்.''

''அம்மா என்னம்மா இது?'' இருவருமே திடுக்கிட்டுப் போய் கத்த.

''இல்லேம்மா தப்பா நினைக்காதீங்க. அப்பப்ப வருவேன் உங்களை எல்லாம் பாத்துட்டு போவேன். நீங்களும் எப்ப வேணா அங்கு வந்து என்னைப் பார்க்கலாம்.''

''அம்மா...'' மறுபடியும் பேச முற்பட்ட மகள்களை தடுக்கிறாள்.

''இந்த உலகத்திலே எத்தனையோ பேருக்கு அன்பு தேவையாயிருக்கு. அனுசரணை தேவையாயிருக்கு. பாசம் வேண்டியிருக்கு. எங்கிட்டே இருக்கிற அதெல்லாம் மத்தவங் களுக்குத் தரப்போறேன். தயவு செய்து என்னை மாற்ற முயற்சி பண்ணாதீங்க.''

''அம்மா, மாமியார், எல்லோரும் போன்செய்து கமலம் விஷயத்தைச் சொல்லிவிட்டு வர...

''அம்மா எப்படி இத்தனை சாதித்தாய்?'' இரு பெண் களும் பிரமிப்போடு கேட்க.

''ம்... எதற்கும் நேரம் கிடையாது. இரண்டு கல்யாண வேலைகள் தலைக்கு மேல் இருக்கு. பந்தக்கால், சத்திரம் அட்வான்ஸ் கொடுத்திட்டு வாறும் நான் கெளம்பறேன்.''

பாரதியின் பெண்ணை கண்டு விட்ட திருப்தியோடு இருவரும் அம்மாவையே வியப்போடு பார்த்தனர்.

கருணா ஆபீசிலிருந்து வியர்க்க, வேர்க்க வருகிறாள். திருமணம் முடிந்த இந்த நான்கு மாதங்களாகவே நேரம் இறைக்கை கட்டிக் கொண்டு பறந்தது. உல்லாசம், உற்சாகம், திருப்தி சந்தோஷம் என்று வாழ்ந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வந்ததோ தெரியவில்லை. அவள் கணவனின் சிரிப்பு சற்று மறைந்தாற் போல் இருந்தது. சதா சிரித்துக் கொண்டும், கிண்டல் அடித்துக் கொண்டும் இருப்பவன் கடந்தசில வாரங்களாகவே மௌனம் காக்கிறான். என்னவாக இருக்கும்? மண்டையைக் குடைந்து கொண்டும் ஒன்றும் தோன்றவில்லை. யோசித்து, யோசித்து மூளையே வெடித்து விடும் போல் தோன்றியது. தினமும் போல் மாது அவளை ஏற்றிச் செல்கிறான். மாலை திரும்புவதும் இருவருமே ஒன்றாகத் தான். ஆனால் கடந்தசில நாட்களாக அவள் தனியாகத் தான் திரும்புகிறாள்.

''நான் கொஞ்சம் லேட்டா வருவேன். நீ பஸ்ஸை பிடித்து போயிடு.'' என்கிறான்.

''ஏங்க என்னாச்சு? ஏன் இப்படி? தனிமையில் எத்தனையோ முறை அவனிடம் கேட்டாகிவிட்டது. பதில்தான் இல்லை. நேற்று இரவு கூட தான் உள்ளே நுழையும் போதே அவன் தூங்குவது போல் பாவாங்கு செய்வது தெரிந்தது. மெதுவாக கிட்டே போய் அமர்ந்து அவனின் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டு அவனை அணைத்துக்



கொள்கிறாள். தன்னையும் அறியாமல் கண்கள் துவங்கி கண்ணீர் வர சிறிது நேரத்தில் அவன் எழுந்து கொள்கிறான்.

''டோண்ட் டிஸ்டர்ப்' எனக்கே வேலை அதிகமாக இருந்தது. செம டையர்ட்.'' அவளை முடிக்க விடவில்லை அவன்.

''ப்ளீஸ் இன்னிக்கு நீங்க பேசித்தான் ஆகணும். சொல்லுங்க என்னாச்சு? ஏன் என்னை அவாய்ட் பண்றீங்க?'' முதலில் ஒரு நிமிடம் விழித்தவன்.

''ச்சீ... உளராதே. பேசாம படு'' திரும்பி படுக்கிறான். கணவன் சொல்ல மாட்டான். எத்தனை துருவித் துருவிக் கேட்டாலும் சொல்ல மாட்டான். நெஞ்சு அழுத்தம் மிகுந்தவன் தான். இந்த நான்கு மாதங்களில் கருணா நன்கு தெரிந்து கொண்டது இது தான். தன்னால் தன் நெருங்கியவர்களிடம் எந்த விஷயத்தையும் மறைக்க முடியாது. ஆனால் தன் கணவன் தனக்கு விருப்பம் இல்லாவிட்டால் எத்தனை முக்கியமான விஷயம் ஆக இருந்தாலும் சொல்ல மாட்டான். இதுவரைக்கும் சொன்னதும் கிடையாது. கண்கள் கலங்கியது. அவன் பார்த்தாலும் பார்க்காத மாதிரி, தெரியாத மாதிரி முகத்தைத் திருப்பிக்கொண்டான். சில நிமிடங்களில் உறங்கியும் போனான். ஏதோ நடந்திருக்கிறது? என்னவாக இருக்கும். அவரின் பழைய வாழ்க்கைபற்றி... இல்லையே அதைப் பற்றி மொத்தமும் தெரிந்து தானே திருமணம் செய்து கொண்டான். திருமணம் புரியுமுன் அவள் மாமியார் கூட எத்தனை ஆசையாக, அனுசரணையாக நடந்து கொண்டாள். எத்தனை பெரும்போக்காக நடந்து கொண்டாள்.

''பழசையே நெனைச்சிகிட்டு அழக்கூடாது. இவனோட புது வாழ்வை சந்தோஷமா நீ ஆரம்பிக்கணும். தவறு

செய்துட்டோம்னு எந்தவிதஉணர்ச்சியும் உனக்கு இருக்கக் கூடாது. நீ புதுசா பிறந்து இருக்கேன்னு நெனைச்சிக்கோ. தன் சொந்த அம்மாஆறுதல் சொல்வது போல் எத்தனை ஆறுதல் மொழிகள் - அப்பேற்பட்ட மாமியார் கூட ஏன் மாறிவிட்டாள். கூடுமானவரை அவளிடம் பேசுவதையே தவிர்க்கிறாள். தன்னை தவிர்க்கிறாள். 'சாட்சிக் காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்பார்கள். பேசாமல் அப்படி செய்து விட்டால் என்ன? மாமியார் தன்னிடம் நேரிடையாகச் சண்டை இட்டதில்லை. அவளிடம் சென்று சற்று வெளிப்படையாக பேசினால் என்ன? இந்தக் கோபத்துக்கு காரணம் என்னவென்று தெரிந்துவிடுமல்லவா?

அன்று ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டு விட்டு சீக்கிரமே வீட்டிற்கு திரும்பினாள். வாசலில் கணவனின் வண்டி. தன்னிடம் என்னவெல்லாம் சொன்னான்.

''என்னால முடியாது. எக்ஸ்ட்ரா வொர்க் இருக்கு. நான் வரவே ஏழு எட்டு ஆயிடும்'' இப்படிச் சொல்லிக் கொண்டு இருந்தவனுக்கு இன்று மட்டும் எப்படிச் சீக்கிரம் வர முடிந்தது? இன்று மட்டுமா? இல்லை தினமும் சீக்கிரம் வந்து விட்டு, பின் மறுபடியும் லேட்டாக வருவது போல் கதைக்கிறானா? மனம் பொருமியது. இந்த ஆண்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்? என்ன தான் மாய்ந்து மாய்ந்து கணவன், கணவன் என்று செய்து உயிரை விட்டாலும் தன் மனிதர்கள் என்று வந்து விட்டால், தான் செல்லாக் காசு தான்.

சட்டென்று கழிவிரக்கம் பொங்கியது. காரணம் சொல்லாமலேயே தன்னை அலைக்கழிக்கும் கணவன் மேல் முதல் முறையாக ஆத்திரம் வந்தது. அம்மா.. அவளை எப்படி மறந்து போனேன். அவள் ஒரு தீர்க்கதரிசி அவள்



படாதகஷ்டமா? நான் பட்டிருக்கிறேன். என்ன அழகாக ஒவ்வொரு பிரச்சினைகளையும் சமாளித்து, எங்களுக்கு நல்ல வாழ்க்கையைக் கொடுத்து. அவளிடம் போனால் இப்போதே தீர்வு கிடைத்து விடும். ஆனாலும அம்மா பாவம் எல்லாமே முடிந்து விட்டது என்று நிம்மதியாக இருக்கும் போது.

''முடியலைம்மா'' என்று அவளை அலைக்கழிப்பது என்ன விதத்தில் நியாயம்? நான் அவளின் பெண் அவளின் நெஞ்சுரத்தில் தனக்கு பாதி கூடவா இருக்காது. மறுபடியும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு கதவின் அருகில் போய் கை வைக்க, லேசாக மூடியிருந்த கதவு திறந்து கொண்டது.

டைனிங் டேபிளில் தன் மாமியார், மாமனார், கணவன் மூவரும் விவாதித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''எப்ப கேட்டாலும், ஏதாவது சாக்கு போக்கு சொல்றியே?''

''என்னை என்னம்மா பண்ண சொல்றே?''

''அவகிட்டே தைரியமா விஷயத்தைப் போட்டு உடைன்னு சொல்லிகிட்டு இருக்கேனில்லே.''

''எப்படிம்மா இதை நான் எப்படி சொல்றது? நானே மூணு வாரமா குழம்பிக்கிட்டு இருக்கேன். நேத்து கூட அவ என் தோள்ல சாஞ்சு அழுவே அழுதுட்டா. வாய் வரைக்கும் வந்த உண்மை தொண்டையோடு நின்னு போச்சு. எனக்கும் தைரியம் வரலை.

''இதென்னடா ஊரிலே உலகத்துலே இல்லாத அதிசயமா இருக்கு. பொண்டாட்டி தானே வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு சொல்ல வேண்டியது தானே.''

''முடியலேம்மா..''

''ஏன் மாமியார் வீட்டு மேலே ரொம்ப கரிசனம் போல இருக்கு.''

''அம்மா நாம பேசறது உண்மையான்னு பார்க்கணும். ஒருவேளை பொய்யாக இருந்தால்...''

''எப்படிடா இருக்கும்? நான் கண்ணால பார்த்ததையா பொய்யின்னு சொல்றே?''

''அம்மா.....''

''இத பாருடா. நீயா சொல்லுவேன்னு இத்தனை நாள் வெயிட் பண்ணிகிட்டு இருந்தேன். நீ சொல்லலைன்னா நான் சொல்ல வேண்டியிருக்கும்.''

கருணாவிற்கோ ஒரு நிமிடம் நெஞ்சே நிற்கும் நிலை ஏற்பட்டது. என்ன சொல்ல வருகிறாள் மாமியார். தன் நடத்தையில் ஏதேனும் சந்தேகமா? தான் அப்படிப்பட்ட பெண்ணா என்ன? தான் ஏமாந்தது நிஜம். அறிவீலியாக நடந்து கொண்டது அப்பட்டமாக உண்மை. அதற்காக தனக்கு தெளிவே வராதா என்ன? தான் அப்படி என்ன கேவலமாக நடந்து கொண்டு விட்டோம். தான் யாரிடமும் பேசுவது கூட இல்லையே. அதற்கு மேல் வார்த்தைகள் வராமல் சட்டென்று கண்கள் ரொம்பியது. இதுவரை பேசிக் கொண்டிருந்தவர்கள் சட்டென்று திரும்பி இவள் வருவதைப் பார்க்க ஒரு நிமிடம் அமைதியாக இருந்தார்கள்.

''என்னடா?'' என்பதைப் போல் மாமியார் மகனைப் பார்க்க, படர்ந்திருந்த லேசான ஈரத்தைத் துடைத்தவாறே கேட்கிறாள் கருணா.



''என்ன விஷயம்மா.. என்கிட்டே சொல்லக் கூடாதா?''

''சொல்லித்தான் ஆகணும். சொல்லாம?'' மாமியார் பொருமுகிறாள்.

''ஏன்டா நீ சொல்றியா இல்லை நான் சொல்லட்டுமா?'' கணவன் கருணாவை ஒருமுறை தீர்க்கமாகப் பார்த்து விட்டு, பின் தலைகுனிகிறான்.

''நானே சொல்றேன். இத பாரும்மா. நாங்க எல்லாம் கௌரவமானவங்க. நாங்க பணத்தைக் கூட பெரிசா நினைக்கறவங்க இல்லே. மானமா வாழறவங்க. மாமியார் சொல்ல, சொல்ல அவளையே பார்க்கிறாள். என்ன சொல்ல வருகிறாள்? தான் ஏற்கனவே கெட்டுப் போனவள் என்று சொல்லாமல் சொல்கிறாளா? ஏற்கனவே தெரிந்த விஷயம் தானே. இதை இப்போது வெளிச்சம் போட்டுக் காட்டு வானேன். அது தான் கணவன் கண்டும் காணாமல் இருக்கிறானா? நெஞ்சு பாரமாய் அழுத்த பெருமூச்சு ஒன்று வந்தது. முழுக்க நனைந்தாகி விட்டது. இனி முக்காடு எதற்கு? தான் இங்கே வந்ததே தவறோ. பேசாமல் அம்மாவைப் பார்க்கப் போயிருக்க வேண்டும். அம்மா கட்டாயம் ஏதேனும் உபயோகமான விஷயங்களைச் சொல்லியிருப்பாள். தவறு செய்து விட்டேன்.. ம்.. சரி வருவது வரட்டும். எல்லா வற்றையும் என்றாவது ஒரு நாள் பேஸ் பண்ணித்தானே ஆக வேண்டும்.

'என்ன ஆச்சு?' மனம் கேட்க நினைத்தாலும் வாயினின்று வார்த்தைகள் எழும்பவில்லை. தன் மாமியாரையே பார்த்துக் கொண்டு நிற்க, அவள் பளிச்சென்று விஷயத்துக்கு வந்தாள்.

''இத பாரும்மா. நான் சொல்றதைக் கேட்டா உனக்கு அதிர்ச்சியாகக் கூட இருக்கலாம். ஆனா யாரையும்

அவமானப்படுத்தணும்னு நான் இதைச் சொல்லலை. இந்தக் குடும்பத்துக்கு எந்தவிதமான அவமானமும் வரக் கூடாதுங்கற ஆதங்கத்துலே இதைநான் சொல்றேன். கருணா வாய்மூடி, மௌனம் காத்தவாறே தன் மாமியாரைப் பார்க்க, மெதுவாக ஆனால் அழுத்தமாகப் பேசுகிறாள் மாமியார்.

''உங்க அம்மா, அவங்க எதுக்கு தனியா இருக்காங்க. பிள்ளைகளோடு தான் இருக்கணும்னு எண்ணணுமில்லே. பிள்ளை இல்லாதவங்க என்ன பண்ணுவாங்க. யாரோட இருப்பாங்க. பேசாம உங்கூட கொஞ்ச நாள் உன் தங்கையோட கொஞ்ச நாள் இருக்க வேண்டியது தானே.

கருணாவிற்கு உண்மையிலேயே புரியாமல் தான் போனது. தனது அம்மாவைப் பற்றி ஏன் பேசுகிறார்கள்? அதுவும் கொண்டு வந்து வைத்துக் கொள் என்று ஏன் சொல்ல வேண்டும்? நல்ல விஷயங்கள் சொல்வதற்கு தயக்கம் ஏன்? தன் கணவன் ஏன் தன்னை தவிர்க்கிறான்? ஒரு நிமிடத்தில் மனது நிலை கொள்ளாமல் தவித்தது.

''இத பாரும்மா நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே. உங்கம்மாவை தனியா விடாதே. உங்கம்மா ஏழைகளுக்கு உதவி செய்யறாங்கன்னு சொன்னே. அவங்களுக்கு எம்.எல்.ஏ கிட்டே என்ன வேணும்?''

''சொல்றதுக்கு என்னம்மா? உன்னுடைய எல்லா விஷயங்களையும் தெரிஞ்சுகிட்டு தான் கல்யாணம் பண்ணிகிட்டோம். ஆனா அதுக்காக ஒரு வயசுக்கு மேலே மூளையை உபயோகப்படுத்தாம மனம் போன போக்கில் நடந்தால் ஒத்துக்க முடியாது.''

''நீங்க என்னம்மா சொல்றீங்க?''



13032 MAR 2003

''என்னத்தை சொல்றது? உங்கம்மா கொஞ்ச நாட்களாகவே அந்த எம்.எல்.ஏவோட தான் சுத்திகிட்டு இருக்காங்க.''

கருணா ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறாள். என்ன அசிங்கமான குற்றச்சாட்டு. இருபத்து ஐந்து வயதில் இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு எத்தனை ஏற்ற இறக்கங்களை பார்த்திருக்கிறாள். இத்தனை வயதுக்கு மேல் பொறுப்புகளை முடித்து விட்டு கடமைகளை ஒழுங்காக செய்து விட்டு ஆத்மதிருப்திக்காக ஏதேனும் செய்ய நினைக்கும் இந்த வேளையில் எத்தனை கூசாமல் பழிபோடுகிறது இந்த உலகம். மனது துடித்தது. மாமியாரின் கன்னத்தில் பளாரென்று அறைய கை பரபரத்தது. கணவனை திரும்பிப் பார்க்கிறாள். கணவன் தன் பார்வையை தவிர்த்து எங்கோ பார்ப்பது தெரிந்தது. 'சே. இவனைப் போய் நல்லவன் என்று நினைத்தேனே.. இடியட்...' முகம் கோபத்தில் சிவந்து கலங்கிப் போனது. அடுத்த நிமிடம் அங்கே நிற்காமல் நகரப் பார்க்க.

''ஏம்மா நில்லு.. நான் இத்தனை பேசிட்டு இருக்கேன். நீ ஏன் இப்படி இருக்கே?''

''அம்மா நீங்க பேசறதுலே ஏதாவது அர்த்தம் இருக்கா? எத்தனையோ கஷ்டப்பட்டு எங்களை வளர்த்திருக்காங்க. எங்கப்பா எங்கம்மாவை பிரிஞ்சி போன போது அவங்க வயது இருபத்து ஐந்து. அந்த நிலைமையிலே கூட ஒரு தப்புக்கும் போகாதவங்க எங்க அம்மா. சின்ன வயசுலே ஏற்படுகிற ஞாயமான உணர்ச்சியைக் கூட கட்டுப்படுத்தி வச்சவங்க. இனிமேலா கெட்டுப் போவாங்க. இது அநியாயம். அம்மா மனசாட்சியோட பேச கத்துக்கணும்.''

''அப்ப நாங்க பாத்ததை பொய்யின்னு சொல்றியா?''

''நீங்க எதைப் பார்த்தீங்க. எங்கம்மா டுயட்டா பாடிகிட்டு போனாங்க. ஏதோ வேலையா எம்.எல்.ஏவோட போயிருக்கலாம். அது தப்பா? ஒருத்தரோடு பேசினாலே கெட்டுப் போயிடுவோமா?''

''எங்களுக்கும் மனசாட்சி இருக்கிறதுனால தான் ஒன்னை உக்காத்தி வச்சு இந்த கேடு கெட்ட விஷயத்தையே பேசறோம்...''

''திருப்பி, திருப்பி மேலே மேலே பேசிக்கிட்டு போனா என்ன அர்த்தம்? அவங்க அனாதை இல்லம் நடத்தறாங்க. எங்க கல்யாணத்துக்கு முன்னாடியே அதுக்கு எத்தனையோ பிளான் போட்டு வச்சிருந்தாங்க. எங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆச்சு. ஒரு பத்து பசங்களை வச்சிகிட்டு நடத்திகிட்டு இருந்தாங்க. இந்த நாலு மாசத்துலே பிள்ளைங்க எண்ணிக்கை ஜாஸ்தியா போச்சு. கிட்டத்தட்ட இன்னும், ஏழு எட்டு பசங்க எக்ஸ்ட்ராவா வந்து சேர்ந்துட்டாங்க. இப்ப அவங்க தங்கறதுக்கு அந்த வீடு போதாது. அவங்க இருக்கிறதுக்கு இடம், அவங்க செலவுக்கு ரூபா இதையெல்லாம் கவர்ன்மெண்ட் ஏற்பாடு பண்ணாதா என்ற நப்பாசையில் அவர் கூட போயிருக்கலாம். அதைத் தப்பா நெனைச்சதும் இல்லாம என்கிட்டே சொல்லி அசிங்கப் படுத்திட்டீங்களே.''

''ஏய் யார்கிட்டே பேசறேன்னு தெரியுதா? அம்மாங்கற மரியாதை இருக்கட்டும்.'' கருணா பெருமூச்சு விடுகிறாள். காதலித்து கை பிடித்தவன் தான். இந்த சில மாதங்களுக்குள் இருவரும் ஒருவரை ஒருவர் விட்டு ஒருவர் வெகுதூரம் போனது போல் ஒ ரு உணர்வு. தன் கணவன் தன்னிடம் ஏன்



இப்படி நடந்துகொள்கிறான்? மனது மறுபடியும் கஷ்டப் பட்டது.

காதல் என்ற உணர்வு எத்தனை புனிதமானது. ஒருவரின் தவறுகளைத் தெரிந்தும், அதைப் பொருட் படுத்தாமல் அவர் மேல் அன்பு செலுத்துவது தான் தூய அன்பு. காதலிக்கும் போது கணவனைப் பற்றி தெரிந்திருந்தால் இத்தனை அதிர்ச்சி இருந்திருக்காது. மனது அவன் குறைகளுக்குப் பழக்கப்பட்டுப் போயிருக்கும். மறுபடியும் வேதனை மனதைக் கவ்வ, கண்களில் கண்ணீர் நிரம்பியது.

''இதபாரு இப்ப என்ன சொல்லிட்டேன்னு அழறே. பெரியவங்களுக்கு மரியாதை குடுன்னு சொன்னது தப்பா? த.. பாரு நான் சொல்றதைக் கேளு. ஒங்கம்மா வீட்டுக்குப் போ. இதப்பத்தி வெலாவாரியாப் பேசு. மத்தவங்க பார்க்கிற மாதிரி இனிமே நடந்துக்க வேணாம்னு சொல்லிட்டு வா. இந்த அனாதை இல்லத்தை எல்லாம் மூடி விட்டு, நம்ம வீட்டோட வந்து இருக்கச் சொல்லு. இருக்கிற வரைக்கும் கிருஷ்ணா, ராமான்னு இருந்துட்டுப்போக வேண்டியது தான்.''

கருணா பெருமூச்சு விடுகிறாள். 'என் வாழ்க்கையை மட்டும் தான் அவர்கள் டிசைட் பண்ண முடியும். அம்மாவின் வாழ்க்கையை அவர்கள் எப்படி முடிவு பண்ண முடியும்? மறுபடியும் அழுகை வந்தது. தான் எதுவும் பேச முடியாது. ஏதாவது வாயைத் திறந்தால் உன் அம்மாவிடம் போ என்று சொல்லிவிடுவார்கள். அம்மா! பாவம் பாரம் தீர்ந்த மகிழ்ச்சியில் இருப்பவளை தொந்தரவு செய்வது என்ன நியாயம்? மனம் மறுகியது. தலையை மட்டும் ஆட்டிவிட்டு உள்ளே நுழைகிறாள். தான் உள்ளே வந்தபின் கணவனும், மாமியாரும் ஏதோ பேசுவது மட்டும் தெரிந்தது. மனம்

மீண்டும் பாரமாக உள்ளேயே வேலைகளை செய்ய ஆரம்பித்தாள். யாரும்யாரோடும் பேசிக்கொள்ளவே இல்லை. கணவன் அவளை ஏறெடுத்துப் பார்க்காமலேயே இருப்பது தெரிந்தது.

அன்று இரவு படுக்கை அறைக்கு வந்த போது, கணவன் முதுகைத் திருப்பிக் கொண்டு தூங்குவது போல் பாவனை செய்வது புரிந்தது. ஓசைப்படாமல் பாலை வைத்து விட்டு, மெதுவாக பால்கனி அருகில் வந்து நின்றாள். தான் என்ன நினைத்து வாழ்க்கையை ஆரம்பிக்கிறோம். என்ன நடக்கிறது மறுபடியும் கண்கள் கலங்க, கலங்க அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் வாய்விட்டு அழுகிறாள். எத்தனை நேரம் அழுதிருப்பாளோ தெரியவில்லை, யாரோ கையை மேலே அழுத்துவது போல் தோன்ற, அதிர்ந்து போகிறாள்.

''கருணா.. வா.. உள்ளே வந்து படு. ''கணவன் வந்து தன் பக்கத்தில் நின்று கொண்டு சொல்கிறான். ஒரு நிமிடம் அவனுடைய அருகாமையில், அவனின் கை அழுத்தத்தில் மனம் சிறிது அமைதி அடைகிறது.

மறுபடியும் மனம் புழுங்க, குமுறிக் குமுறி அழுகிறாள். ''கருணா .... த... பாரு மொதல்ல உள்ளே வா.'' அவன் குரலில் ஒரு வித பரிதாப உணர்வு தெரிகிறது. மெதுவாக அழுது கொண்டே அவனின் பின் வருகிறாள்.

''இத பாரு கருணா. நாங்க சொல்றதைப் புரிஞ்சுக்க. உங்கம்மாவை திட்டணும்னோ, இல்லை அவங்களை அவமானப்படுத்தறதுக்காகவோ இதெல்லாம் சொல்லலை. நாளைக்கு பின்னாடி அசிங்கப்படக் கூடாதுன்னு தான் அம்மா சொல்றாங்க. நீ போய் உங்கம்மாவைப் பாரு. பேசு. அப்புறம் இதுக்கு ஒரு வழி பண்ணலாம். ஆமா நெஜமாவே கேக்கறேன்



இத்தனை வயதுக்கு மேலே அவங்க ஏன் கஷ்டப்படணும். பேசாம நம்ம கூட வந்து இருக்கலாமே அவங்க கஷ்டப்படாம இருக்கக் கூடாதா? உங்க அம்மாவைக் கடைசி காலத்துலே நல்லா வச்சுக்க வேண்டிடது நம்ம கடமை இல்லையா? சொல்லு?

கணவனின் வார்த்தையில் மனம் முதலில் கோபப்பட்டாலும், பின் தெளிந்தது. சரி அம்மாவிடம் போய் பேசிப் பார்ப்போம். அம்மா மேல் சந்தேகப்பட்டா பேசப்போகிறோம். நிலைமையைச் சொல்லி, 'என்ன செய்வது அம்மா' என்று அம்மாவிடம் கேட்டால், அதற்காகவாவது கட்டாயம் நேரில் சென்று அம்மாவைப் பார்க்க வேண்டும்.

அடுத்த நாள் ஆபீசுக்கு அரைநாள் லீவு போட்டுவிட்டு அம்மாவைப் பார்க்கப் போனாள். ஸ்டாப்பில் இறங்கும் போதே அம்மா அந்த ஏ.ஸி. காரில் செல்வது தெரிந்தது. பக்கத்தில் அந்த எம்.எல்.ஏ தன்னை நாசப்படுத்த துணிந்தவன். அவனுடனா அம்மா செல்கிறாள். அதிர்ச்சி யோடு அப்படியே நிற்கிறாள் கருணா.

ஒரு நிமிடம் அப்படியே உறைந்து போகிறாள். இதெல்லாம் சாத்தியமா என்ன? சிறுவயதில் இல்லாத சபலம் இப்போது எப்படி வரும்? நினைக்கும் போதே அருவருப்பாக இருந்தது கருணாவிற்கு. தான் எப்படி இப்படிக் கேவலமாக நினைக்கத் தொடங்கினோம். அம்மாவைப் பற்றி.. அதுவும் அவர்களுக்காகவே உழைத்து உழைத்து ஓடான அம்மாவைப் பற்றியா இப்படி நினைப்பது கேவலம். எது எப்படி இருந்தாலும் அம்மாவைப் பற்றி தவறாக யோசிக்கக் கூட தோன்றவில்லை. நினைப்பே அசிங்கத்தைக் கொடுத்தது. அம்மா தன் வேலையாக அனாதைப் பிள்ளைகள் சம்பந்தமாக அங்கே போயிருக்கலாம்.

ஆனால் தன் வேலை என்றாலும் இப்படி எல்லோரும் பார்த்து தன்னைப்பற்றி கேவலமாக எண்ணும்படி நடந்து கொள்ள வேண்டாம். எத்தனையோ ஆய்ந்து, ஆராய்ந்து எந்தவித பிரச்சினைகளையும் சமாளித்தவள் இப்போது ஏன் இப்படிநடந்து கொள்கிறாள்? கால்கள் துவண்டன. அதற்கு மேல் நடக்கவும் முடியவில்லை. அப்படியே போய் பஸ் ஸ்டாப்பில் சாய்ந்து நிற்கிறாள். மனதில் கவலைகள் வந்து விட்டால் ஒரு சாதாரண வேலை கூட பாரமாகத்தான் போய் விடும். மலை ஏற்றம் போல் தோன்றுகிறது.

சட்டென்று காவ்யாவைப் போய் சந்தித்தால் என்ன? நினைவுகளில் ஒரு மின்னல்.மனம் சற்று ஆசுவாசப்பட்டது. முகத்தில் லேசான நிம்மதி. சட்டென்று தன் கைக்கடிகாரத்தைப் பார்க்கிறாள். மணி பத்தை நெருங்கிக்கொண்டிருந்தது. அதற்குள்ளா பத்தாகிவிட்டது. காவ்யா அலவலகத்தில் தான் இருப்பாள், போய் பார்ப்போம்.

ஆட்டோ ஸ்டாண்டிலிருந்து ஆட்டோவை பிடித்து காவ்யாவின் அலுவலகம் போய் சேர்ந்ததுமே மெல்லிய பெருமூச்சு ஒன்று எழுந்தது. உள்ளே காலடி வைத்ததும் மறுபடியும் அச்சம் மனதைக் கவ்வியது.

அவளிடம் போய் என்னவென்று சொல்லுவது? தன்னாலேயே நம்ப முடியாத விஷயத்தைப் பற்றி தான் என்ன சொல்வது? அதை எப்படிச் சொல்வது. சொன்னால் காவ்யாவின் பதில் என்னவாக இருக்கும்? சட்டென்று லேசான அழுகை வந்தது. திரும்பிப் போய் விடலாமா? நினைத்தவள் நின்ற போது...

''ஹாய் கருணா என்னம்மா? உள்ளே வராம வாசல்லேயே நிக்கறே'' சிரித்தவாறே கேட்கிறான் காவ்யாவின் கணவன் மாதவன்.



''இல்லை காவ்யாவைப் பார்க்கணும்.'' தயங்கியவாறு சொல்கிறாள். இவனிடடம் என்னவென்று சொல்வது? இவன் இருந்தால் காவ்யாவிடம் சத்தியமாக எதுவும் பேச முடியாது.

''காவ்யா இன்னிக்கு ஆபீசுக்கு வரலை. லீவு. ஏதாவது பேசணுமா? முக்கியமான விஷயமா?'' அவன் கண்களில் விஷயத்தை தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தை விட அவளுக்கு உதவ வேண்டும் என்ற உணர்வு இருப்பதாகத்தோன்ற மனது சலித்தது.

''த்ச்சு.. இவன் எனக்கு சகோதரனாகப் பிறந்திருக்கக் கூடாதா?'' மனதில் இருப்பதை அவனிடம் கொட்டி விட்டால் பாரம் தீர்ந்த மகிழ்வு பெருமூச்சு விட்டவள்...

''அப்படி ஒண்ணுமில்லே. அவளைப் பார்த்தே நாலு மாசத்துக்கு மேலே ஆச்சு. அவளை பார்க்கணும்னு தான் வந்தேன்.'' அவன் தோளைக் குலுக்கிக் கொண்டான். அவன்நம்பவில்லை என்று இவளுக்குத் தோன்றியது. லேசாக அசட்டு சிரிப்புச் சிரித்தாள்.

'ஒகே.' என்றவன் தன் கையில் கட்டியிருந்த கைக்கடிகாரத்தை ஒரு முறை பார்த்தான். டைம் பத்தே முக்கால்தான் ஆகிறது. அவ இன்னிக்கு ஒரு பங்ஷனுக்குப் போயிருப்பா. பதினோரு மணிக்கு வந்திடுவா. இப்ப கிளம்பினா அவளைப் பிடிக்கலாம்.'' சிநேகிதமாய் சிரிக்கிறான். தலையை அசைத்துவிட்டு மறுபடியும் ஆட்டோபிடித்து காவ்யாவின் பங்களாவை அடைந்து பார்த்ததில் பெரிய பூட்டு தான் தொங்கியது. அப்படியே சரித்து அமர்ந்து கொண்டாள். அலைந்து திரிந்ததில் கால்கள் மட்டுமல்ல மனமும் வலித்தது. காவ்யா எங்கே போய் விட்டாள்? வருவாளா? பங்க்ஷன் என்று சொன்னாரே மாதவன்

என்ன பங்க்ஷன்? நம்ம இடத்துலே அப்படி ஒண்ணும் இல்லையே. காத்து, காத்து மணி ஒன்றரையே அடித்தது. அதற்குமேல் அங்கு இருப்பது முட்டாள்தனம். கருணா மெதுவாக எழுந்து கேள்வியோடு நடந்தாள். இரவில் அவளோடு போனில் தான் பேச வேண்டும்.

அன்று மாலை மூன்று மணிக்கு சோர்வாகத் தான் உள்ளே நுழைந்தாள் காவ்யா. மணி மூன்றாகி விட்டது. பத்து மணிக்கு முடிந்த பங்க்ஷன் மாமியார் வேறு இரு, இருவென்று உயிரை எடுத்து விட்டாள். மூன்று மணி வரை கிளம்பவே இல்லை. த்சு.. எரிச்சலாக வந்தது.தான் போகாமலேயே இருந்திருக்கலாம். அங்கே இருப்பவர் யாரையுமே தெரியவில்லை. மாமியார் தன்னை மருமகள் என்று இன்டிரடியூஸ் பண்ணினாலும், எல்லோரும் தெரிந்த மாதிரி ஒரு சிறு புன்னகையோடு சரி. மற்றபடி மாமியாரின் பின்னாலே தான் ஒட்டிக் கொண்டு லேசான அசட்டு சிரிப்போடு நேரத்தைக் கடத்தியது ஞாபகத்துக்கு வந்தது. கணவன் மேல் கோபம் வந்தது.

காலையில் டிபன் செய்துவிட்டு அவனுக்குக் கொடுத்து விட்டு தானும் உட்கார்ந்த போதே.

''ஏய் நீ எங்க வறே?'' என்றான் கணவன்.

''ம்.. எனக்கு என்ன ஸ்பெஷல் லீவா? என்ன? எனக்கும் இதே ஆபீஸ் தானே.''

அவள் ஒரு சின்ன சிரிப்போடு சொல்ல, சட்டென்று அவளை சேர்த்து பிடித்துக் கொண்டவன், ''ஸ்பெஷல் லீவு இருந்தால் கூட நல்லாதான் இருக்கும்'' என்று வழிய...

''சரிதான் இன்னிக்கு ஆபீஸ் போற மூடு ஐயாவுக்கு இல்லை போலிருக்கு'' என்றவள் ''சுடிதார் எல்லாம் கசங்கிப் போச்சு விடுங்க'' என்கிறாள்.



''இது கசங்கினா என்ன? இப்ப புடவையைதானே மாத்திக்கப் போறே.

''என்னது? விளையாடறீங்களா? உங்களுக்கு எல்லாமே விளையாட்டா போச்சு. நான் எல்லாத்தையும் சேன்ஜ் பண்ணிக்கிட்டு சாரி கட்டிக்கிட்டு எப்ப வர முடியும்? விடுங்க.''

''என்ன யார்.. நான் பொய்யா சொல்றேன்.இன்னிக்கு ஒனக்கு லீவு. மேரேஜுக்கு வேற போகப் போறே. நம்ம எங்கேஜ்மெண்ட்டுக்கு வாங்கின சாரி இல்லே. அதை மாத்து. அப்படியே இந்த ரெட் செட் போட்டுக்கோ. சீக்கிரம்.. ஜல்தியார்.. ஜல்தி..'' மாதவன் அவசரப்படுத்த ''என்ன வெளையாடறீங்க. யாருக்கு கல்யாணம்? நான் ஏன் போகணும்?''

''ஓ.. காட் டைம்மைப் பார்த்தியா? இன்னும் பத்துநிமிஷத்துலே ரெடியாகணும் நீ?''

''ஏன்..''

''அம்மா வந்துகிட்டே இருக்காங்க''

திருமணம் முடிந்தவுடனே தனிக்குடித்தனம் தான். ''கொஞ்ச நாளாவது ஜாலியா இருக்கட்டும்.'' மாமியார் திருமணம் முடிந்தவுடன் தனிக்குடித்தனம் வைத்து விட்டாள். எப்போதாவது வருவாள். சற்று நேரம் இருந்து விட்டு பேசிவிட்டுப்போவாள். மற்றபடி மாமியாரால் பெரிய தொல்லை ஒன்றும் இல்லை. ஒவ்வொரு மாமியார் போல் பிடுங்கும் ரகமும் இல்லை. சில விஷயங்களில் மட்டும் மருமகள் இப்படி இருக்க வேண்டும் - அப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் ரகம். காவ்யாவும்

கூடுமானவரை மாமியாரை சந்தோஷப்படுத்தவே முயற்சிப்பாள்.

ஆனால் யாரை மாய்ந்து மாய்ந்து காதலித்து கைப்பிடித்தாளோ அவனின் இன்னொரு குணம் பிடிவாதம். சில நேரங்களில் அவன் பிடிவாதத்தை ரசித்தாலும் பல நேரங்களில் எரிச்சல் தான் வந்தது. எதற்கு தான் பிடிவாதம் என்று இல்லை. எல்லாமே தன் இஷ்டமாக இருக்கவேண்டும் என்று எண்ணுபவன். அதற்காகக் கோபித்துக் கொண்டோ, கடுஞ் சொல்லியோ தன் எண்ணத்தைநிறைவேற்றிக் கொள்ள மாட்டான். சிரித்து, சிரித்தே தன் எண்ணங்களை வலியுறுத்துவான். அதைச் செய்யும் வரை விட மாட்டான். போட்டுக் கொள்ளும் உடையிலிருந்து, போகும் இடத்திலிருந்து சாப்பாடு சாப்பிடுவது வரை எல்லாமே அவன் இஷ்டம் தான். சின்னச் சின்ன விஷயங்களில் கூட வலியுறுத்தல்.

ஒரு நாள் வாழைப்பழம் வாங்கி வந்தவன், ''ஏய் இந்தா சாப்பிடு மருந்து போடாத பழம் டேஸ்ட் பாரு'' என்றான்.

''ஐயோ எனக்கு பச்சை வாழைப்பழமே பிடிக்காது. நான் கிரேப்ஸ் வாங்கிட்டு வந்தேன். ஸீட் லெஸ். எப்படி இருக்கு பாருங்க? அப்பா.. எத்தனை ஸ்வீட்டா இருக்கு தெரியுமா? டேஸ்ட் பண்ணிப் பாருங்க.''

''ஏய் திராட்சை மொத்தமுமே மருந்து. விஷத்தைச் சாப்பிடறே. தூக்கிப் போடு.'' கணவன் சொல்வதை லட்சியம் செய்யாமல் 'த்ச்.. ' என்றவளை வேடிக்கையாக அணைப் பதைப்போல் இறுக அணைத்து திராட்சை மொத்தமும் நசுங்கிப்போனது.



''ஏய்.. என்னங்க இது? பழம் மொத்தமும் வேஸ்ட்டா போச்சே.. ''போகட்டும் இதைச் சாப்பிடு'' தோலை உரித்து அவள் வாயில் பழத்தைப் போட்டு திணிக்க ஒரு நிமிடம் அதிர்ச்சியாகத் தான் இருந்தது.'

மற்றொருமுறை ஏதோ பண்டிகை என்று சொல்லி மாமியார் பணம் தந்து, புடவை வாங்கத் தங்களை கடைக்கு அனுப்ப, கடைசியில் மாதவன் தான் மாய்ந்து, மாய்ந்து புடவைகளை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தான். அரக்கு கலரில் லேசான மஞ்சளும், ஆரஞ்சும் கலந்த பார்டர் போட்ட இரட்டைப் பேட்டு போட்ட அந்தப் பட்டுப்புடவை கண்ணில்பட, சட்டென்று எடுத்து வைத்துக் கொண்டாள் காவ்யா.

''சீ.. சீ.. ஒன்னையெல்லாம் பெண்ணுன்னு சொல்லவே அவமானமாக இருக்கு. இப்படியா நிமிஷத்துலே புடவையை செலக்ட் பண்ணுவே.'' மஞ்சளில் பச்சை நிற பார்டர் போட்ட பட்டுப் புடவை ஒன்றை எடுக்க

''ஏய் எதுக்கு எடுக்குறீங்க? நான் தான் செலக்ட் பண்ணிட்டேனே.''

''இதயா? அங்காள பரமேஸ்வரி.'' என்று அவளைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டான்.

''விளையாடாதீங்க.'' இட்ஸ் ஸோ நைஸ்.''

''என்னம்மா இது டிரஸ் ஸென்ஸே இல்லையே. இந்தப் புடவை கட்டினா எத்தனை எடுப்பா இருக்கும் தெரியுமா?''

''என்ன ஒளர்றீங்க'' கட்டிக்கப் போறவ நானு.''

''பார்க்கப் போறவன் நான் தானே.''

''மாதவ..'' அவளை மேலே பேச விடாமல் மஞ்சள் நிறப் பட்டுப்புடவைக்கு பில் போட்டு கம், கம் என்று இவளை இழுத்துக் கொண்டு வெளியே வந்து விடுகிறான். இப்படி எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள்.

போனமுறை அப்படித்தான். அவள் தாயாரோடு ஏதோ சுமங்கலி பிரார்த்தனைக்குத் தான் சென்றே ஆக வேண்டும் அவளை வலியுறுத்திய போது, ''என்ன மாதவ் இது. சொந்தக்காரங்க பங்ஷன் கூட இல்லை. ப்ரண்ட்ஸ் வீட்லே பங்ஷன்னு சொல்றீங்க. உங்கம்மாவே எப்படி போறாங்க தெரியலை. இந்த அழகுல நான்வேற எப்படி?''

அவளை மறுவார்த்தை பேசவே விடவில்லை. 'கம்.. கம்..'' என்றவாறு வலுக்கட்டாயமாக அழைத்துப் போய் மாமியாரிடம் விட்டு வந்தான். அன்றும் அப்படித்தான் மாமியாரின் நெருங்கிய நண்பியாம் அவள். உதவி செய்கிறேன் பேர்வழி என்று மொத்த வேலையும் தன் தலையில் தான் விழுந்தது. வேலை எல்லாம் முடிந்ததும், மாமியார்வேசில் கிளம்பாமல் ஒரு வழியாக இரவு ஒன்பது மணிக்கல்லவா வீட்டிற்கே வந்தார்கள்?

''என்ன மாதவ் இது?'' மாதவிடம் தன் எரிச்சலை வெளிப்படுத்திய போது

''டேக்.. இட் ஈஸி'' என்றவாறே தன்னிடம் ஜோக் பேசி, கிச்சு கிச்சு மூட்டி எரிச்சலைத் தணித்து சிரிக்க வைத்துவிடுவான்.

இன்னொரு நாள் சினிமாவிற்குப் போக வேண்டுமென விரும்பினார்கள். பல தடவைகளாகப் பார்க்க வேண்டும் பார்க்க வேண்டும் என்று நினைத்து பார்க்காமல் விட்ட



தமிழ்ப்படம். மாதவ்விடம் படத்துக்குப் போக வேண்டும் என்று சொன்னபோது, ''ஐயோ தமிழ் படத்தில் மூணுமணி நேரமா? நம்மால முடியாதும்மா.'' என்று அலுத்துக் கொள்ள, ''என்ன மாதவ் இது? எனக்காக.... '' இவள் கொஞ்சம் 'போகலாமே..'' ஒரு ஆங்கிலப் படத்துக்கு அழைத்துப் போனான். தியேட்டரில் படம் கடைசி நாட்கள் என்பதால் ஒரே ஷோ ஆகிவிட்டது போலும் என்று நினைத்த போது வேண்டு மென்றே ஆங்கிலப்படத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறான் என்று தெரிந்ததுமே எரிச்சல் வந்தது. அதுவும் ஜேம்ஸ்பாண்ட் படம் வேறு இன்னும் ஆத்திரம் வந்தது. சதா இந்தச் சண்டையைப் பார்க்கவா இங்கே வந்தேன். 'அவள் எழுந்து கொள்ள முயற்சித்தப போது மறுபடியும் அவளை இழுத்து அமர வைத்து தோளில் கை போட்டு, ஜோக் ஒன்றை சொல்லி, சிரிக்க வைத்து, கோபமூடையே மாற்றிவிட்டான்.

அவர்கள் வீட்டில் அவன் என்ன நினைக்கிறானோ அதுதான் நடந்தது. ஆரம்பத்தில் அவனின் வலியுறுத்தல் பிடித்திருந்தாலும், போகப்போக சின்ன விஷயத்திலும அவன் போன போக்கில் போக வேண்டும் என்றபோது வெறுப் படித்தது. சலிப்புத் தட்டியது.

காலையிலும் பிடிவாதமாக அவளை அனுப்பி வைத்தான். சண்டை கூச்சல், சச்சரவு என்றால் தானும் ஒருகை பார்த்துவிடலாம். எந்த ஒரு விஷயத்திற்கும் ஒட்டி, உரசி பேசிப் பேசி அவளைத் தன் வழிக்கு கொண்டு வந்து.. சே.. அம்மாவிடம் இது பற்றிப் பேச வேண்டும். அம்மாவின் பெண்ணான தனக்கு முதுகெலும்பே இல்லாமல் செய்து விடுவான் போலிருக்கே தன் கணவன். ஆத்திரம் கண்ணை மறைக்க பின்னும் எரிச்சல் வந்தது.

அன்று மாலை கணவன் வரும் போது எரிச்சலை அடக்கியவாறே அவனுக்கு காபி டிபனைத் தந்து விட்டு திரும்பும்போது

''என்ன என் ராணி கண்ணகியாக மாறிட்டா. 'சட்டென்று அவளின் கைகளைத் தொட்டு தன் பக்கம் இழுக்க, 'விடுங்க' என்று எரிச்சலுடன் கூறுகிறாள்.

''ஸ்.. ஓ.. இன்னிக்கு ரொம்ப நேரம் ஸ்டேயா?'' அவளிடமிருந்து பதில் வராது போகவே,

''ஓகே... ஓ..கே.. ஈஸி'' என்கிறான். அவளிடம் மாற்றமின்மையைக் கண்டு

''த.. பாரு இருக்கிற நாள்ல சந்தோஷமா இருந்திடணும். வருத்தப்பட்டா யாருக்கு லாபம்? வருத்தப்பட்டுக்கிட்டே இருக்கிற சந்தோஷத்தையும் யாராவது கெடுத்துப்பாங்களா?''

''ம். ஏன் பேச மாட்டீங்க.'' இந்தக் காலத்துலே பத்து மணிக்கு முகூர்த்தமென்றால் ஒன்பதேகாலுக்கு ஆசீர்வதித்து விட்டு. பத்து மணிக்குள் சத்திரத்தையே காலி செய்பவர்கள் மத்தியில் உங்க அம்மா வித்தியாசமானவங்க தான். போனால் போன இடம் வந்தால் வந்த இடம். அதுவும் தெரிந்த நண்பர்கள் என்றால் வீட்டிற்கு வரவே மனது இராது. என் வேலையாவது பாத்திருக்கலாம். எல்லாம் கெட்டுப் போச்சு. என்னை மாதிரி ஒருத்தரையும் தெரியாம கொட்டு கொட்டுன்னு முழிச்சிக்கிட்டு இருந்தா கஷ்டம் தெரியும்.''

''அடாடா ஒண்ணும் பண்ணாம இருக்கிறது உனக்கு கஷ்டமா?'' அவன் அவள் கைகளைத் தன் பக்கம் இழுத்து தடவ...



'இப்படிப் பேசிப் பேசி உங்க வேலையைச் சாமர்த்தியமாக முடிச்சுக்கிறீங்க...'' கைகளை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு காவ்யா நகர.

''அடாடா எம்பொண்டாட்டி எத்தனை சுறுசுறுப்பு. எதுவுமே செய்யாம இருக்கவே முடியாது பாவம்.'' சொன்னவாறே மறுபடியும் வலுக்கட்டாயமாக அவளை அணைத்துக் கொள்ள ''இதப் பாருங்க.இந்த மாதிரி தாஜா செய்தே ஏமாத்தறீங்க. விடுங்க.''

மனது எரிச்சல்பட்டது. எல்லாவற்றிலுமா பிடிவாதத்தைக் காண்பிப்பது. கட்டும் துணியிலிருந்து சாப்பிடும் தண்ணீர் வரை எல்லாம் அவன் சொல்வது போல் தான் நடக்க வேண்டும்.

''என் இஷ்டம்னு ஏதாவது இருக்கா? எல்லாமே நீங்க டிசைட் பண்றது தானே எனக்கு பிடிக்கும்னு என்னால் தன்னிச்சையாக ஏதேனும் செய்ய முடியுமா?'' சொல்லும் போதே கண்கள் லேசாக கலங்கியது.

''என்னம்மா இது.. சின்ன விஷயத்துக்கு எல்லாம் கண்ணுல தண்ணி. பதறிப்போய் அவளை இறுக அணைத்துக் கொள்ள, அதுவரை ஏற்பட்டிருந்த துக்கம் எல்லாம்வெளிவர சற்று மனம் விட்டு அழுகிறாள்.

''என்னம்மா இது? இத்தனை சீரியஸாயிட்டே.'' அவன் சாப்பிடுவதையும் மறந்து. அவளை ஆசுவாசப்படுத்த. அவனுடைய பதற்றம் தன் சாப்பாட்டையும் மறந்து தனக்காகக் கணவன் உருகுவதைப் பார்த்ததும், மனது மாறித்தான் போனது.

''தன்னால் முடியாது. இவனிடம் கோபித்துக் கொள்ள முடியாது' மெல்லப் பெருமூச்சு எழுந்தது. அவனிடம் சண்டை போடவே முடியாது.

''சாப்பிடுங்க. பாதி சாப்பாட்டுலே ஏன் எழுந்தீங்க.. ப்ளீஸ்...'' மறுபடியும் அமர்ந்தவன்.

''ஆமா உங்க அக்காவை நீ பார்க்கவே இல்லையா?'' என்கிறான்.

''யாரு கருணாவா? நான் பார்க்கவே இல்லியே. நான் கொஞ்ச நேரம் முன்னாடி தான் வந்தேன். ஒரே எரிச்சலாக இருந்தது.''

''இல்லேம்மா கருணா காலைலேயே வந்தாளே.''

''ஓ.. நான் இல்லேன்ன உடனே போயிட்டு இருப்பா.. அவளுக்கு போன் பண்ணறேன். ''கருணா நம்பரைப் போட்டு விட்டு யோசனையோடு நிற்கிறாள். என்னவாக இருக்கும்? சும்மா என்னைப் பார்க்க வந்தாளா? அப்படி எல்லாம் வேலைக்கு லீவு போட்டுவிட்டு வரவே இல்லியே. அக்கா எப்போதுமே தங்கை, தங்கை என்று உருகியதில்லை. ஆனாலும் சற்று நன்றாக அடிபட்ட பின் தான் அம்மா, தங்கை என்ற உணர்வே வந்தது. இருந்தாலும் ஒவ்வொரு வீட்டில் உள்ளவர்கள்போல் பெரியவளுக்கு சின்னவள் மேல் ஆசை என்பதெல்லாம் கிடையாது தான். முதலில் இருந்ததைவிட ஆசை சற்று அதிகம் தான் என்றாலும் தங்கை, தங்கை என்று உருகும் அளவிற்கு நெருக்கம் உண்டா என்பது சந்தேகம் தான். நல்ல வேளை சில நிமிடங்களில் கருணா தொலைபேசியில் வந்தாள்.

''ஏய் கருணா? பாக்க வந்தியாமே என்ன விஷயம்?''



''எப்படி சொல்றதுன்னு தெரியலையே..''

''ஏன்? என்னாச்சு? அம்மாவுக்கு ஏதாவதா? இல்லையே நாலு நாள் முன்னாடிக் கூட அம்மாவைப் பாத்துட்டு வந்தேனே.' மறுமுனையில் பெருமூச்சு.

''இன்னிக்கே அரைநாள் லீவு. மறுபடியும் என்னால லீவு போட முடியாது. விஷயத்தை சொல்றேன் கேட்டுக்கோ...'' அவள் மெதுவாக சொல்ல, சொல்ல ஒரு நிமிடம் அதிர்ந்து போய் நின்றாள் காவ்யா. கருணாவா இப்படிப் பேசுவது? அதுவும் அம்மாவைப் பற்றி. மறுபடியும் மறுபடியும் கருணா பேசப் பேச உறைந்து போய் நின்றாள் காவ்யா

''ஏய்...ஸ்...ஷ்...ஷ்...'' காவ்யாவின் முகத்துக்கு நேராக கையை ஆட்டி விசிலடித்தும்.. எத்தனையோ செய்தும் அவள் ஏதோ யோசனையில் இருப்பது தெரிந்தது. மடமடவென தட்டைக் கழுவி விட்டு கையைக் கழுவிய பின் அவள் புடவையில் தன் கையைத் துடைத்தான். சாதாரணமாக இருந்தால் ''என்ன மாதவ் இது. புடவை எல்லாம் ஸ்பாயில் பண்றீங்க. டவல்ல துடைக்கக் கூடாதா?'' சண்டையே போடுவாள். அவன் சாப்பிட்டவுடன் அவசரம் அவசரமாக துண்டை எடுத்து நீட்டினாலும் அவன் புடவையில் துடைத்து விட்டு தான் போவான். சுடிதார் அணிந்திருந்தால் துப்பட்டாவில் துடைத்து விட்டுப் போவான். இவனுக்குப் பயந்தே வீட்டிற்குள் வரும்போதே சாதாரண புடவைக்கோ, சுடிதாருக்கோ மாறிவிடுவாள். இன்று என்ன அது கூடத் தெரியாமல் யோசனை?

''ஏய்..'' அவன் இடிக்க.. 'ம்.. என்றவள் மறுபடியும் நினைவுக்கு வராமல் ஏதோ யோசனையில் ஆழ.

''என்னாச்சு கமான். ஸ்பீக் அவுட்'' என்கிறான்.

''ஆங்... ஒன்னுமில்லே...''

''நீ சொல்றதுலேயே ஏதோ இருக்கும்னு தெரியுது. என்ன விஷயம் சொல்லு.''

''த்ச்.. ஒன்னும் இல்லேன்னா விட்டுடுங்களேன்...''

''நீ மொதல்ல வா..'' அவள் கையைப் பிடித்து இழுக்க,

''விடுங்க.. நேரம் காலம் தெரியாம விளையாடாதீங்க...''

''யாரு!..நீயா? நானா?''

சட்டென்று அருகில் இருந்த சோபாவில் அமர்ந்து அவளை தன் மடியில் அமர்த்திக் கொண்டான். இப்பச் சொல்லு.''

''த்ச்.. என்ன மாதவ்.''

''கமான்.''

''ஒன்னுமில்லேங்கறேன் இல்லே.''

''ஒன்னுமில்லாததையும் ஒம் மூஞ்சி சொல்லுது?''

''என்னைக் கொஞ்ச நேரம் தனியா விட்டுடுங்களேன். ப்ளீஸ்.''

''எதுக்கு? ஏதானும் வேண்டாததையெல்லாம் தனியா நெனைச்சிக்கிட்டு பொலம்பவா?''

''ப்ளீஸ் என்னை விடறீங்களா?'' மடியில் இருத்திக் கொண்டு கைகள் இடுப்பைச் சுற்றி இறுக்க, அவன் கைகளை விலக்க முற்பட்டு தோற்றாள்.

''இவன் வேறு, சமயம் தெரியாமல் விளையாடுகிறான். எப்பேற்பட்ட பாரம் இது? இந்தப் பெண்ணால் அம்மாவிற்கு



நல்லதே நடக்காதா? எப்போதுமே ஏதாவது பிரச்சினையைக் கொண்டு வந்து தானும் சங்கடப்பட்டு, அம்மாவையும் சங்கடப்பட வைத்து, சட்டென்று அவள் பெருமூச்சு விட்டாள்.

''ஏய் என்னாச்சு? பெருமூச்சுவிட்டது போதும். விஷயத்தைச் சொல்லு. கணவனின் லேசான அதட்டல். அம்மாவைப் பற்றிய அசிங்கமான கற்பனைகளை எப்படி வெளிச் சொல்வது?''

''கமான் சொல்லு.''

''இந்த விஷயத்தைச் சொல்லவே முடியாது மாதவ்.. புரிஞ்சிக்குங்க ப்ளீஸ்!

''எல்லாம் புரியும் எனக்கு சொல்லு.''

''இதைக் கேட்டதிலிருந்து வருத்தப்பட்டு கிட்டு இருக்கேன். நீங்க வேற ஏதாவது ஆரம்பிச்சு வெறுப் பேத்தாதீங்க.''

''என்ன வெறுப்பேத்தினேன்? என்னை மொதல்ல பாரு. விஷயத்தை சொல்லு. என்ன செய்யலாம்னு பிராப்பரா யோசிக்கலாம். அதைவிட்டுட்டு கவலைப்பட்டுக்கிட்டு இருந்தா.''

அவன் முகத்தை தன் பக்கம் திருப்பி அந்தக் கண்களையே பார்க்க,

'அவன் சொல்வதும் சரிதான். விஷயத்திற்கு தீர்வு முக்கியம். கவலைப்படுவதால் என்ன லாபம்? மாதவன் எந்தவிஷயத்திலும சரி. சரியான முடிவை எடுப்பவன். எப்போதுமே அவன் எடுக்கும் முடிவுகள் மிக மிகச் சரியாக இருக்கும். ஆபீஸ் வட்டாரத்திலேயே அவனுக்குஅவனின் மூளைக்கு அப்படி ஒரு நல்ல பெயர்.

"சொல்லலாமா? வேண்டாமான்னு யோசனையா? இன்னும் என்ன யோசனை? சொல்லு" காவ்யா மெதுவாகத் தயங்கித் தயங்கி விஷயத்தை வெளியிட

"இதுக்கா கவலைப்பட்டுக்கிட்டு இருக்கே?" தலையில் செல்லமாக ஒரு குட்டு வைத்தான்.

"ஒனக்கே தெரிய வேணாம். யாரோ என்னமோ பேசிட்டுபோகட்டும். அதையெல்லாம பெரிசபடுத்துவாங்க."

"அப்படி இல்லீங்க. கருணா இந்த மாதிரி சொன்னா..."

"கருணாவா? அவங்க மாமியார் ஏதோ தப்பா நெனைச்சிக்கிட்டு இருப்பாங்க." அது தவறுன்னு புரிய வச்சிடுவோம்."

"அம்மாவுக்கு..."

"ஏய்.. மக்கு.. அம்மாகிட்டே போய் யாராவது குறை களைச் சொல்வாங்களா? மனசு வருத்தப்படாது. எத்தனையோ வேலைகள்ளே ஈடுபட்டு இருக்கிறவங்க மனசு ஒடைஞ்சு போகாது?"

"நீங்க சொல்றது ... சரி தான்.. அவள்...." அவள் இழுத்தபோது.

"அப்பா என்டியூப்லைட்டுக்கு இப்பத் தான் புரிஞ்சுது." அவன் கண்களைச் சிமிட்டி சிரிக்க, அவளுக்கு சுருக்கென்று கோபம் வந்தது.

"விதியோட விளையாட்டை பார்த்தீங்களா?" அவன் கைகளை விலக்க முடியாமல் சிரமப்பட்டவாறே கேட்கிறாள்.

"என்னம்மா?"



"எங்க வீட்லே நான் ரொம்ப புத்திசாலி பொண்ணுன்னு பேரு. எல்லாமே நான் தான் செய்து கொடுப்பேன். உங்க பார்வையிலே மட்டும் நான் மக்கு. டியூப்லைட்."

"ஏய் ஏதானும் விளையாட்டுக்கு சொன்னா உடனே புர்ருன்னு கோபம் பொத்துக்கிட்டு வருதே" என்று மறுபடியும் செல்லமாக அவளின் மூக்கை நிமிண்ட 'த்ச்' என்றவாறே எழுந்திருக்க முற்பட்டாள்.

"கொஞ்சம் விடறீங்களா?" காவ்யா சற்றுப் பல்லைக் கடித்தவாறே கேட்கிறாள்.

"இப்ப விட்டே ஆகணும்" என்றவன், "இத பாரு அசட்டுத்தனமா உங்கம்மா பிரச்சினையை நெனைச்சிகிட்டு குழம்பிகிட்டு, அழுதுகிட்டு இருக்காதே. அது மொத்தத்தையும் நான் பார்த்துக்கறேன். அந்த எம்.எல்.ஏ விஷயம் என்னன்னு கவனிக்கிறேன். போதுமா? இப்ப என்ன பண்றே?" என்றவாறே அவளின் பீரோவில் இந்த ஜரிகை வேலைப் பாடமைந்த குடிதாரை எடுத்து வந்தான். "சடசடவென்று டிரஸ் பண்ணிக்கிட்டு இதப்போட்டுகிட்டு வா. திஸ் வில் சூட் டு திஸ் டிரஸ்" என்றவாறே மூன்று சரங்களாக கோர்க்கப்பட்ட மூன்று மாலைகளையும், அதே மூன்று சரங்களால் இழைக்கப்பட்ட தோடு, பிரேஸ்லெட், மோதிரம் அடங்கிய அந்த பெட்டியைக் கொண்டு வந்து நீட்டினான்.

"என மாதவ் உங்களுக்கு நெஜமாகவே நேரம் காலம் கிடையாதா? இப்ப எதுக்கு நான் இதை எல்லாம போட்டு மினுக்கணும்."

"பிகாஸ்..." என்று சிரித்தவன், 'என் ப்ரண்டு ஒரு மேரேஜ் பார்ட்டி தரான். அதுக்குதான் இது." என்கிறான்.

''காலைல தானே கல்யாணத்துக்கு போயிட்டு வந்தேன். மறுபடியும் வான்னா என்னால முடியாது.. நீங்க மட்டும் போய்ட்டு வாங்க..''

''இது தம்பதிகளுக்கு கொடுக்கற விருந்து. நான் என்ன கல்யாணம் ஆகாதவனா என்ன? த.. பாரு டைம் ஆச்சு.. சீக்கிரம்?''

''வரமாட்டேன்'' என்று அவனிடம் முரண்டு பிடிக்க முடியாது. அப்படியே தூக்கி காரில் உட்கார வைத்து விடுவான்.

''சரிப்பா.. வரேன். ஆனா இத்தனை காடி டிரஸ் எனக்கு வேண்டாம்.''

''ஆனா எனக்க வேணுமே?''

''அப்ப நீங்க போட்டுக்குங்க.''

''த.. பாரு போறது.. மேரேஜ் விருந்துக்கு. அமர்க்களமா, அம்சமா போனா தான் நல்லா இருக்கும். அதுவுமில்லாம அந்த டிரஸ்லே தேவதையாட்டம் நீ வந்து அப்படி நின்னா எப்படி இருக்கும்?''

''எல்லாத்தையும் நீங்களே டிசைட் பண்ணுங்க. 'ஒரு பெருமூச்சோடு சொல்லிவிட்டு, மறுவார்த்தை பேசாமல் உள்ளே போகிறாள். டிரஸ் செய்து கொள்ளும் போதே, ''க்விக். டென் மினிட்ஸ்லே வா.'' மறுபடியும் ஏதேனும் பேச வேண்டும் என்று ஆத்திரம் வந்தது. கூடவே ஒரு சோர்வு வர, இவனிடம் பேசி ஜெயிக்க முடியாது. தன் காரியத்தை சாதிக்காமல் விட மாட்டான். எதிர்த்துப் பேசுவதை விட அவன் போகிற போக்கில் போய் விட்டால் உத்தமம். எப்படியும் அதைத்தான் செய்யப் போகிறான். இதில் சண்டை இடுவானேன். மனம்



அம்மாவைப் பற்றி நினைத்து, நினைத்து வேதனையில் ஆழ்ந்திருந்தது.

அவள் டிரஸ் செய்து கொண்டு வெளியே வரும்போது, ''என்னப்பா இதெல்லாம மறந்துட்டே..'' என்கிறான். அவன் நீட்டிய முத்து சரங்கள், முத்துத் தோடு, பிராஸ்லெட் மோதிரம் எல்லாவற்றையும் மாட்டிக் கொண்டு வந்த போது

''வா...வ்..'' என்ற விசில் வேறு

''ஏன் மூஞ்சியைத் தூக்கி வச்சுக்கிட்டு இருக்கே...''

''ஒண்ணுமில்லே..''

''த பாரு.. உங்கம்மா விஷயத்தைப் பத்தி கவலைப் படாதே. நான் பாத்துக்கறேன்னு சொல்லியாச்சு இல்லே.''

''நான் ஒன்னும் கவலைப்படலியே.. நான் சாதாரணமாத் தான் இருக்கேன்.'' மனதில் சோகம் என்றாலும் காண்பிக்க முடியாது. முகம் லேசாக வாடினாலும் ''ஏன்? என்னாச்சு?'' என்று கேட்டுத் துளைத்துவிடுவான். அவள் சாதாரணமாக ஆகும் வரை விடமாட்டான்.

மனதின் சோகங்களைத் தூக்கி தூரப்போட்டு விட்டு சகஜமாக இருக்க முயலுகிறாள்.

''ஆமா தலைக்கு பூ வேண்டாமா? மல்லிப் பூ வாங்குங்களேன்.''

அவனுக்குப் பிடித்த சம்பங்கியை வாங்கி அவளிடம் தந்தான். தலையில் வைத்துக் கொண்டவள் கூடுமானவரை சகஜமாக இருக்க முயன்றாள்.

பார்ட்டி நடக்கும் வரை தன் கவலைகளை மறந்தவள் முடிந்தவுடன் வீட்டுக்கு வந்து அவனின் அணைப்பில படுக்கும் போது தான் மறுபடியும் துக்கம் எட்டிப் பார்த்தது.

''மாதவ்..''

''ம்...''

''நான் நாளைக்கு ஆபீசுக்கு வரலே..''

''நீ வரே...''

''என்ன எது சொன்னாலும்...''

''ஷ்.. நான் தான் ஒங்கம்மா பிரச்சினையை பார்த்துக்கறேன்னு சொல்லிட்டேன் இல்லே... அப்புறம் என்ன?''

''இல்லே.. அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு...''

''போகலாம். ஆனா இப்ப இல்லே.. எதையான கேக்கறேன்னு குட்டையைக் குழப்பிக்கிட்டு வந்தியானா.. ஒரு நாலு நாள் கழிச்சுப்போ.'' சொன்னவன் சில நிமிடங்களில் ஆழ்ந்து உறங்கி விட்டான். 'இவன்செய்ய மாட்டான் என்று சொல்லவில்லை. கட்டாயம் செய்வான். இருந்தாலும் அம்மா மேல் பழி இருக்கும்போது அவளை பார்க்கக் கூடப் போகாமல் எப்படி இருப்பது. இருவரும் ஒரே ஆபீசில் பணிபுரிபவர்கள். அவன் கண்ணில் மண்ணைத்தூவிவிட்டுப் போக முடியாது. நாளை மறுநாள் கணவனுக்கு பேக்டரியில் இன்ஸ்பெக்ஷன் இருக்கிறது. அப்போது எப்படியாவது கழண்டு கொண்டு அம்மாவைப் பார்த்து விட்டு வர வேண்டும். முடிவு செய்தபின் தான் அவளுக்குத் தூக்கமே வந்தது.

மறுநாள் இரண்டு பேருக்கும் சிற்றுண்டி தயாரித்து எடுத்து வைத்து விட்டு, கிளம்புவதற்குள் கணவனுக்கு தந்துவிட்டு தானும் அள்ளிப்போட்டுக் கொண்டு மதியம் இருவருக்குமாக சாப்பாடு கட்டிக்கொண்டு கிளம்புவதற்குள் வழக்கமான கேலி,



கிண்டல் என்று மாதவன் உயிரை எடுத்து விட்டான். ஆபீஸ் போய் அவரவர்களின் வேலைகளில் மூழ்கினதும் எல்லாமே மறந்து போனது.

அன்று இரவு வீடு வந்ததுமே மாதவன் அந்த நல்ல தகவலைச் சொன்னான். ''எம்.எல்.ஏ தன்னோட பத்து ஏக்கர் நிலத்தை உங்கம்மா நடத்தற ஆசிரமத்துக்கு தரப்போறார். அது இன்னும் ஆசிரமத்து பேர்ல ரிஜிஸ்தர் ஆகலே. அதுக்காகத் தான் இப்படி போயிட்டு வரது எல்லாம் கருணாகிட்டே போன்ல சொல்லிடு.''

''அந்த மாதிரி ஏதாவும் இருக்கும்னு அவளுக்கும் தான் தெரியுமே. இப்ப பிரச்சினையை எப்படி தீர்க்கிறது? அவங்க மாமியார், அம்மாவை கூட வந்து இருக்க சொல்றாங்க.''

''கருணாவை அவ மாமியாரை அழைச்சுக்கிட்டுப் போய் உங்கம்மாவை பாத்துட்டு வரச் சொல்லு'' சட்டென்று ஏதோ யோசனையில் ஆழ்ந்து வேண்டாம். அவ மொதல்ல ஒருத்தனை கல்யாணம் பண்ணிகிட்டு இருந்தாளே. அவன் வேற அங்கே சுத்திகிட்டே இருக்கான். நானே உங்கம்மா கிட்டே பேசணும்னு நெனச்சேன். அவன் அந்தளை நல்லவன் இல்லே. உங்கம்மாவை அவங்க வீட்டுக்கே கூப்பிட்டு பதமா பேசி அவங்க மாமியாருக்குப் புரிய வைக்கச் சொல்லு. உங்கம்மா ரொம்ப இன்டலிஜென்ட், கண்டிப்பா ரொம்ப அழகா ப்ராப்ளம்ஸ் சால்வ் பண்ணுவாங்க. ஆனாலும் கருணாவோட முதல் ஹஸ்பண்டால ஏதாவும் பிரச்சினை வருமான்னு தான் கவலையா இருக்கு.'' அவன் பின்னும் யோசனையில் ஆழ.

''அந்த எம்.எல்.ஏ நல்லவனா?'' கேட்கிறாள் காவ்யா

''அவன் நல்லவன் தான். இப்ப இன்னும் சுத்தமாக மாறிட்டான். அவனே முன் வந்து தான் இந்தநிலத்தைக் கொடுக்கிறான். அப்படின்னு கேள்விப்பட்டேன். அவன் பண்ணதுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்யறான்னு வச்சுக் கோயேன். இருந்தாலும் இன்னும் நிறைய விசாரிக்கணும். ஆனா அந்த எடுபிடியை ஏன் சேர்த்துக்கிட்டு இருக்கான்னு தெரியலை. அவனால ஆபத்து வர சான்ஸ் இருக்கு.''

''இத்தனை சொல்றீங்களே? இதையெல்லாம் அம்மாக் கிட்ட சொல்லக் கூடாதா?''

''இப்ப ஒண்ணும் வாயைத் திறக்காதே. இன்னும் இரண்டு நாள் போகட்டும். அந்த ஆளோட மோடீவ் என்னன்னு தெரிஞ்சிக்கிறேன். அப்புறம் எல்லாத்தையும் சரிசெய்யணும்.''

''சரி நாளைக்குப் போய் அம்மாவைப் பார்க்கட்டுமா? அந்த ஆளைப் பத்தி சொல்லிட்டு வரட்டுமா?''

''நாளைக்கு வேண்டாம். இன்னும் ரெண்டு நாள் போகட்டும். அவசரப்படாதே.'' அவன் சொன்னாலும் மனதின் மூலையில் குறித்துக் கொண்டாள்.'' நாளை கட்டாயம் போயே ஆக வேண்டும்.

மறுநாள் அவசரம் அவசரமாக வேலைகளை முடித்துக் கொண்டு அவனோட அலுவலகத்திற்கு கிளம்பும் போதே,

''அசட்டுத்தனமா எதுவும் செஞ்சு வக்காதே. அப்புறம் நீயே மாட்டிப்பே.'' என்கிறான்.

''இன்னிக்கு அம்மாவைப் பார்க்கணும்னு நினைக்கறே இல்லை. அதெல்லாம் வேண்டாம். இது ரொம்ப பொறுமையாக செய்ய வேண்டிய வேலை. உங்கம்மா எந்தத் தப்பும்



பண்ணலே. ஆனா அந்த எம்.எல்.ஏவோட எடுபிடிக்கு அங்க என்ன வேலைன்னு தெரியலை. அதுதான் ஒதைக்குது. அவனால அம்மாவுக்கு ஏதான ஆபத்துவரலாம். நீ என்னமோ தயங்கற மாதிரி போய் ஏதாவது செய்து ஆபத்துல மாட்டிக்காதே. அவன் ஒன்னையும் விட மாட்டான். பத்திரம். ரெண்டாவது இன்னிக்கு டெஸ்பாட்ச் பண்ண வேண்டிய லெட்டர்ஸ் பைல்ஸ் எக்கச் சக்கமாக இருக்கு. நீ இன்னும் பாதியை கம்ப்யூட்டர்லே பீடே பண்ணலே. அந்த வேலையை இன்னிக்கு முடி'' என்றவன் அலுவலகம் போனவுடன் இரவு ஏழு மணி வரைக்கும் நகரக் கூட முடியாத வேலைகளில் அவளைத் திணித்து விட்டு கிளம்பிவிட்டான்.

மாதவன் மேல் எரிச்சல் மட்டுமில்லை. கோபம், ஆத்திரம் எல்லாம் சேர்ந்து வந்தது. மற்றவர்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதை சுலபமாகச் சொல்லிவிடும் ரகம் பல்லைக் கடித்தவள் அவசரம் அவசரமாக வேலையில் இறங்கினாள். முடித்து விட்டு நிமிரவே ஏழு மணி ஆகிவிட்டது.

மாதவன் ஸைட்டுக்குப் போகிறேன் என்று சொல்லி விட்டுப் போனான். திரும்பி வர எப்படியும் பத்தாகிவிடும். அதற்குள் அம்மாவை ஒரு எட்டு பார்த்துவிட்டு கணவனின் விஷயத்தைச் சொல்லிவிட்டு எம்.எல்.ஏவோட மருமகன் என்பவனிடம் ஜாக்கிரதையாக இருக்கும்படி சொன்னால் என்ன? மணி ஏழு. கணவன் வருவதற்குள் இதையெல்லாம் செய்து விட்டு வர முடியுமா? 'ஏன் முடியாது? இங்கிருந்து எட்டு ஸ்டாப்புகள், போக வர ஒரு மணி நேரம் ஆகும். அங்கே ஒரு மணி நேரம் நின்றால் போதும். வேலையை முடித்துவிட்டு வந்துவிடலாம். எட்டரைக்குள் வீட்டில் இருக்கலாம். மனது தன் திறமையை மெச்ச, அம்மா வீட்டிற்குப் போகும்

பஸ்ஸ்டாப்பில் நின்றாள். ஏழு மணிக்கே, ஒன்பது மணி போல் இருட்டு வந்து சில்லென்ற காற்று வேறு ஊசியாகக் குத்தியது. இன்னும் பஸ்ஸைக் காணோம். ஐந்து நிமிஷத்தில் அலுப்புத் தட்ட கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைத் தவிர இன்னும் இரண்டொருவர் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டு இருக்கின்றனர்.

லேசான பயம் எழ, முடிவை மாற்றிக் கொள்வோமா என்று இருக்கும் போது பஸ் வந்தது. இன்னும் சில மணி நேரங்களில் திரும்பி வருவோம் என்று நிச்சயித்தவாறே அவள் ஏற, இன்னும் பல மணி நேரங்களுக்கு அவள் திரும்ப முடியாது என்பதுஅவளுக்கு எப்படித் தெரியும்?

## 14

கருணாவிற்கு எரிச்சல் வந்தது. காவ்யாவிற்கு போன் செய்து நான்கு நாட்கள் ஆனது. இன்னும் பதிலைக் காணோம். அம்மாவைப் போய்ப் பார்த்தாளா இல்லையா? என்று தெரியவில்லை. பார்த்துப் பேசி இங்கே அனுப்பு என்றும் சொல்லியாகிவிட்டது. ஆனால் அவளிடமிருந்து பதில் இல்லை. அவளுக்கு அம்மா என்றால்ரொம்ப ரொம்ப இஷ்டம். தொட்டதற்கெல்லாம் அம்மா அம்மாஎன்று புலம்புவாள். 'ஒருவேளை தன் மேல் கோபம் இருக்குமோ என்னவோ? அம்மாவைப் பற்றி தான்ஏதோ பேசிவிட்டோம் என்ற வெறுப்பு கூட தன்மேல்இருக்கலாம். மனம் அந்தக் கோணத்தில் வேலை செய்தவுடன், சிந்தனை வேறு கோணலாய் ஓடியது. தானே நேரில் போய் பார்த்து 'என்ன விஷயம் என்று கேட்டு விட்டு, எப்படி இருந்தாலும் தனியாக இங்கே இருக்கக்



கூடாது என்று சொல்லி, இங்கேயே கொண்டு வைத்துக் கொள்ளப் போகிறேன். கணவனிடம் போய்ச் சொல்ல வேண்டும். வெளிப்படையாகப் பேசியபின் இப்போது தேவலை. மாமியார் என்ன என்றால் என்ன என்றாவது பதில் சொல்கிறாள், கணவன் முகத்திலும் லேசான சிரிப்பு. இப்போது அவளைப் பார்த்து சிரிக்கிறான். அவனிடம் தான் இரவு தன் தாயாரைப் பார்த்துவிட்டு காண வருவதாக சொன்னவுடன் 'குட்' என்கிறான் நல்ல முடிவு எடுத்து வா' என்கிறான்.

மாமியாரிடம் சொல்ல, ''அவங்களையும் கூடவே அழைச்சுகிட்டு வந்திடு. ஏதேனும் சொலலி சண்டை போடாதே. இத்தினி நாள் உழைச்சவங்க இனி மேலாவது ரெஸ்ட் கொடுக்க வேண்டாமா?''

அவளும் தலையை ஆட்டுகிறாள். அவள் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? எங்களோடு வந்து இருக்கட்டும்' என்று எந்த சம்பந்தி அம்மா பெண் வீட்டாரைக் கேட்டு இருக்கிறார்கள்? அதுவும் அம்மாவிற்கு கெட்ட பெயர் என்றதும் தன்னைத் தூரத்தாமல் எத்தனை அழகாக பேசுகின்றனர். தான்தான் யாரையும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அவளும் அன்றுவேலைமுடிந்து பஸ் ஏறிச் சென்ற போது, தான் காரிலேயே அம்மாவோடு வந்து விடலாம்' என்று எண்ணிக் கொண்டே தான் சென்றாள்.

ஆனால்அவளும் அன்று பஸ் ஏறி சென்ற போது தான் மிகுந்த கஷ்டப்பட்டுதான் வரப்போகிறோம் என்று தெரிந்தால் போயிருப்பாளா'? கருணா இப்போது இன்னொரு கோணத்தில் கவலைப்படத் தொடங்கினாள். அம்மாவிடம் சொன்னால் அம்மா புரிந்து கொள்வாளா? அம்மாவை எத்தனை ஆசை ஆசையாக கூப்பிட்டேன். திருமணம் முடிந்ததும் 'வா... வா...''

என்று துளைத்தெடுத்தேன். ஆனால் அம்மாளதையுமே கேட்கவில்லை.

"இல்லை.. கருணா.. யார் வீட்டுக்கும் வந்து தொந்தரவாக இருக்க 'நான் விரும்பவில்லை.'' அம்மா சொன்னபோது ''ஏம்மா இப்படிச் சொல்றே? என்னம்மா இது?'' தான் பதறியபோது தன் தங்கை விக்கி விக்கி அழுது கணவனுடன் குடித்தனம் நடத்தபோக மாட்டேன்று என்று சொன்னது எல்லாம் ஞாபகத்துக்கு வந்தது.

இரண்டுபேரையும் உட்கார்த்தி வைத்து அம்மா என்னென்ன வார்த்தைகள் சொன்னாள். அம்மா ஒரு தீர்க்கதரிசி. அவள் அலசி ஆராயும் கோணமனைத்தேயும் தெளிந்த சிந்தனையோடு ஆழ்ந்தநோக்கோடு தீர்க்கமான முடிவை செய்வாள். அவள் மண்ணின் மதகல்லவா?!

'அதென்ன பயித்தியக்காரத்தனம். நீ மாப்பிள்ளை மனசல நெனச்சு, நெனச்சு உருகலையா? இப்பக் கல்யாணம் முடிஞ்சப்புறம் போக மாட்டேன்னா என்ன அர்த்தம்?''

''காலம் மொத்தமும் எங்களுக்காக நீ உழைச்சே. எங்களைத்தவிர வேறு உலகம் எதுவுமே உனக்கு இல்லாம இருந்தது. இன்னிக்கு எங்க வாழ்க்கை தான் முக்கியம்னு நான் எப்படிம்மா போக முடியும்?''

''அம்மா காவ்யா சொல்றது ரொம்ப சரி.. நீ கொஞ்ச நாள் என்னோடயும் கொஞ்ச நாள் காவ்யோவோடவும் இரேன்.''

''அதெல்லாம வேண்டாம் அம்மா உன்னோடவே இருக்கட்டும். காவ்யா அழுத்தம் திருத்தமாகக் கூற...

''மக்கு.. மொதல்ல என்னைப் புரிஞ்சுக்க. நான் உப்பு தரேன். நீ பருப்பு தா! என்கிறமாதிரி எல்லாம் வேண்டாம்மா.



நான் என் குழந்தைகள் நல்லா இருக்கணும்னு நெனைச்சு செய்தது. இதைப் போய் உதவி தியாகம்னு மூலாம் போட்டு பூசி பேசாதே. என் முழு மனசோட எனக்கு விருப்பமானதைத்தான் நான்செய்திருக்கேன். நான் என் குழந்தைகள்னு ஒரு வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்துட்டு இருக்கேன். மனசு அப்பப்ப கேள்வி கேக்குறப்போ பதில் சொல்ல முடியலே. அதான் என் கடமைகள் முடிஞ்சவுடனேயே நான் செய்யாத கடமைகளைச் செய்யணும்னு தோணிச்சு. அதுக்காகத்தான் ஆதரவற்றோர் ஆசிரமத்தை ரெடி பண்ணிக்கிட்டு இருக்கேன். என்னால் முடிஞ்சா இன்னும் கொஞ்சப் பேரைத் தூக்கி விட்டா என் ஒட்டம் சாபல்யம் அடைஞ்ச மாதிரி இருக்கும். அப்படி எல்லாம சொன்ன அம்மாவைப் பற்றியோ இல்லாததும் பொல்லாததுமான கதைகள். கடைசியில் தங்களை எல்லாம் சமாதானப்படுத்தி அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவிட்டு பொறுமையாக ஆதரவற்றோர் மையம் ஆரம்பித்துச் சமூக சேவை செய்யும் அவளுக்கு இத்தனை கெட்ட பேர்.

சில மனிதர்களுக்கு எல்லாமே குறைதான். தன்னை கவனித்தாலும் குற்றம் - கவனிக்கா விட்டாலும் குற்றம் என்கிற ரீதியில்வாழ்பவர்கள். எனக்கு மட்டும் செய்யலை. எனக்குமட்டும் பண்ணலை. என்று முழு நீளத்துக்குக் குற்றப் பத்திரிக்கை வாசிப்பவர்கள் மற்றவர்களிடம் இருந்து எத்தனை கிடைத்தாலும் திருப்தி இருக்காது. ஆனால் சில பேர் எத்தனை சிறுமைப்படுத்தினாலும், அடியோடு அழிக்க நினைத்தாலும் 'பீனிக்' பறவை போல் உயிர் பெற்று எழுந்து வரும் ரகம். தன் உழைப்புகளையோ, முயற்சிகளையோ பற்றி பெரியதாகப் பேசாமல் வெற்றியை ஒரு புன்சிரிப்போடு ஏற்றுக் கொள்ளும்ரகம்.

அம்மா இந்த இரண்டாவது வகையைச்சேர்ந்தவள். அம்மாவிடம் போய் அம்மா இந்த மாதிரி விஷயம். நீ என்னோடு வந்து விடு'' என்றுகேட்டால் கட்டாயம் சிரிப்பாள். இருந்தாலும் மனது என்பது காயப்படாமல் இருக்குமா? இந்த அசிங்கமான காரணத்தைச் சொல்லி, இந்தக் காரணத்திற்காக நீ என்னோடு வந்து விடுஎன்றால் அவளை அவமானப் படுத்துவது போல்ஆகாதா? இது நியாயமா? மற்றவர்களுக்கு உதவி செய்யாமல் இருந்தால் அதில் பெரிய தவறொன்றும் இல்லை. ஆனால் மற்றவர்களுக்கு உபத்ரவம் தராமல் இருக்க வேண்டும். அதுதானே முக்கியம். மனது மறுபடியும் அழுத்தம் தாங்காமல் வலித்தது. பேச முடியாது. எதையும் சொல்ல முடியாது. இப்படிச் சொன்னால் 'அம்மாஎன்கூட கொஞ்ச நாள் இருக்கணும் போலிருக்கு. என் கூட வந்துடேன்..'' இப்படிக் கெஞ்சினால் சரிப்பட்டு வரும் என்று தோன்ற, அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள் கருணா.

இங்கே காவ்யாவின் எண்ணங்களும் கருணாவைப்போல் ஓடிக் கொண்டிருந்தது.

'அம்மா பாவம்' அம்மாவின் செயல்களைக் குறை கூறுவது போல்அவளைச் சாடுவது எந்த விதத்தில் நியாயம்? பாவம் தான் உண்டு; தன் வேலை உண்டு என்று இருப்பவள். எதைப் பற்றியும், யாரைப்பற்றியும் தவறாக நினைத்துக் கூடப் பார்க்காதவள். அவளைப் பற்றி இல்லாததும்பொல்லாததும் ஏன்பேச வேண்டும்? அம்மா யாருக்கு என்ன கெடுதலைச் செய்தாள்? எங்கோ ஒரு மூலையில் இருந்தவளை வம்புகளுக்கு இழுத்து இங்கெல்லாம் சரியாக? பாவம் அம்மா! நல்லதையே பார்க்காதவள். கஷ்டம்! கஷ்டம், கஷ்டம். அவள் அனுபவித்தது எல்லாம் கஷ்டம்தான்.



துன்பமே உன் பெயர்தான் அம்மாவோ. அம்மாவை நினைக்கையிலேயே மறுபடியும் அழுகை வந்தது. பரிதாப உணர்வு தலைதூக்கியது. மாதவ்விற்கு தான் போனது தெரிந்தால் என்ன ஆகும்? மாதவ் என்ன சொல்லுவார்? கோபித்து, கடிந்து பார்த்ததில்லை. ஆனால் செய்ய வேண்டாம் என்று நூறு தடவை எச்சரித்த விஷயத்தைச் செய்தால் என்னாகும்.ரொம்ப, ரொம்ப கோபம், வந்தால் 'என்னம்மா நீ' பல்லைக் கடிப்பான். அதற்கு மேல் பேசியதில்லை.

ஆனாலும்இவன் அவளுக்கு கோபம் வரும்படி நடந்து கொண்டது இல்லை. எப்போது தன்னைக்கோபித்தான். யோசித்துப் பார்த்தாள்.

ஒருமுறை ஏதோ முக்கியமான கவர் ஒன்று கொடுக்க, அதை மறதியாக டிராயரில் வைத்து விட்டு போய்விட, கணவன் கேட்க, தான் தேட அப்பொழுது தான் பல்லைக் கடித்தான்.அதற்குள் அவள் சுதாரித்துக் கொண்டு தேடி எடுத்துக்கொடுத்தபின், ''அந்தந்தச் சாமானை அங்கங்க வைக்கிற பழக்கமே உனக்குக் கிடையாது. இனிமே அதை அதை ஒழுங்கா அந்த அந்த இடத்துலே வை. ''அவள் பதில் பேசாமல்போகவே சச்சரவு அத்தோடு முடிந்தது. இன்று போனது தெரிந்தால் என்ன செய்வான்?

ஒரு நிமிடம் இரத்தம் உறைவது போல் தோன்றியது. பார்ப்போம் எப்படியும் அம்மாவைப் பார்க்காமல் இருக்க முடியாது. ஏதேனும் செய்தே ஆக வேண்டும். பயந்து கொண்டு இருந்தால் வண்டி ஓடாது. ஒருவாறு சற்று சோர்ந்த மனதைத் தட்டிக் கொடுக்கிறாள். பஸ் ஸ்டாண்டை அடைந்து அவள் இறங்கி நடக்கும் போது தனக்கு முன்னே.. யார். அது சரியாகத் தெரியவில்லையே கருணாவா.. கருணாதான்.

''ஏய் கருணா ''கூப்பிட அப்போது தான் கருணா இவளைப் பார்க்க இருவரும் சேர்ந்தே நடந்தனர்.

''நீ அம்மாவைப் பத்தி ஏதாலும் கேட்டு சொல்வேன்னு பார்த்தேன். ஒன்னுமே சொல்லலியே..''

''நானே அம்மாவைப் பார்க்கலேடீ. இன்னிக்காவது பாக்கலாம்னு ஓடி வரேன். அந்த எம்.எல்.எவோட சம்பந்தப் படுத்தி ஏதேதோ ஒளறினியே. அனாதை இல்லத்துக்கு பத்து ஏக்கர் நிலம் தராராம். அது விஷயமாகத்தான் அம்மா போயிட்டு வராங்களாம்.''

''அதுக்கு போவானேன்.''

''போகாம.. பொதுநலச்சேவை செய்யும் போது, நாலு பேரை கேட்டாதான் வேலையே நடக்கும். அது தெரியாதா? உங்க மாமியார் இல்லாது, பொல்லாது சொன்னாங்கன்னா உனக்கு எங்க போச்சி புத்தி. அதைப் பெரிசுபடுத்தி அம்மாவைப் பத்தித் தப்பா பேசி, போடி செய்றது கொஞ்சம் கூட நல்ல இல்லே.'' சலித்துக்கொண்டாள்.

''ஏண்டி அம்மாவைப் பத்தி மத்தவங்க எதுவும் பேசக் கூடாதுன்னு தானே. பதறிப்போய் போன் பண்ணேன். நீ தப்பா எடுத்துக்கிட்டியே.''

அக்கா என்ன சமாதானம் சொன்னாலும் மனது சற்று பொருமத்தான் செய்தது.' ஆனாலும் தன் எரிச்சலை மறைத்துக் கொண்டாள். பதில் சொல்லாமல் மௌனமாக நடந்தாள். அம்மாவை அக்காள் பிடியிலிருந்தும் காப்பாற்றித்தான் ஆக வேண்டும். இவள் பண்ணுகிற அட்டகாசம் எரிச்சலைத்தான் தருகிறது. எது கேட்டாலும் ஒரு மொட்டைச் சமாதானத்தைச் சொல்லி விடுகிறாள். வீட்டை நெருங்க நெருங்க மனது வேறு



தடக் தடக் என்றது. அக்கா வேறு பர்சையாக ஏதும் கேட்டுத் தொலைக்காமல் இருக்கவேண்டும்.

கமலத்திற்கு இப்போதெல்லாம் நேரமே இருப்பதில்லை. நேரம் கிடைப்பதே அரிதாகத் தான் இருக்கிறது. இருபெண்களுக்குத் திருமணம் முடித்துவிட்டு அவர்களை புக்ககத்திற்கு அனுப்பிய பின், நேரத்தை சற்று பயனுள்ளதாக ஆக்க வேண்டும்என்ற விருப்பத்தில் ஆரம்பித்தது இந்த அனாதை இல்லாம். நான்கு பேரோடு ஆரம்பித்தது. சில நாட்களில் ஜனத்தொகை முப்பதாகிப்போனது. ஆதரவற்ற பிள்ளைகள், கைம்பெண்கள், முதியோர்கள் என்று வட்டம் பெரிதாகிக் கொண்டே போனது. ஆரம்பித்த புதிதில் இருந்தது போல் இல்லாமல் அனைத்தும் மாறித்தான் விட்டது. இன்று இந்த முப்பது பேருக்குத் தங்க, இடவசதியின்மை, சாப்பாடு பிரச்சினை, பணப்பிரச்சினை என்று ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரச்சினை வந்து வாட்ட, இவர்கள் தங்குவதற்கென்று நாமே ஒரு சின்ன இடத்தை வாங்கிக் கட்டினால் என்ன? அந்த யோசனை சரியாகத்தான் தோன்றியது. ஆனால் நிலம்வாங்க, வீடு கட்ட பணம் யார்தருவார்கள்? மனது போராடியது. இத்தனை நாட்கள் யாருடைய ஆதரவும் இல்லாமல் பிள்ளைகளை வளர்த்தது பெரியதாகத் தோன்றவில்லை. ஆனால் இப்போது இருக்கும் முப்பது பேருக்கே சாப்பாடு, துணிமணிகளுக்கே பணம் போதவில்லை. யாரிடம் கையேந்துவது? யாரிடமும் கலக்காமல் கேட்காமல் எதுவும் செய்ய முடியாது போலிருக்கிறது.முதலில் தான் அப்பளம் இட்டு வத்தல் போட்டு, ஜூவ்ஸ் வித்து என்று என்னென்னவோ செய்து விற்றாள். யானைப் பசிக்கு சோளப்பொறி என்பது போல் வாங்குகிற பணம் ஒரு வேளைக்குக் கூட காணாமல் போனது.

நான்கு நாட்களுக்கு ஒருமுறை வந்து பார்க்கும் இரண்டாவது பெண், மாதத்திற்கு ஒரு முறை வந்து பார்க்கும் முதல் பெண் இவர்களைப் பற்றிய சிந்தனை அறுந்தே போனது. சதா பணம், பணம் இதைப் பற்றிய நினைவுகள் தான்.

காவ்யாவிற்குத் தெரிந்த போது உதவி செய்வதாக வாக்களித்தாள். தனக்கு தெரிந்தவர்களிடம் சொல்லி கொஞ்சம் பணம் திரட்டிக் கொடுத்தாள். கருணாவும் தன் பங்குக்கு கொண்டு வந்தது தான் கொடுத்தாள். இருந்தாலும் அவர்கள் கொண்டு வந்தது முழுவதும் ஒரு இரண்டு மாதத்திலேயே செலவுசெய்து விட மறுபடியும் பற்றாக்குறை ஆரம்பம். பணப் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை, இடப்பற்றாக்குறை, இப்படி எல்லாக் குறைகளும் வந்து நெஞ்சை அழுத்த மனது வரண்டு தான்போனது.

அப்போது தான் இவர்களின் ஒரு விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அந்த ஊர் எம்.எல்.ஏ உதவி செய்வதாக வாக்களித்து, அவரின் பத்து ஏக்கர் நிலத்தையும் இவர்கள் ஆசிரமத்திற்குத் தருவதாக ஒத்துக் கொண்டார், அதன் விஷயமாகத் தான் அவரை வேறு அடிக்கடி பார்க்க நேரிட்டது. முற்றிலும் மாறின தாய் காட்சி அளிக்கும் மனிதர்கள்.

முதலில் நம்ப சற்று கடினமாக இருந்தாலும் மாற்றம் என்பது அனைவருக்குமே சகஜமான ஒன்று தானே. நேற்று வரைக்கும் தொட்டதெற்கெல்லாம் எரிந்து விழுபவன், திருமணத்தினாலோ அல்லது வேறு எதிலோ ஈடுபட்டுத் தன்னை மாற்றிக் கொள்வதில்லையா?

உலகத்தில் எல்லாமே சகஜம் தான். எம்.எல்.ஏவின் மெய்க்காப்பாளன் போல்நடந்து கொள்ளும் இவளின் முன்னாள் மாப்பிள்ளையும் வந்திருந்தான். முதலில்அவன்



வரவு பயத்தைக் கொடுத்தாலும் அவனின் அதிகம் பேசாத்தன்மை, பணிவு, மரியாதை இதெல்லாம் அவனுக்கும் மாறுதல் வந்திருக்குமோ என்று எண்ண வைத்தது.

அன்று ஆசிரமத்தின் பெயரில் நிலத்தை ரிஜிஸ்டர் செய்து, டாக்குமெண்ட்ஸ் எல்லாம் அடியாளிடம் கொடுத்து அனுப்புவதாக எம்.எல்.ஏ சொல்லியிருந்ததால் தன் முன்னாள் மாப்பிள்ளையை எதிர்நோக்கிக் காத்திருந்தாள் ~~காமாட்சி~~ கமலம்

சொன்ன நேரத்துக்கு சற்று லேட்டாக அவன் வர,

''வாங்க.. ஏன் லேட்?'' என்கிறாள். ''டாக்கூமெண்ட் கொடுத்துட்டாருங்களா?''

''மொதல்ல அந்த பேப்பர்லே எல்லாம் கையெழுத்து போட்டுத் தரச் சொன்னாரு. எல்லாமே பலவித செலவுகளைக் காண்பிக்கும் பில்கள்.

''எதுக்குப்பா?''

''பத்து ஏக்கர் நிலத்தைமட்டும் ஓசியா வாங்கறீங்க. இதெல்லாம் கொஞ்சம் கையெழுத்தப் போட்டுத்தரக் கூடாது. இன்னும் சில ஹோட்டல்களில் தங்கிய பில்கள், சாமான்கள் வாங்கியவை என்று எக்கச்சக்கமான பில்கள்

''என்னப்பா இது அநியாயம்? இதெல்லாம் என்ன? நீ ஏன் இப்படி நடந்துக்கறே. மொதல்லே டாக்கூமெண்ட்லைக் கொடு.''

''மேடம்.. எம்.எல்.ஏவை கேனைன்னு நெனைச்சுட்டீங் களா? உங்க இல்லத்துக்கு செலவு பண்ணதா நீங்க வர பில்லை எல்லாம் ரெகுலரா சைன் பண்ணித் தரணும்.''

''என்னப்பா இதெல்லாம்!'' கமலம் பதறிப்போய் கேட்க,

"ஏன் கிழவி உனக்கு ஒரு தடவை சொன்னா தெரியாது. பிளாக் எல்லாம் எப்படி ஒயிட் ஆகிறது உனக்கு உதவிக்கு எங்களுக்கு ஒரு சின்ன அட்ஜஸ்ட்மென்ட்." ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறாள்.

"என்ன அநியாயம் இது?" சாப்பாட்டுக்குக் கூட வழியில்லாத ஏழைகள் செலவு செய்ததாக கணக்குகள். ஆனால் முறைத்துக்கொண்டு வேண்டாமென்றால் பத்து ஏக்கர்நிலம் கை நழுவிப்போய் விடக் கூடாதா? அதற்காகத் தவறான வழியிலா போவது? இத்தனை நாட்கள் நேர்மை, நாணயம் என்று வாழ்ந்துவிட்டு.. இப்போது பொய் சொல்வதா? மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றமாட்டானா? தனக்கு இந்த வேலையைக் கொடுத்த கடவுள் அதை வழி நடத்தவா உதவி செய்ய மாட்டான்.

"நீ வெளியே போப்பா... " அவள் கையைக் காட்ட, அவளையே முறைத்தபடி பார்த்துக் கொண்டு நிற்கிறான் கமலத்தின் முன்னாள் மருமகன்.

## 15

"அப்ப முடிவா என்ன சொல்றீங்க?"

"என்னப்பா சொல்றது? எனக்கு வயது என்ன தெரியுமா? இத்தனை வயசு வரைக்கும் நேர்மை, நாணயம் அப்படீன்னு வாழ்ந்துட்டு இனிமே தப்பான வழியில சொத்து சேக்க வேண்டிய அவசியம் என்ன சொல்லு. நல்ல செயலுக்காகக் கொடுத்தாலும் வழி தப்பானது ஆனா ஒத்துக்க முடியாதுப்பா."



"என்னங்க வழி தப்பு? சும்மா செலவழிச்ச கணக்குக்கு கையெழுத்துப் போட்டிடப் போறீங்க. இதுலே எம்.எல்.ஏ சாருக்கும் லாபம். உங்களுருக்கும் லாபம் இல்லையா?"

"வேண்டாம்பா அந்த மாதிரி எந்த லாபமும் வேண்டாம். இதெல்லாம் நான் நடத்தலை. எனக்கு மேலே இருக்கிற ஆண்டவன் நடத்தற லீலை. நான் இதைச் செய்யணும்னு அவன் விரும்பினா எனக்குன்னு ஏதாலும் ஒரு ஏற்பாட்டை அவன் செய்துடுவான்"

"அப்படீங்களா? ஏம்மா நீ அத்தினி நல்லவளாட்டம் பேசறியே. எம்எல்.ஏவோட சுத்தலை. ஒரு அறுத்த பொம்பளையாட்டமா இருந்தே. இந்த வயசுலே ஒனக்கு இதெல்லாம் கேக்குது. ஏன் ஆசையை மட்டும் அந்த ஆளு தீத்து வைக்கணும். ஆனா பதிலுக்கு நீ ஒண்ணும் செய்ய மாட்டியா?"

பச்சை பச்சையான வார்த்தைகள். மனிதன் பாதி மிருகம் என்பது எத்தனை சரியான தீர்ப்பு. எத்தனை கேவலமான எண்ணங்கள். இவனே கேவலமானவன். இவனால் இப்படி மட்டும் தான் பேச முடியும். இவனோடு பேசினால் சேற்றில் கல் போட்ட கதை தான்.

"நீ போகலாம் "சொல்லிவிட்டுக் கதவைச் சாத்த யத்தனிக்கையில்.

"ஏ. கிழவி. ஒனக்கு அத்தனை திமிரா? கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே வர, வாசல் வரை வந்துவிட்ட காவ்யாவும் கருணாவும் ஓடி வருகிறார்கள்.

"ஏய் விடுடா. விடு எங்கம்மாவை விடு." அவனை மூர்க்கத்தனமாக தள்ளியதில் திபு, திபுவென்று எங்கிருந்தோ

பத்து, பதினைந்து பேர் ஓடி வந்து வியூகம் போட்டு நின்று கொண்டனர்.

"அட என் மாஜி பொண்டாட்டியும் மச்சினியுமா? யாருடா இத்தனை தைரியமா தள்ளறாங்கன்னு பார்த்தேன். "சட்டென்று காவ்யாவின் அருகில் வந்தவன் "அப்... பா... நெடு... நெடுன்னு வளர்ந்து எத்தனை அழகாயிட்டே" என்று சிரிக்கிறான்.

"வெளியே போ."

"போகாம இங்கயா நிக்க போறேன்." என்றவன்,

"யப்பா... இந்த அம்மா நேர்மையாகவே வேலை செய்யட்டும், அவங்க வாரிசுங்க நம்ம வேலைக்கு தொணையா இருக்கட்டும். எம் மாஜி பொண்டாட்டியை வச்சு எத்தனை திட்டம் போட்டேன். எல்லாம் குட்டிச் சுவரா இருந்தா என்ன "சட்டென்று காவ்யாவின் கையைப் பிடித்தவாறே, "இந்தக் குட்டியை வச்சு சாம்ராஜ்யத்தையே பிடிச்சிடலாம்."

அடுத்த நிமிடம் என்ன நடக்கிறது என்று அறிவதற்குள், இருவரையும் மயக்க வைத்து தூக்கி காரில் போட்டு, காமாட்சி அம்மாவையும் அடித்து போட்டு விட்டு, அங்கேயே தள்ளிவிட்டு கிளம்பி விட்டனர். கண் மூடி கண் திறப்பதற்குள் இத்தனை வேலைகளும் நடந்து முடிந்து விட்டன.

கமலம் கண்ணைத் திறக்கும் போதே விண் விண் என்று மண்டை வலித்தது. தன்னை யாரோ ஒரு இருட்டறையில் வைத்திருப்பதைப் போன்ற பிரமை. இது என்ன இது? தன்னை எங்காவது இருட்டு இடத்தில் வைத்து பூட்டி வைத்து விட்டார்களா? அப்போதுதான் ஞாபகம் வந்தது. காவ்யா,



கருணா இருவரும் என்ன ஆனார்கள். 'பாவம் அவர்கள்' தன்னைப் பார்க்க வந்தவர்களை மயக்கம் கொடுத்து காரில் அழைத்துச் சென்றதை நினைத்த போது ஒரு நிமிடம் நெஞ்சு நடுங்கியது. சட்டென்று எழுந்திருக்க முற்பட்ட போது தலை பின்னும் வலித்தது. தலை வேறு சுற்றியது.

சிறிது நேரம் அப்படியே இருந்தவள், தட்டுத் தடுமாறி எழுந்தாள். தன்னை எங்கே கொண்டு வைத்திருக்கிறார்கள். தன் வீட்டில் இருக்கும் இருபது பேரின் நிலை என்ன? அவர்களை ஏதாவது செய்து விட்டானா? கெட்டவர்கள் என்று தெரிந்தும் தான் ஏன் சேர்த்து கொண்டோம். முதலிலேயே நல்ல வழியில் சம்பாத்தியத்தைப் பற்றி யோசித்திருக்கலாமே. இயலாமையா தன்னை இப்படி முடிவு எடுத்து மாட்டிக் கொள்ள வைத்தது. தன் பெண்கள்... மறுபடியும் பெண்களைப் பற்றி நினைக்கையில் குலை நடுங்கியது. "காவ்யா, கருணா" இரண்டு பேருமல்லவா மாட்டிக் கொண்டு விட்டார்கள்.

தட, தட, வென்று சப்தம். யாரோ இடிப்பதைப் போன்ற உணர்வு யார் அது? தன்னைத் தூக்கி சென்றவர்களா? நெஞ்சு நடுங்கியது. மறுபடியும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, மெதுவாகச் சப்தம் வந்த திசையை நோக்கி நடக்க, இது பரிச்சியப்பட்ட வீடு போல் தோன்றியது.

யார் அது? எங்கே இருக்கிறோம். ஒரு வேலை என் வீட்டிலே இருக்கிறேனா? தூக்கிச் சென்ற குழந்தைகளை இப்படியே விட்டு விட்டு சென்று விட்டார்களா?

நினைவுகள் சிறிது தெம்பைக் கொடுத்ததும், ஓடிப் போய் கதவைத் திறக்கிறாள்.

அங்கிருந்து வெளிவந்த வெளிச்சம் கண்ணைக் கூச, ஒரு நிமிடம் கண்ணை மூடித்திறக்கிறாள்.

''அம்மா... என்னாச்சம்மா?... உங்களுக்கு ஒன்னும் இல்லையே?'' துடிக்கும் குழந்தைகளைப் போல துடிக்க மனம் லேசாக நெகிழ்கிறது. வெளிச்சம் வந்ததும் லேசான சுறுசுறுப்பு வந்தது. மடமடவென்று வீட்டைப் போட்டு விட்டு கருணாவின் கணவனுக்கும், காவ்யாவின் கணவன் மாதவனுக்கும் போன் செய்தாள். கருணாவின் கணவன் விஷயத்தைக் கேள்விப்பட்டு அதிர்ந்து போனான்.

''இதோ வரேன்'' என்று புறப்பட்டு வந்துவிட்டான். மாதவன் அலுவலகத்தில் இல்லாத காரணத்தினால் அவனைத் தொடர்பு கொள்ளவே முடியவில்லை.

அடுத்த பத்தாவது நிமிடம் கருணாவின் கணவன் அங்கே வந்து நின்று கொண்டிருந்தான். ''என்ன ஆச்சு?' அவனிடம் நடந்ததைப் பற்றிக் கூறக் கூறக் கோபத்தில் சள்ளென்று எரிந்து விழுகிறான்.

''ஏங்க உங்களுக்கு நல்லவன் யாரு, கெட்டவன் யாருன்னு தெரியாதா? அதை கேக்கறதுக்காகத்தான் என் பொண்டாட்டி வந்தா - இப்ப என்ன ஆச்சு பாத்தீங்களா? ''கமலத்திற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாத நிலையில் விழித்தான். இது என்ன புதுக்கதை? தன்னைப் பற்றி மருமகன் இப்படி யெல்லாம் நினைக்கும் படியாகவா தான் நடந்து கொண்டு விட்டோம். கெட்டவனாக இருந்தாலும் எம்.எல்.ஏ. மனம் திருந்தி விட்டதாக தான் நினைத்தாமே. அந்த நினைப்புகள் தவறா என்ன? கெட்டவர்கள் திருந்தியதாக சரித்திரமே இல்லையா என்ன? மனம் எத்தனையோ கேள்வி கேட்டாலும் பதில் மட்டும் வெளிவரவில்லை. தெரியவும் இல்லை.

''அது இருக்கட்டும் மாப்பிள்ளை. முதலில் என் பெண்களுக்கு ஆபத்து எதுவும் இல்லாமல் அவங்களை கொண்டு வரணும் போலீசுக்கு போகலாமா?''



''சரி இருங்க எம்பிரண்டு பக்கத்து போலீஸ் ஸ்டேஷன்லேதான் இன்ஸ்பெக்டர் அவன் கிட்டே கம்ப்ளையிண்ட் கொடுத்துட்டு அவங்களை சீக்கிரமே விடுவிக்க முயற்சி செய்யலாம். கமலத்தையும் இழுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போகிறான். கமலத்திற்கு மாதவனைப் பற்றிய நினைவு வருகிறது. அவனுக்கு எப்படியாவது விஷயத்தைத் தெரிவித்து விட்டால் எப்பாடு பட்டாவது இரண்டு பெண்களையும் வெகுசீக்கிரத்தில் அழைத்துக் கொண்டு வந்து விடுவான்.

போலீஸ் ஸ்டேஷனில் கம்ப்ளெயின்ட் கொடுத்து விட்டு வரும்வரை மனது போராடியது. பெண்களின் நிலை என்ன? தன் பெண்கள் என்ன பாடுபடுகிறார்களோ. அழுகை வந்தது துக்கம் ஏற்பட்டது.

''இத பாருங்க, இந்த இல்லம், கில்லம் எல்லாத்தையும் மூடிட்டு வீட்டோடு வந்து இருங்க' எங்களோட கூட இருந்திருந்தீங்கன்னா எதாவது பிரச்சனை ஏற்பட்டு இருக்குமா? தேவையில்லாத கஷ்டம்தான் உங்க பெண்களுக்குத்தான் வந்திருக்குமா? இவங்களை வேற அனாதை விடுதியிலே சேர்க்க ஏற்பாடு பண்ணுங்க. நீங்க என்னோட வந்து தங்க ஆரம்பிங்க. எப்ப வரீங்க சொல்லுங்க.''

அவன் கேட்க, கேட்க லேசாக பெருமூச்சு விட்டாள். ''இதையெல்லாம் சரி பண்ணிட்டு வரேன்.'' வாய் பேசினாலும் மனம் பெண்களைப் பற்றிக் கவலைப்பட்டது. பெண்களுக்கு என்னவாகி இருக்கும்?

அன்று மாப்பிள்ளையை அனுப்பி விட்டு வீட்டிற்கு வந்தவள் மறுபடியும் மாதவனுக்கு போன் செய்தாள். ஆனால்

மாதவன் மறுபடியும் கிடைக்கவில்லை. இரண்டு முறையும் அவனை உடனே சந்திக்க சொல்லி செய்திகள் அனுப்பிவிட்டு காத்திருக்கிறாள். பெண்களை நினைத்து நினைத்து இன்னும் மனம் அழுது கொண்டிருந்தது. கருணாவின் கணவன் சற்று நேரம் அவனையே உற்றுப் பார்த்தான். பிறகு விருட்டென்று அங்கிருந்து நகர மன வேதனையோடு அமர்ந்தாள் கமலம் வாழ்க்கையின் கடைசிக் கட்டம் வரைக்கும் கடவுள் தன்னை ஒரு விளையாட்டு பொம்மை போல் எண்ணி போட்டு புரட்டி, புரட்டி எடுத்துக் கொண்டு இருக்கிறான். தான் இந்த விதியை நடத்துவது இவர்களை ஏன் பாதிக்கிறது? எதற்காக இந்த மிரட்டல்கள்.

காணாமல் போய்விட்ட பெண்டாட்டியைத் தேடத் தோன்றவில்லை. தன் விஷயத்தில் எத்தனை அக்கறை. கடவுளே என்னை நிம்மதியாக இருக்க விட மாட்டியா? நான் செய்த தவறு என்ன? தவறுகளுக்கு பிராயச்சித்தங்கள் இல்லையா? சட்டென்று கண்களில் கண்ணீர் வழிய, வழிய வெறித்தபடி நிற்கிறாள். தன் பெண்கள் என்ன ஆனார்கள் தனக்கும் ஏன் அந்த யோசனையில்லை.

பெண்களைப் பற்றிய கவலையில் ஒரு நிமிடம் மௌனமாக இருந்தாலும் மறு நிமிடம் பழையபடி மூளை வேலை செய்ய மனது பரபரத்தது. மறுபடியும், மறுபடியும் மாதவனுக்கு முயற்சி செய்கிறாள்.

''அவர் சைட்லேந்து இன்னும் வரலே மேடம். எம்.டி. ஆபிஸ் வந்ததும் உங்க மெசேஜ்ஜை கொடுத்திடறோம் மேடம்.'' ஏறக்குறைய பத்து தடவைக்கு மேல் போன் செய்து விட்டோம். இருந்தும் என்ன மரியாதையான, பணிவான பதில், எம்.டி. மாதவனாயிற்றே. அலுவலகமும் அத்தனை



கட்டுக்கோப்பாக இருக்கத்தான் இருக்கும். தன் பெண் காவ்யாவே எத்தனையோ முறை, மாதவனின் திறமையை சிலாகித்து இருக்கிறாள்.

''அம்மா என்ன மாதிரி மேனேஜ்மெண்ட் தெரியுமா? எக்ஸலெண்ட் எந்த வேலையையும் பட்டுனு முடிக்க முடிகிறது. எதை எடுத்தாலும், அதுல டிப்பா போய் அந்த வேலையை அக்கு வேறா, ஆணி வேறா, அலசி ரொம்ப அமர்க்களமா வேலையை முடிக்கிறார். ஹி ஈஸ் கிரேட்மா. அப்படிப் பட்டவன் வந்து விட்டால் இந்தப் பிரச்சனைகளை ஒரு நொடியில் தீர்த்து விட முடியாதா?

கமலத்திற்கு பெரிய மருமகனை விட சின்ன மருமகன்மேல் அளவு கடந்த நம்பிக்கை. அந்தப் பிள்ளை எதையும் சாதித்துக் கொண்டு வந்துவிடும். அந்தப் பிள்ளை வந்து விட வேண்டும். மனம் ஜபிக்க, ஆரம்பித்தது. இருந்தாலும் தன் பெண்களுக்கு இத்தனை நேரம் என்ன ஆகியிருக்கும்? தூக்கிக் கொண்டு போய் ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டுமே. மனம் அங்கலாய்த்தது. செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்க படபடப்போடு காத்திருக்கிறாள்.

''டிரிங்.... டிரிங்... போன் ஒலிக்க, மாதவனாகத்தான் இருக்கும். 'ஓடிப்போய் போனை எடுக்கிறாள்.

''ஏண்டிம்மா அங்க அனாதை விடுதிக்கு டிரஸ் தேவைப்படுதுன்னு சொன்னியே உங்க அண்ணி கூட பாவம் நிறைய டிரஸ் கலெக்ட் பண்ணி வச்சிருக்கா. எப்ப வந்து எடுத்துக்கப் போறே.'' மாமியாரின் சமயம் தெரியாத கேள்வி. ஒரு நிமிடம் எரிச்சலை வரவழைக்க, லேசான பெருமூச்சோடு செல்கிறாள்.

''நான் இந்த வாரத்துல வந்து எடுத்துக்கறேன். அத்தை''

''ஆமா, கருணா, காவ்யாவுக்கு ஏதாவது விசேஷம் உண்டா.

குளிச்சிட்டு இருக்காங்களா.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே அத்தை. கல்யாணம் ஆகி கொஞ்ச நாள் தானே ஆகியிருக்கு. வாய் சர்வசாதாரணமாக பதில் சொன்னாலும் மனம் பதை பதைத்தது. பெண்கள் நிலமை என்னவோ? ஆண்டவா குழந்தைகளைக் காப்பாற்று. பின் ஊர்க்கதை, உலகக்கதை என்று எல்லாவற்றையும் பேசிவிட்டு போனை வைத்தபோது, சற்று விரக்தியோடு கண்களை மூடுகிறாள் கமலம். மறுபடியும் மாதவனைத் தொடர்பு கொண்ட போது மாதவன் இன்னும் வந்திருக்கவில்லை என்று தெரிந்தது. இப்போது என்ன செய்வது? காத்திருக்க வேண்டியது தானா? என்ன ஆயிற்றோ என்ற படபடப்போடு காத்திருக்க ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு யுகமாக அல்லவா நகருகின்றன. இந்த அவஸ்தையைத் தாங்கவே முடியவில்லையே! தவித்துக் கொண்டிருந்த போது யாரோ காலிங்பெல்லை அழுத்த வேக, வேகமாகப் போய் கதவைத் திறக்கிறாள். மாதவன் நின்று கொண்டிருக்கிறான். அவளின் இரண்டாவது மாப்பிள்ளை முகம் கன்றிச் சிவக்க, ஆத்திரம், கோபத்தோடு நின்று கொண்டிருக்கிறான்.



## 16

''**வா**ங்க...'' கமலத்திற்கு அதற்கு மேல் என்ன பேசுவதென்று தெரியாமல் விழிக்கிறாள். கண்கள் லேசாக கலங்கிப் போயிருந்தன.

''என்னாச்சு?'' ஆத்திரம், கோபம், லேசான பயத்தோடு அனுமதியில்லாமல் அவன் துடித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. மெதுவாக நடந்ததைக் கூறக் கூற பற்களைக் கடிக்கிறான். எங்கே கம்ப்ளெயிண்ட் கொடுத்தார்கள் என்றெல்லாம் கேட்டுக் கொண்டு கடகடவென்று கிளம்ப, கமலம் அவன் போவதையே பார்த்துக் கொண்டு இருக்கிறாள். ''நீங்க ஜாக்கிரதையா இருங்க. ஒரு செக்யூரிட்டியை அனுப்பறேன்? ''சொன்னவன் மறுபடியும் திரும்பி விடுகிறான் இங்கிருந்தபடியே செக்யூரிட்டியை வரச்சொல்லிவிட்டு டி.எஸ்.பி. எஸ்.பி. என்று யார் யாரையோ தொலைபேசியில் தொடர்பு கொள்கிறான்.

பின் எம்.எல்.ஏ. வீட்டிற்கு டயல் செய்ய, பெல் அடிக்குமுன் அவனின் நண்பன் பலராம் எஸ்.பி. வந்துவிட்டான். அவனை பேசாமல் இருக்குமாறு கையை அமர்த்திவிட்டு பின் தொலைபேசியில் தொடர்பு கொள்கிறான். எம்.எல்.ஏவிடம், தான் அவரை உடனே பார்க்க வருவதாகக் கூறிவிட்டு வேறு எந்த விவரமும் தராமல் போனை வைத்து விட்டான். செக்யூரிட்டி வந்ததும், செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யச் சொல்லிவிட்டு பறந்தான். கமலம் வியப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள் ஏற்பட்ட உதறல் சற்று நின்றது போல் இருந்தது. ஈஸ்வரா என் பெண்கள் எந்தவித விக்னமில்லாமல் வந்துவிட வேண்டும். மனதிற்குள் உருகி உருகி பிரார்த்தனை செய்கிறாள்.

அன்று மாதவனின் நிலமைதான் சொல்ல முடியாததாக இருந்தது. சைட்டிலிருந்து ஆபீசுக்கு வந்ததுமே...

''சார் உங்களுக்கு போன் இம்மிடியட்டா காண்டாக்ட் பண்ணி சொல்லி வந்துகிட்டே இருக்கு''

தன் மாமியாரிடமிருந்து போன் என்றதும் மனம் ஒரு நிமிடம் துணுக்குற்றது. என்னவாக இருக்கும்? ஒரு வேளை கருணாவின் முன்னாள் கணவனால் ஏதாவது பிரச்சனையா? இப்போதே மணி பத்து. இதற்கு மேல் எப்போது போய்விட்டு எப்போது வருவது? காவ்யா வேறு தனியாக உட்கார்ந் திருப்பாள். அவளையும் இப்போது போக வேண்டாம் என்று சொல்லியாகிவிட்டது. விஷயத்தை கேள்விப்பட்டாலே துடித்துவிட மாட்டாளா?

''நான் அப்பவே சொன்னேன் இல்லை.'' என்று சண்டை போட மாட்டாளா? ஒரு பக்கம் மாமியாரை நினைத்தால் பாவமாக இருந்தது. மறுபக்கம் பெண்டாட்டி பயப்படப் போகிறாளே என்ற உணர்வு வேறு நெஞ்சை போட்டு அழுத்த...

''சரி வருவதற்கு லேட்டாகும்' என்று அவளுக்கு டெலிபோன் செய்து விடுவோம். ''நினைத்தவாறே அவளுக்குப் போன் செய்ய முயன்ற போது, ''சார் மேடம்கா போன் பண்ணறீங்க? அது விஷயமாத்தான் உங்க மாமியார் பல தடவை உங்களுக்கு டிரை பண்ணாங்க?''

''என்னம்மா?''

''மேடம், அவங்க ஸிஸ்டர் இரண்டு பேரையும் யாரோ கடத்திகிட்டு போயிட்டார்களாம்.'' சொல்ல, சொல்ல முகம் ஜிவ்வென்று சிவந்தது.



''எப்படி...?''

''தெரியாது சார் மேடம் அவங்க அம்மா வீட்டுக்கு போகும் போது கிட்நாப் பண்ணிகிட்டு போயிட்டாங்க.''

ஒரு நிமிடம் அதிர்ந்து போகிறான். தான் போகக்கூடாது என்று சொன்ன பிறகும் அவள் போயிருக்கிறாள். அடுத்த நிமிடம் எரிச்சல், கோபம் ஆத்திரம் தலைக்கேறியது. அவளை அழைத்துக் கொண்டு போய் ஏதாவது செய்து விட்டால், அந்த நினைப்பே உதறலைக் கொடுக்க, வாய் 'பூ்ல்' என்று முணுமுணுத்தது. கை வேறு லேசாக நடுங்க உடனே மாமியாரைப் பார்க்கக் கிளம்பினான். மாமியாரின் வார்த்தை களைக் கேட்க, கேட்க மனம் இன்னும் அவஸ்தையில் ஆழ்ந்தது.

அவர்களைத் தூக்கிப் போய் இரண்டு மணி நேரத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஏதாவது ஆகியிருந்தால் அவனுக்கு காவ்யாவைப் பற்றி நன்றாகத் தெரியும். வெளிக்கு தைரியசாலி போல் நடித்தாலும் உள்ளுக்குள் பயந்தாங்கொள்ளிதான். அவன் ஒரு வார்த்தை சொல்லி விட்டால் போதும் மீற பயம்தான். அவளுக்கு விருப்பமில்லாத எத்தனையோ விஷயங்களை அவனுக்காக செய்ய வேண்டியிருக்கிறது. ''என்ன மாதவ் இது?'' என்று சிணுங்குவதோடு சரி. அவன் சற்று அதிகமாகப் பிடிவாதம் பிடித்தாலோ, இல்லை குரலை உயர்த்தினாலோ அவன் இஷ்டப்படியே நடந்து கொள்ளுவாள். வாயைத் திறக்கவே மாட்டாள். இத்தனைக் கும் வேலைக்குப் போகும் பெண் என்று பெயர். இவன் எத்தனையோ இடங்களில் பெண்களைப் பார்த்திருக்கிறான். வேலைக்கு போகும் பெண்கள் என்றால் தலையில் கொம்பு முளைத்த கதைதான். வீட்டில் அம்மா, அப்பா பேச்சிற்கு கூட

அடங்காத எத்தனையோ பெண்களைப் பார்த்து இருக்கிறான். குறிப்பாகத் திருமணம் ஆகிவிட்டால் அந்தக் கணவன் படும்பாடு சொல்லி முடியாது.

அதற்கு இவள் மிகவும் சாதுவான பெண்தான். ஏதாவது நடந்து விட்டால்? உடைந்தே போய்விடுவாளே. மனம் ஒரு நிலையில் இல்லாமல் துடித்தது - தவித்தது. கை கால் வேறு நடுங்கியது.

சே! படிச்ச முட்டாள். எத்தனை தடவை படிச்சு, படிச்சுச் சொன்னேன். 'போகக்கூடாதுன்னு. அதையும் மீறி.' மறுபடியும் நினைத்த போது பெண்டாட்டி மேல் கோபம் கோபமாக வந்தது. ஒரே அறை இடியட் - மறுபடியும் மனதிற்குள் அவளை வைகிறான். தூக்கிச்சென்றவன் மிக மிக மோசமான பார்ட்டி. அவளை உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டால் நினைக்க நினைக்க இருப்புக் கொள்ளாத நிலை தான். மாமியார் சொன்னதைக் கேட்டதும் கடகடவென்று தன் ப்ரண்ட் எஸ்.பியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி பின் எம்.எல்.ஏவுக்குப் போன் செய்து பேசுகிறான். அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டு மாமியாருக்கு காவல் ஏற்பாடு செய்து விட்டுக் கிளம்பிய போதும், மனம் ஒரு நிலையில் இல்லை. மறுபடியும் பெண்டாட்டியை நினைக்கையில்கோபம். எதைச் சொன்னாலும் கேட்கக் கூடாது என்ற வீம்பு. எதைச் சொன்னாலும் மறுப்புதான் பிறகு தானே ஒத்துக் கொள்கிறாள். மறுபடியும் அவள் மேல் எரிச்சல் வந்தது. கைகளைப் பிசைகிறான்.

''என்னப்பா ஒரே டென்ஷனா இருக்கே. ஒண்ணும் ஆகாது. பயப்படாதே. சீக்கிரம் போயிடலாம்.''



''இல்லே...'' மாதவன் இழுக்க,

''ஒண்ணும் ஆகாது. வி வில் ஃபைண்ட் ஹர். பி.பிரேவ். தைரியமா இரு. நல்லதே நினைப்போம்.'' எம்.எல்.ஏவின் வீட்டிற்குப் போனபோது, எம்.எல்.ஏவே இவர்களுக்காக காத்துக் கொண்டிருந்தார்.

''என்ன சார் இதெல்லாம்?''

''தம்பி என்னாச்சு?''

''கமலத்தைப் பற்றி சுருக்கமாகச் சொல்லி விட்டு தன் மச்சினியைத் தூக்கிக்கொண்டு போனதைப் பற்றிச் சொல்கிறான்.

''இதெல்லாம் நிஜமாகவே எனக்குத் தெரியாது.'' பதறிப்போனார் அவர். பலமுறை தன் அடியாளோடு தொடர்பு கொள்ள முயற்சித்து, எல்லாம் தோல்வியில் முடிய என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறார். ஆளுக்கொரு பக்கம் அனுப்பி, கருணாவின் முன்னாள் கணவனைத் தேடச் சொல்கிறார். சிறிது நேரத்தில் செல்போன் ஒலிக்க, கருணாவின் மாஜி கணவன் போனில் வந்தான்.

'முதலாளி நீங்க கேட்டது ஒண்ணும் நடக்காது போலிருக்கு. அந்த பொம்பளை. அதான் மாஜி மாமியார் எதுக்குமே ஒத்துக்கலை. அதுக்குதான் ஒரு பிளான் வச்சிருக்கேன். உங்ககிட்டே கை நீட்டி காசு வாங்கிட்டேன் இல்லை, காரியத்தை முடிக்காம விடமாட்டேன்.

''எங்கிருந்துபேசறே?''

''உங்க கெஸ்ட் ஹவுஸ்லேர்ந்து பேசறேன். அவர் மேலே பேசும் முன்போனை வைத்து விட்டான்.

மாதவன் ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்க விரும்ப வில்லை. மாதவன், பலராம், எம்.எல்.ஏ எல்லோரும் உடனே கெஸ்ட் ஹவுஸுக்கு கிளம்பினார்கள். கெஸ்ட் ஹவுஸில்

''என்ன என் மாஜி பொண்டாட்டி எழுந்துட்டாளா?' அவங்க ரெண்டு பேரும் முழிச்சிட்டாங்களா இல்லியா?'' முதலாளியிடம் பேசிவிட்டு வந்தவன், ரெண்டு பேரும் படுத்திருந்த அறையை எட்டிப் பார்க்கிறான்.

கருணா அப்பொழுது தான் விழிப்பு வந்தவளாக கண்களை லேசாக கசக்கியவாறு எழுந்து அமர்ந்தாள். காவ்யா புரண்டு படுக்கிறாள். முதலில் சட்டென்று எதுவும் விளங்கவில்லை. அப்புறம் தன்னுடைய மாஜிக் கணவனைப் பார்த்ததும் சூழ்நிலை புரிந்தது. கண்கள் கலங்கத் தொடங்கின.

அழுகையோடு ஆத்திரம், கோபம், எரிச்சல் எல்லாமே வந்து எட்டிப்பார்க்க, பற்களைக் கடிக்கிறாள்.

''அட என்ன இது? என் பொண்டாட்டிக்கு இத்தனை கோபம்?''

''இத பாரு நான் உன் பொண்டாட்டி இல்லே. நமக்குள்ளே எல்லாம் முடிஞ்சு போச்சு. எதுக்கு எங்களை இந்த மாதிரி தூக்கிட்டு வந்திருக்கே. நாங்க உனக்கு என்ன கெடுதல்



செஞ்சோம். எங்கம்மா பாவம். அவங்களை அடிச்சு போட்டுட்டு எங்களை தூக்கிட்டு வந்து எதுக்காக இதெல்லாம் செய்யறே.''

''இத்தைப் பாருடா. நான் பண்றது அத்தனையும் ஒப்பிக்க முடியுமா என்ன? அன்னிக்கே நீ கெடச்சப்ப பொண்முட்டை இடற வாத்துன்னு நினைச்சேன். தப்பிச்சுகிட்டே இப்ப அக்காளும், தங்கச்சியும் தானா வந்து மாட்டிக்கிட்டீங்க. விட முடியுமா என்ன? உங்களை வச்சு எந்த ரேஞ்சுக்கு போறேன் பாரு.

''சீ.. நீ எல்லாம் ஒரு மனுஷன்.''

''பெண்டாட்டி தானே எதுவேணா பேசு..'' கேனத்தனமாக சிரித்தவாறே அப்பொழுதுதான் விழித்துக் கொண்ட காவ்யாவின் தோளில் கை வைக்க முயல, ஓவென்று அலறுகிறாள் காவ்யா.

''அட என்ன கண்ணு பயந்துட்டியா? இதெல்லாம் சும்மா. அப்பவே உன்னை பார்த்திருக்கேன். ஆனா அப்பவிட இப்பத்தான்ரொம்ப அழகா இருக்கே.'' சட்டென்று தாவி அவளின் தோளில் கை வைக்க முயல கருணா தடுக்க, கருணாவின் கன்னத்தில் ஓங்கி அறைகிறான். முகம் ஒரு பக்கம் சிவந்து போக, கண்களில் கண்ணீர் ரொம்பிப் போக, கருணா ஒருஅழுகையோடு அவனைத்திட்ட...

''ஏய் வாயை மூடுடி'' மறுபடியும் அவளைத் தூர தள்ளிவிட்டு காவ்யாவின் தோளில் கை வைக்கிறான்.

கன்னத்தைக் கிள்ளுகிறான். தலையைத் தடவிக் கொடுக்கிறான். "ஏய் விடு அவளை. யு ராஸ்கல்." கருணாவின் கத்தலும், காவ்யா அவன் கையைத் தட்டி விட்டு அலறுகிற அலறலும், அந்த வீட்டையே கிடுகிடுக்க வைக்க, அப்போது வாசற்படியில் வந்து நிற்கிற மாதவன், ஸ்தம்பிக்கிறான். "என்ன ஆயிருக்கும்?" அடுத்த நிமிடம் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து அவர்களை சுற்றிக் கொண்ட போது, அவர்களைக் கவனியாது காவ்யாவிடம் கொஞ்சுகிறான் கருணாவின் மாஜி கணவன்.

"த பாரு கண்ணு. உன்னை ஒண்ணும் செய்ய மாட்டேன். நான் சொல்றதைச் செய்யணும்." அவன் கையை அவள் முகத்தில் தடவ, அவனின் கையைத் தட்டியவாறே மறுபடியும் அலறுகிறாள் காவ்யா.

பார்த்துக் கொண்டிருந்த மாதவனுக்கு தாளவில்லை. பின்பக்கத்திலிருந்து கருணாவின் மாஜி கணவனின் தலை மயிரைக் கொத்தாகப் பிடித்து ஆட்ட, இப்போது அவனே அலறுகிறான்.

'இவனிடமிருந்து தப்பிக்க முடியுமா? நம்ம வாழ்க்கையே முடிஞ்சு போச்சு.' எண்ணி, கலங்கித் தவித்துக் கொண்டிருந்த காவ்யா, கணவனைப் பார்த்ததும் சற்று நிம்மதி பெருமூச்சு விட்டாள். கண்களில் நீர் வழிய,

"நீங்க சொன்ன பேச்சைக் கேட்கலை. ஐயம் ஸாரி.." அவள் முடிக்குமுன் கன்னத்தில் பலமாக அறை ஒன்று விழுந்தது. காவ்யா கன்னத்தைப் பிடித்தவாறே அதிர்ந்து



போனாள். மாதவன் ருத்ரமூர்த்தியாக நின்று கொண்டிருந்தான். பல்லைக் கடித்துக் கொண்டிருந்தான்.

'கிளம்பு' ஒற்றைச் சொல்லைத் தவிர வேறு வார்த்தைகளே எழவில்லை. கருணாவும், காவ்யாவும் வீடு வந்து சேர்ந்த போது மணி பதினொன்றுக்கு மேல் ஆனது. 'தன் பெண்கள் வந்து விடுவார்களா?' தவித்து, தவித்து தேய்ந்து கொண்டிருந்த கமலத்தின் இதயம், பெண்களைப் பார்த்ததும் தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

"நல்ல வேளை ஒண்ணும் நடக்கலே. கவலைப் படாதீங்க." எஸ்.பி. பலராம்தான் சொல்லிக் கொண்டிருந்தான்.

"நாங்க சரியான டைம்லே போயிட்டோம். சரி நீங்க வர்றீங்களா? உங்க வீட்டுலேயே விட்டுட்டு போறேன்." கருணாவை மாதவன் கூப்பிட,

"இல்லை.. நாளைக்கு வரேன்" சொல்லிவிட்டு கருணா கணவன் வீட்டிற்கு போன் செய்கிறாள்.

"நாங்க வரோம்." கமலத்தைப் பார்த்து சொல்லிவிட்டு காவ்யாவைப் பார்த்து கிளம்பு என்று சொல்வதற்குள் அவள் காரில் சென்று அமர்ந்திருக்கிறாள். அம்மா, அக்கா யாரிடமும் பேசக்கூட இல்லை. தன் வாழ்க்கையில் இப்படியெல்லாம் ஆகும் என்று தோன்றக் கூட இல்லையே. கணவன் 'வேண்டாம்' என்று அத்தனை தூரம் வலியுறுத்திச் சொல்லியும் தான் போனது தவறுதான். அவனுக்குத் தெரியாமல் போனது மாபெரும் குற்றம் தான். இன்னும் கொஞ்சநேரம் கழித்து என் கணவன் வந்திருந்தால் தன் கதி, அவன் அடித்ததில் கூட

அவளுக்கு வருத்தம் ஏற்படவில்லை. அந்தக் கோபத்தைப் பார்த்து உறைந்து போய் அமர்ந்திருந்தாள். எப்பேற்பட்ட ஆபத்தில் மாட்டிக் கொள்ள இருந்தோம். தன் அசட்டுத் தனத்தால், தான்தோன்றித்தனத்தால் என்னென்ன அனர்த்தங்கள் ஆகியிருக்கும். மறுபடியும், மறுபடியும் தான் செய்த செயலை நினைத்து வெட்கம் ஏற்பட்டது. அழுகை வந்தது.

கமலத்தின் நிலையை யூகித்தவள், மகளோடு பேசக்கூட முயலவில்லை. இன்னும் ஒரு நாள் போகட்டும். மெதுவாக போனில் பேசிக் கொள்ளலாம். மாதவன் காரைக் கிளப்பிக் கொண்டு வீட்டை அடைய, மௌனமாக இறங்கி வீட்டின் கதவைத் திறக்கிறாள் காவ்யா. வழியில் கூட இருவரும் பேசிக் கொள்ளவில்லை. மாதவனின் முகம் கல்லாக, உணர்ச்சியற்று இறுகிப் போய் இருந்தது. கோபத்தில் அடிக்கடி உதடுகளைக் கடிப்பது தெரிந்தது. சதா சிரித்துக் கொண்டு, கேலி செய்து கொண்டு இருக்கும் இவனா இப்படி ஆகிவிட்டான்? எல்லாம் தன்னால் தான். மனசாட்சி இடிக்க, மறுபடியும் காவ்யாவுக்கு கண்கள் குளமானது. அவசரம் அவசரமாக உள்ளே போகிறாள்.

தனக்கு இப்போது தான் பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. தன் கணவனும் மதியம் சாப்பிட்டதோடு ஒன்றும் சாப்பிட்டிருக்க மாட்டான் என்று தெரியும். அவசரம், அவசரமாக மைக்ரோ அவனில் பருப்பை வைத்துவிட்டு, சப்பாத்தி மாவைப் பிசைய ஆரம்பித்தாள். என்னதான், நடந்தது. நடந்து விட்டது என்று மனதை தேற்றிக் கொண்டாலும், தான் தவறுசெய்தவள் என்ற உணர்வு



மனதைக் குத்த, கண்கள் ரொம்பி, ரொம்பி வழிந்தது. புறங்கையால் கண்ணீரைத் துடைத்தவாறே, அவசரம் அவசரமாக சப்பாத்தியை இடுகிறாள். இப்போது மட்டும் தன் கணவன் பழையபடி இருந்தால் இவள் கண்கள் கலங்க விட்டிருப்பானா? அவனுடைய நெஞ்சில் புதைந்து கொண்டு அழ மாட்டோமா என்று இருந்தது அவளுக்கு. பாவம் தன் கணவன். காலையில் சாப்பிட்டதோடு சரி. இத்தனை நேரம் வயிற்றை வேறு காயப்போட்டு விட்டு, என்னால் பாரமான மனதோடு வளைய வளைய வந்திருக்கிறான். அவசரம் அவசரமாகச் சப்பாத்தியை செய்து அடுப்பில் சுட்டு, பருப்போடு பச்சை வெங்காயம், தக்காளி, கேரட் எல்லாவற்றையும் மெல்லியதாக நறுக்கி சப்பாத்தியின் பக்கத்தில் வைத்து அலங்கரித்து இரண்டு பச்சை மிளகாய்களை நீளவாக்கில் நறுக்கிவைத்து டைனிங் டேபிளில் வைத்து விட்டு எட்டிப் பார்த்த போது, அவன் படுக்கை அறையில் கைகளால் கண்களை மறைத்தவாறே படுத்திருப்பது தெரிந்தது. ஒரு நிமிடம் என்ன செய்வதென்று தெரியாமல் அங்கேயே நிற்கிறாள். பின் மெதுவாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு உள்ளே நுழைகிறாள்.

"மாதவ்.. டிபன்?" அவனிடம் அசைவே இல்லை. அவன் கோபம் தீரவில்லை. அவள் செய்த தப்பு சாதாரணமானதா என்ன? எத்தனை எச்சரிக்கை செய்தான். எல்லாவற்றையும் அலட்சியப்படுத்தி விட்டல்லவா சென்றாள்.

"ஸாரி மாதவ்.." அந்த பதிலுக்கும் எந்த அசைவும் இல்லை.

''ப்ளீஸ்.. காலையில சாப்பிட்டது தான் வந்து சாப்பிடுங்க ப்ளீஸ்...'' அதற்கும் எந்த அசைவும் இல்லை. மெதுவாக 'மாதவ்' என்று பக்கத்தில் வந்து லேசாகத் தொட்ட போது விருட்டென்று எழுந்து. அங்கிருந்து நகர்ந்து வாசல் கதவைத்திறந்து வெளியே சென்று விட்டான்.

மறுபடியும் அழுகை தான். தான் மட்டும் அவன் சொன்ன பேச்சைக்கேட்டிருந்தால் அவனுக்கு இத்தனை கோபம் வந்திருக்குமா என்ன. அதைநினைக்க நினைக்க நெஞ்சே திக்கென்றது. கருணாவின் முன்னாள் கணவனிடமிருந்து தப்பியதே பெரும் பாக்கியம் தான். தான் செய்தது பெரும் தவறு. தனக்கு இந்தத் தண்டனை கட்டாயம் தேவை தான். கணவன் பட்டினியோடு இருக்கும் போது தனக்குமட்டும் எப்படி சாப்பிடத்தோன்றும். நான் செய்த காரியத்தினால் அல்லவா பட்டினி கிடக்க நேரிட்டது. மனம் ஊமை அழுகை அழுதது.

வாசல் கதவைக் கூட பூட்ட மறந்து. அப்படியே ஒரு மூலையாகச் சாய்ந்து கவிழ்ந்து கொள்கிறாள்.தான் செய்த தவறு பூதாகரமாகத் தோன்ற, பசி கூட அவளுக்கு மறந்துபோனது. ஒரு வேளை கணவன் தன்னை தப்பாக நினைத்து விட்டானா? நினைக்க நினைக்க நெஞ்சே ஆறவில்லை. அவன் தன்னை தவறாக நினைத்துப் பார்க்கிறான் என்றதுமே உடலே கூசியது. ஏனோ அங்கிருக்கக் கூட கஷ்டமாகத் தோன்ற மறுபடியும் எழுந்து போய் சமையல் அறையின் ஒரு மூலையில் சுருண்டு கொள்கிறாள்.



மறுநாள் எழுந்திருக்கும் போதே மணியெட்டு அடித்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுகிறாள். 'ஐயோ' மாதவ்வித்கு டிபன் பண்ணனுமே.. நேரமாகி விட்டதே. ''அவசரம் அவசரமாக எழுந்து பல்லைத் தேய்த்து விட்டு எட்டிப் பார்த்தால் மாதவ் இன்னும் படுக்கையில் தூங்கிக் கொண்டு இருப்பது தெரிந்தது. விறுவிறுவென்று வந்தவள் கெய்ஸரைப் போட்டு விட்டு. பாலைக் காய்ச்சி டிகாஷன்போட்டு. டிபன் ரெடி செய்து அவன் எழுந்து விட்டானா என்றுபார்க்க வரும்போது அவன் குளித்து விட்டு வேறு பேண்ட். ஷர்ட் அணிந்தவாறே வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான்.

''மாதவ்...'' கூப்பிடும் ஒலி தனக்கே கேட்காதது போல் வாயினுள்ளேயே முணுமுணுத்துக் கொண்டாள்.

''ப்ளீஸ் காபி சாப்பிட்டுப் போங்க..'' அதற்குள் அவன் வெளியே போய் பைக்கை உதைத்துக் கொண்டு கிளம்புவது தெரிந்தது.

எத்தனை கலகலப்பானவன். கிளம்புவதற்குள் தன்னை ஒரு வழி பண்ணிவிடும் ரகம். குளிக்கும் போதே பத்து தடவை கூப்பிட்டு வருவான்.

''சோப்பை கொண்டா. முதுகைத் தேய். டவலை எடு. என் டிரஸ்ஸை எடு.'' இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பான்.

''என்ன மாதவ் இது? சின்னக் குழந்தை மாதிரி எல்லாம் நீங்களே எடுத்து வச்சுக்கக் கூடாது? நாம கிளம்பறதுக்குள்ளே டிபன் செய்யணும். லஞ்ச் வேற ரெடி பண்ணணும். கூட வந்து

ஹெல்ப் பண்ணாலும் பரவாயில்லை. அங்க உங்காந்துக்கிட்டு ஒட்டை அதிகாரம் பண்றீங்க.''

''ஆமா பொல்லாத லஞ்ச். ஒரு கர்ட் ரைஸ். ஊறுகாய்.''

''ஆங். இப்ப டிபன் எல்லாம் சாப்பிடறீங்களே. அதெல்லாம் யார் செய்யறதாம். நானும் தானே வேலைக்கு வரேன். ஒருத்தரே எத்தனை நேரம் செய்ய முடியும்?''

''ம்.. காலையில சீக்கிரம் எழுந்திருக்கிறது.எங்கம்மா நாலு மணிக்கு மேலே படுக்கையிலே இருந்ததில்லே..''

''நானா. என்னால தான் இந்த அளவு ஆக்டிவ் ஆகவாவது இருக்கே. இல்லேன்னா லீக்கா தான் இருப்பே..'' சொல்லிவிட்டு திரும்புகிறவளின் மீது தலைகாணி எடுத்து வீசிக் கொண்டு இருக்கிறான். அவள் சிரித்துக் கொண்டே வெளியே ஓடியிருக்கிறாள். இன்று.. இனி மேல் இந்த மாதிரியெல்லாம் சீண்டி விளையாட மாட்டானா? நினைக்கும் போதே கண்கள் ரொம்பியது. தன் மேல்கோபம் இருக்கட்டும். அதைசாப்பாட்டின் மேல் காண்பிப்பானேன். காபியைக் கூடச் சாப்பிடாமல்கிளம்பி விட்டானே. காலையில் எழுந்து பல் தேய்த்ததும், சூடான காபி இருக்க வேண்டும் அவனுக்கு. சட்டென்று மறுபடியும் அழுகை வந்தது.

தன்னைக் கூப்பிடக் கூட இல்லையே. இனி மேல் தான் அலுவலகம் வரக் கூடாது என்று தன்னை கூப்பிடவில்லையா? தான் வேலைக்குப்போக வேண்டாம் என்று நினைக்கிறானா? இனி அவனுக்குப் பிடிக்காததை எதுவுமே தான் செய்யப் போவதில்லை.



அவனாகச் சொல்லும் வரை இந்த வீட்டின் வாசற்படியைக் கூடத் தாண்டப் போவதில்லை. இரவு சாப்பிடாதது. அழுதது. கணவனின் பாராமுகத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி எல்லாம் சேர்ந்து தலையை விண் விண் என்று வலிக்க, தான் போட்ட காபியை மட்டும் கலந்து பருகிவிட்டு மறுபடியும் அப்படியே படுத்து விட்டாள். குளிக்கும் போது கூட தன்னை ஒரு வார்த்தை கூட கூப்பிடவில்லையே. தான் வேலைக்கு போக வேண்டாம் என்று நினைக்கிறானா? தன் முகத்தைக் கூடப் பார்க்க மறுத்து அல்லவா போய்க் கொண்டு இருக்கிறான். தான் அங்கிருந்து வந்ததிலிருந்து அவன் தன்னை தவிர்க்கிறான் என்று தெரிந்தது. மனம் ஊமை அழுகை அழுதது. தன்னை அவன் கவனிக்கவில்லை யென்றாலும் பரவாயில்லை. அவன் வழக்கம் போல் சாப்பிட்டு விட்டுபோகக் கூடாதா?'' அதையுமல்லவா மறுத்துக் கொண்டு இருக்கிறான். பித்து பிடித்தாற் போன்று இருந்தது. எதையும் சாப்பிடத்தோன்றாத நிலை. மனது வெறுத்துப் போன நிலை.

அவனுடைய சிரித்த பேச்சும், சீண்டல் இல்லாமல் தன்னால் இருக்க முடியுமா? திருமணம் ஆகி இத்தனை நாட்கள் ஆகி இப்போது தான் இந்த முகத்தைப் பார்க்கிறாள். அவளைப் பார்க்கையிலே கன்னத்தில் பக்க வாட்டு சதைகள் இறுக, வாய் லேசாக அசைய உதடுகளைக் கடித்துக் கொள்கிறான். அவன் போன போக்கில் தான் போகவேண்டும். அவன் என்ன திட்டினாலும் பரவாயில்லை. அடித்தால் கூட பரவாயில்லை. அவளின் பழைய மாதவ்வாகிவிட்டால் போதும். இனி ஒரு முறை அவளால் இந்தத் தப்பு நடக்காது ஏதோ யோசனையில் எங்கோ பார்த்தவாறே அமர்ந்திருக் கிறாள்.

## 17

மாதவனுக்கு ஒரு பக்கம் நிம்மதி என்றாலும், இன்னொரு பக்கம் ஆத்திரம், கோபம், எரிச்சல் அவளைக் காப்பாற்றி விட்டோமே என்ற நிம்மதி. அதே சமயம் தான் அத்தனை தூரம் சொல்லியும் வேண்டுமென்றே போய் சிக்கலில் மாட்டிக் கொள்ள இருந்தாளே' என்ற ஆத்திரம் கோபம். அவளை கருணாவின் முதல் கணவனின் பிடியில் பார்த்த போது ஆத்திரம் தாளாமல் அறைந்தே விட்டான். மறுபடியும் மறுமுறை பார்த்தால் ஏதேனும் செய்து விடுவாளோ' இதனால் தான் கூடுமானவரை அவளைத் தவிர்க்க முயற்சி செய்தான்.

பயங்கரமானஇடத்தில் மாட்டிக் கொண்டு, வீட்டிற்கு வந்ததும், கணவனுக்கு என்று மாய்ந்து, மாய்ந்து டிபன், சாப்பாடு என்று செய்தது மனதை உறுத்தியது. அவன் அருகில் நின்று மௌனமாகக் கூப்பிட்டு கையில் லேசாகத் தட்டி எழுப்ப, கோபமும் நெகிழ்ச்சியும் மாறி மாறி தாக்க நிற்க முடியாமல் தான் வெளியே போனது. ஒரு பக்கம் பாரமாகத் தோன்றினாலும், மனைவிக்குப் புரிய வேண்டும் என்று தோன்றியது. எது செய்ய வேண்டும்? எது செய்யக் கூடாது என்பது தெரிய வேண்டும்.

காதலித்து கை பிடித்தவன் தான், விடாது விரட்டி விரட்டி காதலித்தவன் தான்-அதற்காக எது வேண்டுமானாலும் செய்து விடுவார்களா என்ன? அங்கே ஆபத்து இருக்கும் என்று நன்றாகத் தெரிந்திருந்தும், எச்சரித்தும் அலட்சியப்படுத்தி விட்டு போனால் என்ன அர்த்தம்? ஒரு வேளை தங்களால்



நேரத்துக்கு போக முடியாது என்று இருந்தால் என்ன ஆகி இருக்கும். நினைக்க நினைக்க நெஞ்சு லேசாக உதறல் எடுக்க, சட்டென்று தலையை ஆட்டிக் கொண்டான்.

அடுத்த இரண்டு நாளும் வீட்டில் சாப்பிடவில்லை. பெண்டாட்டியை வேலைக்கு வா என்று ஆபீசுக்குக் கூப்பிடவும் இல்லை. எதேச்சையாக ஒருமுறை பார்த்தபோது காவ்யா முகமெல்லாம் சிவந்து கண்கள் இடுங்கிப்போய் சுவரோடு சுவராக ஒட்டிக் கொண்டு அமர்ந்திருப்பதைப் பார்த்தான்.

அன்றும், கம்பெனியில் சரியான வேலை. பேக்டரி லைட்டுக்கு வேற போக வேண்டும். அவன் வேலையில் ஆழ்ந்த போதே, வீடு பொண்டாட்டி சண்டை எல்லாமே மறந்து போனது. இரண்டு நாட்கள் கழித்து கமலத்திடம் இருந்து போன் வேறு வந்தது.

''எப்படி இருக்கீங்க? காவ்யா எப்படி இருக்கா? சாயந்திரம் எப்ப திரும்பறா? காலையில் போன் பண்ணா பெல் அடிக்கறது. ஆனா யாரும் போன் எடுக்கிறதில்லை. ராத்திரி அடிச்சாலும் யாரும்எடுக்கிறதில்லே.''

மாமியாருக்கு என்ன பதில் சொல்வது?

''போனா? ஐயம் சாரி.. ரெண்டு நாளா அவுட் ஆப் ஆர்டர். எழுதிவச்சிட்டு வந்திருக்கேன். இனிமே தான் சரி பண்ணணும்'' என்றவன்...

''உங்க நில விஷயமா என் ப்ரண்ட் ஒருத்தன் கிட்டே பேசினேன். நாளைக்கு முக்கால் வாசி ரிசல்ட் தெரியும். நிலமும்

நீங்க இருக்கிற ஏரியாவுக்குரொம்ப பக்கத்தில்தான்.'' சொல்ல சொல்ல கமலத்தின் மனதில் சந்தோஷம் வந்து விட்டது. 'பாவம் தன் மாப்பிள்ளை, எத்தனையே இக்கட்டுல கூட இதை ஞாபகம் வச்சகிட்டு செய்திருக்கிறார். மனசு சந்தோஷப் பட்டது. காவ்யாவுக்கும் மாப்பிள்ளைக்கும்எல்லாம் சரியாய் போயிருக்கணும். அவங்க பிரச்சினையே பெரிசா இருந்தா என்னத்தை எப்படி கவனிக்க முடியும்?

''ரொம்பதேங்க்ஸ் மாப்பிள்ளை.''

''நோ மென்ஷன் ப்ளீஸ்'' என்றவன், மறுபடியும் நண்பனுக்கு போன் செய்து, நிலத்தை தருவதற்கான உறுதி செய்து கொண்ட பின் ஒரு நிம்மதி பெருமூச்சு விட்டான்.

அன்று வேலை சற்று சீக்கிரம் முடிய கிளம்பியவன் நண்பனைப் பார்த்துவிட்டு கருணாவின் வீட்டின் வழியாக வந்தவன் அவளைப் பார்த்துவிட்டு வரலாம் என்று பார்க்க போனான். உள்ளே ரணகளமாகிக் கொண்டிருந்தது.

''த.. பாருடீ ஏதோ கெட்டுப் போனாலும் எம் பையன் சொன்னான்னு தான் உன்னை என் மருமகளா ஏத்துக்கிட்டேன். அதுக்கு நீ செய்யற உபகாரம் இது தானா? பாவமாச்சேன்னு பார்த்தேன் பாரு.''

''இத பாருங்க நீங்க வாய்க்கு வந்தபடி போனவன்னு சொல்ல வேண்டிய அவசியமே இல்லை..''

''என்னடி வாய் நீளுது..''



''யாருக்கு வாய் நீளுது?''

''என்ன சொன்னே? உங்க குடும்பம் மாதிரி நினைச்சிகிட்டியா என்னை?''

''என்ன எங்க குடும்பத்துக்கு?''

''தெரியாதா உங்க அம்மா விஷயம் எத்தனை தூரம் போய் சிரிப்பா சிரிச்சது. உன் தங்கச்சி புருஷன் வரலைன்னா உன் கதி என்ன?'' மாமியார் சரமாரியான கேள்விகளுடன் வெடிக்க,

''அதுக்கு யாரு காரணம். நீங்க தேவையில்லாம உங்க பிள்ளையைக் கிளறி விட்டு, எங்கம்மா விஷயத்துல மூக்கை நுழைச்சு என்னைக் கிளப்பிவிட்டு இத்தனையும் செய்ய லேன்னா எதுவும் நடந்திருக்காது.''

''ஓ... அப்ப நான் தான் எல்லாத்துக்கும் காரணம்ங் கிறியா?''

''சந்தேகமில்லாமல். வயசானா வெட்டியா உட்காரணுமா என்ன? அன் ஐடியல் மைண்ட் ஈஸ் எ டெவில்ஸ் வொர்க்ஷாப் கேள்விபட்டதில்லே. கொட்டு கொட்டுன்னு வெறுமனே உட்கார்ந்துகிட்டு இருந்தா புத்திகோணலாத் தான் போகும்.''

சட்டென்று கருணாவின் மாமியார்உடைந்து அழுகிறாள். ''டேய் கணேசு பார்த்தியா. இந்தப் பொண்ணு என்ன பேசுசு பேசறா பாரு. இதுக்காகவா நான் கல்யாணத்தைப் பண்ணி வச்சேன்.

கருணாவின் கணவன் ஓடி வருகிறான். கருணாவை உற்றுப் பார்க்கிறான். கருணா கணவனை லட்சியம் செய்யாமல் பார்வையை எங்கோ ஓட்டுகிறாள். தலைக்கு மேல் வெள்ளம் போயாகி விட்டது. இனிமேல் சாணுக்கும் முழத்துக்குமா கவலைப்படுவார்கள்.

"என்ன இதெல்லாம்?"

"எது"

"என்னடி திமிரா.. எங்கம்மாவை ஏன் அழவிட்டே" ஒரு நிமிடம் கணவனையே தீர்க்கமாகப் பார்த்தவள், "அவங்க என்னை அழவிட முயற்சி பண்ணலாமா?"

"பெரியவங்க, சின்னவங்கன்ற மரியாதை உனக்குத் தெரியாதா? இப்படித்தான் பேசவியா?" பேச்சு தடித்தது. ஒன்றுபோட்டு ஒன்று பேச இறுதியில் கணவன் கருணாவை பளிச்சென்று கன்னத்தில் அறைந்தான். கருணா பிழியப் பிழிய அழ ஆரம்பித்தாள். "த பாரு எங்கம்மாவை மதிக்காத இந்த வீட்டுலே நீ இருக்க வேண்டாம். கௌம்பு. கௌம்பு.." துரத்துகிறான். கருணாவிற்கு மேலும் அழுகை வந்தது.

அவன் பிடித்துத் தள்ள, அந்த நேரம் பார்த்து கருணா எப்படி இருக்கிறாள் என்று பார்க்க வந்த மாதவனின் கால்களில் போய் விழுகிறாள் கருணா. பதைத்துப் போய் தூக்குகிறான்.

"என்னம்மா இது?" கணவன் பிடித்துத் தள்ளியதில் ஏற்பட்ட அவமானம், காவ்யாவின் கணவனின் கால்களில்



விழுந்த அவமானம் எல்லாம்சேர்ந்து கண்களில் நீரை வரவழைக்க கண்ணீரை வேகமாக துடைத்தவாறே எழுந்திருக்கிறாள். மாதவனின் நிலைமை தான் தர்மசங்கடமாக இருந்தது. காலில் விழுந்தவளை தூக்கி விட கண்ணீரை துடைத்தபடி அவள் எழுந்திருக்க அவள் கணவன் வந்துஅவர்கள் இருவரையும் பார்க்கிறான். ஏற்கனவே மனைவியின் மேல் கடுப்பாக இருப்பவன், தங்கள் இருவரையும் ஒன்றாகப் பார்த்தால் வேற ஏதேனும் தப்பாக நினைத்துக் கொண்டால் ஒரே ஒரு நிமிடம் தயங்கி நிற்கிறான் அவனிடம் என்ன பேசுவது. அடுத்த நிமிடம் எம்.பி.ஏ மூளை நன்றாகவே வேலை செய்தது.

"கணேஷ் என்னப்பா? ஏதாவும் கேம் ஆ?" சிரித்தபடி அவனிடம் சொல்கிறான்.

"ஓ... கேலி பண்றியா?"

"ஏய். டேக் இட் ஈஸி என்னாச்சு..." கணேஷ் மெதுவாக திரும்பிப் பெருமூச்சு விடுகிறான்.

"பெரியவங்க சின்னவங்க மரியாதையே இவளுக்குக் கிடையாது."

"என்ன மரியாதை இல்லாம நடந்துகிட்டேன். எங்கம்மா ஏதேனும் செய்து விட்டு போறாங்க. அவங்க விஷயத்துல தலையிட்டு என்னைத் துரத்தினது யாரு? நீங்க அனுப்பாம இருந்தா நான் மாட்டியே இருக்கமாட்டேன். வீட்டுலே இருக்கிறவங்களை அனாவசியமா சண்டை போட்டு அனுப்பினது உங்க அம்மா. அதுக்கு பக்கபலமாக இருந்தது

நீங்க. உங்க அம்மா சொல்லும் போதே முடியாதுன்னு சொல்லி இருந்தா இப்ப இந்த அவஸ்தை யாருக்குமே இருக்காது.

''ஓ.. எங்கம்மாவைக் குறை சொல்றியா? இது எல்லாமே நீ செஞ்சது. நாங்க சொன்னபோதே அம்மாவை அழைச்சிட்டு வந்திருந்தா இத்தனை இடர்பாடு இல்லை. 'ஆட்டைக் கடிச்சி, மாட்டைக் கடிச்சி, மனுஷனைக் கடிக்கிற கதைதான்..''

அவன் சொல்ல, சொல்ல இன்னும் அதிகமாகக் கத்துகிறாள்.

''கணேஷ் போதும் - மேலும் புண்படுத்தற மாதிரி பேசாதீங்க.''

''என்ன பேசிட்டேன். ''அவன் முறைத்துக் கொண்டு அவன் முன்னே நிற்க, மாதவனின் நிலை தான் தர்மசங்கடமாக இருந்தது. இவனுக்கு என்ன சொல்லி புரியவைப்பது? என்னதான் மாமியாராக இருந்தாலும் அவரவருக்கு தனித்தனி விருப்பங்கள் இருக்கக் கூடாதா? என்ன மனித இனம் இது? தனக்கு கீழே இருப்பவர் என்று தெரிந்தால் போதும் நசுக்கப் பேயாய் மனம் அலைகிறதே. இத்தனைக்கும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவன் தானே. ஏன் இப்படி நடந்து கொள்கிறான். மனம் சட்டென்று தன்னை இடித்தது. தானும் காதலித்து திருமணம் செய்து கொண்டவன் தானே. தான் மட்டும் சரியாக நடந்து கொண்டோமா என்ன? மனைவி தவறு செய்து விட்டால் என்ன? அதற்காக பலரும் பார்க்க அவளை அடிக்கவில்லையா? மனிதர்கள் எல்லோருமே சுயநலம் பிடித்தவர்கள் தான். என்ன தான்மனைவி செய்தது தவறு என்று



தோன்றினாலும் அவளின் மேல் கோபம் மட்டும் குறையவில்லை. அவள் இப்படி நடந்து கொண்டு இருக்கலாமா? திரும்பி திரும்பி மனம் கேட்டது. போகிறது மன்னிக்கலாம் என்றாலும் மனம் மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது.

பெருமூச்சு விட்டவன் முதலில் கணேஷ் விஷயத்தை சரிசெய்ய வேண்டும் கருணாவிடம் பேசாமல் இருக்குமாறு சைகை செய்தான். பிறகு மெதுவாக கணேஷிடம் பேச்சுக் கொடுத்தான். கணேஷ் இவன் பேச்சுக்களைக் காது கொடுத்துக் கேட்கவே இல்லை.'

''ஓ.கே கணேஷ் நான் கிளம்பறேன்.. ''விடைபெற்றவாறே புறப்பட்டான்' இவர்கள் விஷயத்தில் தான் என்ன செய்ய முடியும். மனம் அதிலேயே உழன்றது. காவ்யாவின் அம்மாவைப் பார்த்தால் என்ன? உழைப்பாளி மட்டுமல்ல நல்ல அனுபவசாலி. அவள் முடிவு எப்போதுமே சரியாக இருக்கும். அவளுடைய பெண்ணின் வாழ்க்கை வேறு. கட்டாயம் இந்தவிஷயத்தைக் காதில் போட்டுத் தான் ஆகணும்.

அன்று வேலைமுடியவே வெகுநேரம் ஆகிவிட்டது. இரவு அப்படியே காவ்யாவின் அம்மாவைப் பார்க்க புறப்பட்டுப் போனான். வீட்டிற்குப் போனதுமே காவ்யாவின் தாய் வரவேற்றாள். ''வாங்க காவ்யா எப்படி இருக்கா?'' ம்.. என்று தலையை ஆட்டியவன், ''உங்க டாக்குமெண்ட்ஸ் இன்னும் ஒரு வாரத்துலே வந்துடும். இப்பவே கன்ஸ்ட்ரக்ஷன் எல்லாம் ஆரம்பிச்சாதான் இன்னும் இரண்டு மாசத்துலே நீங்க

ஷிப்ட் பண்ண முடியும்'' ரொம்ப தேங்க்ஸ். இந்தப் பிரச்சினையாலே மனசு ரொம்ப கொழம்பிப் போயிருந்தேன். இவங்களுக்கு ஒரு நல்லது நடக்கும்னு நெனைச்சு தான் எம்.எல்.ஏ கிட்டே போய் மாட்டிக்கிட்டது. என் பொண்ணுகளுக்கும் அனாவசியமா மாட்டக் காரணமா இருந்துட்டேன். நான் கொஞ்சம் எச்சரிக்கையா இருந்திருக்கலாம். மொதல்லயே உங்ககிட்டே வந்து கேட்டிருக்கலாம்.''

''நடந்து முடிந்த பிரச்சினையைப் பத்தி இப்ப என்ன? உங்ககிட்டே ஒரு புது விஷயத்தைப் பத்தி சொல்லப்போறேன். எப்படி எடுத்துப்பீங்களோ தெரியாது. ஆனா இதுக்கு ஒரு நல்ல முடிவு எடுப்பீங்கன்னு நம்பிக்கையில தான் சொல்றேன். இரத்தின சுருக்கமாக கருணாவின் வீட்டில் தான் பார்த்தது, கருணாவிற்கும் அவள் கணவனுக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் பற்றி மெதுவாக அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூற, வெறுத்துப் பார்க்கிறாள் கமலம் தான் கேட்பது என்ன. தன் பிள்ளைகள் சந்தோஷமாக இல்லையா? காதல், திருமணம், கருத்தொருமித்துவிட்டது என்று நினைத்ததெல்லாம் பொய்யா?'' திருமணம் ஆனபின் அந்தக் காதல்கூட பொய்யாகவா போய்விட்டது.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு தன் பிரச்சினையில் இவர்களே ஏன் மூக்கை நுழைக்கிறார்கள்?'' தன்னைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றிவிட்ட பிறகு தான் நீதிபதி ஸ்தானத்தில் நின்று எப்படிபேச முடியும்? மனம் வேதனையில் நிரம்ப, கண்களில் குபுக்கென்று கண்ணீர் பாய ஒரு நிமிடத்தில் சறுசறுவென்று மேட்டிலிருந்து கீழே பாயும் நதிபோல் கண்ணீர்



கீழே கொட்டியது.

''ஐயோ நீங்க ஏன் அழறீங்க? ஐ ஆம் ஸாரி. ஒண்ணும் ஆகாது. பிரச்சினையை பெரிசு பண்ணறீங்க. இந்த இஷ்யூவை எப்படி ஸால்வ் பண்றதுன்னு எனக்குத் தெரியலை. அதனால் தான் உங்ககிட்ட சொல்லும்படி ஆச்சு. ஐயம் ஸாரி..'' கமலம் பெருமூச்சு விடுகிறான்.

''நீங்க சொன்னதுலே என்ன தப்பு இருக்கு? நீங்க சொல்லலேன்னா பொண்ணு ரொம்ப நல்லா வாழறான்னு தானே தப்பா நெனைச்சிகிட்டு இருப்பேன்.'' மெல்லிய பெருமூச்சு விட்டவள்.

''இல்லை என் பொண்ணை கஷ்டப்பட விடமாட்டேன். நானே அவங்களைப் பார்த்து பேசறேன்.'' மனதிற்குள் ஏதோ யோசித்தவாறு இருக்க, மாதவன் விடை பெறுகிறான்.

''காவ்யாவை ஒரு தடவையாவது அழைச்சுகிட்டு வாங்க. அன்னைக்கு போனவதான் அப்புறம் வீட்டுப்பக்கமே வரலை. போனும் பண்ணலை. பண்ணச் சொல்லுங்க.''

''ம்..'' என்று தலையை ஆட்டியவன், பாரம் தீர்ந்த மகிழ்ச்சியில் மெல்லிய ஸீட்டி ஒலியோடு வண்டியை செலுத்தினான். வீட்டினுள் காலடி வைக்கும் போது தான் தவறு புரிந்தது. கடந்த நான்கு நாட்களாகவே வீட்டில் ஒன்றும் சாப்பிடுவதில்லை. பெண்டாட்டியிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. இரவு வெகு நேரம் கழித்து தான் திரும்புகிறான். அலுவலகம் போய்க் கொண்டிருந்தவளை மறுபடியும் அனுப்பியபாடில்லை. இன்று கருணா விஷயத்தில்

மூக்கை நுழைத்து ஆபீஸ் வேலை முடிந்து மாமியார் வீட்டோடு ஐக்கியம் ஆகியாகிவிட்டது. பெண்டாட்டியிடம்தான் எங்கே இருக்கிறேன் என்று கூடச் சொல்லவில்லை. கட்டாயம் காவ்யா துடித்துக்கொண்டிருப்பாள்.

அழைப்பு மணி அழுத்தியதுமே ஓடோடி வந்து திறக்கிறாள் காவ்யா. நன்றாக மெலிந்து போன தேகம், ஒட்டிப் போன கன்னங்கள், சூனியத்தை வெறித்தபார்வை, அழுது அழுது இரத்த சிவப்பான கண்கள், அழுதழுது உப்பிப் போன முகம், நன்றாக வாடிச்சுண்டிப்போன முகம், பெரிய சோகத்தில் அடிப்பட்டது போல், கப்பல் கவிழ்ந்தது போல், விலை மதிக்க முடியாத நிதியைத் தொலைத்தது போல் ஒரு நிமிடம் மனது பொண்டாட்டிக்காக அனுதாபப்பட்டது. ரீங்காரமிட்டது. ஆனால்பொண்டாட்டியைப் பார்த்ததுமே எங்கிருந்தோ வந்த வேதாளம் முருங்கை மரம் ஏறின கதையாய் மீண்டும் எரிச்சல் வந்தது.

''கணவன் சாப்பிட்டானா? இல்லையா தெரியவில்லையே.''

''சாப்பாடுபோடு'' கேட்கமாட்டானா? என்று ஏக்கத்தோடு அவன் முகத்தையே நோக்குகிறாள்.

ஆனால் அவனோ தன்னை சமாளித்தபடி அவளைக் கவனியாதவன் போல் உள்ளே நுழைந்து மிடுக்காகச் சென்றுதன் படுக்கை அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொள்கிறான். ஒரு நிமிடம் ஜன்னல்வழியாக எட்டிப் பார்த்தவன், பெண்டாட்டி மடிந்து கீழே படுத்திருப்பதைப் பார்க்கிறான். முதலில் பாவமாக இருந்தாலும் மனது ஏனோ



அவன் செயலுக்குஇசையவில்லை. உள்ளே நுழைந்து ஆடைகளைக் களைந்து வேறு மாட்டிக் கொள்கிறான். லைட்டை அணைத்து விட்டு படுத்துவிட்டான்.

காவ்யாவின் நிலைமை இன்னும் பாவமான ஒன்று தான். கணவனின் கோபம் ஆறிவிடும் என்று எதிர்பார்த்தவளுக்கு, நான்கு நாட்கள் சென்ற பிறகு கூட அவனின் கோபம் இன்னும் புதியதாக இருப்பதைப் பார்க்க முடிகிறது.

''நான் செய்தது ஒரு பெரிய தவறுதான். கொஞ்சம் தாமதமாக மாதவன் வந்திருந்தாலும் என் வாழ்க்கை என்ன வாகியிருக்கும். இன்னும் எத்தனை வேண்டு மென்றாலும் என் மனதை ஒடிக்கட்டும்.

துண்டு துண்டாக ஆக்கட்டும்' பெருமூச்சு விடுகிறாள்.

தன் நிலைமை அவனுக்குப்புரியாது. இந்த சுயவேள்வி அவசியம் தான். கவலை, வேதனை என்ற தீயில் தான் சாம்பலாக வேண்டியது அவசியம் தான். மனம் வேதனைப் பட்டது. மௌனப் பெருமூச்சு விட்டவாறே வாயிற் கதவை பூட்டுகிறாள்.

சமையலாறையில் சென்று காலை சுருக்கிக் கொண்டு படுக்கிறாள். ஏதோ ஒரு வேளை சாப்பாடு காபியோ, டீயோ, அந்த அந்த வேளைக்கு குடிப்பதோடு சரி.. மற்றபடி சமையல் ஞாபகமே இருப்பதில்லை.

இரவு நேரங்களில் மட்டும் அவனுக்குப் பிடித்த சப்பாத்தியும் சப்ஜியையும் செய்து வைத்து விட்டு காத்துக்

கிடப்பான். அவன் கடந்த சில நாட்களாகவே வெகுநேரம் கழித்து தான் வருகிறான். வரும்போதே படுக்கை அறைக்கு சென்று விடுவான்.பிறகு காலையில் வெகு சீக்கிரம்எழுந்து கடகடவென்று குளித்துவிட்டு உடை மாற்றிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் கிளம்பியே போய் விடுவான். முதலில் கொஞ்ச நாட்கள் காபியை டேபிளில் வைத்திருக்கிறாள். பின் அவன் அதைத் தொடக் கூட இல்லை என்று தெரிந்து அவன் புறப்படுமுன் அவனுக்கு முன்பே நீட்டியிருக்கிறாள். ஆனால் அவன் அதனையும் தவிர்த்து விடுவதை நினைந்து நினைந்து அழுது இருக்கிறாள். பல சமயங்களில் மனம் மருகி, மருகி அழுதிருக்கிறாள். இப்படி உப்பு சப்பில்லாத - என்ன வாழ்க்கை இது? விட்டு விட்டு போய் விடலாமா? முடியுமா? அவனுக்குத் தன்னை பிடிக்கவில்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. தவறு செய்து விட்டாள் தான் இருந்தும் எத்தனை நாட்கள் இந்தத் தண்டனை? சில நாட்கள் மனம் ஊமை அழுகை அழுது இந்தக் கேள்வியைக் கேட்டாலும், மனத்தின் இன்னொருபுறம் இந்தத் தண்டனை தேவை தான் என்று மனம் வாதாடும். மனம் வேதனைப்பட்டு வேதனைப்பட்டு 'என்ன நரக வாழ்க்கை இது?' அவன் தன்னை மன்னிக்க மாட்டானா? மனம் மறுபடியும் மறுபடியும் அதிலே உழல, எப்போது உறங்கிப் போனாளோ தெரியாது. அவள் விழித்துப பார்க்கும் போதே மாவதனைக் காணவில்லை. அவள் மெல்ல ஒருபெருமூச்சோடு எழுந்துவேலைகளைச் செய்ய, போன்மணி ஒலித்தது. 'யார் போன் செய்கிறார்கள்? அவனுக்குத் தான் இருக்கும். அவனின் ஆபீஸ் செகரட்டிரிகள், பி.ஏ. நண்பர்கள் உதவி கேட்டு வருபவர்கள் என்று அவனுக்கு ஏராளம்.



'ஹ..லோ...'' குரலில் ஒரு குழைவு தெரிய மறுமுனையில் அம்மா.

''என்னம்மா கிளம்பிப் போகனே.. அப்புறம் போனும் பண்ணலே..வரவும் இல்லையேன்னு பண்ணேன். உடம்புக்கு ஒன்னும் இல்லேயே.. மாப்பிள்ளைக்கு எந்தக் கோபமும் இல்லை. நல்லாதானே வச்சிக்கிட்டு இருக்கார்! ''ம்..'' என்று மெதுவாகக் கூறுகிறாள்.

வாய் வரை வந்த உண்மை வாயிலலேயே அடங்கி விட ''என்னம்மா...?'' என்கிறாள் அம்மா.

''ஒன்னும் இல்லேம்மா. வேலை சரியா இருக்கு. உன்னைப் பார்க்க வரலாம்னா இவர் கிடைக்கிறதில்லே. இவர் பிஸி. தனியா வர பயமாயிருக்கு. அதான், நான் கட்டாயம் அப்புறமா வரேன்.''

கண்களில் கண்ணீர் விரைந்துவர, மெதுவாகச் சொல்லியவாறே போனை வைத்தாள் காவ்யா. அம்மாவிடம் தன்னால் எதையும் மறைக்க முடியாது. நேரில்பார்த்தால் அம்மா மடியில் தலை வைத்து அழுது தீர்த்தால் தான் மனம் சற்று லேசாகும். அந்தப் பழைய விளையாட்டு மாதவன் இனிமே தனக்கு கிடைக்கவே மாட்டானா?' மனம் பொங்கிப் போக மறுபடியும் ஒரு பாட்டம் அழுகிறாள்.

அழைப்பு மணி அழுந்த, ''யாராயிருக்கும்?'' அம்மாவா இப்போது தானே பேசினாள்?' என்று நினைத்தவாறே கதவைத் திறக்க, வந்தவனைப் பார்த்து அதிர்ந்து போகிறாள் காவ்யா.

## 18

கருணா.. கருணாவா இது? முக மெல்லாம் விரலின் அடையாளங்கள்.. அழுதழுது சிவந்த முகம். கோவைப் பழமாய் சிவந்த கண்கள். தலைவேறு கலைந்து பார்ப்பவர்களையே கிலி படுத்தும் துன்பத் தோற்றம்.

"கருணா என்ன இது?" கருணாவும், காவ்யாவைப் பார்க்கிறாள். நிறைய வித்தியாசம் தெரிகிறதே. காவ்யாவா இது? பார்ப்பதற்கு பளிச்சென்று தெரியும் பெண்ணா இவள்? துறுதுறுவென்ற முகமும், கண்களும் ஜொலிக்க எந்த பிரச்சினையையும், துணிவுடன் தைரியமாக தன்னம்பிக்கை யோடு எதிர்நோக்கும் பெண்ணா இவள்? வாரப்படாத தலை. முகம் லேசாக வீங்கி, சிவந்த கண்களோடு சற்று பயந்தவளாய் தோன்றினாள்.

"காவ்யா.." அதற்குமேல் கருணாவால் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழுகிறாள். இவளுக்கும் ஏதாலும் பிரச்சினையா? மாதவன் ரொம்பத் தங்கமானவன் என்று நினைத்திருந்தாளே. தன் பிரச்சினையை கட்டாயம் தீர்ப்பான் என்றல்லவா இங்கே வந்தாள். வந்த இடத்தில் என் நிலைமையை விட இவள் நிலமை இன்னும் மோசமாக இருக்கும் போல் உள்ளதே. முதலில் என் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அம்மாவிடம் சென்றிருக்கலாம். ஆனால் எல்லாம் முடிந்தது என்று நிம்மதியாக தன் கடைசி நாளைக் கழிப்பவளை தொந்தரவு செய்ய விரும்பவில்லை. மாதவனை தன் சொந்தச் சகோதரனாக அல்லவா நினைத்திருக்கிறாள்.



அவன் எல்லாவற்றையும் சரிசெய்ய முயற்சிக்கலாம். மாதவன் நல்லவன். ஒரு வேளை தன் தங்கை தான் ஏதேனும் தப்பாக புரிந்து கொண்டு அவனிடம் சண்டை போட்டிருக்கிறாளோ என்னவோ! பார்ப்போம். மெதுவாக தன் விஷயத்தை சொல்ல ஆரம்பித்தாள்.

"என்ன ஆச்சு கருணா?"

"லவ் பண்ற வரைக்கும் கருண், கருண் என்று ஆசையாகத் தான் இருந்தார். இப்ப கம்ப்ளீட்டா மாறியாச்சு."

"என்ன சொல்றே?"

"என்ன சொல்றது? என் கன்னத்தை பாத்தியா? அம்மா இவங்க பேச்சை கேக்கலையாம். எங்க மாமியார் நேரம் கிடைக்கும் போதெல்லாம குத்திக் குத்திக் காண்பிக்கிறாங்க. என் புருஷன் அம்மா முந்தானையை புடிச்சிக்கிட்டு ஆடறார். அம்மா சொல்றது தான் சரிங்கறார்."

"ஏற்கனவே இருந்த தகறாரு தானே?"

"இல்லே.. காவ்யா இப்ப இன்னும் அதிகமாயிடுச்சு. மாமியார் வறுத்தெடுக்கிறது போதாதுன்னு இவர் வேற அப்பப்ப ஏதாவது சொல்றார். அவங்க அம்மா ஏதேதோ பேசறாங்க.. 'அதுக்கு பதில் பேசினா கோபம் பொத்துக்கிட்டு வந்திடுது. வாயிலே வந்தபடி திட்டறாரு. இன்னிக்கு காலைல கூட சண்டை. உங்களுக்கு உங்கம்மா மாதிரி தானே எனக்கும் என் அம்மான்னு சொன்னேன். நீங்க எப்படி உங்கம்மாவை மதிக்கிறீங்களோ அது போல் எனக்கும் எங்கம்மா மேல

மரியாதை இருக்காதான்னு கேட்டேன். அதுக்குதான் இந்த அடி. இல்லே காவ்யா. இனிமே அந்த ஆளோட வாழ முடியும்னு எனக்குத் தோணலை. இப்படி ஒவ்வொன்னுத் துக்கும் என் உயிரை எடுத்தா என்னால என்ன செய்ய முடியும்?''

காவ்யாவிற்கு என்ன சொல்வதென்று தெரியாத நிலை. பழைய காவ்யாவாக இருந்தால், அக்காவின் பிரச்சினைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு ஒருவழியை யோசித்து இருப்பாள். இப்போது மனம் உடல்லாம் தளர்ந்து போய் வாடிப்போய் தன் பிரச்சினைகளை தீர்ப்பதற்கே முடியாமல் தடுமாறி நிற்கிறாள். மேலும் இவள் ஏதேனும் யோசனை சொல்லி அது அவள் கணவனுக்கு பிடிக்காவிட்டால் 'இனி மேல் அவனை எதிர்க்கவோ, அவன் பேச்சை கேட்காமல் தன் இஷ்டம் போல் செய்யவோ தனக்கு சக்தி இல்லை நடப்பது நடக்கட்டும்.

''காவ்யா நான் பேசாம விவாகரத்து வாங்கலாம்னு யோசிச்சிக்கிட்டு இருக்கேன். எனக்குன்னு தனி சம்பாத்தியம் இருக்கு. என் கால்ல நிக்க அதுபோதும். அதான் உங்க ஹஸ்பண்ட் ஐக் கேட்டு முடிவெடுக்கலாம்னு பார்த்தவள். அடுத்த நிமிடம் லேசான பெருமூச்சு விட்டாள். சிறு சந்தோஷம் ஏற்பட்டது. இவள் பொருட்டாவது தன் கணவன் வீட்டில் இருப்பானா?இவள் வந்த தினால் கட்டாயம் அவனை இங்கே சற்று நேரம் தங்க வைக்க முடியும்.

''மாதவன் எங்கேடி?''



''ஆபீஸ் போயிருக்கார்.''

''ஏன் நீ போகலே..''

''இல்லை.. உடம்பு சரியில்லை தலைவலி. ''தங்கை சொல்வது உண்மையாக இருக்குமோ. அக்கா வந்திருக்காளே என்று அவளுக்காகச் சமைத்தாள். தான் சாப்பிட்டதாக பேர் பண்ணி விட்டு எழுந்தாள்.

''மாதவன் வீட்டு சாப்பாடு தானே சாப்பிடுவார். இன்னிக்குசாப்பிட வரலியா?''

''இல்லை... எனக்குத் தலைவலி.. வெளியே பாத்துக் கறேன்னு சொல்லிட்டார். ஜெண்டில்மேன் அவரு. எத்தனை பொறுப்புப் பார்த்தியா?'' கருணா சொல்ல, சொல்ல நான் செய்த தவறு, நான் செய்த பாவமோ என்னவோ இப்படி ஒரு தவறை செய்துவிட்டு மணியான புருஷனையே இழந்து கொண்டிருக்கிறேன். கருணா பார்த்துவிடப் போகிறாள். தன் முகத்தை எங்கோ திருப்பி வைத்துக் கொண்டாள். தன் கணவன் இன்றாவது சீக்கிரம் வருவானா?

இல்லை கருணாவைப் போன் பண்ணி கேட்கச் சொல்லலாமா? வேண்டாம். எதுவுமே இப்போது வேண்டாம். அவன் பிஸியான வேலையில் இருப்பான். மேலும் அவள் வேறு இல்லை. அவள் வேலை வேறு அப்படி அப்படியே இருக்கும். இப்போது அவனைப் போல் தொந்தரவு பண்ண முடியுமா?

அன்று சீக்கிரமே வந்து விட்டான் கணவன். ''ஐந்து மணிக்கு போன் பண்ணி கேளு 'மீட்டிங் இருந்தாலும் வந்து

விடுவேன். "காவ்யா சற்று இயல்பாகச் சொல்கிறாள். பல நாட்கள் வாராத தலையை அழுந்த வாரி பின்னிக் கொள்கிறாள். முகத்தைக் கழுவி பவுடரை லேசாக ஒற்றி, சற்று மினுமினுப்பான அந்த ஸ்டிக்கர் பொட்டை வைத்துக் கொள்கிறாள். அந்தப் பழைய சேலையை களைந்து விட்டு அவன் ஒரு நாள் இரவு திடீரென்று எடுத்த வந்த பருத்திப் புடவையை அணிந்து கொள்கிறாள். இந்த புடவை வாங்கி வந்த போது ஏற்பட்ட உரையாடல் கூட இன்று நடந்து போல் தோன்றுகிறது.

"என்ன மாதவ் இது? இது என்ன காம்பினேஷன். இராமர் கலர் புளுவிலே இந்த எல்லோ பார்டர் எப்படி சூட்டாகும். அதுவும் வயசானவங்க கட்டற மாதிரி சின்னக் கோடுகள் வேற. ம் — இதைப் பேசாம உங்கம்மா கிட்டே கொடுத்திட்டு வாங்க."

"இதை கட்டி கிட்டு நாளைக்கு ஆபிசுக்கு வரே."

"ஆர்.யூ. ஜோக்கிங். நூத்து கிழவி மாதிரி இருக்கும். என்னால் முடியாது."

"உன்னால முடியாதுன்னா நான் கட்டி விடறேன்"

"விளையாடாதீங்க உங்கம்மாவுக்கு செலக்ட் பண்ணி, பண்ணி வயசானவங்க புடவைதான் உங்களுக்கு செலக்ட் பண்ணவே தெரியுது"

"கலர் காம்பினேஷன் தான் சொல்லத் தெரியாது. பேந்த பேந்த முழிப்பே. புடவை செலக்ஷன் பண்ணக்கூடவா



தெரியாது? சுத்த வேஸ்ட். இதை கட்டிக் கிட்டு வந்துபாரு அப்புறம் ஐயா செலக்ஷனுக்கு ஒரு க்யூவே வந்து நிக்கும். பார்ப்பதற்கு பழைய புடவை போல் தோன்றினாலும் அடுத்த நாள் அவன் வற்புறுத்த அவனுடன் பேசிப் பேசி ஏன் சண்டை கூட போட்டுப் பார்த்து வேண்டாவெறுப்பாகப் புடவையை உடுத்திக் கொண்டு கிளம்ப, பார்த்தவர்கள் ஒருத்தர் விடாமல் அவள் புடவையை மாய்ந்து, மாய்ந்து புகழ அசந்துதான் போனாள். இது நிஜமாகவே இத்தனை அழகான புடவையா? இவளுக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது.

"என்ன ஞான சூன்யம்? புரிஞ்சுதா ஐயாவோட திறமை?" அவன் காலரை உயர்த்திக் கொண்டு கேட்ட போது, சலிப்பு தான் ஏற்பட்டது. "இந்தப் புடவையை எப்படி இத்தனை அட்டராக்டீவ்வாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள்? ஒருவேளை இவர் வேண்டுமென்றே எல்லோரையும் இப்படிச் சொல்ல வைத்திருப்பாரோ' ஆனால் அந்தச் சந்தேகம் கூடப் பொய்யாகப் போனது. இதைக் கட்டிக் கொண்டு அம்மாவைப் பார்க்க போன போது அம்மா வாய்விட்டே கேட்டு விட்டாள்.

"ஏதுடி புடவை ரொம்ப நல்லாயிருக்கே. "அம்மா சாதாரணப் பெண்களைப் புடவை, நகை என்று பார்க்கும் பெண்ணே அல்ல. எப்போதுமே கடமை, கடமை என்று தன் வேலையைச் செய்யும் ரகம். அப்படி இருக்கும் அம்மாவே கேட்டுவிட்டாள் என்றால் இந்தப் புடவை நிஜமாகவே அழகுதான்.

"இப்ப என்ன சொல்றே?" "சாப்பிட்டு விட்டு கையைக் கழுவியவன், சட்டென்று அவளின் முந்தானையில் கையைத் துடைத்துக் கொண்டான்.

"என்னங்க இது. புதுப் புடவையில் போய்..."

"உனக்கு தான் புடவையே பிடிக்கலையே..."

"ஆமா..." என்றவாறே அன்று உள்ளே வைத்த புடவை. இன்று மறுபடியும் எடுத்து அணிந்து கொள்கிறாள். அவனின் பார்வையில் தான் படுவோமா? அவன் தன்னை பார்ப்பானா? கருணா மதியம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிப் போனவள் மறுபடியும் மோட்டு வளையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் "கருணா அஞ்சு மணிக்கு போன் பண்ணிடு. அப்பதான் சீக்கிரம் வருவார். இல்லேன்னா சைட்டுக்கு போயிட்டா ராத்திரி பத்தாயிடும். கருணா போனில் கை வைக்க, காலிங் பெல் ஒலித்தது. மாதவன் தான் வந்திருந்தான்.

தாங்கள் தனியாக இருக்கும் போது கோபத்தைக் காண்பித்து இருக்கிறான். ஆனால் நாலுபேர் எதிரில் அவளிடம் பேசக்கூட தயக்கம்தான். மிகமிக கண்ணியமாகத் தான் நடந்து கொள்ளுவான். இதுமட்டும் மனதில் தோன்ற, மடமடவென்று அவனுக்கு பிடித்த பூரியும், குருமாவும் செய்தாள். எல்லாக் காய்கறிகளையும் அறிந்துவிட்டு, மசாலாவை அரைத்து சேர்த்து செய்து முடித்த போது வீடே கம்மென்று மணந்தது. வீட்டில் மசாலாவின் மணம் மனதைத் தூக்க, கருணாவைப் பார்த்து சற்றே துணுக்குற்றான். இங்கே எங்கே வந்தாள். ஒரு வேளை வீட்டில் நடந்ததைப் பற்றி



காவ்யா சொல்லியிருப்பாளோ அதைக் கேட்கத்தான் வந்திருக்கிறாளோ? ஆனால் அவள் முகமே சரியாக இல்லையே. வாடிப் போய் கண்களில் லேசான சிவப்பு இருந்தது.

ஒருவேளை வீட்டில் பிரச்சனை பெரியதாகி விட்டதா, மனதில் ஆவலை அடக்க முடியாமல் உள்ளே நுழைகிறான். கருணா பெரியதாக புன்னகைத்தவாறே நிற்கிறாள். மாதவனைப் பார்த்ததும் கண்களின் ஓரங்களில் நீர்கட்டிக் கொண்டது.

"என்ன கருணா? என்ன திடீர்னு?" அவன் லேசாகச் சிரிக்க முயன்று கேட்கிறான் கணவனை இடைமறிக்கிறாள் காவ்யா.

"கருணா நீயும் வந்து உக்காரு. அவர் இப்பதான் வந்திருக்கார். டிபன் சாப்பிட்டுட்டு பேசலாம். "சொல்லிவிட்டு பதிலை எதிர்பார்க்காதவளாய் டைனிங் டேபிளில் பூரி இருந்த பாத்திரத்தையும் கொண்டு வந்து வைத்தாள். ஒவ்வொன்றின் மூடிகளின் மேல் அதை எடுப்பதற்கான கரண்டிகள். ஒரு சின்ன தட்டில் பொடியாக நறுக்கிய வெங்காயம், தக்காளி, துண்டாக்கப்பட்ட எலுமிச்சை, பச்சை மிளகாயைக் கூட கீறி வைத்திருந்தாள். தக்காளியை நடுவில் வைத்து துண்டாக்கப் பட்ட வெங்காயம், கேரட், எலுமிச்சை இவற்றை சுற்றி வைத்து அலங்கரித்திருந்தாள். பச்சைக் கொத்துமல்லியை பொடிப் பொடியாக நறுக்கி குருமாவில் போட்டு மூடியிருந்தாள். காவ்யாவிற்கு எப்போதுமே கை வேலை மிகமிகப் பிடிக்கும். சிறிது நேரம் கிடைத்தாலும் போதும் இதை அழகு பண்ணுவது - அதை அழகு பண்ணுவது என்று சுறுசுறுப்பாகி இருப்பாள்.

சமையலிலும் விதவிதமாக ஆசைதீர செய்து பார்க்காவிட்டால் தலையே வெடித்துவிடும் அவளுக்கு. நேரம் கிடைக்கும் போது இப்படி ஏதாவது செய்துவிட்டால் போதும். அவளைக் கேலி செய்து வறுத்து எடுத்து விடுவான் கணவன்.

''என்ன டெக்கரேஷன் இது?''

''ஏன் தெரியலையா மாதவ்?''

''சொல்லும்மா. சொன்னாதானே தெரியும்.''

''இத பாருங்க. இரண்டு மான் நிக்கற மாதிரி அழகா இல்லே.'' அவள் கண்களை விரித்து சின்ன குழந்தையைப் போல் குதூகலிப்பாள்.

''அப்படியா மான்னா... சொன்னே...'' இப்படி திருப்பி, அப்படி திருப்பி பார்ப்பான். சட்டென்று எழுந்து ஒரு மூலையாக நின்று பார்ப்பான்.

''இல்லேம்மா... கழுதை ஜாடை அடிக்கற மாதிரி இருக்கே.'' சிரிக்காமல் சொல்வான்.

''போங்க மாதவ். நான் எதைச் செய்தாலும் உங்களுக்கு கேலிதான். ''அவள் முகம் சிவக்க, கண் கலங்க எழுந்து போகும் போது.

''இல்லேடா கண்ணா நீ வந்து பாரு. ''அவளா தன் பக்கம் திரும்பி முகத்தோடு முகம் வைத்து கிட்டத்தில் காண்பிக்கிறான். அவள் கையை உதறிக் கொண்டு போகும் போது கடகடவென்று சிரிப்பான்.



ஆனால் இன்று எதையும் பார்த்த மாதிரி காண்பித்துக் கொள்ளவே இல்லையே. சட்டென்று வேறு புறம் திரும்பி கண்களில் தழும்பிய கண்ணீரை துடைத்துக் கொண்டாள். கருணா பார்ப்பாளோ, சற்று பயத்துடன் நாசுக்குடன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் காவ்யா. கருணா தன்னுடைய உலகத்தில் இருந்த மாதிரித் தோன்றியது. நல்ல வேலை தன்னைக் கவனிக்கவில்லை.

கருணா மெதுவாக அதே சமயம் சற்று சுருக்கமாகத் தன் விஷயங்களைப் பற்றிக் கூறுகிறாள். சொல்லும் போதே அவளுக்குக் கண்களில் நீர் கடகடவென்று வழிந்தது.

சட்டென்று விசிக்கிறாள்.

''கருணா... ப்ளீஸ்...'' காவ்யா அவளின் தலையைத் தடவிக் கொடுக்க ''கூல் டவுன்'' மாதவன் தான் பேசுகிறான். ''ஏதாவது யோசிப்போம். அம்மாவா இருந்தாலும் அவங்களும் தனிமனுஷிதானே. அவங்க, அவங்களுக்கு தா வேண்டிய சுதந்திரத்தை தரணும் இல்லையா? உன்னுடைய ஹஸ்பண்டுக்கு எப்படி புரிய வைக்கறதுன்னு தெரியலே. அன்னிக்கு பேசும் போது கூட என் வார்த்தையைக் கேட்க இஷ்டப்படலே. .... இரண்டு நாளா மண்டையை குடைந்து கிட்டு இருக்கேன். ஒண்ணும் புலப்பட மாட்டேங்குது.''

''மாதவ் உங்களுக்கே இந்த பிரச்சினைக்கு தீர்வு தெரியலைன்னா வேறு யாருக்குமே தெரியாது.'' கருணா வார்த்தைகளை மனதாரத்தான் சொல்கிறாள்.

''இல்லைம்மா நான் ஒண்ணும் எல்லாம் தெரிஞ்ச மேதாவி இல்லே. இதுக்கு உங்கம்மாதான் சரி. அவங்க சரியா ஜட்ஜ் பண்ணுவாங்க''

"என்ன மாதவ் நீங்க. குற்றவாளியே எங்கம்மாதானே. அவங்க சொல்ற வார்த்தை எப்படி எடுபடும்?"

"எ....டு....படும்" ஏன்னா அவங்க ஆழ்ந்த அனுபவம் உள்ளவங்க. எந்த வேலையையும் யோசிச்சு, கரெக்டா முடிக்கறவங்க. உங்க பிரச்சனையை அவங்களைத் தவிர யாராலும் டீல் பண்ண முடியும்னு எனக்குத் தோணலே."

"ஆனா மாதவ்..."

"இல்லேம்மா நான் சொல்றதைக் கேளு. இரண்டு குழந்தைகளையும் வச்சகிட்டு பிறந்த இடம், புகுந்த இடம்னு எந்த ஆதரவும் இல்லாம இருந்தாங்களே. அப்ப அவங்களுக்கு எதும்மா உதவி பண்ணிச்சு. அவங்க எத்தனை கஷ்டப்பட்டு உங்களை எல்லாம் நல்ல நிலமைக்கு கொண்டு வந்திருப்பாங்க."

"மாதவ்... கருணா மறுபடியும் ஏதோ பேச முயல, "நான் சொல்றதை மொதல்ல கேளும்மா." இடை மறிக்கிறான்.

"ஒன்னை ... பண்றேன்னு நினைக்காதே. நீ எப்படி இருந்தே? எந்த பொண்ணுக்காவது அம்மாகிட்டேந்து இத்தனை ஆறுதலும், அமைதியும் கிடைச்சிருக்குமா? தவறு செய்துட்டா ஒவ்வொரு பொண்ணால வீட்டிலே இருக்கவே முடியாது. அவன் சொல்லச் சொல்ல பெருமூச்செறிகிறாள் கருணா.

"நீங்க சொல்றது நூத்துக்கு நூறு சரி. வாழ்க்கைங்கறதை நான் கைப் பொம்மையா நெனச்சுகிட்டு இருந்தேன். அது கீழே



விழுந்து உடைஞ்ச போது கூட மனதைத் தைரியப் படுத்தி வேறொன்றை வாங்கிக் கொடுத்தவள் அம்மாதான். அவள் மாதிரி அம்மாங்கறவ எந்தப் பொண்ணுக்கும் கிடைக்காது."

"உணர்ச்சி வசப்பட்டு அம்மாவை நினைத்து, நினைத்து அழுகிறாள். "கருணா ப்ளீஸ் அழாதே. 'உன் வாழ்க்கை கட்டாயம் கூடிய சீக்கிரம் சரியாகப் போயிடும்."

'வேண்டாம் மாதவ் எம் புருஷனோடு இனிமே சேர்ந்து வாழ முடியும்னு தோணலே."

"பயித்தியம் மாதிரி பேசாதே. கட்டாயம் வாழ முடியும். அவன் கெட்டவன் இல்லே. நல்லவன்தான் ஏதோ தவறா புரிஞ்சுகிட்டு இருக்கான்." கருணாவோடு பேசிக் கொண்டே காவ்யா தட்டில் பரிமாறி வைத்திருந்த பூரிகளைக் காலி செய்தான். இயல்பாக இன்னும் கொஞ்சம் குருமாவை எடுத்துப் போட்டுக் கொள்கிறான். மேஜைமேல் எல்லாவற்றையும் வைத்து விட்டு, சற்று ஒதுங்கி நின்று அவர்களின் உரையாடல்களைக் கவனிக்கிறாள் தங்கை.

"நீயும் உட்காரேன்."

"இல்லை. கருணா அப்புறம் சாப்பிடறேன்."

"ஏன்? இப்ப பசிக்கவே இல்லை. "புன்முறுவலோடு சொல்லி விட்டு தூர நகர்ந்து கொண்டாள். தன்னைத் தூக்கிச் சென்ற பின் இன்றுதான் கணவன் எதிரிலேயே இத்தனை நேரம் நிற்கிறாள். மறந்து போயாவது இயல்பாக அவன் தன்னிடம் பேசமாட்டானா? இதயம் அடித்துக் கொண்டது. அவர்களின்

பேச்சைக் கவனிக்கும் சாக்கில் அவனையே திரும்பி, திரும்பி பார்த்தாள். ஆனால் மாதவனோ கருணாவின் பேச்சிலேயே ஆழ்ந்து போயிருந்தான். இவளைக் கவனித்தது போல காட்டிக் கொள்ளவே இல்லை. மேசைமேல் வைத்திருந்த சூடான காபியை ஆற்றிக் குடித்தான். வா கருணா அம்மாகிட்டே போகலாம்.'' மாதவன் கேட்க...

''காவ்யா நீயும் வறியா! ''கருணா கேட்க, தலையை அசைத்தவாறே ஆவலோடு கணவனைப் பார்க்கிறாள். அவனிடம் பதில் வராது போகவே, மெதுவாக கிளம்ப யத்தனித்த போது ''நீ இங்கேயே இரு'' சற்று காட்டமான குரலில் கூறுகிறான் கணவன். அவளைப் பார்த்த பார்வையில் திருபுவனத்தையும் எரித்துவிடும் உக்கிரம், அவைகளை எரித்த சிவனின் சீற்றம் இருந்தது. கருணாவின் முகத்தில் அதிர்ச்சி தென்பட, 'வா, கருணா' அவளை அழைத்துக் கொண்டு தான் வெளியே பறந்து விடுகிறான். ஒரு இரண்டு நிமிடம் போல் வாசலில் நின்றவள், அவனின் பார்வையின் உக்கிரம் தாங்க முடியாமல் கிடுகிடுவென்று உள்ளே போய் ஜன்னலின் புறமாக நின்று கொண்டாள். வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாக சீறிப்பாய்ந்து சென்ற போது, மனதில் அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

கருணாவின் முன்னால் எத்தனை பெரிய அவமானம். 'அப்புறம்' போகலாம்மா என்று சிரித்தபடி கூறியிருக்கக் கூடாதா? மண்டையில் அடிப்பது போல் ஒரு பதில். எரித்து விடுவது போன்ற ஒரு பார்வை. அதற்கு மேல் தாக்கு பிடிக்க முடியாமல் அங்கேயே மடிந்து கொண்டு அழுகிறாள்.



'எல்லாமே தன் தலை எழுத்துதான் கணவன் போக வேண்டாம் என்று சொன்ன பின் பேசாமல் இருக்காமல் நான் ஏன் மீறத் துடித்தேன்? அதன் விளைவுதான் கவிழ்ந்து படுத்துக் கொண்டு அழுகிறாள். 'கடவுளே இதெல்லாம் சரியாகுமா? இல்லை கடைசி வரை நான் இப்படியேதான் இருக்கப் போகிறேனா? ஏதாவது மாற்றம் ஏற்படாதா? உதவி செய்ய மாட்டாயா? இம்முறை உறவு முறையில் சீர்திருத்தம் ஏற்பட்டால் அவன் சொல்வது எதையுமே என்னால் தட்ட முடியாது. கடவுளே என் கணவரோடு என்னை சேர்த்து விடு - மறுபடியும் அழுகை வர அழுதாள்.

மாதவனுக்கும் தர்மசங்கடமாகத் தான் இருந்தது. தான் அப்படி பேசாமல் இருந்திருக்கலாம். ஆனால் மனைவியைப் பார்த்ததுமே மறுபடியும் எரிச்சல் வந்தது. தன் நினைவுகளில் மூழ்குபவனுக்கு அருகில் அமர்ந்திருக்கும் கருணாவிடம் பேச வேண்டும் என்ற உணர்வு கூட ஏற்படவில்லை.

''மாதவ் எங்கே போறீங்க? இங்கேதானே டர்ன் பண்ணணும்....''

''ஓ... சாரி என்றவன், மெதுவாக வண்டியைத் திரும்பி கமலத்தின் இல்லத்தை அடையும்போது மணி ஏழைத் தொட்டது. லேசான, சில்லென்ற காற்று, வீசி உள்ளத்தை குளிர்விக்க முயல, லேசான வெப்ப பெருமூச்சு விட்டான் மாதவ்.

கருணா அவசரம், அவசரமாக இறங்குகிறாள். கேட்டைத் திறந்து கொண்டு விடுவிடுவென்று, உள்ளே போக, கார்க் கதவைப் பூட்டிக் கொண்டு மாதவனும் பின்னே செல்கிறான்.

"வா... கருணா வா... என்னம்மா திடீர்னு?"

"அம்மாவைப் பார்த்த மாத்திரத்திலேயே அழுகை கரை கட்டிக் கொண்டு வந்தது. "அம்மா" சின்ன குழந்தை போல் அம்மாவின் தோள்களில் கவிழ்ந்துக் கொண்டு அழுகிறாள்.

"கருணா? என்னம்மா இது?" கமலம் பதறுகிறாள்.

"த... பாரு... அழக்கூடாது. மாதவன் வந்து எல்லாத்தையும் சொன்னார். சரி பண்ணிடலாம். நீ கவலைப்படாதே."

"நீ... அசடு. என்னை எதுவுமே பண்ண முடியாது. என்னைக் காரணம் காட்டி உன் வாழ்க்கையையும் யாரும் பாழ் பண்ண முடியாது."

"என்னம்மா நீ? இப்ப நடந்துட்டு இருக்கறது என்ன? ஏன் வாழ்க்கை முழுக்க, முழுக்க பாழான மாதிரிதான்."

"இப்பதானேம்மா ஆரம்பம். முடிவு நம்ப கைலேதான். நாம சொல்றபடிதான் இருக்கும். கவலைப்படாதே."

அம்மா நிதானமாக, அழுத்தமாகக் கூற கருணா அம்மாவையே அவ நம்பிக்கையுடன் பார்க்கிறாள்.

'ஏதேனும் செய்ய முடியுமா? இல்லை அம்மா சும்மா வாலும் உளறுகிறாளா?"

"உங்களாலே சரிபண்ண முடியுமா? "மாதவன் நிதானமாகக் கேட்கிறான்.



"கட்டாயம் முடியும்பா. தெய்வாதீனம்னு ஒண்ணு இருக்குல்லே" கடவுள் தன்னை ஒரு பொழுதும் கைவிட்டதே இல்லை. "மாதவன் புரியாமல் விழிக்கிறான்.

"என்ன சொல்றீங்க?"

"எல்லாம் சரி பண்ணப்புறம் உங்ககிட்டே சொல்றேன்." மாதவன் விடைபெற்றுக் கிளம்பும் போது விரக்தியாக இருந்த கருணாவை சாந்தப்படுத்துகிறான்.

"எல்லாம் சரியாயிடும்?"

"எப்படிம்மா?"

"நான் சொல்றேன் பாரு வருத்தப்படக் கூடாது. கஷ்டம்ங்கறது ஒரு அனுபவம் தான். எப்படி கஷ்டமான கணக்கை சரியா போட்டு விடை வந்தா சந்தோஷப் படறோமோ அதே போலத்தான் இந்த கஷ்டங்களும் - எல்லாம் சரியாயிடும். அதை ஜெயிக்க கத்துக்கணும். அதுல தான் ஒரு த்ரில் இருக்கு. புரியுதா? நீ படும்மா. மகளை தன்னுடைய அறையிலேயே தன்னுடன் படுக்க வைத்துக் கொள்கிறாள். அடுத்த நாள் காலையிலேயே எங்கே கிளம்பிப் போகிறாள். கருணா எழுந்த போது அம்மாவைக் காணவில்லை. கமலம் நேராக கருணாவின் வீட்டிற்குத்தான் செல்கிறாள்.

காலையில் கண் விழித்த போதே தன் சம்பந்தி அம்மாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள் கருணாவின் மாமியார். இங்கே எதற்கு வந்திருக்கிறார்கள்? நேற்று நடந்த

சண்டையில் பையன் கருணாவைப்போட்டு அடித்து விட்டான். அதற்காக நியாயம் கேட்க வந்திருக்கிறார்களா? 'யோசிக்கிறாள் கேட்கட்டும் பட்டென்று முகத்தில் அடித்தது போல்ல சொல்ல வேண்டியது தான். என்னதான் நினைத்தாலும் கமலத்தைப் பார்த்ததுமே வார்த்தைகள் தொண்டைக் குழியோடு நின்று விட்டது.

'வாங்க' என்று கூப்பிட்டுவிட்டு வாய் மூடி மௌனம் காக்கிறாள்.

''உங்ககிட்டே முக்கியமான விஷயம் பேசணும்.''

''சொல்லுங்க.''

''நீங்க என்னோட வர முடியுமா?''

''எங்கே?''

''எங்களோட விடுதிக்குத் தான்.''

''ஏன்?''

''நீங்க அங்கே வந்தா தெரியும்.''

''இதபாருங்க' எதுவா இருந்தாலும் இங்கயே சொல்லுங்க.''

''இல்லேம்மா.''

''கருணாவைப் பத்தி சொல்றதுன்னா எதையும் கேட்க நான் தயாரா இல்லை.''

''எம் பொண்ணு என்னம்மா செய்தா?''



''என்ன செய்தாளா? பெரியவங்க சின்னவங்க மரியாதை கெடையாது. எதிர்த்து, எதிர்த்து பேசிகிட்டு''

''அவ ஏன் அப்படி பேசினா?''

''ஏனா? திமிரு...''

''இல்லேம்மா என் மேலே இருக்கிற ஆசை.''

''சரி அப்படித்தானே வச்சக்கங்க. இந்த வயசான காலத்துலே கஷ்டப்படக் கூடாதுன்னு சொன்னேன். அதைப் புரிஞ்சுக்கிட்டு உங்களை வீட்டோடு வச்சகிட்டு இருக்கலாமில்லே.''

''அம்மா இதை நான் இஷ்டப்பட்டு செய்யறேன். யாருக்காகவும் மாற்ற முடியாது.'' கமலம் அழுத்தம் திருத்தமாகக் கூற.

''அப்ப உங்க பெண்ணை உங்க வீட்ல வச்சக்க வேண்டியதுதான்'' ''எம் பொண்ணு விஷயம் இருக்கட்டும். ஒரு தடவை அந்த இல்லத்துக்கு வந்து பாருங்க. அப்புறம் நான் பண்றது எத்தனை முக்கியமான தேவையான வேலை என்று புரியும்''

''இதோ பாருங்க சம்பந்தியம்மா. ''அவரை முடிக்கவிடவில்லை கமலம்.

''ப்ளீஸ் தயவு செய்து வாங்க ஒரே ஒரு முடிவை. அங்கே வந்து பாருங்க. அங்கே வந்ததும் நான் செய்யற இந்த வேலை உங்களுக்கு பிடிக்கலைன்னா, நான் நீங்க சொன்ன மாதிரி

எல்லோரையும் வேற இடத்துலே ஒப்படைச்சுட்டு வந்துடறேன். தயவு செய்து வாங்க?''

கருணாவின் மாமியார் செய்வதறியாது திகைக்கிறாள். இதென்ன காலங்காத்தாலே வந்து இப்படி ஒரு அவஸ்தை.

''வரேன் ஒரு நாளைக்கு வரேன்.''

''இல்லே சம்பந்தி நீங்க இப்பவே வரணும். நானே கொண்டு வந்து உங்களை விட்டுடறேன்.''

''சரி இருங்க. என் பையனையும் கூப்பிட்டுகிட்டு வரேன். உடற்பயிற்சி செய்து கொண்டிருந்த கருணாவின் கணவன் அம்மா கூப்பிட்டதுமே இறங்கி வந்தான். மாமியாரைப் பார்த்ததுமே முகம் மாறியது. 'இத்தனை சங்கடத்துக்கு காரணமே இந்தக் கிழவிதான். இது மட்டும் சரியாக இருந்தால், தான் அணு, அணுவாக காதலித்த ஒரு பெண்ணை பிரிய வேண்டியதே இல்லை. விருட்டென்று முகத்தைத் திருப்பிக் கொள்கிறான்.

''என்னவாம்?'' என்கிறான். கருணாவின் மாமியார் விவரத்தை சொல்லிவிட்டு பிள்ளையைத் தன்னோடு வரும்படி அழைக்கிறாள். பின் பிள்ளை முதலில் ஒரு நிமிடம் யோசித்தான் பிறகு ''ஏம்மா உங்களுக்கு வேற வேலை இல்லை'' என்கிறான். பின் மாமியாரிடம்.

''த. பாருங்க, உங்க ஆசிரமத்து ஆளுங்களைப் பார்த்தா அப்படியே பாகா உருகிப்போய் நீங்க சொல்றதுக்கெல்லாம் தலையாட்டிகிட்டு டேன்ஸ் ஆடுவேன்னு கனவு கூட



காணாதீங்க. அப்படி எங்க மனசு உருகலை. நீங்க அந்த இடத்தை காலி பண்ணிட்டு வாங்க. அதுக்கு ஒத்துக்கிட்டா வரோம்.''

''மாப்பிள்ளை ஒரே ஒரு தடவை அங்க வந்து பாருங்க. அப்புறம் நீங்க என்ன சொன்னாலும் நான் ஒத்துக்கறேன்.''

''அவர்கள் மூவரும் கிளம்பி வந்த போது, கருணா எழுந்து அம்மா கலந்து வைத்து விட்டுப் போன காபியைக் கலந்து குடித்து விட்டு டிபன் தயாரித்து வைத்திருந்தாள். தன் தாயோடு தன் கணவன், மாமியாரைப் பார்த்ததும் வியப்பு ஏற்பட்டது. இவர்கள் எல்லாம் ஏன் இங்கே வந்திருக்கிறார்கள்? இவர்களுக்கு என்ன வேண்டும்? ஒரு வேளை அம்மா தன் வேலைகளை எல்லாம் விட்டு விடுவதாக ஒத்துக் கொண்டு விட்டாளா? இப்படித் தோன்றியதுமே மனதிற்குள் பீறிட்டுக் கொண்டு அழுகை புறப்பட்டது. 'பாவம் அம்மா! வேண்டாம்மா. நீ எனக்காக பட்டதெல்லாம் போதும்'' எதுவும் இனி எனக்காக செய்ய வேண்டாம். 'அம்மாவோட மனதிற்குள் ஆத்மார்த்தமாக பேசுகிறாள்.

''ஏம்மா வந்தவங்களை வாங்கன்னு கூப்பிடு 'உன் மாமியார், கணவர் வந்திருக்காங்க பாரு. டிபன், காபி கொடு. காலை டிபனே எல்லோருக்கும் சேர்த்து செய்வது உண்டு. இன்று கருணாவே நாலு கிலோவிற்கு உப்புமா செய்து சட்னி அரைத்து வைத்திருந்தாள். ''வாங்க'' என்றவள் தன் கணவனிடம் ''டிபன் சாப்பிட வாங்க.'' என்கிறாள் அவனிடம் வாங்கிய அறை வேறு ஞாபகத்திற்கு வர எரிச்சல் வந்தது. முகத்தில் மலர்ச்சியின்றி உதட்டளவு உபசாரம்.

''அதெல்லாம் வேண்டாம். ஏதோ பாக்கலாம்னு சொன்னீங்களே. அதை மொதல்ல காண்பீங்க. ''கமலம் அவர்களை அழைத்துக் கொண்டு அனாதை விடுதியைச் சேர்ந்த உறுப்பினர்களை காண்பிக்க ஆரம்பித்தாள்.

''இவங்களை எல்லாம் காண்பிச்சு லிம்பதி கிரியேட் பண்ணனும்னு நினைக்காதீங்க எதுவும் நடக்காது. கருணாவின் கணவன் தோளைக் குலுக்கிக் கொண்டு நடக்க, கருணாவின் மாமியார் உதட்டை பிதுக்குகிறார்கள். தனியே இருந்த அறைக்கு கமலம் அவர்களை அழைத்துச் சென்றாள்.

''பாட்டிம்மா... உள்ளே வரலாமா? ''மெதுவாக நாசுக்காக கதவைத் தட்டுகிறாள். உள்ளே அழைத்தவர்களைப் பார்த்ததும், இவர்களைப் பார்த்தாலே பயப்படும் சிறு குழந்தை போல் கையையும், காலையும் உதைத்துக் கொண்டு அழுகிறாள்.

''என்னை யாருக்கும் பிடிக்கலை'' நான் யாருக்கும் தேவை இல்லை.'' என்று சொல்லி விட்டு, குலுங்கி, குலுங்கி அழுகிறாள்.

ஒரு நிமிடம் கிட்டே வந்து பார்த்த கருணாவின் கணவரும் மாமியாரும் அதிர்ந்து போனார்கள்.

''இவள் தன் அம்மா அல்லவா? இங்கே எப்படி? கருணாவின் மாமியார் திடுக்கிட்டு போகிறாள்.



''அம்மா... அம்மா... எப்ப வந்தே? என்ன ஆச்சு? அண்ணா இல்லையா?'' அவள் குரலில் மிதமிஞ்சிய அதிர்ச்சி தெரிந்தது. ''எனக்கு யாரும் இல்லை. யாரும் வேண்டாம்.'' பாட்டி முகத்தில் அறைந்து கொண்டு அழுகிறாள். கருணாவின் மாமியாரும், கணவனும் கண்கலங்கிப் போய் அழுது கொண்டே இவங்க என்கிறார்கள்.

'அவங்களுக்கு சித்த பிரமை, ஏதாவது சில நேரங்களில் கொஞ்சம் புரியும். பிள்ளை ரொம்ப கொடுமைப் படுத்தி வீட்டை விட்டு விரட்டினான். பொண்ணு வீட்டிலேயாவது இருக்கணும்னு வந்த போது தான், அவங்க போட்டிருந்த ஒண்ணு ரெண்டு நகையையும் பிடுங்கி அவங்களை அடிக்க, நினைவு இல்லாமல் பிளாட்பாரத்துலே மூன்று நாட்கள் கிடந்திருக்காங்க. எங்களுக்கு செய்தி கெடச்ச அவங்களை தூக்கிகிட்டு வந்தோம். அவங்க கொண்டு வந்திருந்தபையில் ஒரு சில துணிகளும் நல்ல வேளை அட்ரஸூம் இருந்தது. சரி நானே இது சம்பந்தமா உங்களை பார்க்கணும்னு நெனச்சேன். அவங்க நினைவே இல்லாமல் இருந்தாங்க. கொஞ்சம் சரியானதும் தான் உங்களை அழைச்சிட்டு வந்தேன்''

''கமலம் பேசப் பேச சட்டென்று உடைந்து போய் அழுகிறாள். கருணாவின் மாமியார். ஏற்கனவே கலங்கி இருந்த நெஞ்சம் பிழியப் பிழிய அழத் தொடங்கியது.

''என்னை மன்னிச்சிடுங்க சம்பந்தியம்மா. ''திக்கு இல்லாதவங்களுக்கு தெய்வம் துணைன்னு சொல்வாங்க. தெய்வத்தை உங்க ரூபத்திலே பாக்கறேன். நீங்க மட்டும் பாக்கலேன்னா அம்மாவின் நிலமை ''சட்டென்று அம்மாவின் பக்கத்தில் அமருகிறாள்.

"அம்மா எனக்குச் சொல்லி அனுப்பறதுக்கு என்ன? நீ வரேன்னு தெரிஞ்சவுடனேயே எம் புள்ளை கணேசை அனுப்பி உன்னை கூப்பிட்டு வரச் சொல்லியிருப்பேனே. நீ ஏன் தனியா வந்தே? அழுகிறாள் அம்மாவை அணைத்துக் கொள்கிறாள்.

"ஏதாவது சாப்பிட்டாயா? கேட்கிறாள் அம்மாவைத் தடவித் தடவித் தருகிறாள்.

அன்று ஒரு வேளை அங்கே இருந்து விட்டு, மாலை கருணாவையும் தன் அம்மாவையும் அழைத்துக் கொண்டு கிளம்பினாள் கருணாவின் மாமியார் "ஐயம் சாரி, கருணா ஏழை அனாதைங்களுக்கு உதவறது கூட ஒரு ஷோதான்னு நெனச்சுகிட்டு இருந்தேன்! நமக்கே அந்தக் கஷ்டம் வந்து யாராவது உதவி பண்ணும் போது தான் உண்மை நிலை புரியறது. உங்கம்மாவுக்கு எத்தனை விசாலமான மனசு. அவங்களை எப்படி எல்லாம் பேசிட்டேன். "கருணாவிடம் பேசிய மன்னிப்பையே கமலத்திடமும் கேட்டாள்.

"போகட்டும் மாப்பிள்ளை இதெல்லாம் பெரிசு பண்ணாதீங்க 'கெடுதல்' மாட்டிக்க கூடாதுன்னு நல்ல மனசோடதான் சொன்னீங்க பரவாயில்லை காமாட்சி பெருந்தன்மையோடு பேசினாள்.

கருணாவிற்கு ஒரு கூடை நிறைய ரோஜாக்களை தலையில் அபிஷேகம் செய்வதைப் போன்ற ஒரு உணர்வு 'இது நிஜமா? தன் கணவன் திருந்தி விட்டானா? முன்னைப் போல் ஆகி விட்டானா? தன் மேல் உயிரையே வைத்திருப்பவன் போல்



தோன்றுகிறதே. மனசு ஆனந்தக் கூத்தாட்டத்தில் கிளர்ந்தது. அவர்கள் கிளம்பிச் சென்றவுடன் கமலம் ஒரு சந்தோஷப் பெருமூச்சுவிட்டாள். இருந்தாலும் மனதின் மூலையில் காவ்யாவைப் பற்றி நினைவுகள். கருணா வேறு மாதவனின் கோபத்தையும், உதாசீனத்தையும் சொல்லி இருந்தாள். காவ்யா வேலைக்கு போகாததைப் பற்றியும் சொல்லி இருந்தாள். அவள் மருகி, மருகி அழுது கொண்டிருப்பதைப் பற்றியும் சொன்னாள். மாதவனைப் பற்றி அவளுக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. அவன் புரிந்து கொள்ளக் கூடியவன். எதுவுமே திறம்பட யோசிப்பவன். ஆனாலும் சிறு பிள்ளைதானே கோபம் வந்திருக்கலாம். பக்குவமாகச் சொல்ல வேண்டும்.

அவள் மனம் அந்த யோசனையிலே ஆழ்ந்தது. அன்று மாலை அவள் அனாதை இல்லம் கட்டுவதற்கான பிளான், நிஜமான நில பத்திரங்கள் எல்லாம் மாதவன் கொண்டு வந்து கொடுத்த போது.

"ரொம்ப தேங்ஸ்" என்கிறாள்.

"எதுக்கு இதெல்லாம் என்றவன், பரவாயில்லையே கருணா பிரச்சனையை ஸால்வ் பண்ணிட்டீங்களே' எனக்கு போன் பண்ணியிருந்தாள்" என்கிறான்.

"இதுலே நான் என்ன பண்ணினேன். தலைவலியும், ஜுரமும் நமக்கு வரும் போதுதான். அதனுடைய உண்மையான கஷ்டம் நமக்கு புரிகிறது. இது கட்டாயம் தெய்வாதீனம்தான்..." என்கிறாள்.

"தப்பா நினைக்காதீங்க... ஒரு ரிக்வெஸ்ட்"

"சொல்லுங்க..."

"காவ்யா. உலகம் தெரியாத குழந்தை. இப்ப இன்னும் ரொம்பவே நொறுங்கிட்டா. ஒரு வேளை அவ அப்பா சரியா இருந்திருந்தா அவ இன்னும் பெட்டரா வளர்த்திருப்பாளோ என்னவோ? அவ செய்தது ரைட்டுன்னு நான் வாதம் பண்ணலே. ஆனா அவ தப்பை நீங்க பெரிய மனசு பண்ணி மன்னிக்கக் கூடாதான்னு கேக்கறேன்." ஒரு நிமிடம் அதிர்ச்சி அவன் முகத்தில் தெரிந்தது. காவ்யா அவள் அம்மாவிடம் வந்து எல்லாவற்றையும் சொன்னாளா?

"இல்லை மாப்பிள்ளை' எம் பொண்ணை நீங்க கூப்பிட்டு வந்தீங்களே. அப்புறம் அவளைப் பாக்கவே இல்லை' எந்தத் தவறா இருந்தாலும் அதுக்கு நான் தான் பொறுப்பு. நிஜங்களைக் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுத்து வளர்த்திருக்கலாம். இனிமே அவகிட்டேருந்து அந்தத் தப்பு நடக்காது. இத்தனை நாள் தண்டனையே போதும்னு நினைக்கறேன். ஏதாவது தப்பா பேசியிருந்தா மன்னிச்சிருங்க. அவமேல கோபத்தை தயவு செய்து விட்டுடுங்க."

"இல்லை... அவ மேல எனக்கு எந்தக் கோபமும் இல்லே. சொன்ன பேச்சை கேக்கலையேன்னு எரிச்சல் மட்டும் இருந்தது. எல்லாம் சரியாயிடும். உங்க மனசு கஷ்டப்படற மாதிரி எதுவும் நடக்காது"

"அது போதும் மாப்பிள்ளை"

"காரில் ஏறி வீட்டை நோக்கி செல்லும் போது மாமியார் சொன்னதே காதில் விழுந்து கொண்டிருந்தது. நேற்று கருணா

13032



கூட போன் செய்து கணவனிடம் சேர்ந்து விட்டதாக போன் செய்த போது தங்கைக்காக எத்தனை கெஞ்சினாள்.

"மாதவ் நீங்க கூட எப்படி இப்படி இருக்க முடியும்? காவ்யாவைப் பார்த்தீங்களா?

துறுதுறுன்னு இருந்தவ ரொம்ப ஒடுங்கிட்டா. சரியா சாப்பிடறதில்லே. தூங்கறதில்லே. சதா அழுகைதான். நான் செய்த தப்பைவிடவா அவ செஞ்சது அதிகம் - என்னையே மன்னிக்கும் போது அவளுக்கு என்ன? பாவம் இல்லையா அவள்? மாதவ்... ப்ளீஸ் அதற்குமேல் அவள் அழுகை போனில் கேட்டது.

"எல்லாம் சரியாயிவிடும் கருணா. "அவன் உத்திரவாதம் அளித்தான் - காரை கேரேஜில் நிறுத்திவிட்டு பூட்டிவிட்டு காலிங் பெல்லை அடித்துவிட்டு காத்திருந்தான். கதவு திறந்தே இருந்தது.

"என்ன இது ஒரு வேளை நான் ஏதாவது ஓவராக நடந்து கொண்டு விட்டேனா? காவ்யாவுக்கு ஏதாவது? அவசரம். அவசரமாக உள்ளே போய் தேடுகிறான். சமையல் அறையில் ஒரு மூலையில் கவிழ்த்து படுத்துக் கொண்டு இருக்கிறாள்.

"ஏய் காவ்யா..." அவன் எழுப்ப. உடம்பு நெருப்பாக கொதித்தது. அடுத்த இரண்டு நாட்களில் அவள் படுக்கையின் அருகிலேயே மாதவன். இரண்டு நாட்களுக்கு பிறகு சற்று சரியானதும். எழுந்தவளை எழக் கூட விடவில்லை மாதவன். "இந்தா மொதல்ல இதச் சாப்பிடு" குழகுழவென்று போர்ன்விடாவை கலந்து கொண்டு வருகிறான். "ஐயோ...

வேண்டாமே... என்றவன் அவன் வலுக்கட்டாயப்படுத்த மெதுவாகச் சாப்பிடுகிறான். அவன் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை கர்ம சிரத்தையோடு கேட்டு அதன்படி நடக்கிறாள்.

''இப்ப எதுக்கு எழுந்திருக்கறே. படு. ''அவன் சொல்ல சட்டென்று படுத்துக் கொள்கிறாள். மாதவனின் அருகாமை யில் ஒரு சில நாட்களில் உடல் தேறி எழ வழக்கப்படி டிபன் செய்து, காபியை போட்டு டைனிங் டேபிளில் எல்லாவற்றையும் வைத்து விட்டு, சற்று தயங்கினவாறே அவனை அழைக்கிறாள். இன்னும் பழைய சுதந்திரம் அவனிடம் வரவில்லை.

நேற்று மாலை வரும் போதே புது சுடிதார் ஒன்று வாங்கி வந்து ''காலைல இதை போட்டுக்க. என்கிறான். எதற்கு என்று கேட்க பயம் - நாளைக்கு என்ன விஷயம் என்று கேட்க முடியாது'' இப்போது தான் அவனிடம் சரளமாகப் பேசத் தொடங்கியிருக்கிறாள். அவளால் அதை கெடுத்துக் கொள்ள முடியாது.

காலைலேயே குளித்துவிட்டு பூசை அறையில் வைத்து வணங்கிவிட்டு உடுத்திக் கொண்டாள். அவன் சாப்பிட்டு விட்டு கையைத் துடைக்கவென்று டவலை எடுக்க, ''இந்தாங்க'' என்று தன் துப்பட்டாவை நீட்டுகிறாள். ''நீ... பாவம் உன்னை நானும் தான் ரொம்ப டீஸ் பண்ணிட்டேன்.'' என்றவாறே துண்டில் கையைத் துடைத்தவன், ''ஏய் நேத்து வாங்கிட்டு வந்த பூ பிரிஜ்ஜிலே இருக்கு, வச்சுக்கிட்டுவா.



''அவளுக்கு பிடித்தமான மல்லிகை ஒரு கணம் முகம் மலர்ந்தது. தலையில் சூட்டிக் கொண்டவள், மகிழ்ந்தாள், 'தனக்கு பிடித்தமானதைச் செய்கிறான் மனம் பூரித்தது.

''உங்க டிபன் பாக்ஸ் ரெடி'' அவள் சொல்ல

''என்ன இவ்வளவுண்டு கொடுத்திருக்கே.''

''நீங்க இதுக்கு மேலே சாப்பிட மாட்டீங்களே.''

''நம்ப ரெண்டு பேருக்கு இது எப்படிப் போதும்?

''என்ன சொல்றீங்க? நான் ஆபீஸ் வரதுதான் உங்களுக்கு பிடிக்கலையே மாதவ் நான் வரலே.''

''நீ வரே... ம்... கமான் கிவிக்.''

''இல்லே மாதவ்''

''ஏன் இங்கே சோம்பேறியாப்படுத்துகிட்டு இருக்கவா?'' வழக்கமான கிண்டல் வாயில் வந்து விழுந்தது. அதற்குள் காலிங்பெல் ஒலிக்க, அம்மாதான் வந்து நிற்கிறாள்.

காவ்யாவிற்கு உடம்பு சரியில்லை என்றதும் தினம் இரண்டு நடை ஓடி ஓடி வருகிறாள்.

''எப்படி கண்ணா இருக்கு'' மகளின் தலையைத் தடவிக் கொடுக்கிறாள்.

''அம்மா நேத்து நீங்க சொன்ன அந்த எம்ப்ராயிடரி முடிச்சிட்டேன். சரியா இருக்கா பாருங்க. இரண்டு பக்கமும்

முயல் நடுவில் ஒரு குட்டி முயல் துறு துறுவென்று சற்று உடல் சரியானதும் மாய்ந்து மாய்ந்து போட்ட எம்பிராயடரி.

''நல்லா வந்திருக்கே.'' கமலம் சிலாகிக்க,

''ஏய் இது என்ன?'' முயலைக் காண்பித்து கேட்கிறான் கணவன்.

''முயல்''

''முயலா மூக்கு நீண்டு காது நீண்டு. நான் வேறென்ன வோன்னு நெனச்சேன். அவனை முடிக்க விடாமல் தலைகாணியை தூக்கி சிரித்தவாறே அவன் மேல் எறிகிறாள் காவ்யா.